

கல்கி

புத்தாண்டு மலர்



KALKI

12.4.1970 40 காசு



க்ரூக்ஸ் இன்டர்ப்ரான் லிட்., பம்பாய்-25


பொழுதெல்லாம்
புதுப்பொலிவுடன் திகழ...
லக்ஷ்மீஸ்
பாலீனு
வாயில்கள்
அன்றாடம் உடுப்பதற்கும்
எல்லா விசேஷ சந்தர்ப்பங்களுக்கும்
உகந்த துணி. கவர்ச்சியான அணி
இலேசானது-சுருங்காதது
நேர்த்திமிக்க டிசைன்கள்
பாலீனு-வாயில்களுள்
மேம்பட்டது.
ஸ்ரீ
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்
உயர்ந்த துணிகளின்
உன்னத சின்னம்
சில்லரை ஷோரூம்: 17/93 ஒப்பணக்கார வீதி கோயமுத்தூர்.
387, மெயின் ரோடு, கோவில்பட்டி.
விற்பனை ஏஜண்டுகள்:- ராம்கோ சுதேசிஸ் கோயம்புத்தூர்.
வெங்கடேஷ் வஸ்திராலயா சென்னை-1.
VSK-LM-169

நெய்வேலியின் புத்தாண்டு வாழ்த்துகள்!

உங்கள் இல்லத்திலோ, உங்கள் நிலத்திலோ அல்லது உங்கள் தொழிற்சாலையிலோ—உங்கள் தேவையை நெய்வேலி லிக்னைட் நிறைவேற்ற முன் வந்திருக்கிறது.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் உங்களுக்குச் சொந்தமானது. அதுமட்டுமா—பழுப்பு வைரமான லிக்னைட் உங்கள் சொத்து.

உங்கள் தேவை அத்தனையும் நிறைவேற்றுகிறது நெய்வேலி லிக்னைட்:

- இல்லங்களில், தொழிற்சாலைகளில், விவசாயத்தில்—தமிழகத் தேவையில் 40 சதவிகிதத்தை ஈடுகட்ட 600 மெகாவாட் மின்சக்தியை உற்பத்தியாக்குகிறது.
- உணவு உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க 46 சதவிகிதம் நைட்ரஜன் கலந்த யூரியா.

இந்த வெண்மை மிக்க உரம், உணவு உற்பத்தியை மிகுந்த அளவில் பெருக்க உதவுகிறது.

- புகைத்தொல்லையில்லாது சமையல் செய்ய லிக்கோவை உற்பத்தி செய்கிறது நெய்வேலி.
- தார் பொருட்கள்—லிக்னைட்டின் துணைப் பொருட்கள். தற்காலத் தொழிற்சாலைகளுக்கு மிகவும் தேவைப்படுபவை. பிளாஸ்டிக் சாமான்களிலிருந்து, மருந்துப் பொருட்கள்வரை, செய்ய இவை உதவி புரிகின்றன.

காலத்திற்கேற்ற வாழ்த்துகள்-ஆனால் நம் வளர்ச்சியோ காலத்திற்குட்படாதது!

இந்தப் புத்தாண்டிலிருந்து உங்கள் இல்லத்தில் மேலும் புத்தொளி பிறக்கட்டும்!

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி-1



கல்கி

புத்தாண்டு மலர் பொருளடக்கம்

சௌமிய, பங்குனி, 30 — 1970, ஏப்ரல் 12

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



சாதாரண ஆண்டு சாதனையின் ஆண்டாக,
சூதான சூழலிலே சத்திய சக்தி மேவப்
பாதாரவிந்தம் பணிந்தோம் பரகுருவே!
ஆதாரமாய் நின்று அனைத்துயிரும் வாழ்விப்பாய்!

★

ஆண்டொன்று மேலும் கடந்தோம்
ஆண்டவனே! எமதறிவைத்
தாண்டுவிப்பாய் தூநெறியில்
ஆண்டருள்வாய் எமை நாளும்.



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 29 ● இதழ் 37

அரசியல் செப்பிடு வித்தை

மக்களுக்குச் சொத்துரிமை வழங்கும் அரசியல் சாஸன ஷரத்தை ரத்து செய்ய வேண்டுமெனக் கோரும் ஸ்ரீ நாத்பாயின் மக்கள்சபை மசோதாவுக்கு ஆதரவு தருவதென யூனியன் சர்க்கார் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த மசோதாவும், தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் நில உச்சவரம்புக் குறைப்பு மசோதாவும், அரசியல் சாஸனத்தைக் கிழித்து வரலாறு எனும் குப்பைக் கூடையில் எறிந்து விடுவதற்கான முயற்சிகளே யாகும். புனித அரசியல் சாஸனத்துக்கு அபசாரம் இழைக்கும் இக்காரியம் வெற்றி பெறும்படி மக்கள் அநுமதிக்க மாட்டார்கள் என்று நம்புவோமாக.

பிறருக்குத் தீமை விளைவிக்காத வகையில் சொத்தை ஆண்டு அநுபவிப்பதற்குப் பிரஜைகள் பெற்றுள்ள உரிமையைப் பொறுத்ததே அவர்களது சுதந்திரம். சொத்து வைத்திருப்பதே பாபம் எனவும், பிறருக்கு எதிரிடையாக இழைக்கப்படும் தீங்கு எனவும் பேசுவோருடன் மேற்கொண்டு விவாதிப்பது சாத்தியமே அல்ல. நாகரிக வாழ்வு சொத்துரிமையைப் பொறுத்ததே. மனித சமூகத்தின் வளர்ச்சி சொத்துரிமையை நம்பி யிருக்கிறது. எல்லாவற்றையும் அரசாங்கத்தின் சொத்தாக்கி விடும் பரீட்சைதான் கம்யூனிஸம் எனப்படுவது. அது எங்கும் வெற்றி கண்டு வாகை சூடவில்லை. நேர் வழியாகவோ அல்லது பின் வழியாகவோ இந்தியா ஒரு கம்யூனிஸ்டு நாடாகி விடும்படி அநுமதிக்கப் போகிறோமா என்பதுதான் பிரச்னை.

* * *

நில உடைமைகள் அதிகபட்சம் பதினைந்து ஏக்கராதான் இருக்கலாம் என்று உச்சவரம்பு கட்டி அமுல் நடத்துவதற்கான மசோதாவைத் தமிழ்நாடு சர்க்கார் கொணர்ந்திருக்கிறார்கள். ''ஹிந்து'' பத்திரிகை ஏப்ரல் முதல் தேதி எழுதிய தலையங்கத்தில் இந்த மசோதாவைக் கண்டித்திருப்பது முற்றிலும் சரியே. பொதுநலன் என்ற பெயரில் ஒருவரது உடைமையை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து பிறருக்குப் பகிர்ந்து தருவது, நில வரம்புச் சட்டத்துக்குப் பொருந்தாது. கோலக்நாத் வழக்கில் ஸுப்ரீம் கோர்ட் சந்தேகத்துக்குச் சிறிதும் இடமில்லாத வகையில் தீர்ப்பளித்திருக்கிறது. இப்போது உத்தேசிப்பது போன்ற சட்டத்தை இயற்றச் சட்டசபைக்கு அதிகாரம் இல்லை என்று அது குறிப்பிட்டுக் காட்டியுள்ளது. முந்திய உச்சவரம்புச் சட்டத்தை ஸுப்ரீம் கோர்ட் விதிவிலக்காகக் கருதித் தனிச் சலுகையுடன் கவனித்திருக்கிறது. அதே சலுகை இப்போதைய பிரேரணைக்கும் பாதுகாப்பாக அமைகிறது என்று உரிமை கொண்டாட முடியாது. கோலக்நாத் வழக்கில் சட்டத்தைத் தெளிவாக ஸுப்ரீம் கோர்ட் விளக்கிய பிறகு, இந்தப் பாத்தியதையைத் தொடர்ந்து கொண்டாடுவதற்கில்லை. மசோதாவில் உள்ள பிரேரணை அரசியல் சாஸனத்துக்குப் புறம்பானது என்பது 'ஹிந்து'வின் நம்பிக்கை. அதனால் ஏழைகளுக்கு நன்மை விளையாது; உற்பத்தி பெருகாது என்று 'ஹிந்து' பத்திரிகை தெரிவித்துள்ள கருத்து முற்றிலும் சரியானது. இது வெறும் அரசியல் செப்பிடு வித்தைதான். குறைந்த பட்சமாகத் தமிழ் நாடு சர்க்கார் செய்யக் கூடியது, மசோதாவைப் பொது மக்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக, சுற்றறிக்கையாக அனுப்பிக் கருத்துக்களைச் சேகரிப்பதுதான் என்று 'ஹிந்து' கூறியுள்ள முடிவை நான் முழு அளவில் ஆதரிக்கிறேன்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)


"நான் வழி காட்டுகிறேன்"
முதலாளி-களின் நிதி உதவி
"ராஜ்ய சர்க்கார்களைக் கவிழ்க்க ஒரு புது மந்திராலயம் ஏற்படுத்த வேண்டியதுதான்!"
இந்திரா காங்கிரஸுக்குத் தோல்வி
PK

என்ன சேதி?

தி.மு.க.வும் கம்யூனிஸ்ட் கட்சியும்

இடது கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்ற சந்தேகம் பொதுமக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. இந்தச் சந்தேகத்தைச் சட்டசபையில் பேசும்போது முதன் மந்திரி திரு கருணாநிதி போக்கியிருப்பதுபற்றி மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

''இடது கம்யூனிஸ்ட் கட்சியின் யோசனைகளுக்குச் செவிமடுத்ததால் நாட்டின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட விளைவுகள் என்ன என்பது எல்லாருக்கும் நன்ருகத் தெரியும்!'' என்று இடது கம்யூனிஸ்ட் அங்கத்தினருக்குச் சுடச் சுடப் பதில் அளித்திருக்கிருர் முதன் மந்திரி.

ஆகவே கம்யூனிஸ்ட் கட்சியின்பால் முதன் மந்திரி எச்சரிக்கையாகவே இருந்து வருகிருர் என்பது தெரிகிறது. அவர்களது யோசனைகளின் விளைவுகள் என்னவென்பதையும் நன்ருகப் புரிந்து வைத்திருக்கிருர்!

ஒப்புக்கொள்ளுகிருர்கள்

மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீ தாவன், கம்யூனிஸ்ட் கட்சியாளரின் அநுதாபி என்று பெயர் எடுத்தவர். ஆனல் அவருக்குமே வங்கத்தில் இடது சாரிக் கம்யூனிஸ்டுகள் நடந்து கொள்ளும் விதம் பொறுக்கக் கூடியதாக இல்லை. வங்கத்தில் பர்த்வானில் சிலர் கலகம் செய்து கொலையும் கொள்ளையும் நடத்தியிருக்கின்றனர். இந்தக் கலவரத்தை போலீஸ் படை சென்று அடக்கியிருக்கிறது. போலீஸ் படையை எதிர்த்துக் கலவரக்காரர்கள் போராடியிருக்கிருர்கள். இடது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ ஹரேகிருஷ்ண கோனர், ''எங்கள் மக்கள்'' என்று கலகக்காரர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்கள் தீரமாகப் போராடியதைப் பாராட்டியிருக்கிருர். பர்த்வானில் என்ன நடந்தது என்று கவர்னர் விசாரிக்கச் சென்றதை ஆட்சேபித்து ஸ்ரீ கோனர் எழுதிய கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடுகிருர். கவர்னர் அளித்த பதிலில், கலகக்காரர்களை ''எங்கள் மக்கள்'' என்று உரிமை பாராட்டிக் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே கலகக்காரர்கள் கம்யூனிஸ்ட்கள் என்பது சந்தேகமறத் தெரிந்துவிடுகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிருர்.

ஜனநாயகத்தை உடைப்பது எங்கள் லட்சியம், கலகத்தைத் தூண்டி, அராஜகம் விளைவிப்பதே எங்கள் நோக்கம் என்று இரவும் பகலும் சொல்லும் கட்சியைத் தடை செய்யத் தில்லி ஆட்சி முன்வரவில்லை. ஏனெனில் இன்றைய தில்லி ஆட்சி இந்தக் கட்சியின் ஆதரவில்தான் உயிர் பிழைத்திருக்கிறது.

இந்திரா காந்தியின் மந்திரி சபை வாழ வேண்டும் என்பதற்காக நாட்டு மக்களின் சொத்து, சுதந்திரம், வீடு வாசல் எல்லாம் இந்த அராஜகக் கும்பலின் சூறைக்கு இலக்காக்கப்பட வேண்டுமா?

பாம்பும் நகரசபையும்

சென்னை மாநகரக் குழாய்களில் பாம்பு வருகிறது. பூச்சிகள் வருகின்றன என்ற புகார்களை அடிக்கடி கேட்கிறேம். மாநகர் ஆட்சியின் பொறுப்பிலுள்ள தண்ணீர் வினியோக நிலையத்திலிருந்து நகருக்குள் தண்ணீர் அனுப்பப்படும்போது சுத்தம் செய்யப்பட்டுத்தான் அனுப்பப்படுகிறது. ஆனல் அந்தத் தண்ணீர், குழாய்கள் வழியே பல பகுதிகளுக்குச் செல்லும்போது வழியில் பலவிதங்களில் அசுத்தப்படுத்தப்படுகிறது. குடிசைவாழ் மக்களின் வசதிக்காக ஆங்காங்கே பூமியில் பள்ளம் தோண்டி, நீர்க் குழாயில் துளை போட்டுத் தண்ணீர் எடுக்கிருர்கள். அந்தப் பள்ளத்தில் நீர் தேங்கிச் சகதியாகிறது. பலவித அசுத்தங்களும் கிருமிகளும் வெகு சுலபமாகச் சுத்தமான குடிநீர் ஓடும் குழாய்க்குள் பிரவேசிக்க வாய்ப்பு ஏற்

லக்ஷ்மிக்கு லக்ஷ ஹோமம்

புதுக்கோட்டையில் ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் தமது குருநாதரின் அதிஷ்டானத்தில் ஸ்ரீ புவநேசுவரி மாதாவுக்கு ஆலயம் எழுப்பியிருப்பதையும், அங்கு அம்பிகை வரப்பிரசாதினியாகக் கோயில் கொண்டிருப்பதையும் ஆஸ்திக அன்பர்கள் அறிவர். ஸ்ரீ புவநேசுவரி ஆலயத்தில் அடிக்கடி விசேஷ பூஜைகளும் ஹோமங்களும் லோக க்ஷேமத்துக்காக நடைபெற்று வருகின்றன. இவ்வருடம் மே மாதம் 17-ந் தேதி இத்தகைய ஒரு புனிதப் பெரு வைபவம் அங்கு நிகழவிருக்கிறது. அன்று ஸ்ரீ மகா லக்ஷ்மி மந்திர லக்ஷ ஹோமம் நடைபெறுகிறது. ஏராளமான வேத விற்பன்னர்களும் தேவி உபாசகர்களும் கூடி இம் மகா யக்ஞத்தைச் செய்கிறார்கள். இம்மை, மறுமை நலன்களை வழங்கக் கூடிய இவ்வாராதனையின் பயனை ஆஸ்திகர் உலகம் பெற வேணும். ஹோமரக்ஷை பெற விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 15 அனுப்பி வைக்க வேண்டும். காரியதரிசி, ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமி அதிஷ்டானம், கீழ ஏழாம் வீதி, புதுக்கோட்டை.

படுகிறது. இன்னும் சில இடங்களில் மக்கள் குடிநீர்க் குழாய்களில் துவாரமிட்டு அதன் வழியாக ரப்பர் நுழைத்துக் குடிநீரை உறிஞ்சி இழுத்துத் தண்ணீர் பிடிக்கின்றனர். இந்தத் துவாரம் வழியாக எவ்வளவோ கிருமிகள் உள்ளே புக ஏதுவுண்டு.

இதற்குத் திரு வி. ஆர். நரஸிம்மன் ஒரு நல்ல யோசனை கூறுகிறார்: குடிசைவாழ் மக்கள் வசதிக்காகத் தெருவில் பள்ளம் தோண்டிக் குழாய் அமைப்பதற்குப் பதிலாக, தெரு மட்டத்துக்கு மேலேயே, 'பக்கெட் பம்பு' அமைத்துக் கொடுத்து விட்டால் இந்தப் பிரச்னை எழாது என்கிறார். அதே சமயத்தில் பக்கெட் பம்புகள் காணாமல் போகும் பிரச்னை எழாமலும் அரசினர் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை யொட்டி லாட்டரிக்கு முதல் பரிசு பத்து லட்சம் ரூபாயாக வைத்து, இரண்டு ரூபாய் டிக்கட்டு களைத் தமிழ் நாடு சர்க்கார் விற்று வருகிறது. தமிழ் வருஷப் பிறப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடவேண்டிய திருநாளாகும். ஆனால் அத்தினத்தில் பெரிய லாட்டரிப் பரிசு வைப்பது சூதாட்ட மனப்பான்மையில் நமது மக்களை ஆழ்த்திவிடும். ஆகையால் இவ் வருடப் பிறப்பை நான் துக்க தினமாகவே கருதுகிறேன். சூதாட்டத்தையோ ரசவாதத் தையோ கையாண்டு செல்வச் சீமான் ஆவ தற்கு முயல வேண்டாமெனத் தமிழ் ஞானியும், கவியும், அன்புக்குரியவளுமான ஔவைப் பிராட்டி கூறினாள்: ''சூதும் வாதும் வேதனை செய்யும்.''

★

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தமது அரசின் புதுக் கொள்கையைப் பிரகடனம் செய்துள்ளார். அமெரிக்கத் தூதரகம் தரும் விளக்கப்படி, இப்போதைய சகாப்தம் சம்பாஷணைகள் நடைபெறும் சகாப்தமாக அமையும் என்று அதில் கூறப்படுகிறது. முந்தைய ஆண்டுகளில் நடத்திய பேச்சுக்களெல்லாம் கெடுபிடிப் போரின் பிரசார அம்சம்தான். அவ்வாறு இல்லாமல், இந்தச் சகாப்தத்தில் பேச்சுக்கள் நல்ல அடிப்படையில் அமையும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு சித்தாந்தங்களைப் பின்பற்றும் நாடுகள் பேசி, திட்டவட்டமாக உடன்பாடு காண முடியும் என்பதுதான் அந்த நம்பிக்கை. அவ்வாறு கருதுவது நல்லதுதான். ஆனால் யாரும் எவரையும் நம்புவதில்லை என்ற சகாப்தத்தை நாம் அடைந்து விட்டதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. அப்படியாயின், இந்த அடிப்படையில் பேச்சு நடத்தி என்ன பலன் காண முடியும்?

★

ஸ்ரீ பாய் லால்பாய் பட்டேல் சென்ற வாரம் காலமாகி விட்டார். குஜராத்தில் சுதந்திரக் கட்சியின் உயிரும் உள்ளமுமாக அவர் விளங்கினார். வல்லப வித்யா நகர் சர்வ கலா சாலை, அவரது நிர்மாணத் திற னுக்குச் சிறந்த நினைவுச் சின்னமாகும். பொறியியல் துறையில் நல்ல அநுபவம் பெற்று ராஜீய வாதியானவர் பாய்லால் பாய். ஆகையால் தான் அரசியலில் அவரது பணிகள் அனைத்திலும் பிரத்தியட்ச மனப்பான்மை தவறாது காணப்பட்டது.



இந்தியாவில் உள்ள சுதந்திரக் கட்சிக் கிளைகள் யாவும், தேசிய நஷ்டமான அவரது மறைவுக்காக வருந்தித் துக்கம் கொண்டுள்ளன.

அன்பார்ந்த நேயர்களுக்கு

புத்தாண்டு வாழ்த்துக்கள். கல்கி நேயர்களுக்குப் புத்தாண்டில் நலமே பெருக இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கிறேன். நாட்டின் இன்றைய நிலவரம் சுபிட்சம் பற்றி நம்பிக்கை கொள்ள அவ்வளவாக இடம் தரவில்லைதான். என்றாலும் ஆண்டவனிடம் தளராத பக்தி கொண்டு இயங்கிக் கடமைகளைச் செவ்வனே செய்து முடிப்போமாயின் அவன் நல்வழி காட்டி நம்மை உய்விப்பான்.

சாதாரண ஆண்டு, கல்கி வாசகர்களைப் பொறுத்தவரையில் சாதாரணமாகி விடாது என்று உறுதி கூற விரும்புகிறோம். நவீன தமிழ் இலக்கியப் படைப்புக்களில் கல்கி தரத்துக்கும் புதுமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஆதரவு காட்டி வந்திருக்கிறது. இந்த இதழில் ஆரம்பமாகும் ஜெகசிற்பியனின் ''காணக் கிடைக்காத தங்கம்'' என்ற நாவல் முதல்தரமானதும் புதுமையானதுமான ஒரு முயற்சி. இந்த நாவலுக்கென அவர் தேர்ந்தெடுத்துள்ள கதாபாத்திரங்கள், அவர்களின் குணசித்திரங்கள், சூழ்நிலை, கதைப் போக்கு எல்லாமே புதுமையானவை.

இந்த முதல் இதழில் திரு ஜெகசிற்பியன் ஒரு சைக்கிள் கடையையும் அதன் முதலாளியையும் அவனிடம் தொழில் கற்றுக் கொள்ளும் கதாநாயகனையும் வர்ணிக்கும் விதத்தைப் பார்த்தாலே போதும் நாவலாசிரியரின் உழைப்பு புலப்படும். குணசித்திரங்களை உருவாக்கும் அழகு, சூழ்நிலையை நுணுகி நோக்கி ஆராயும் திறன் எல்லாம் நமக்குத் தெரிய வரும். இந்த நாவலைக் கல்கி வாசகர்களுக்குப் பெருமையுடன் வழங்குகிறோம்.

இந்த இதழில் முடிவுறும் 'சாருலதா' என்ற நாவலும் முழுக்க முழுக்க ஒரு புதுமையான, தரமான படைப்பு. 'சட்டம் என்பது வேறு தர்மம் என்பது வேறு. சட்டத்துக்கு ஒருவன் உட்பட்டு நடந்தால் போதாது. தர்மத்தைக் கடைப்பிடிக்க முயல வேண்டும்' என்று நினைப்பவன் கதாநாயகன் வேணுகோபால். 'சூதும் வாதும் நிரம்பிய இந்த உலகத்தில் காந்தியத்துக்கு இடமே இல்லை; அது சஹாரா பாலைவனத்தில்தான் வாழ முடியும்' என்று வாதாடுபவள் கதாநாயகி சாருலதா. இவர்களுக்கு இடையில் நடைபெறும் போராட்டம் ஒரு சுவையான நாவலாக உருப்பெற்று இந்த இதழில் ஓர் உச்சகட்டத்தை அடைந்து முற்றுப் பெறுகிறது.

சிறந்த சிறுகதைகளைப் பொறுக்கி வாசக அன்பர்களுக்கு அளிப்பதில் கல்கி எப்போதுமே சிரத்தை காட்டி வந்திருக்கிறது. கல்கி இதழைக் கையிலெடுத்தால் நாலு நல்ல சிறுகதைகளைப் படிக்கலாம் என்ற நம்பிக்கை வாசகர்களுக்கு எப்போதும் உண்டு. அந்த நம்பிக்கை மேலும் உறுதிப்படும் வகையில் சில திட்டங்களை வகுத்திருக்கிறோம். இந்தப் புத்தாண்டு மலரில் நான்கு சிறப்புச் சிறுகதைகள் இடம் பெறுகின்றன. நான்கும் நான்கு ரகம்—விஞ்ஞானக் கதை, சரித்திரக் கதை, ஹாஸ்யக் கதை, சமூகக் கதை என்று.

தமிழில் சிறுகதைகள் என்று நோக்கினால் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் பாரத நாட்டின் பிற மொழிச் சிறுகதைகளில் முன்னேற்றம் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் வாசக அன்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? தமிழ் எழுத்தாளர்களுக்கும் உற்சாகத்துடன் புதுமையான படைப்புக்களை உருவாக்க அதுவே தூண்டுகோலாக அமையுமல்லவா? இந்த நோக்கத்துடன் பாரத நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களை அணுகி, அவர்கள் எழுதியுள்ள சிறந்த கதைகளுள் ஒன்றினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டோம். மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவர்கள் இந்தக் கோரிக்கைக்கு இணங்கினார்கள். பாரத நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களால் தங்களது சிறுகதைப் படைப்புக்களில் மிகச் சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பது சிறுகதைகளைச் சாதாரண ஆண்டில் கல்கி, நேயர்களுக்கு அளிக்கவிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் கடைசி வாரக் கல்கி சிறுகதைச் சிறப்பிதழாக மலரும்.

பிற மொழிச் சிறுகதைகளைத் தமிழாக்கம் செய்து தந்தால் போதுமா? சிறந்த தமிழ்ச் சிறுகதைகளை மற்ற மாநிலங்களில் உள்ளோர் படித்து மகிழ வேண்டாமா? என்று தமிழ் எழுத்தாளர்கள் கேட்பது காதில் விழுகிறது. அதற்கான நல்லதொரு திட்டத்தையும் உருவாக்கி வருகிறோம். முதல் சிறுகதைச் சிறப்பிதழில் இந்தத் திட்டம் பற்றிய விவரங்கள் வெளியாகும்.

மகரிஷியின் குறுநாவல் ''கடல் நுரை'' இந்தப் புத்தாண்டு மலருக்குக் கனமும் சுவையும் கூட்டுகிறது.

நகைச்சுவைக்கென ஒரு பகுதியும் மற்றொரு பேட்டி அம்சமும் இந்த இதழில் தொடங்குகின்றன.

இந்த இதழ் முகப்புப் படத்தில் காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் அரியாசனத்தில் வீற்றிருந்து நமக்கு அருள்பாலிக்கிறார்கள். காஞ்சி காமாட்சி கோயிலில் ஆதிசங்கரர் சந்நிதிக்கு முன்னுள் ஒரு மரப் பலகையைப் பீடமாகக் கொண்டு இருக்குமிடம் தெரியாமல் ஒடுங்கி நாட்கணக்கில் தியானத்தில் ஆழ்ந்து போகும் அதே பெரியவாள்தான் இம்மலரின் முகப்புப் படத்தில் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, அன்பும் அருளும் பண்பும் பக்தியும் அரியாசனத்தில் அமர்ந்திருப்பதாகத் தானே நமக்குத் தோன்றுகிறது. இதே நற்குணங்கள் நமது நாட்டின் ஆட்சிபீடத்திலும் உருவாகி நிலைக்கவும் நீடிக்கவும் நாடு நலம் பெறவும் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்

சதாசிவம்

மிருதங்கம் மூர்த்தி

'மூர்த்தி சிறியது, கீர்த்தி பெரியது என்று சொல்வது மிருதங்க வித்வான் ஸ்ரீ டி. கே. மூர்த்தி விஷயத்தில் மிகவும் பொருத்தம். அவரது மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதாக இருக்கிறது' — இவ்வாறு பல்லாண்டுகளுக்கு முன்பே பேராசிரியர் கல்கி அவர்கள் எழுதினார்கள். அதன்பின்பு ஸ்ரீ டி. கே. மூர்த்தியின் கீர்த்தி மேலும்மேலும் பெருகி வந்திருக்கிறது. ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுக்கு முப்பதாண்டுகளாக மிருதங்கம் வாசித்துவரும் ஸ்ரீ மூர்த்தி, அன்னாருடன் எடின்பரோ கலை விழாவுக்கும் அதன் பிறகு ஐ. நா. சபைக்கும் சென்று ஐரோப்பிய - அமெரிக்க நாடுகளிலும் பெரும் பாராட்டினைப் பெற்றிருக்கிறார்.

திருவனந்தபுரம் வயலின் வித்வானாகிய ஸ்ரீ தாணு அய்யரின் குமாரரான ஸ்ரீ மூர்த்திக்கு பச்சிளம் பருவமான ஐந்தாம் பிராயத்திலேயே மிருதங்கத்தில் ஆர்வம் உண்டாயிற்று. தமையனார் ஸ்ரீ கோபாலகிருஷ்ணனிடம் சிட்சை பெற்று, எட்டாம் வயதிலேயே ஹரிகதைகளுக்கு மிருதங்கம் வாசிக்கலானார். அப்போது திருவனந்தபுரம் வந்திருந்த பிரசித்த மிருதங்க வித்வானாகிய தஞ்சை ஸ்ரீ வைத்யநாதய்யர், நீலகண்ட பாகவதரின் ஹரிகதைக்கு இந்த இளம் பிள்ளை மிருதங்கம் வாசித்த பாங்கு கண்டு வியப்புற்றுத் தம்மிடம் சிட்சை பெறுமாறு அழைத்தார். அடுத்த ஆண்டில் மூர்த்தி தஞ்சை வைத்யநாதய்யரை அடைந்து அவரிடம் அப்பியாசம் பெறலானார். கண்டிப்பும் கனிவும் ஒரே இடத்தில் கலந்திருக்க முடியும் என்பதற்கு ஓர் அற்புத உதாரணம் ஸ்ரீ வைத்யநாதய்யர். பாலக்காடு ஸ்ரீ மணி அய்யரும் இவரிடம் சிட்சைபெற்றவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. பதினோராவது வயதில் குருவுடன் சேர்ந்து மேடைக் கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்கத் தொடங்கிய ஸ்ரீ மூர்த்தி, விரைவிலேயே தனியாக வாசித்துப் புகழேணியில் படிப்படியாக மேலேறலானார்.

சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் ஸ்ரீ காமகோடி ஜகத்குரு அவர்கள் ஹைதராபாத்தில் இருந்தபோது ஸ்ரீ மூர்த்தியை ஸ்ரீமடத்தின் ஆஸ்தான மிருதங்க வித்வானாக நியமித்து அவருக்கு 'மிருதங்க பூஷண' என்ற விருதையும், சால்வை, ருத்ராட்சமாலை முதலியவற்றையும் அனுக்கிரகித்தார்கள்.



ஸ்ரீ மூர்த்தியின் வாசிப்பிலுள்ள சிறப்பு யாதெனில் அவரது சொல்லின் அழுத்தமும், நறுக்குத் தெறித்தாற் போன்ற கச்சிதமுமே. பலவேறு தாளங்களுக்குத் தனித்தனிப் பொருத்தமுள்ள சொற்களைக் கையாளுவார். குருநாதர் வகுத்த பிராசீன பாட்டையை விட்டு இம்மியும் விலகாதவர். புரியாத ஒன்றைச் செய்வதில் பெருமையில்லை எனக் கருதுபவர். கோபுரத்தை அடியிலிருந்து மேல் மட்டம் வரை குறைப்பது போல் 'தகிணதோம்' குறைக்க வேண்டும் என்று குருநாதர் விதித்ததை அப்படியே கடைப்பிடித்து, லயகோபுரம் எழுப்பி நாத தேவதையை வழிபட்டு வருகிறார்.

மேடையில் அவரது இங்கிதத்தைக் குறிப்பிட வேண்டும். கச்சேரியின்போது வாத்தியத்தைக் கல்லால் அடிப்பது, சோறு தேய்ப்பது போன்ற செயல்களை அவரிடம் காண முடியாது. பாடகருக்கு அனுசரணையாக, அடிக்க வேண்டிய இடத்தில் அடித்தும், இழைய வேண்டிய இடத்தில் இழைத்தும் அவர் வாசிப்பது சிரவணானந்தமாகும். பாடுபவருக்குத் தாளம் தடம் பெயராமல் 'அமர்த்தும்' அரிய வாசிப்பு அவருடையது.

சிறந்த ரசிக உணர்வும், நகைச்சுவை ஆற்றலும் பெற்ற மூர்த்தி அன்பர் குழாத்திடை 'சிட்டு' என அழைக்கப்படுகிறார். அவரை 'மிமிக்ரி' செய்யச் சொல்லி நாளெல்லாம் அலுக்காமல் கேட்பவர்கள் உண்டு.

லயமாளிகை எழுப்பும் ஸ்ரீ மூர்த்தி வசிப்பதற்காக அவருக்குச் சொந்தத்தில் ஒரு சிறு இல்லம் அமைத்துத் தர வேண்டும் என பல அன்பர்கள் நன்முயற்சி மேற் கொண்டுள்ளனர். இதற்காக அமைக்கப்பட்டுள்ளதுதான் ''மூர்த்தி பாராட்டுக் குழு.'' சங்கீத கலாநிதி முசிறி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இக் குழுவுக்குத் தலைவராகவும், சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யர் அவர்கள் பொருளாளராகவும், சென்னை ஸ்ரீ கிருஷ்ண கான சபைக் காரியதரிசி ஸ்ரீ யக்ஞராமன் அவர்கள் செயலாளராகவும் உள்ளனர். சங்கீத கலாநிதி பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர், வீணை வித்வான் ஸ்ரீ கே. எஸ். நாராயணசாமி, டாக்டர் ஆர். டி. ஐயர் (தில்லி), பேராசிரியர் ஸ்ரீ டி. வி. ராமானுஜம் (பம்பாய்), ஸ்ரீ கே. கே. ஐயங்கார் (கல்கத்தா), ஸ்ரீ எம். வைத்தியநாத ஐயர் (திருவனந்தபுரம்), ஸ்ரீ எம். வி. வெங்கட்ராமன், எஸ். ஜி. ரத்னம் ஐயர், கல்கி சதாசிவம் ஆகியோரும் பாராட்டுக் குழுவில் அங்கத்தினர்களாவர். குழு மேற்கொண்டுள்ள நற்பணிக்குக் கலா ரசிகர்கள் பேராதரவு அளிக்க வேண்டும். சீக்கிரத்திலேயே வேதம் 'ஆயதனவான் பவது' என ஆசீர்வதிப்பது போல் ஸ்ரீ மூர்த்தி அவர்கள் சொந்தக் கிருகத்துக்குப் பெயர நாதப் பிரம்மம் அருள்புரியுமாக!

பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யர், பொருளாளர், மூர்த்தி பாராட்டுக் குழு, 43, ஸ்மிட்ஸ் லேன், சென்னை - 14.



கொரிக்கவும் சிரிக்கவும்

கோமதி சுவாமிநாதன்

ஏமாறாதே ஏமாற்றாதே !

புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலாசிரியர் பால்ஸாக் வெளிநாடு ஒன்றுக்குப் போயிருந்தார். அந்த நாட்டின் மொழியும் நாணய விவரமும் அவருக்கு அவ்வளவாகத் தெரியாது. டாக்ஸி ஓட்டிகளுக்குத் தாம் ஏமாறாமல் எப்படிப் பணம் கொடுப்பது என்ற பிரச்னை அவரை ஆட்கொண்டது. அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தார். பணத்தைச் சில்லறையாக ஒரே மாதிரி மாற்றி வைத்துக் கொண்டார். டாக்ஸியிலிருந்து இறங்கியதும் ஒவ்வொரு நாணயமாக அந்த டாக்ஸி டிரைவர் கையில் வைத்து அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருப்பார். எந்த நாணயம் போட்டவுடன் அந்த டாக்ஸிஓட்டி முகத்தில் புன்சிரிப்புத் தோன்றுகிறதோ, அப்போது அவன் கையில் கடைசியாக வைத்த நாணயத்தைச் சட்டென்று திருப்பி எடுத்துக் கொண்டு விடுவார். முந்திய நாணயத்துடன் கட்டணம் சரியாகப் போயிற்று என்று புரிந்து கொள்வாராம். இப்படி மொழிப் பிரச்னையை அவர் நாணயமாகச் சமாளித்தார்.



எழுதாமல் இருப்பது எப்படி?

பிரபல நகைச்சுவை எழுத்தாளர் ஸ்டீபன் லீகாக்கைச் சந்திக்க ஆர்வம் மிக்க சில இளம் எழுத்தாளர்கள் வந்தார்கள். ''உங்கள் ஆற்றலின் ரகசியத்தை எங்களுக்குச் சொல்லுவீர்களா?'' என்று கேட்டார்கள்.

''நகைச்சுவை விஷயங்களை எழுதுவது அப்படி ஒன்றும் பிரமாத விஷயமில்லை.



நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் பேனா, பேப்பர் இவைகளைத் தயார் செய்து கொண்டு உட்கார்ந்து உங்களுக்குத் தோன்றுவதை எழுத ஆரம்பிக்க வேண்டியதுதான்'' என்றார் லீகாக். பிறகு சில விநாடிகள் மௌனமாக இருந்து விட்டு, ''எழுதுவது ரொம்பச் சுலபம். கிடுகிடுவென்று எழுதலாம்! ஆனால் மனத்தில் தோன்றுவது என்று சொன்னேனே !... அங்கே தான் சிரமம்!'' என்று முடித்தார்.

'சாதாரண' வருஷத்துக்கான சில சாதாரண தீர்மானங்கள்

இனிமேல் நான் எப்போதுமே சத்தியத்தைக் கடைப்பிடிக்கப் போகிறேன்.

(காரியாலயத்துக்கு எழுதும் லீவு லெட்டர் மாத்திரம் இதற்கு விதிவிலக்கு.)

இனிமேல் புகை பிடிக்கும் பழக்கத்தை விட்டு விடப் போகிறேன்.

(நண்பர்களிடமிருந்து ஓசியாக வரும் வேளைகள் நீங்கலாக.)

இனிமேல் தமிழ்த் திரைப் படங்கள் பார்க்கப் போவதில்லை.

(காதலர்கள் கட்டிப் பிடித்து டூயட் பாடும் காட்சிகள் இருந்தாலொழிய)



பதிலுக்கான கேள்விகள்

காய்ந்துபோன மஞ்சள் நிறப் பட்டாணியை இரவோடு இரவாக ஊற வைத்துப் பச்சைக் கலர் சாயம் பூசிக் காலையில் அப்போதுதான் காயிலிருந்து உறித்த பச்சைப் பட்டாணி என்று ஏமாற்றி விற்கிறார்கள்.

பசுமைப் புரட்சி என்றால் என்ன ?

இலவம் பஞ்சுக் கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைப் பெரும் அளவில் நல்ல எண்ணெயுடன் கலந்தாலும், அக்மார்க் பரிசோதனையில் இந்தக் கலப்படம் வெளியாவதில்லை.

ஈசனுடன் இரண்டறக் கலக்கும் ஞானி என்றால் யார் ?

பட்டு மாமா: சிட்டு மாமி!

கணவன் : இன்றைக்கு டிபனுக்குத் தேங்காய் சாதம் செய்யேன்!

மனைவி : ஐயையோ ! அந்த டிபன் செய்து நமக்குக் கட்டுபடி ஆகுமா தேங்காய் விற்கிற விலையிலே! நான் வழக்கம் போல் பாதாம் அல்வாவே பண்ணி விடுகிறேன்.





இந்தப் பன்னிரண்டு வருஷங்களில் பழக்கமான முகம் ஒன்றைக் கூடக் காணவில்லை. பழைய ஞாபகங்களைப் பற்றிக் குஷாலாகப் பேசிக்கொண்டிருக்க ஓர் ஆத்மா கூட அகப்படவில்லை. 'இது என்ன சொர்க்கம்?' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார் வியாக்கிரபாத சாஸ்திரிகள். விஷயம் என்னவென்றால் அவருக்குச் சொர்க்கம் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. இந்தச் சொர்க்கத்தை அடைவதற்காகப் பூலோகத்தில் அவர் செய்த காரியங்களை நினைத்தால் அவருக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. இந்தச் சொர்க்கத்தை அடைவதற்காக அவர் செய்யாத காரியங்களை நினைத்தால் அவருக்கு அழுகையாய் வந்தது. ஆனால் இந்தத் தரித்திரம் பிடித்த சொர்க்கத்தில் சிரிக்க முடியுமா? முடியாது! அழத்தான் முடியுமா? அதுவும் முடியாது. இதற்குப் பெயர் சொர்க்கமாம்! சிவசிவா! ராம ராமா! இல்லை! பிசகு. வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். சிவனையும் ராமனையும் பிரார்த்தித்துத்தான் இந்தச் சொர்க்கத்துக்கு வந்து சேர்ந்தேனே? போதாதா? சொர்க்கத்திலிருந்து பூலோகத்துக்குப் போக யாரைப் பிரார்த்திக்கலாம்? சனீசுவரனைப் பிரார்த்தித்துப் பார்க்கலாமா? ......சனீசுவர.... சனீசுவர.... சனீசுவர.... - அமரர் கல்கி (இது என்ன சொர்க்கம்?)



பிடிக்கும் பயிர் படிப்பில் தெரியும் !

அவன் பள்ளி மாணவன். மாணவர் விடுதியில் தங்கிப் படித்து வந்தான். படிப்பில் எவ்வளவு தீவிரமோ அத்தனை தீவிரம் குறும்புத்தனத்திலும். அவ்வப்போது மாணவர் விடுதியைச் சேர்ந்த சமையலறையிலிருந்து கொஞ்சம் உருளைக் கிழங்கு, எண்ணெய் இவற்றையெல்லாம் அகற்றி வருவான். ஒரு சிறு இரும்பு வாணலியையும் சம்பாதித்து வைத்திருந்தான்.

முன்னிரவு வேளையில் விடுதி மாணவர்கள் எல்லாம் ஒரு பொதுவான ஹாலில் படிப்பதற்காகக் கூடுவார்கள். இந்த மாணவ மணி ஓர் ஓரமாக உட்காருவான். மெழுகுவத்தியின் உதவி கொண்டு மறைவாக வாணலியில் எண்ணெயைக் காய வைப்பான். உருளைக்கிழங்கைச் சீவிப்போட்டு வறுவல் தயாரிப்பான்.

ஆனால் எண்ணெய் வாசனை ஒருநாள் அவனைக் காண்பித்துக் கொடுத்து விட்டது. ஆசிரியர் மோப்பம் பிடித்து விட்டார். அந்த மாணவனுக்குத் தண்டனையும் கிடைத்தது. பிற்காலத்தில் அந்த மாணவன் படித்துப் பட்டம் பெற்று ஒரு மாவட்ட அதிகாரியானான். அந்த அதிகாரியின் கவனம் உருளைக் கிழங்குச் சாகுபடியில் தீவிரமாக ஈடுபட்டது. - ஒரு கல்லூரி சஞ்சிகையில் கிடைத்த உண்மைத் தகவல்





ஆண்களால் முடியாது...!

ஸ்ரீமதி பர்வதம் வைத்தியநாதன்
(குடும்பத் தலைவி) :

ஆயிரம் சொல்லுங்கள் — எங்களுக்கு இருக்கும் சாமர்த்தியம் எங்களுக்கே உரித்தாகும். ஆண்களுக்கு வராது.

பேரம் பேசுதல் ஒரு தனிக் கலை. அது ஆண்களுக்குத் தெரியாது.

'மார்க்கெட்டுக்குப் போய்க் காய்கறி வாங்கி வரேன்' என ஜம்பமாகக் கிளம்பி விடுவார்கள். பிறகு அரிவாள்மணையில் உட்கார்ந்து நாங்கள் நறுக்க ஆரம்பிக்கும்போது தான், விஷயம் புரியும். முத்தலான வெண்டைக்காயும், சொத்தைக் கத்திரிக்காயும் — அமோகம்! அமோகம்!

மார்க்கெட்டில் கடைக்காரர்கள், "வாங்க சாமி!" என்று கூப்பிட்டதுமே இவர்களுக்கு ஜிலுஜிலுவென்று இருக்கும். முகஸ்துதியில் மயங்கி விடுவார்கள்.

ஒன்றரை ரூபாய்க்குப் பக்கத்து வீட்டு மாமி வாங்கியிருக்கும் சாத்துக்குடியை, மூன்று ரூபாய் கொடுத்து இவர் வாங்கிக் கொண்டு வந்து நிற்பார் !

பேரம் பேசத்தான் தெரியாது; கவனித்தாவது வாங்குவார்களா இந்த ஆண்கள் ? எப்போதேனும் தனியாக ஜவுளிக் கடையில் செலக்ஷன் பண்ணிக் கொண்டு வந்து, "நியூ டிசைன் ! பார்... உனக்கு இப்படி வாங்கத் தெரியுமா?" எனக் கேட்பார்கள் ஜம்பமாக.

கட்டின மறு வாரமே புதிய டிசைன் 'டாட்டா' சொல்லிக் கொண்டு ஓடிவிடும் !

ஸ்ரீமதி உமா ராமகிருஷ்ணன்
(கணக்கு ஆசிரியை) :

பழக் கடைக்காரனிடம், "இந்த ஆரஞ்சு என்ன விலை?" என்று கேட்பார். "இரண்டு ரூபா சார் !" எனக் கடைக்காரன் சொல்வான். அவனிடம் இன்னொரு முறை கேட்டால் விலை இறங்கி விடும். ஆனால், "சரி, இரண்டு டஜன் போடப்பா" என்று இவர் கூறி விடுவார்.

"பார்த்து வாங்கினால், மலிவு விலையில் கிடைக்கும்" என்று நான் சொன்னால் போதும், உடனே, "காலையிலிருந்து சாயந்திரம் வரை உட்கார்ந்து கொண்டிருக்கிறான். தலை சுமக்கக் கொண்டு வரான்.... நாலு காசு லாபம் வராவிட்டால் அவனுக்குப் பிழைப்பு ஏது?" என்று ஒரு போடு போட்டுவிடுவார்.

ஜவுளிக் கடைகளுக்கு ஆண்களோடு போகவே கூடாது. அவசரம் அவசரமாக வாங்கியாக வேண்டும். நாலு கடைகள் ஏறி இறங்கி, நிதானமாகத் துணிகளைப் பார்க்க முடியவே முடியாது.

முடியாது? முடியாது!

பொதுவாகவே ஆண்கள் விலை குறைத்துக் கேட்பது கௌரவக் குறைவு என்று நினைக்கிறார்கள். பெண்கள் பேரம் பேச அஞ்ச மாட்டார்கள். பாதி விலைக்கு வாங்கி விடுவார்கள்!

குமாரி ஆர். நளினி (புதுமுக வகுப்பு) :

பேரம் பேசிக் கொண்டிருப்பதால் நேரம் வீணாவதாக ஆண்கள் நினைக்கிறார்கள். 'Time is money' என்று அவர்கள் கணக்குப் போடுகிறார்கள் போலும்! ஒருகால் ஆபீசில் வேலை பார்த்த அலுப்பாகவும் இருக்கலாம்!

மேலும் இவர்கள் பேரம் பேசும் சமயம் யாரேனும் பெண்கள் தெருவில் இவர்களைத் தாண்டிச் செல்லலாம். அப்போது அவர்கள் எதிரில் பேரம் பேசுவது கௌரவக் குறைவாக இருக்குமென நினைத்து, அழுகிப் போன ஆப்பிளானாலும், கடைக்காரன் தருவதை வாங்கி வந்து விடுவார்கள்.

மிஸ் பி. கல்பகம் (தலைமை ஆசிரியை) :

சில இல்லங்களில் பெண்கள் வீட்டை விட்டு நகருவதில்லை. அப்படிப்பட்ட வீட்டிலுள்ள ஆண்கள் பேரம் பேசுவதில் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். ஆனால் பொதுவாகச் சொல்லுமிடத்து ஆண்கள் பேரம் செய்ய முடியாது.

அதற்கு அடிப்படையான காரணம் — பெண்களுக்குள்ள பொறுமை ஆண்களிடம் இருப்பதில்லை.

இன்னொன்று. பெண்களுக்குத் தினமும் பல வீட்டுப் பெண்களோடு பேசி வரும் காரணத்தால், விலைவாசிகள் மனப்பாடம். ஆகவே ஏமாந்து போக மாட்டார்கள்.

பக்கத்து வீட்டு அம்மாள் ஒரு கிலோ உருளைக் கிழங்கு வாங்கிய விலை தெரியும். கொஞ்சம் பேரம் பேசி அதைவிட ஐந்து பைசா மலிவாக நாம் வாங்கினால், மாலையில் பக்கத்து வீட்டு அம்மாளிடம் பெருமையாக அது பற்றிப் பேசலாம்! இப்படிப் பெருமைப் பட ஆண்களால் முடியாது!

பெண்களால் முடியாது...!

திரு வி. ராமகிருஷ்ணன் (வழக்கறிஞர்) :

இந்தப் பெண்கள் இருக்கிறார்களே, அவர்களால் ஆடம்பரச் செலவு செய்யாமலே இருக்க முடியாது !

பெண்கள் காலையில் தினசரிப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் இக்காலத்தில் சகஜமாகப் பார்க்கலாம். சர்வதேச அரசியல் நிலைமையையோ, உள்நாட்டு நிலவரத்தையோ அல்லது பொருளாதாரப் பிரச்னைகளையோ அப்படி கண்ணிமைக்காமல் படிக்கிறார்களா என்ன? இருக்காது !

புது மோஸ்தர் புடவை விளம்பரம் வந்திருக்கிறதா? எந்தக் கடையிலாவது பத்து சதவிகிதம் தள்ளி 'ஸேல்' நடத்துகிறார்களா என்றுதான் பார்ப்பார்கள்.

''இன்று ஷாப்பிங் போவோமா?'' என்று ஓர் இல்லத்தரசி, தன் பிரிய நாயகனைக் கேட்டால் அன்று பெரிய 'ஆடம்பரச் செலவுத் திட்டம்' இருக்கிறது என அறியாதவர் யார்? கடையிலிருந்து திரும்புவதற்குள் வாங்கிய சம்பளம் பாதி காலி !

திரைப்படத் தியேட்டர் விளம்பரங்களைப் பார்த்தால் போதாது? எனக்குத் தெரிந்து சில பெண்மணிகள் ராம ஜபம் எழுதுவது மாதிரி குறிப்பு எழுதி வைக்கிறார்கள், எந்தெந்த சினிமாக்களை அவசியம் பார்த்தாக வேண்டுமென்று !

திரு டி. கே. ஜே. பாண்டுரங்கன் (நெடுஞ்சாலைப் பணித்துறை):

''என்னதான் கலையாகப் பாட்டுக் கச்சேரியோ அல்லது புதுமை நாடகமோ நடக்கட்டுமே. அவற்றை அறவே மறந்து அங்கே ஆடம்பர அலங்காரங்களைக் கண்டு, ஆவலோடு விசாரிக்கும் மாபெரும் பணியைச் செய்யப் பெண்களால்தான் முடியும்!

''இந்தத் தடவை ஆபீசில் பார்ட்டிக்குப் பணம் அழுதீர்கள். காப்பிக்கு அதிகச் செலவாகிறது. வீட்டுப் பட்ஜெட்டில் துண்டு விழத்தான் செய்யும்!'' என்று செலவாளிப் பட்டத்தை ஆண் வர்க்கத்தின் மீது போட்டு விடுவார்களேயன்றி தங்கள் ஆடம்பரச் செலவை ஒரு போதும் நிறுத்தமாட்டார்கள்!

எவர்சில்வர் சீட்டுப் பணம், புடவைக்காரனுக்குத் தந்த தவணை, சினிமாச் செலவு இப்படி இன்னும் சில செலவினங்களைச் செய்துவிட்டு, அதைச் சமாளிக்கும் பக்குவம் இருக்கிறதே, அது கட்டுப் போட்டாலும் ஆண்களுக்கு வராது!....

வி. சந்திரசேகரன் (இரண்டாம் ஆண்டு, பொறியியற் கல்லூரி:)

ஆடம்பரத்துக்காகப் பெண்கள் செலவு செய்வது — அவர்களுக்கு ஐஸ்கிரீம் சாப்பிடுவது போன்றது !

திரைப்படம் பார்த்துவிட்டு அதில் வரும் கதாநாயகி போலத் தானும் காட்சி தர வேண்டுமென்பதற்காக, என்ன காக செலவு செய்கிறார்கள் இந்தப் பெண்கள் !

யுவதிகள், எந்நேரம் பார்த்தாலும் 'லேடஸ்ட் மாட'லின் பிரதிபலிப்பாகக் காட்சி தர விரும்புகிறார்கள்.

தம்மைப் பிறர் அதிகம் மதிக்க வேண்டும் என்பதற்காகவே, இந்தப் பெண்கள் ஆடம்பரச் செலவு செய்கிறார்கள். அப்படிச் செய்யா விட்டால் பாவம், அவர்களுக்குத் தூக்கமே வராது !''

திரு டி. ஜி. ஆர். ராத் (தொழிலதிபர்) :

இந்தக் காலத்தில் பெண்களின் ஆடம்பரச் செலவுகள் ரொம்ப ரொம்ப அதிகம்.

முன்பெல்லாம் எப்போதாவது ஒரு முறை சினிமாப் படத்தின் பெயரில் ஒரு புடவை, கடையில் விற்பனைக்கு வரும்.

இன்று ? தினமும் ஒரு படத்தின் பெயரில் புது மோஸ்தர் புடவை, வளையல் ! இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் திரைப்படங்களின் பெயர்களில் காலணிகள்கூட வந்துவிடும்!

பேட்டி: ஏ. சுவாமிநாதன்





பொன்னியின் செல்வன்



அமரர் கல்கி

இராஜ ராஜ சோழன் என்று சரித்திரப் புகழ் பெற்ற அருள்மொழி வர்மன் இளம் பிராயத்தில் இலங்கையில் நடந்த போருக்குச் சென்றிருந்தான். அவனுடைய தந்தை சுந்தர சோழச் சக்கரவர்த்தி தஞ்சையில் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாயிருந்தார். அவனுடைய தமையனும் பட்டத்து இளவரசனுமான ஆதித்த கரிகாலன் காஞ்சியில் வட திசைச் சேனாதிபதியாக இருந்து வந்தான். இவன் வீராதி வீரன். மிக இளம் வயதில் மதுரை வீர பாண்டியனைப் போரில் கொன்று, 'வீர பாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரி' என்ற பட்டம் பெற்றவன்.

சுந்தரசோழரின் பெரிய தந்தை கண்டராதித்த சோழரின் குமாரன் மதுராந்தகன் இளம் பிராயத்தில் சிவபக்தியில் ஈடுபட்டிருந்தான். பிறருடைய தூண்டுதலினால் அவனுக்குச் சோழ சிம்மாசனம் ஏற வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அவனுடைய கட்சியைப் பழுவேட்டரையர்கள், கடம்பூர் சம்புவரையர்கள் முதலான சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் ஆதரித்தார்கள்.

இலங்கைப் போரில் சோழ சைன்யங்கள் பெரும் வெற்றி அடைந்தன. அநுராதபுரம் என்னும் பிரசித்தமான இலங்கைத் தலைநகரைக் கைப்பற்றின. இலங்கை அரசன் மகிந்தன் மலைநாட்டுக்குள் ஓடி ஒளிந்தான். அருள்மொழிவர்மன் அநுராதபுரத்தில் இடிந்து தகர்ந்திருந்த புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கட்டினான். இதனால் மகிழ்ச்சி அடைந்த புத்த குருமார்கள் அருள்மொழிவர்மனுக்கு இலங்கைச் சிங்காதனத்தை அளிக்க முன்வந்தார்கள். அதை ஏற்றுக் கொள்ள இளவரசன் இணங்கவில்லை.

அருள்மொழிவர்மனை உடனே தாய்நாட்டுக்கு வந்து சேரும்படி இரண்டு இடங்களிலிருந்து செய்திகள் வந்தன. ஆதித்த கரிகாலன் அவனைக் கையோடு காஞ்சிக்கு அழைத்து வரும்படி தன் நண்பனான பார்த்திபேந்திரனை அனுப்பியிருந்தான். சுந்தர சோழரின் செல்வப் புதல்வியும் சோழ நாட்டில் செல்வாக்கு மிகுந்த சீமாட்டியுமான குந்தவைப் பிராட்டி, அருள்மொழி வர்மனைப் பழையாறைக்கு அழைத்து வருவதற்கு வந்தியத் தேவன் என்னும் வாணர் குலத்து வீர வாலிபனை அனுப்பியிருந்தாள்.

இதற்கிடையில் பழுவேட்டரையர்கள் இளவரசன் அருள்மொழி வர்மன் இலங்கைச் சிம்மாதனத்தைக் கவர எண்ணியதாகக் குற்றம் சாட்டி அவனைச் சிறைப் படுத்திக் கொண்டு வர இரண்டு கப்பல்களையும் அவை நிறைய வீரர்களையும் அனுப்பியிருந்தார்கள்.

அந்த இரண்டு கப்பல்களும் விபத்துக்குள்ளாகி அழிந்தன. அவற்றில் ஒன்றில் வந்தியத்தேவன் அகப்பட்டிருந்தான். அக்கப்பலில் இடி விழுந்து அது முழுகப் போகும் தருவாயில், பார்த்திபேந்திரனுடைய கப்பலில் வந்த அருள்மொழிவர்மன் பார்த்து விட்டான். வந்தியத் தேவனைக் காப்பாற்றுவதற்காகச் சுழற்காற்று அடிக்கும் சமயத்தில் கடலில் குதித்தான். அவர்கள் இருவரையும் பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண் காப்பாற்றிக் கோடிக்கரை சேர்த்தாள்.

இளவரசன் கடலில் வரும் போதே கடுமையான குளிர் சுரத்தினால் பீடிக்கப்பட்டான். அவனை நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்படி குந்தவை சேந்தன் அமுதனிடம் சொல்லி அனுப்பினாள். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் அருள்மொழிவர்மனை நாகப்பட்டினத்திலிருந்த புத்த விகாரத்துக்குக் கால்வாய் மூலமாகப் படகில் அழைத்துச் சென்றார்கள்.

வந்தியத்தேவன் கோடிக்கரையிலிருந்து பழையாறைக்கு வரும் வழியில் கொல்லன் பட்டறை ஒன்றில் அதிசயமான வாள் ஒன்றைப் பார்த்தான். அதன் அடிப் பகுதியில் பாண்டிய குலத்தின் மீன் சின்னம் மங்கலாகத் தெரிந்தது.

பூர்வ கதை

பிறகு அதே வாளைப் பெரிய பழுவேட்டரையரின் இளைய மனைவி நந்தினியிடம் அவன் கண்டான். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிப்

படைகளைச் சேர்ந்தவர்கள் சிலர் சோழ நாட்டில் பரவியிருந்து பழிக்குப் பழி வாங்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார்கள் என்பது வந்தியத்தேவனுக்கு முன்னமே தெரிந்திருந்தது. நந்தினியும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவள் என்னும் சந்தேகம் வந்தியத்தேவனுக்கு உறுதிப்பட்டது.

குந்தவையும் வந்தியத்தேவனும் ஒருவருக்கொருவர் உள்ளங்களைப் பறி கொடுத்திருந்தார்கள். வந்தியத்தேவன் இலங்கைப் பிரயாணத்தில் தான் கண்டது, கேட்டது எல்லாவற்றையும் குந்தவையிடம் கூறினான். பழுவூர் இளையராணி நந்தினியைப் போல் அதே தோற்றமுடைய ஊமை ஸ்திரீ ஒருத்தியை இலங்கையில் பார்த்தது பற்றியும் தெரிவித்தான். அந்த ஊமை ஸ்திரீ சுந்தர சோழ சக்கரவர்த்தியினால் இளம் பிராயத்தில் காதலிக்கப்பட்டவள் என்பதைக் குந்தவை அறிந்திருந்தாள். அவள் கடலில் விழுந்து உயிரை விட்டு விட்டாள் என்ற எண்ணத்தினால் தன் தந்தை மன அமைதி இழந்து தவிக்கிறார் என்பதும் குந்தவைக்குத் தெரிந்திருந்தது. சோழ ராஜ்யத்துக்கு ஏற்பட்டிருந்த அபாயங்களினால் குந்தவையின் உள்ளம் பெரிதும் கவலையில் ஆழ்ந்திருந்தது. இதுவரை அவள் துவேஷித்து வந்த நந்தினி ஒரு வேளை தன் தமக்கையாயிருக்கலாம் என்ற எண்ணம் அவள் மனத்தை மேலும் கலக்கச் செய்தது.

இளவரசன் அருள்மொழிவர்மன் குழந்தையாயிருந்த போது காவேரி வெள்ளத்தில் மூழ்கிவிட்டான். அவனை ஒரு ஸ்திரீ எடுத்துக் காப்பாற்றிவிட்டு உடனே மறைந்தாள். காவேரி அம்மன்தான் குழந்தையைக் காப்பாற்றியதாக அனைவரும் நம்பினார்கள். இதனால் 'பொன்னியின் செல்வன்' என்னும் காரணப் பெயர் அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

பொன்னியின் செல்வன் சோழ நாட்டு மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருந்தான். அவன் கடலில் மூழ்கி இறந்தான் என்னும் செய்தி கேட்டதும் சோழ நாடெங்கும் ஜனங்கள் கொதித்து எழுந்தார்கள். பழையாறை மக்கள் அரண்மனை முற்றத்தில் வந்து ஆரவாரம் செய்தார்கள். அச்சமயம் அங்கு வந்திருந்த இளவரசன் மதுராந்தகன் மீது தங்கள் ஆத்திரத்தைக் காட்ட எண்ணினார்கள்.

பொன்னியின் செல்வன் பத்திரமாயிருக்கும் செய்தியைக் குந்தவை வெளியிட விரும்பவில்லை. அது பழுவேட்டரையர்களுக்கும் நந்தினிக்கும் தெரியக் கூடாது என்று எண்ணினாள். எனினும் ஜனங்களைச் சமாதானப்படுத்துவதற்காக "பொன்னியின் செல்வனைச் சமுத்திர ராஜன் காப்பாற்றியிருப்பான்! நீங்கள் கவலைப்பட வேண்டாம்!" என்று ஆறுதல் வார்த்தை கூறினாள்.

இச்சமயத்தில் பழையாறை வைத்தியர் மகனை பினாகபாணி வந்தியத்தேவன் மீது, "பழுவேட்டரையர்களின் ஒற்றன்" என்று குற்றம் சாட்டினான். இருவருக்கும் துவந்த யுத்தம் ஆரம்பமாகி நடந்தது.

அதே சமயத்தில் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் அங்கு வந்து சேர்ந்தார். சண்டையிட்ட இருவரையும் சிறைப்படுத்தக் கட்டளையிட்டார். ஜனங்களையும் கலைந்து போகச் செய்தார்.

முதன் மந்திரி அன்பில் அநிருத்தர் சுந்தர சோழரின் இளம் பிராயத் தோழர். சோழ சாம்ராஜ்யம் மகோந்நதம் அடைந்து இலங்கை முதல் இமயம் வரை பரவ வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் பாடுபட்டு வந்தார். அவரிடம் குந்தவைக்கு மிக்க மரியாதை உண்டு. ஆயினும் அவரை எவ்வளவு தூரம் நம்பலாம் என்று நிச்சயிக்க முடியவில்லை. சோழ குலத்து நன்மையைக் காட்டிலும் சோழ சாம்ராஜ்யத்தின் நலத்தையே அவர் முக்கியமாகக் கருதக்கூடும் என்று குந்தவை ஐயுற்றாள்.

வந்தியத்தேவனைச் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று குந்தவை கூறிய போது, "அவனிடம் அவ்வளவு நம்பிக்கை உனக்கிருந்தால், அவனிடம் ஓலை கொடுத்து ஆதித்த கரிகாலனிடம் உடனே அனுப்பி வைக்க வேண்டும்!" என்றார் முதன் மந்திரி.

பெரிய பழுவேட்டரையர் முதுமைப் பிராயத்தில் மணந்து கொண்ட நந்தினியிடம் அபூர்வமான வசீகர சக்தி இருந்தது. எத்தகைய மனோ பலம் படைத்தவர்களையும் அவள் தன் இஷ்டப்படி ஆட்டி வைக்கும் சக்தி பெற்றிருந்தாள். இப்போது சோழ நாட்டில் ஏற்பட்டிருந்த அரசுரிமைத் தகராறைச் சமாதானமாகத் தீர்த்துவைக்கும் முயற்சியில் அவள் ஈடுபட்டிருந்தாள். சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துக் காவேரிக்குத் தெற்கேயுள்ள பகுதியை மதுராந்தகனுக்கும் வடக்கேயுள்ள பகுதியை ஆதித்த கரிகாலனுக்கும் கொடுத்து விடுவதென்றும் யோசனை கூறினாள். இதை முடிவு செய்வதற்காகக் கொள்ளிடத்துக்கு வட கரையிலுள்ள கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு ஆதித்த கரிகாலன் வர வேண்டுமென்று அவனுக்குச் சொல்லியனுப்பினாள்.

முதன்மந்திரி அநிருத்தருக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. இராஜ்யத்தைப் பிரித்தால் அதன் பலம் சிதறிப் போய்ச் சோழ நாடு பழைய ஈன ஸ்திதிக்கு வந்து விடும் என்று அவர் அஞ்சினார்.

ஆகையால் ஆதித்த கரிகாலன் நந்தினியைச் சந்திப்பதைத் தடுக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். இதைச் சாதிக்கும் பொருட்டு வந்தியத்தேவனையும் தமது அந்தரங்கச் சீடனாகிய ஆழ்வார்க்கடியானையும் அநிருத்தர் காஞ்சிக்கு அனுப்பக் கருதினார்.

இதைக் குந்தவையும் ஒப்புக் கொண்டாள். சிறைக்குச் சென்று வந்தியத்தேவனை விடுதலை செய்தாள். "ஆனால் என் இதயச் சிறையிலிருந்து உமக்கு என்றும் விடுதலை கிடையாது!" என்று கூறி, காஞ்சிக்கு அனுப்பினாள்.

வந்தியத்தேவன் முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் கொடுத்த ஓலையுடன் அரிசிலாற்றங்கரையோடு பிரயாணமானான். வழியில் வானதிதேவியைச் சந்தித்தான். கொடும்பாளூர் சிறிய வேளாரின் புதல்வியும் குந்தவைதேவியின் அருமைத் தோழியுமான வானதி, பொன்னியின் செல்வனான அருள்மொழிவர்மன் மீது அடங்காக் காதல் கொண்டிருந்தாள்.

அருள்மொழி வர்மனைக் கடல் கொண்டு விட்டதாகக் கேள்வியுற்றுக் கதிகலங்கிய அவள், பின்னர் குந்தவையும் வந்தியத்தேவனும் பேசிக் கொண்டதை அரை மயக்க நிலையில் கேட்டதில் இளவரசன் நாகப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் இருப்பதாக அறிந்தாள். அவரைக் காணத்தான் வானதி இப்போது நாகப்பட்டினம் செல்கிறாள் என்று ஊகித்தான் வந்தியத் தேவன். இருவரும் வெவ்வேறு பாதைகளில் செல்ல வேண்டியவர்களானாலும் வானதிக்குத் திடீரென்று ஆபத்து நேர்ந்தபோது வந்தியத் தேவன் திசைமாறிச் சென்றான், அவளுக்கு உதவ. காளாமுகர்கள் சிலர் வானதியின் சேடியை மரத்தோடு சேர்த்துக் கட்டிப் போட்டு விட்டுப் பல்லக்குச் சுமந்தவர்களை மிரட்டி ஓர் ஒற்றையடிப் பாதை வழியாக அதனைத் தூக்கிக் கொண்டு ஓட வைத்தார்கள். சேடிப்பெண் மூலம் இதை அறிந்த வந்தியத்தேவன், வானதியைக் காப்பாற்றும் நோக்கத்துடன் அதே குறுக்குப் பாதையில் விரைந்தான்.

மேடு, பள்ளம், காடு, செடி என்று பாராமல் வெகு தூரம் சென்றும் வானதியையோ பல்லக்கையோ காண முடியவில்லை. ஒரு பாழடைந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். அங்கு ஏதோ சதிச் செயல் பற்றி ஆலோசிக்க மந்திரவாதி ரவிதாஸனும் மற்றும் அவனுடைய கையாட்களும் கூடியிருந்தார்கள். அவர்களுடன் சுமார் நாலு வயது மதிக்கத்தக்க சிறுவனும் இருந்தான்.

திருப்புறம்பயம் பள்ளிப் படையருகே நந்தினியைச் சந்திக்க ரவிதாஸன் சென்று கொண்டிருந்தான். வந்தியத்தேவனும் அக்கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டு போனான். பள்ளிப்படையருகே வந்தியத்

தேவனை ஒதுக்கிவிட்டு நந்தினியும் மற்றவர்களும் ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.

வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகளான அவர்கள், ஆதித்த கரிகாலனைக் கொல்வது பற்றி நந்தினியுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தார்கள். தான் இப்போது ஆரம்பித்து வைத்திருக்கும் சமாதானப் பேச்சும் பழி முடிக்கும் காரியத்துக்கு அநுசரணையாகத்தான் என்று விளக்கினாள் நந்தினி.

வீரபாண்டியனின் தலைகொண்ட ஆதித்த கரிகாலன் விரைவில் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வருவானென்றும் அங்கு அவனைப் பழிக்குப் பழி வாங்கிவிட வேண்டும் என்றும் நந்தினி கூறிய யோசனையை மற்றவர்கள் ஒப்புக் கொண்டனர். பாண்டிய சிம்மாசனத்துக்கு உரிய அந்தப் பாலகன் தன் தந்தை வீர பாண்டியனுடைய வாளை எடுத்து நந்தினியிடம் கொடுத்ததன் மூலம் அவளுக்கே பழி முடிக்கும் பொறுப்பை அளித்து அனைவருக்கும் தலைவியாக்கினான்.

இதையெல்லாம் வந்தியத்தேவன் பார்த்துக் கொண்டிருந்தான். பரபரப்பான காரியங்கள் நடப்பதாகத் தெரிந்ததேயன்றி நந்தினியின் பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை.

முப்பத்தாறும் அத்தியாயம்

இருளில் ஓர் உருவம்!

சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்ட சிறுவன் கொடுத்த வாளை நந்தினி வாங்கிக்கொண்டாள். அதை மார்போடு அணைத்துத் தழுவிக் கொண்டாள். பின்னர் அச்சிறுவனையும் தூக்கி எடுத்து அவனையும் சேர்த்து மார்புடன் அணைத்துத் தழுவிக் கொண்டாள். அவளுடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது.

மற்றவர்கள் சற்று நேரம் வரை இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு திகைத்து நின்றார்கள்.

ரவிதாஸன் முதலில் திகைப்பு நீங்கப் பெற்றுக் கூறினான்:

''தேவி! சக்கரவர்த்தி நம்முடைய கோரிக்கையை நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ளாமல் தங்களிடம் வாளைக் கொடுத்து விட்டார். மறுபடியும் விளக்கமாகச் சொல்லி...''

நந்தினி அவனைத் தடுத்து நிறுத்தினாள். தழுதழுத்த குரலில் கூறினாள்:

''இல்லை, ஐயா, இல்லை! சக்கரவர்த்தி நன்றாகப் புரிந்து கொண்டு தான் வாளை என்னிடம் கொடுத்தார். என் கண்ணீரைப் பார்த்து நீங்கள் கலங்க வேண்டாம். வீர பாண்டிய சக்கரவர்த்தியின் படுகொலைக்குப் பழி வாங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை நினைத்துக் களிப்பு மிகுதியால் கண்ணீர் விடுகிறேன்!'' என்றாள்.

'' தேவி! யோசித்துப் பாருங்கள்! நாங்கள் இத்தனை பேர் ஆபத்துதவிப் படையினர் உயிரோடிருக்கும்போது..'' என்று சோமன் சாம்பவன் தொடங்கியதை நந்தினி தடுத்து நிறுத்தினாள்.

''யோசிக்க வேண்டியதே இல்லை. அந்தப் பொறுப்பு என்னுடையதுதான். உங்களுக்கும் வேலை இல்லாமல் போக வில்லை. உங்களில் பாதிப் பேர் சக்கரவர்த்தியைப் பத்திரமாகப் பஞ்ச பாண்டவர் மலைக்குக் கொண்டுபோய்ச் சேருங்கள். மற்றவர்கள் கடம்பூருக்கு வாருங்கள். சம்புவரையன் மாளிகைக்குள் வரக் கூடியவர்கள் வாருங்கள். மற்றவர்கள் வெளியில் சித்தமாகக் காத்திருங்கள். வேகமாகச் செல்லக் கூடிய குதிரைகளில் காத்திருங்கள். காரியம் வெற்றிகரமாக முடிந்த பின், கூடுமானால், எல்லாரும் உயிருடன் தப்பிச் செல்ல வேண்டுமல்லவா?'' என்றாள் நந்தினி.

ரவிதாஸன் முன் வந்து ''அம்மணி! ஒரு விஷயம் சொல்ல மறந்து போய் விட்டது. அதைச் சொல்ல அனுமதிக்க வேண்டும்'' என்றான்.

''சொல்லுங்கள், ஐயா! சீக்கிரம் சொல்லுங்கள்! பழுவேட்டரையர் கொள்ளிடக் கரையில் நடக்கும் காளாமுகர்களின் மகா சங்கத்துக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வந்து விடுவதற்குள்ளே நான் அரண்மனை போய்ச் சேர வேண்டும்!'' என்றாள் நந்தினி.

''நமது முதற் பகைவன் ஆதித்த கரிகாலன் கடம்பூர் சம்புவரையர் மாளிகைக்கு வந்து சேர்வான் என்று சொன்னீர்கள் அல்லவா? அது அவ்வளவு நிச்சயமில்லை'' என்றான் ரவிதாஸன்.

''எந்தக் காரணத்தைக் கொண்டு அவ்விதம் சொல்கிறீர்?'' என்று கேட்டாள் நந்தினி.

''தகுந்த காரணத்தைக் கொண்டு தான் சொல்கிறேன். கடம்பூர் மாளிகைக்கு எக்காரணத்தைக் கொண்டும் வரவேண்டாம் என்று ஆதித்த கரிகாலனுக்கு ஓலை போகிறது. பழையாறை இளையபிராட்டியும் முதன் மந்திரி அநிருத்தரும் அவ்விதம் செய்தி அனுப்பியிருக்கிறார்கள்...''

''அந்த விவரம் எனக்குத் தெரியாது என்றா நினைத்தீர்?''

''தெரிந்தும் அவன் கடம்பூருக்கு வருவான் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''ஆம்; அவசியம் எதிர்பார்க்கிறேன். ஆதித்த கரிகாலருடைய இயல்பு அந்தப் பழையாறைப் பெண் பாம்புக்குத் தெரி

யாது; அன்பில் பிரும்ம ராட்சதனுக்கும் தெரியாது; மாய மந்திர வித்தைகளில் தேர்ந்த உமக்குக் கூடத் தெரியவில்லை. எந்தக் காரியத்தையாவது செய்ய வேண்டாம் என்று யாரேனும் தடுத்தால் அதைத்தான் ஆதித்த கரிகாலர் கட்டாயமாகச் செய்வார். அது எனக்குத் தெரியும். நிச்சயமாகத் தெரியும், ஆதித்த கரிகாலர் அருள்மொழிவர்மனைப் போன்ற எடுப்பார் கைப்பிள்ளை அல்ல. மதுராந்தகனைப் போன்ற பயங்கொள்ளிப் பேதையல்ல. கடம்பூருக்கு வரவேண்டாம் என்று தமக்கையும் முதன் மந்திரியும் செய்தி அனுப்பியிருப்பதனாலேயே கட்டாயம் ஆதித்த கரிகாலர் கடம்பூருக்கு வந்து சேருவார்!'' என்றாள் நந்தினி.

''தேவி! அதையும் தாங்கள் பூரணமாக நம்பியிருக்க வேண்டாம். அவர்கள் அனுப்பிய செய்தி காஞ்சிக்குப் போய்ச் சேராது!'' என்றான் ரவிதாஸன்.

''என்ன சொல்லுகிறீர், ஐயா! சற்று விளக்கமாகச் சொல்லும்!'' என்றாள் நந்தினி. அவளுடைய குரலில் இப்போது பரபரப்புத் தொனித்தது.

''தேவி! ஆதித்த கரிகாலனுக்குச் செய்தி யார் மூலமாக அனுப்பப்பட்டிருக்கிறது என்பதும் தங்களுக்குத் தெரியுமா?'' என்று ரவிதாஸன் கேட்டான்.

''நிச்சயமாகத் தெரியாது; ஆனால் ஊகிக்க முடியும்.''

''நல்லது; ஊகிக்க வேண்டிய அவசியமில்லை. அவனை நாங்கள் பிடித்துக் கொண்டே வந்திருக்கிறோம். சக்கரவர்த்தி மழைக்கு ஒதுங்கியிருந்த மண்டபத்தில் அவனும் இருந்தான். நம்முடைய இரகசியங்கள் எல்லாம் அவனுக்குத் தெரியும். அவனை மேலே உயிருடன் போக விடுவது நமக்கு நாமே சர்வ நாசத்தைத் தேடிக் கொள்வதாகும். இடும்பன்காரி! எங்கே, அந்த ஒற்றனை இங்கே அழைத்துக் கொண்டு வா!'' என்றான் ரவிதாஸன்.

இடும்பன்காரி பள்ளிப்படைக் கோவிலை நோக்கிப் போனான். அவனுடன் இன்னும் இரண்டு பேரும் போனார்கள். நந்தினி அந்தத் திசையை உற்று நோக்கத் தொடங்கினாள். இத்தனை நேரமும் கடுகடு வென்று இருந்த அவளுடைய முகத்தில் இப்போது மறுபடியும் மோகனப் புன்னகை தவழ்ந்தது.

* * *

இடும்பன்காரியும் இன்னும் இரண்டு பேரும் வந்தியத்தேவனை நெருங்கினார்கள். அலுத்துச் சலித்துப் போய் அரைத் தூக்கமாக உட்கார்ந்திருந்த அந்த வீரன் மீது திடீரென்று பாய்ந்தார்கள். வந்தியத்தேவன் அவர்களோடு மல்யுத்தம் செய்யலாமா என்று ஒருகணம் உத்தேசித்தான். பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். என்னதான் செய்கிறார்களோ பார்க்கலாம் என்று சும்மா இருந்தான். ஒரு பெரிய கயிற்றினால் அவனுடைய கைகளைச் சேர்த்து உடம்போடு கட்டினார்கள். பிறகு அவனுடைய இரு தோள்களையும் இரண்டு பேர் பிடித்து நடத்தி அழைத்துக் கொண்டு வந்து நந்தினியின் முன்னால் நிறுத்தினார்கள்.

வந்தியத்தேவன் நந்தினியைப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலும் இப்போது தெரியவில்லை. அமைதி குடிகொண்டிருந்தது.

''ஐயா! மறுபடியும்....'' என்று ஆரம்பித்தாள்.

''ஆம், தேவி! மறுபடியும் வந்துவிட்டேன்! ஆனால் நானாக வரவில்லை!'' என்று சொல்லிச் சுற்றிலுமுள்ளவர்களை நோக்கினான்.

நந்தினியின் அருகில் இருந்த சிறுவன், ''அம்மா! இவன்தான் என்னை இருட்டில் பிசாசு விழுங்காமல் காப்பாற்றியவன். இவனை ஏன் கட்டிப் போட்டிருக்கிறது?'' என்று கேட்டான்.

வந்தியத்தேவன் சிறுவனைப் பார்த்து, ''குழந்தை! சும்மா இரு! பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கே பேசக் கூடாது. பேசினால் உன்னைப் புலி விழுங்கிவிடும்!'' என்றான்.

''புலியை நான் விழுங்கிவிடுவேன்!'' என்றான் சிறுவன்.

''நீனால் புலியை விழுங்க முடியுமா?'' என்று வந்தியத்தேவன் கேட்டான்.

அவனைச் சுற்றிலும் இருந்தவர்களின் கண்டங்களிலிருந்து ஒரு பயங்கரமான உறுமல் சத்தம் வெளி வந்தது. அது வந்தியத்தேவனைக்கூட ஒரு கணம் மெய் சிலிர்க்கச் செய்தது.

ரவிதாஸன் உரத்த குரலில், ''தேவி! கேட்டீர்களா? இவனை இனி உயிருடன் தப்பிச் செல்லவிட முடியாது. முன் இரண்டு தடவைகளில் தங்கள் விருப்பத்துக்காக இவனை உயிருடன் தப்பிச் செல்ல விட்டோம். இனிமேல் அப்படி இவனை விட முடியாது'' என்றான்.

வந்தியத்தேவன், ''மந்திரவாதி! இது என்ன இப்படிப் பெரிய பொய்யாகச் சொல்லுகிறாய்? நீயா என்னை உயிருடன் விட்டாய்? நான் அல்லவா உன்னைத் தப்பிப் போகவிட்டேன்? தேவி! இந்த மந்திரவாதியைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்துச் சொல்லுங்கள்! இவன் உன்

மையில் ரவிதாஸன்தானா? அல்லது ரவிதாஸனுடைய பிசாசா?'' என்று கேட்டான்.

ரவிதாஸன் பயங்கரமாகச் சிரித்தான். ''ஆம்; நான் பிசாசுதான்! உன்னுடைய இரத்தத்தை இன்று குடிக்கப் போகிறேன்'' என்றான்.

மீண்டும் அங்கிருந்தவர்களின் தொண்டைகளிலிருந்து பயங்கர உறுமல் குரல் வெளியாயிற்று.

இதற்குள் சிறுவன், ''அம்மா! இவனிடம் ஒரு நல்ல குதிரை இருக்கிறது. அதை எனக்குக் கொடுக்கச் சொல்லுங்கள்!'' என்றான்.

''குழந்தை! நீ என்னுடன் வந்துவிடு! உன்னை என் குதிரையின் மேல் ஏற்றி அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்றான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை நோக்கிக் கோரமாக விழித்து, ''அடே! வாயை மூடிக் கொண்டிரு!'' என்று சொல்லிவிட்டு, நந்தினியைப் பார்த்து, ''தேவி! சீக்கிரம் கட்டளையிடுங்கள்!'' என்றான்.

நந்தினி நிதானமாக,'' இவர் எப்படி இங்கு வந்தார்? எப்போது வந்தார்?'' என்று கேட்டாள்.

''சக்கரவர்த்தி மழைக்கு ஒதுங்கியிருந்த மண்டபத்திலிருந்து அவரை இந்த ஒற்றன் எடுத்துக் கொண்டு ஓடிவிடப் பார்த்தான். நல்ல சமயத்தில் போய் நாங்கள் தடுத்துப் பிடித்துக் கொண்டோம். ஒரு கணம் தாமதித்திருந்தால் விபரீதமாய்ப் போயிருக்கும்'' என்றான் ரவிதாஸன்.

''ஐயா! இவர்கள் சொல்வது உண்மையா?'' என்று நந்தினி கேட்டாள்.

''தங்களைச் சேர்ந்தவர்கள் உண்மை சொல்லக்கூடியவர்களா என்பது தங்களுக்குத்தானே தெரியும்? எனக்கு எப்படித் தெரியும், தேவி?'' என்றான் வந்தியத்தேவன்.

நந்தினியின் முகத்தில் தோன்றிய புன்னகை மின்னலைப் போல் மறைந்தது. அவள் ரவிதாஸனைப் பார்த்து, ''ஐயா! நீங்கள் எல்லாரும் சற்று அப்பால் சென்றிருங்கள். நான் இவரிடம் சில விஷயங்கள் தனியாகக் கேட்டு அறிய வேண்டும்'' என்றாள்.

''தேவி! நேரம் ஆகிறது. அபாயம் நெருங்குகிறது. இந்த வேளையில்....'' என்று ரவிதாஸன் கூறுவதற்குள், நந்தினி கடுமையான குரலில், ''சற்று முன் நாம் செய்து கொண்ட நிபந்தனையை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். மறு வார்த்தை சொல்லாமல் உடனே அகன்று செல்லுங்கள். சக்கரவர்த்தியையும் அப்பால் அழைத்துப் போங்கள்!'' என்று கூறி, சிறுவனுடைய காதில், ''குமாரா! சற்று அவர்களுடன் நகர்ந்து போ! உனக்கு இவரிடமிருந்து குதிரை வாங்கித் தருகிறேன்'' என்றாள்.

ரவிதாஸன் முதலியவர்கள் பின்னர் மறு வார்த்தை பேசாமல் அந்தச் சிறுவனையும் அழைத்துக் கொண்டு அவசரமாக அப்பால் போனார்கள்.

* * *

நந்தினி வந்தியத்தேவனை இலேசான தீவர்த்தி வெளிச்சத்தில் ஊடுருவிப் பார்த்து, ''ஐயா! உமக்கும் எனக்கும் ஏதோ ஒரு துவந்தம் இருப்பதாகத் தோன்றுகிறது!'' என்றாள்.

''அம்மணி! அந்தத் துவந்தம் மிகப் பொல்லாததாயிருக்கிறது; மிகக் கெட்டியாகவும் இருக்கிறது. என் உடம்பையும் கைகளையும் சேர்த்து இறுக்கிக் கட்டியிருக்கிறது!'' என்றான் வந்தியத்தேவன்.

'' உம்முடைய விளையாட்டுப் பேச்சைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள். வேண்டுமென்று இங்கு வந்தீரா? தற்செயலாக வந்தீரா?''

''வேண்டுமென்றும் வரவில்லை; தற்செயலாகவும் வரவில்லை. தங்களுடைய ஆட்கள்தான் பலவந்தமாக என்னை இங்கே கொண்டு வந்து சேர்த்தார்கள். இல்லாவிடில், இத்தனை நேரம் கொள்ளிடக் கரையை அடைந்திருப்பேன்.''

''என்னைப் பார்க்கும்படி நேர்ந்ததில் உமக்கு அவ்வளவு கஷ்டம் என்று தெரிகிறது. என்னைப் பிரிந்து போவதற்கு அவ்வளவு ஆவல் என்றும் தெரிகிறது.''

''தங்களைப் பார்க்க நேர்ந்ததில் எனக்குக் கஷ்டம் இல்லை, தேவி! தங்களைப் பிரிந்து போவதற்குத்தான் உண்மையில் வருத்தமா யிருக்கிறது. தாங்கள் மட்டும் அனுமதி கொடுங்கள்; ஒரு பக்கத்தில் அந்தக் கிழட்டுப் பழுவேட்டரையரிடமும் இன்னொரு பக்கத்தில் இந்தப் பயங்கர மந்திரவாதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டு தாங்கள் திண்டாடுகிறீர்கள். ஒரு வார்த்தை சொல்லுங்கள். இவர்களிடமிருந்தெல்லாம் தங்களை விடுதலை செய்து அழைத்துப் போகிறேன்.....''

''எங்கே அழைத்துப் போவீர்கள்?''

'' இலங்கைத் தீவின் காடுகளில் அநாதையைப் போல் அலைந்து கொண்டிருக்கும் தங்கள் அன்னையிடம் அழைத்துப் போய் விடுகிறேன்'' என்றான் வந்தியத்தேவன்.

நந்தினி ஏமாற்றம் தொனிக்க ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள்.

''நானும் அப்படி அநாதையாக அலைய வேண்டும் என்று விரும்புகிறீரா?



ஒருவேளை அத்தகைய காலம் வந்தாலும் வரலாம். அப்போது அன்னையிடம் அழைத்துப் போக உம்முடைய உதவியை அவசியம் நாடுவேன். அதற்கு முன்னால், என்னுடைய எண்ணம் நிறைவேற வேண்டும். அது நிறைவேறுவதற்கு உதவி செய்வீரா?'' என்று கேட்டாள்.

''அம்மணி! தங்கள் மனத்துக்குள் நிலவும் எண்ணம் என்னவென்று தெரிந்தால் அல்லவா அதற்கு உதவி செய்வதைப் பற்றி நான் சொல்ல முடியும்?'' என்றான் வந்தியத்தேவன்.

''உண்மையான பிரியம் உள்ளவர்கள் இப்படிச் சொல்லமாட்டார்கள். எண்ணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமலே அதை நிறைவேற்றுவதற்கு உதவி செய்ய முன்வருவார்கள்.''

''பிரியமுள்ளவர்கள் சமயத்தில் எச்சரிக்கை செய்து ஆபத்திலிருந்து காப்பாற்ற முயல்வார்கள். அம்மணி! தங்களை இந்தக் கிராதகர்கள் ஏதோ சூழ்ச்சி செய்து பெரிய அபாயத்தில் சிக்க வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய காரியத்துக்கு உங்களை உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள்....''

''நீர் கூறுவது தவறு! நான்தான் இவர்களை என்னுடைய காரியத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறேன்! இதை நீர் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளும்!''

''ஒரு சிறு குழந்தையை எந்தக் காட்டிலிருந்தோ பிடித்துக் கொண்டு வந்து தங்களை ஏமாற்றுகிறார்கள்....''

''குழந்தை எதற்காக என்று உமக்குத் தெரியுமா?''

''பாண்டியன் சிம்மாதனத்தில் ஏற்றி வைத்துப் பட்டம் கட்டுவதற்காக....'' என்றான்.

''மறுபடியும் தவறாகச் சொல்கிறீர். பாண்டியன் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்க மட்டும் அல்ல துங்கபத்திரையிலிருந்து இலங்கை வரையில் பரந்து கிடக்கும் சோழ சாம்ராஜ்யத்தின் சிம்மாதனத்தில் அமர்த்தி முடிசூட்டுவதற்காக!''



''அம்மம்மா! யாருடைய உதவியைக் கொண்டு இம்மகத்தான காரியத்தைச் சாதிக்கப் போகிறீர்கள்? இதோ சுற்றிலும் நிற்கிறார்களே, இந்த நரிக் கூட்டத்தின் உதவியைக் கொண்டா? சோழ சாம்ராஜ்யத்தின் இருபது லட்சம் வீராதி வீரர்கள் கொண்ட மாபெருஞ் சேனையை, பகலில் வளைகளில் ஒளிந்திருந்து இரவு நேரத்தில் வெளிப்பட்டு வரும் இந்தப் பத்து இருபது நரிகளின் துணை கொண்டு வென்று விடுவீர்களா?''

''நான் இவர்களை மட்டும் நம்பியிருக்கவில்லை! இதோ என் கையிலுள்ள வாளை நம்பியிருக்கிறேன். இதன் உதவியினால் என் மனத்தில் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவேன்.''

''அம்மணி! அந்த வாளைத் தாங்கள் ஒரு நாளும் உபயோகப்படுத்தப் போவதில்லை. அதற்கு வேண்டிய பலம் தங்கள் கையிலும் இல்லை; தங்கள் நெஞ்சிலும் இல்லை!''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்?''

''ஏதோ என் மனத்தில் தோன்றியதைக் கூறினேன்.''

''நீர் சொல்வது முற்றும் தவறு என்று இந்த இடத்திலேயே என்னால் நிரூபித்துக் காட்ட முடியும்.''

"அப்படியானால் நான் பாக்கியசாலி தான். தங்கள் திருக்கரத்தினால் வெட்டுப் பட்டுச் சாவதற்குக் கொடுத்து வைத்தி ருக்க வேண்டாமா?" என்று கூறி வந்தி யத்தேவன் வெட்டுப்படுவதற்கு ஆயத்த மாவதுபோல் கழுத்தை வளைத்துத் தரை யைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"அப்படியானால், இந்தச் சிறு பிள்ளை யின் கதி என்ன ஆவது?"

"அவனுக்கு முடிசூட்டுவதும் சூட் டாததும் என் இஷ்டந்தானே ?"

"தேவி! தங்களுக்கு யாருக்கு இஷ் டமோ அவருக்கு முடிசூட்டுங்கள். எனக்கு வேண்டியதில்லை."



"என் திருக் கரத்தினால் வெட்டுப் படுவதற்குத்தானா ஆசைப்படுகிறீர் ? கிரீடம் சூட்டப்படுவதற்கு விரும்ப வில்லையா ?" என்றாள் நந்தினி.

வந்தியத்தேவன் நிமிர்ந்து பார்த்து, "தங்கள் வசமுள்ள கிரீடத்தை எத் தனை பேருக்குத்தான் சூட்டுவீர்கள்?" என்று வினவினான்.

"அது என்னுடைய இஷ்டம். முடி வாக யாருக்குச் சூட்ட வேண்டுமென்று பிரியப்படுகிறேனோ, அவருடைய சிரசில் சூட்டுவேன்."

"ஏன் ?"

"என்னுடைய சிரஸிலுள்ள சுருட்டை மயிரின் அழகைப் பற்றிப் பலரும் சொல்லியிருக்கிறார்கள். கிரீடம் வைத்துக் கொண்டு அந்த அழகைக் கெடுத்துக் கொள்ள நான் விரும்ப வில்லை."

"உமது வேடிக்கைப் பேச்சை நீர் விடமாட்டீர். நல்லது, ஐயா! பொன்னியின் செல்வன் கடலில் விழுந்து இறந்த செய்தியைக் கேட்டதும் இளைய பிராட்டி என்ன செய்தாள்? ரொம்பத் துக்கப்பட்டாளா?" என்று நந்தினி திடீரென்று பேச்சை மாற்றிக் கேட்டாள்.

வந்தியத்தேவன் சிறிது திகைத்து விட்டு, "பின்னே, துக்கமில்லாமல் இருக்குமா? ஸ்திரீகள் எல்லோருமே இதயமற்றவர்களாக இருப்பார்களா?" என்றான்.

"அந்தக் கொடும்பாளூர்ப் பெண் ஓடையில் விழுந்து உயிரை விடப் பார்த்தாளாமே, அது உண்மையா? அவளை யார் எடுத்துக் காப்பாற்றினார்கள்?" என்று கேட்டாள்.

உடனே வானதிக்கு நேர்ந்த ஆபத்தைக் குறித்து வந்தியத்தேவனுக்கு ஞாபகம் வந்தது. அவளுடைய கதி என்ன ஆயிற்றோ என்ற நினைவில் மூழ்கி வந்தியத்தேவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருந்தான்.

நந்தினி குரலைக் கடுமைப்படுத்திக் கொண்டு, "சரி; அதையெல்லாம் பற்றி நீர் ஒன்றும் சொல்லமாட்டீர். எனக்குத் தெரியும். ஆதித்த கரிகாலர் கடம்பூர் மாளிகைக்கு வராதபடி நீர் தடுக்கப் போகிறீரா?" என்று கேட்டாள்.

"தடுப்பதற்குப் பிரயத்தனம் செய்வேன்" என்றான் வந்தியத்தேவன்.

"உம்மால் அது முடியாது என்று நான் சொல்லுகிறேன்."

"என்னால் முடியும் என்று நானும் சொல்லவில்லை, தேவி! பிரயத்தனம் செய்வேன் என்றுதான் சொன்னேன். இளவரசர் ஒன்று செய்ய நினைத்துவிட்டால், அதை மாற்றுவது எளிதன்று."

"ஆதித்த கரிகாலரின் இயல்பை நீர் நன்றாய் அறிந்து கொண்டிருக்கிறீர்."

"என்னைவிட அதிகமாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள்."*

"நல்லது; நான் எவ்வளவுதான் சொன்னாலும் நீர் என் கட்சியில் சேர மாட்டீர். என் எதிரியின் கட்சியில் தான் இருப்பீர். அப்படித்தானே?"

"அம்மணி! தங்கள் எதிரி யார்?"

"என் எதிரி யார்? பழையாறை இளவரசிதான்! வேறு யார்?"

"அது தங்கள் மனோ கற்பனை! தேவி! தங்களுக்கு ஓர் உண்மையை, முக்கியமான உண்மையை, தெரிவிக்க விரும்புகிறேன்...."

"போதும், போதும்! நீர் உண்மை என்று சொல்ல ஆரம்பித்தால் அது வடிகட்டின கோட்டைப் பொய்யாயிருக்கும். எனக்குத் தெரியாதா? உமது உண்மையை நீரே வைத்துக் கொள்ளும்!" என்று நந்தினி குரோதத்துடன் கூறிவிட்டு, கையைத் தட்டினாள். ரவிதாஸன் முதலியவர்கள் உடனே நெருங்கி வர ஆரம்பித்தார்கள்.

வந்தியத்தேவன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தான் சரியாக உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்தான். இந்த ராட்சஸி என்னைக் கொன்றுவிடும்படிதான் இவர்களுக்குக் கட்டளையிடப் போகிறாள். கடவுளே! எத்தகைய சாவு! போர்க்களத்தில் எதிரிகளுடன் போராடி வீர மரணம் அடையக்கூடாதா? இப்படியா என் தலையில் எழுதியிருந்தது?

ரவிதாஸன் கோஷ்டியார் அருகில் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

இரையை நெருங்கிய ஓநாய்க் கூட்டம் உறுமுவது போல் அவர்கள் உறுமிக் கொண்டிருந்தார்கள்.

"ராணி! தாங்கள் என்னதான் சொன்னாலும் இவன் வழிக்கு வரமாட்டான் என்று எனக்குத் தெரியும். தாங்கள் உடனே புறப்படுங்கள். இவனை நாங்கள் இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் பலி கொடுத்து விட்டுக் கிளம்புகிறோம்" என்றான் ரவிதாஸன்.

"மந்திரவாதி! ஜாக்கிரதை. என்னுடைய விருப்பம் அதுவன்று. இவரை உங்களில் யாரும் எதுவும் செய்யக் கூடாது. இவரை எவனாவது தொட்டால் அவனை நானே இந்தக் கத்தியினால் வெட்டிக் கொன்று பழி வாங்குவேன்!" என்று நந்தினி கர்ஜித்தாள்.

ரவிதாஸன் முதலியோர் திகைத்து நின்றார்கள்.

"இவரால் எனக்கு இன்னும் பல காரியம் ஆகவேண்டியிருக்கிறது. தெரிகிறதா? நான் இதோ புறப்படுகிறேன். நீங்களும் புறப்படுங்கள். இவர் அவருக்கு விருப்பமான வழியில் போகட்டும். யாரும் இவரைத் தடை செய்ய வேண்டாம்!" என்றாள் நந்தினி.

ரவிதாஸன், "தேவி! ஒரு விண்ணப்பம்! தங்கள் சித்தப்படி செய்யக் காத்திருக்கிறோம். ஆனால் இவனிடம் குதிரை இருக்கிறது. இவனை முதலில் போகவிடுவது நல்லதா? கொஞ்சம் யோசித்துச் சொல்லுங்கள்!" என்றான்.

"நல்லது; இவரை அந்தப் பள்ளிப் படைக் கோவில் தூணுடன் சேர்த்துக் கட்டி விடுங்கள். கட்டை அவிழ்த்துக் கொண்டு புறப்பட இவருக்குச் சிறிது நேரம் ஆகும். அதற்குள் இந்தப் பள்ளிப்படைக் காட்டை நீங்கள் தாண்டிப் போய் விடலாம்" என்றாள்.

---

* அட்டைப்படம்: ஒவியர் வினு.

வந்தியத் தேவன் பள்ளிப்படைத் தூணுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். சற்றுத் தூரத்தில் அவன் குதிரை ஒரு மரத்தில் கட்டப்பட்டிருந்தது.

நந்தினி பல்லக்கில் ஏறிக் கொண்டு போய் விட்டாள்.

சிம்மாதனத்தை இரண்டு ஆட்கள் தூக்கிச் சென்றார்கள்.

ரவிதாஸன் கோஷ்டியார் சிறுவனை அழைத்துக் கொண்டு விரைந்து போய் விட்டார்கள்.

அவர்களுடன் சென்ற தீவர்த்தியின் வெளிச்சமும் சிறிது சிறிதாக மங்கி மறைந்து விட்டது.

வந்தியத்தேவனைச் சுற்றிலும் கன்னங்கரிய காரிருள் சூழ்ந்தது.

சிறிது நேரத்துக்கு முன்னால் அங்கு பார்த்த காட்சிகள், நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கனவோ எனத் தோன்றியது.

இருட்டில் ராட்சத வௌவால்கள் சடபடவென்று தங்கள் அகன்ற சிறகுகளை அடித்துக் கொண்டன.

ஊமைக் கோட்டான்கள் உறுமின.

நரிகள் அகோரமான குரலில் முறை வைத்து ஊளையிட்டன.

ஊளையிட்டுக் கொண்டே அவை நெருங்கி நெருங்கி வருவது போல் வந்தியத்தேவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

காட்டில் இனந்தெரியாத உருவங்கள் பல நடமாடின.

கடம்பூர் மாளிகையில் அவன் கண்ட கனவு நினைவுக்கு வந்தது.

ஆயிரம் நரிகள் வந்து தன்னைச் சூழ்ந்து கொண்டு பிடுங்கித் தின்னப் போவதாக எண்ணி நடுங்கினான்.

அவசரம் அவசரமாகக் கட்டுக்களை அவிழ்த்துக் கொள்ளப் பார்த்தான். இலேசில் அக்கட்டுகள் அவிழ்கிறவிதமாகத் தெரியவில்லை.

வெளிச்சம் இருந்தால் கட்டுக்களை அவிழ்ப்பது சுலபமாயிருக்கும்.

ஆனால் வெளிச்சம் என்ற அறிகுறியே அங்கு இல்லை.

மின்னல் வெளிச்சமும் இல்லை; மின்மினி வெளிச்சங்கூட இல்லை.

வானத்தில் ஒருவேளை மேகங்கள் அகன்று நட்சத்திரங்கள் தோன்றியிருந்தாலும் அவற்றின் வெளிச்சம் அந்தக் காட்டுக்குள் நுழைய இடமில்லை.

ஆகா! அது என்ன சத்தம்?

காட்டில் எத்தனையோ ஜந்துக்கள் நடமாடும். அதில் என்ன அதிசயம்?

இல்லை; இது மனிதனுடைய காலடிச் சத்தம் மாதிரி இருக்கிறதே !

குதிரை இலேசாகக் கனைத்தது. கால்களை மாற்றி மாற்றி வைத்து அவஸ்தைப் பட்டது. ஒரு வேளை புலி, கிலி வருகிறதா என்ன?

வந்தியத்தேவன் கட்டை அவிழ்க்க அவசரப்பட்டான். பயனில்லை.

அதோ ஓர் உருவம். அந்தக் காரிருளில் ஒரு கரிய நிழல் போன்ற உருவம். மனித உருவமா? அல்லது.... வேறு என்னவாயிருக்க முடியும்?

அது நெருங்கி நெருங்கி வந்தது.

வந்தியத்தேவன் தன்னுடைய மனோ தைரியம் முழுவதையும் சேகரித்துக் கொண்டான்.

தன்னுடைய தேகத்தின் பலம் முழுவதையும் காலில் சேர்த்துக் கொண்டான்.

ஓங்கி ஓர் உதை விட்டான் !

''வீல்'' என்ற சத்தமிட்டுக் கொண்டு அந்த உருவம் பின்னால் தாவிச்சென்றது.

சிறிது தூரம் பின்னால் சென்றதும், "டணார்" என்று ஒரு சத்தம். பள்ளிப் படைச் சுவரில் அது மோதிக் கொண்டது போலும்!

பின்னர் அங்கேயே அந்த உருவம் சிறிது நேரம் நின்றது. பள்ளிப் படைச் சுவரில் சாய்ந்து கொண்டு நிற்பதாகத் தோன்றியது.

இருட்டில் விவரம் தெரியாவிட்டாலும் அந்த உருவம் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போல் வந்தியத்தேவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

கட்டுக்களை அவிழ்த்துக் கொள்வதற்கு மேலும் அவசரமாக அவன் முயன்றான். அந்த மந்திரவாதிப் பிசாசுகள் இவ்வளவு பலமாக முடிச்சுக்களைப் போட்டு விட்டன! ஆகட்டும்; மறு தடவை அந்த ரவிதாஸனைப் பார்க்கும் போது சொல்லிக் கொடுக்கலாம்!

அந்த உருவம் இடம் விட்டுப் பெயர்ந்தது. பள்ளிப்படைக்குள்ளே போவது போல் தோன்றியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் பள்ளிப் படைக் கோவிலுக்குள் கூழாங் கற்கள் மோதுவது போன்ற 'டண்' 'டண்' சத்தம் சில முறை கேட்டது.

கோவில் வாசலில் வெளிச்சம்.

அதோ அந்த உருவம் கையில் ஒரு சுளுந்தைப் பிடித்துக் கொண்டு கோவிலுக்கு வெளியே வருகிறது.

தன்னை நோக்கி வருகிறது.

அது ஒரு காளாமுக வீரசைவனின் உருவம். நீண்ட தாடியும் சடை முடியும் மண்டை ஓட்டு மாலையும் அணிந்த பயங்கரமான உருவம்.

வந்தியத் தேவன் அருகில் வந்து வெளிச்சத்தைத் தூக்கிப் பிடித்து அவனை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது. (தொடரும்)

அவர் ஓடுகிறார்!

ஜெஸி ஓவன்ஸ் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடினார். 1936 பெர்லின் ஒலிம்பிக்கில் நூறு மீட்டர் ஓட்டத்திலும் உயரம் தாண்டுதலிலும், ரிலே போட்டியிலும் தங்கப் பதக்கங்களைப் பெற்ற ஜெஸி ஓவன்ஸ் எதற்காக ஓர் இரவில் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடுகிறார்?

சிகாகோ போலீஸ் ஸ்டேஷனில் அந்தச் சிறுவனைப் பிடித்து வைத்திருந்தார்கள். கார் திருடிவிட்டான் என்பது அவன் மேலுள்ள குற்றச்சாட்டு.

ஓடிவந்த ஜெஸி ஓவன்ஸ், "இந்தப் பையனை எனக்குத் தெரியும். நான் நடத்தும் சிறுவர் சங்கத்தைச் சேர்ந்தவன். இவன் திருட மாட்டான். இவனை என் பொறுப்பில் விடுங்கள். காலையில் வேண்டிய நிரூபணங்களைக் கொண்டு வந்து காட்டுகிறேன்!" என்று உத்தரவாதம் அளித்தார்.



"நீங்கள் யார்? பையனுக்குச் சொந்தக்காரரா?" என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

"இல்லை. நான் ஒலிம்பிக் ஓட்டப் பந்தய வீரர் ஜெஸி ஓவன்ஸ்."

"அப்படியானால் சரி! அழைத்துச் செல்லுங்கள்!" என்று பெருந்தன்மையுடன் போலீஸ் அதிகாரி வழியனுப்பி வைத்தார்.

மறுநாள் அந்தச் சிறுவனை நிரபராதி என்று நிரூபித்துக் காட்டினார் ஜெஸி ஓவன்ஸ். அந்தச் சிறுவன் பிறகு ராணுவத்தில் மிக உயர்ந்த சேவைகளைச் செய்து புகழ் பெற்றான்.

ஒலிம்பிக் ஓட்ட வீரர் ஜெஸி ஓவன் ஸ் லக்குத் திக்கற்ற இளைஞர்கள் தறி கெட்டு ஓடாமல் அவர்களுக்குச் சங்கம் நிறுவி விளையாட்டுக்களில் அவர்கள் கவனத்தைத் திருப்புவது முக்கிய குறிக்கோள். அமெரிக்காவில் இப்படி 1500 சங்கங்கள் இருக்கின்றன.

நீக்ரோவான ஜெஸி ஓவன்ஸ் அலபாமாவில் ஓர் ஏழை விவசாயியின் புதல்வர். பதினோரு குழந்தைகளுக்கு நடுவில் ஏழாவதாகப் பிறந்தவர். செருப்புக் கடையில் பணிபுரிந்திருக்கிறார். பூட்ஸ்களுக்குப் பாலிஷ் போட்டும் பணம் சம்பாதித்துமிருக்கிறார்.

ஒலிம்பிக் சாம்பியன் ஜெஸி ஓவன்ஸ் அதிர்ஷ்டத்தினால் அந்தப் பட்டத்தைப் பெற்றவர் அல்ல. எட்டு வருடக் கடுமையான பயிற்சி அவருக்கு அந்தப் புகழைத் தேடிக் கொடுத்தது. திக்கற்ற பல நீக்ரோக்களின் வாழ்வு மலர இன்றும் ஓடிக்கொண்டேயிருக்கிறார். —குண்டுமணி

காணக் கிடைக்காத தங்கம்

ஜெகசிற்பியன்



அத்தியாயம் ஒன்று

காற்றுத் துருத்திக் குழாயின் ரப்பர்க் காம்பு முனையைச் சைக்கிள் சக்கரத்தின் ஸ்போக்ஸ் கம்பிகளுக்கு இடையில் இருந்த திருகுக் குமிழில் பொருத்தி விட்டுப் பித்தளைக் குழாயைத் தரையில் ஊன்றி அதன் மீது வளையத்தை இடது கால் முன் பாதத்தால் அழுத்திக் கொண்டு வலது காலைப் பின்னால் மடித்துப்போட்டுக் குழாயின் குறுக்கு வசத்திவிருந்த மரக் கைப்பிடியை இரு கைகளாலும் இறுகப் பிடித்து ஒரு தாள லயத்தோடு இழுத்து எம்பி எம்பிக் குதித்துக் காற்று அடித்துக் கொண்டிருந்தான் அருணகிரி.

'ப்சிக்! ப்சிக்! ப்சிக்!'

சைக்கிள் சக்கரத்தின் 'ரிம்' வளையத்தில் தொய்ந்து துவண்டிருந்த டயர், காற்று ஏற்றத்தால் விண் விண்ணென்று புடைத்து வீங்கியது.

எண்ணெய்க் கறை படிந்த பனியன் விலாப்புறத்துக்கு ஏற, அந்தப் பனியனைக் காட்டிலும் அழுக்கு மண்டியிருந்த காக்கிக் கால்சராய் வயிற்றை விட்டு இறங்கி இடுப்பு எலும்பு மூட்டில் தொற்றிக் கொண்டு தொங்க, குடற் கொடிகளோடு ஒட்டிக் குழிந்த அடிவயிற்றில் துருத்திக் குழாயின் கைப்பிடி 'நங், நங்' என்று மோத, வெகு வேகமாய் அவன் காற்று அடிப்பதை ரொம்பச் சுவாரசியமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார் அந்தச் சைக்கிளின் சொந்தக்காரர்.

அருணகிரிக்கு வயது இருபத்திரண்டு, அல்லது இருபத்து மூன்று இருக்கும். ஆனால் அவ்வயசுக்கு ஏற்ற வளர்ச்சியோ திடகாத்திரமோ இல்லாத நோஞ்சலான உடம்பு. கொஞ்சம் வெளுத்த மேனி. நீள்சதுர முகம். தட்டையான மோவாய். சிறிய உதடுகள். நீண்ட மூக்கு. சதைப் பிடிப்பற்ற கன்னங்கள். —இப்படி எதிலும் எவ்வித வனப்புமின்றித் தோற்றமளித்த அவனுடைய கண்கள் மட்டும் ஒரு தனி அழகுடன் விளங்கின. அவனுக்கென்று பிரமன் வழங்க நினைத்த அழகையெல்லாம் ஏதோ ஞாபகமறதியில் ஒன்றாகச் சேர்த்து இந்தக் கண்களிலே கொள்ளும் கொள்ளாத அளவுக்குத் திணித்து விட்டானோ என்று எண்ணும்படி அத்தனை கவர்ச்சியாக இருந்தன அவை. இத்தகைய கண்களை ஒரு பெண் பெற்றிருந்தாளானால் அவள் ஆண் வர்க்கத்தையே ஒட்டு மொத்தமாய் விலை பேசிக் கொள்முதல் பண்ணி விடத்தக்க வேசியாகவோ, அல்லது ஒன்பது தேசங்களை ஒருசேரக் கட்டியாளும் வல்லமை வாய்ந்த மாமன்னன் ஒருவனின் பட்டமகிஷியாகவோ ஆகியிருப்பாள்!

சைக்கிள் சக்கரத்தின் 'ரிம்'மில் பொருத்தியிருந்த ரப்பர்க் குழாய் பிடுங்கிக் கொண்டு தரையில் சாய்ந்தது. நெற்றியில் வழிந்த வியர்வையை இடது கைப் பெரு விரலால் வழித்து விட்டவாறு துருத்திக் குழலுடன் நிமிர்ந்தான் அருணகிரி.

இவ்வளவு நேரம் அவன் காற்றடித்த 'அழகை' வெகுவாக ரசித்துக் கொண்டிருந்த சைக்கிள் சொந்தக்காரர் தம் கட்டை விரலால் டயரை அழுத்திப் பார்த்துத் திருப்தியுடன் தலையாட்டிக் கொண்டு ஓர் ஐந்து பைசாவை அருணகிரியிடம் கொடுத்து விட்டுச் சைக்கிளில் ஏறிப் போய் விட்டார்.

கல்லாப்பெட்டியில் காசைப் போட்டு விட்டு வந்த அருணகிரி தன் இடுப்பிவிருந்து இறங்கித் தொங்கிய கால் சராயை மேலே இழுத்து அரைஞாண் கயிற்றில் செருகிக் கொண்டு ஏற்கனவே கழற்றிப் போட்டு வைத்திருந்த ஒரு பழைய சைக்கிளைப் பழுது பார்ப்பதில் முனையலானான்.

அது ஒரு சைக்கிள் ரிப்பேர் கடை. ரிப்பேர் வேலை மட்டுமின்றி, வாடகைக்குச் சைக்கிள்களும் அந்தக் கடையிலே கிடைக்கும். பெங்களூர் தண்டு, சிவாஜி சர்க்கிள் அருகே, டாக்டர் முனுசாமி சாலையில், தெற்குப் பார்த்த பழைய மொட்டை மாடி வீடு ஒன்றின் சிறிய காடிகானவில் அது அமைந்திருந்தது. அந்தக் கடைக்கு அமர்க்களமாக ஒரு பெயரும் உண்டு. 'சிக்கந்தர் சைக்கிள் மார்ட்' என்று ஆங்கிலம், தமிழ் கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதப்பெற்ற பெயர்ப் பலகை, கடையின் 'மங்கி டாப்'பில் தொங்கிக் கொண்டிருந்தது. இதுவும் தவிர கடை வாசலின் பக்கவாட்டுச் சுவர்களில் 'இங்கே சைக்கிள் ரிப்பேர் செய்யப்படும்' என்றும், 'இவ்விடம் சைக்கிள் வாடகைக்குக் கிடைக்கும்' என்றும் நேர்க் கீழ் வரிசையாகத் தனித் தனிக் கொட்டை எழுத்துக்களில் தீட்டப்பட்டிருந்தன. அவ்வூரில் எழுதப் படிக்கத் தெரிந்தோர் இவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கூறும் சர்க்கார் புள்ளி விவரக் கணக்கில் அவநம்பிக்கை கொண்டோ என்னவோ, அந்த எழுத்து வரிசைகளின் கீழே பெரிய சைக்கிள் சித்திரங்கள்

இரண்டும் வரையப் பெற்றிருந்தன. இத்தனை எழுதிப் போட்ட பின்னும், 'இங்கே சைக்கிள் ரிப்பேர் செய்யப்படுமா? இவ்விடம் சைக்கிள் வாடகைக்குக் கிடைக்குமா?' என்று சந்தேகப்படக்கூடிய அசட்டுப் பிரகிருதிகளின் கவனத்தைக் குத்திக் கவரும் வகையில், கடைக்கு உள்ளேயும் வெளியேயும் பழைய சைக்கிள் டயர்கள், டியூப்புகள், ஃபெடல் சக்கரங்கள், ரிம் வளையங்கள், சீட்டுகள், மட்கார்டுகள், மூக்கோண ஃபிரேம்கள் முதலானவை மாட்டித் தொங்க விடப்பட்டிருந்தன.

இப்படி இத்தனை கோலாகலமாக விளங்கிய அந்தச் சைக்கிள் ரிப்பேர்க் கடையின் சொந்தக்காரன் பெயர் ஏழுமலை. அவன் அதோ, கல்லாப் பெட்டியண்டை காரை பெயர்ந்த வெறுந் தரையில் உட்கார்ந்து, தலைக்கு அணைப்பாக ஒரு சைக்கிள் சீட்டை வைத்துச் சுவரில் சாய்ந்து கொண்டு இடது கால் முட்டியை மடக்கி நிமிர்த்தி அதன் மேல் வலது காலைத் தொங்கப் போட்டு ஆட்டியவாறு பீடி குடித்துக் கொண்டிருக்கிறான்!

அவனுக்கு வயசு நாற்பதுக்கு மேல் இருக்கும். நல்ல உயரம். உயரத்துக்கு ஏற்ற பருமன் இல்லை. தயிர்க்கடைஞ்சான் பூச்சி மாதிரி வற்றலான உடம்பு. அதை இன்னும் மிகைப்படுத்துவனவாயிருந்தன அவன் அணிந்திருந்த கையில்லாத பனியனும், கறுப்புக் கட்டம் போட்ட லுங்கியும். காலை எட்டு மணிவாக்கில் கடை திறந்து இரவு எட்டு மணிக்கு மூடும் வரையில் அநேகமாக இப்படித்தான் அரைக் கண் மூடிய நிலையில் சாய்ந்தே கிடப்பான். சமயா சமயங்களில் ஏதேனும், 'மேஜர் ரிப்பேர்' வேலை வந்தால் அதை மட்டும் 'ஒரு பார்வை' பார்க்க எழுந்திருப்பான். பத்து நிமிஷங்கள், அல்லது கால்மணி நேரம்தான்; அதற்குள் மூச்சு இரைப்பு ஏற்பட்டு விடும். வந்து பழையபடி சாய்ந்து விடுவான். பாவம், அவனுக்கு ஐந்தாறு வருடங்களாக ஆஸ்துமா நோய். ஆனாலும் அரை நாள் செய்யக்கூடிய வேலையை அந்தக் கால்மணி நேரத்தில் கனகச்சிதமாகச் செய்து முடித்துவிடக் கூடிய திறமை அவனிடம் இருந்தது. ஒரு வருடமா, இரண்டு வருடங்களா? கிட்டத்தட்ட முப்பது வருடங்கள் இந்தத் தொழிலில் சர்வீஸ் போட்டிருப்பவன் ஆயிற்றே!

''டேய், சோங்கு! என்னடா, பண்ணறே?''

வேலையில் கவனமாயிருந்த அருணகிரி சிறிது நேரத்துக்குப் பின் சட்டென்று திரும்பிப் பார்த்தான். ''இந்தப் பேக் வீல்லே பால்ஸ் தேய்ஞ்சு போய் இருக்குப்பா! அதான் அப்பப்ப வொய்ண்டிங்கிலே ட்ரபிள் கொடுத்து, 'லக்' ஆகுது. பால்ஸ் மூச்சூடும் மாத்தியாகணும். அதைத்தான் பண்ணிக்கிட்டு இருக்கிறேன்.''

''போடாங்க சோதா! அதை வச்சுட்டு முதல்லே இந்த டியூப்புக்குப் பங்க்சர் பார்த்துப் போடுடா! இப்ப அவன் வந்துடுவான்.''

'சோங்கு' என்பது அருணகிரிக்கு ஏழுமலை வைத்திருக்கும் பட்டப் பெயர். அந்தக் கடையில் வேலை கற்றுக் கொள்ள வரும் பையன்கள் எல்லாரையுமே அவன் இதே பெயரிட்டுத்தான் அழைப்பான். ஒரு காலத்தில் அவனுடைய குருநாதனும் அவனை இப்பெயரிட்டே அழைத்தானாம். அதனால் தன் குருநாதனின் நினைவாகத் தன் சீடர்களையும் அதே பெயர் சொல்லி அழைப்பதிலே அவனுக்கு ஒரு திருப்தி.

முதலாளியின் கட்டளைப்படி அருணகிரி உடனே தான் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டு விட்டு, பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு சைக்கிளின் முன் சக்கரத்து டியூப்பைக் கழற்றி, காற்றடித்து, நீர் நிரம்பிய பேஸினில் அமுக்கிப் பிடித்துக் காற்றுப் போகும் பொத்தல்களைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கினான். ஓர் ஐந்து நிமிஷங்களுக்குப் பின் அந்த டியூப்பிலிருந்த பொத்தல்களைக் கண்டு பிடித்து, அவ்விடங்களில் சாக்கட்டியால் வட்டக் குறி இட்டுக் கொண்டு, ரப்பர் வில்லைகள் வெட்டி சொலூஷன் தடவி ஒட்டுப் போட்டு முடித்தான்.

மறுகணம் அவனுடைய கணுக்கால் முட்டியை ஒரு ஸ்பானர் வந்து தாக்கியது. துடித்துப் பதறிய அருணகிரி பின்னால் திரும்பிப் பார்த்தான்.

''ஏண்டா, தடியா! உனக்கு எத்தினி தபா சொல்லியிருக்கிறேன், சொலூஷன் டியூப்பைத் திறந்தா உடனே மூடி வைக்கணும்னு?.... தொறந்து போட்டுக் காய்துடா, கய்தே!''

கோபமாக இவ்வாறு சொன்ன ஏழுமலை மீண்டும் அருணகிரியின் மேல் எதையாவது தூக்கி எறிய அங்குமிங்குமாகக் கையை நீட்டித் துழாவினான். நல்ல வேளை, கைக்கு எட்டும்படியாக எந்த ஆயுதமும் கிடைக்கவில்லை.

அருணகிரிக்கு முட்டியில் பலத்த அடி. மேல் தோல் நசுங்கி இரத்தமும் வந்து விட்டது. ஆனாலும் அதைப் பொருட்டுத்தாமல் கொஞ்சம் பூமணலை அள்ளி அந்தக் காயத்தில் வைத்து அழுத்தித் தட்டிவிட்டு விட்டுத் தன் காரியத்தில் கவனமானான்.

ஏழுமலை எப்போதும் இப்படித்தான். ரொம்ப முன்கோபக்காரன். தன் கடையில் வேலை பார்க்கும் பையன்கள் ஒரு சிறு தவறு செய்தாலும் உடனே வாய்க்கு வந்தபடி திட்டிக் கையில் கிடைக்கும் சாமான்களால் முரட்டுத்தனமாக அடித்துவிடுவான். சில சமயம் கண்ணில் மின்னல் பொறி பறக்கும்படியாகக் கழுத்துப் பிடரியில் அறைவான். தலையில் நறுக்கென்று குட்டுவான். நெருப்புக் கனியும் பீடித் துண்டால் முதுகிலோ தொடையிலோ சுரீலெனச் சுட்டும் விடுவான். இப்படியெல்லாம் அடித்துத் திட்டி வேலை சொல்லிக் கொடுத்தால்தான் பையன்கள் சீக்கிரம் கற்றுக் கொள்வார்கள் என்பது அவனுடைய சித்தாந்தம். இதனாலேயே அவனிடம் வேலை கற்றுக் கொள்ள வருகிற பையன்கள் அதிகபட்சம் ஆறு மாதங்களுக்கு மேல் நிலைப்பதில்லை; ஓடிவிடுவார்கள்.

இந்த அருணகிரி மட்டும் அவர்களில் விதிவிலக்காயிருந்தான். இங்கே அவன் வேலை கற்றுக் கொள்ள வந்து ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு மேல் ஆகிறது. எப்படியோ இன்னமும் ஓடிப் போகாமல் இருந்து வருகிறான். இது ஏழுமலையின் குரு—சிடப் பரம்பரை சரி



தத்தை அறிந்தவர்களுக்கு மட்டுமல்ல, ஏழுமலைக்கேகூட ஆச்சரியம்தான்!

சைக்கிள் ரிப்பேர் வேலை பயில வந்த முதல் ஆறு மாதங்கள் அருணகிரிக்குக் கூலி எதுவும் இல்லை. 'அப்ரண்டிக'க்குக் கூலி தருவது உண்டோ? அவ்வப்போது இரண்டணாவோ நாலணாவோ 'பாக்கட் மணி'யாகக் கிடைக்கும். அதுவும் தன் குருநாதன் ஏழுமலைக்குச் சாராயமும், மசாலா போட்டு வேக வைத்த வாத்து முட்டையும் வாங்கி வந்து கொடுக்கும் போதுதான் கிடைக்கும். அந்த ஆறு மாத காலத்தில் அவன் கற்றுக் கொடுத்த தொழில் நுணுக்கங்கள் மூன்றே மூன்றுதான். சைக்கிளுக்குக் காற்று அடிப்பது ஒன்று; சாராயத்துக்கு ஏற்ற 'சைடிஷ்'கள் என்னென்ன என்பது இன்னொன்று; கோபத்தில் ஏழுமலை தூக்கி எறியும் ஆயுதத் தாக்குதலிலிருந்து எப்படியெல்லாம் நெளிந்து வளைந்து நகர்ந்து கொடுத்துத் தப்பிப்பது என்பது மற்றொன்று. இம்மூன்று பயிற்சிகளிலும் அவன் நன்கு தேர்ந்தபின் அடுத்த மூன்று மாத காலம், நான் ஒன்றுக்கு எட்டணா கூலி பெற்றான். இப்போது தினக் கூலி ஒரு ரூபாய். வாரமானால் சனிக்கிழமை தோறும் ஆறு ரூபாய் மொத்தமாகக் கிடைக்கிறது. ஒரு சைக்கிளை அப்படியே அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துப் போட்டு, முக்கால் மணி நேரத்துக்குள் அதை முழுசாகப் பூட்டி நிறுத்திவிடக் கூடிய தொழிற்பயிற்சியும் திறமையும் அவனுக்கு வந்துவிட்டன. இன்னும் சொல்லப் போனால் சைக்கிள் ரிப்பேர் வேலையில் தன்



குருவையும் ஒரு படி மிஞ்சும் திறனைப் பெற்று விட்டான் எனலாம்.

இப்போதெல்லாம் இந்தக் கடைக்கு வரும் ரிப்பேர் வேலைகள் அவ்வளவையும் அவன் ஒருவனே கவனித்துக் கொள்கிறான். சுத்தமாகவும் விரைவாகவும் செய்து கொடுத்து வாடிக்கைக்காரர்களிடமிருந்து கடைக்கு நல்ல பெயரும் வாங்கித் தருகிறான். அவனுக்காகவே பல புதிய 'கிராக்கிகள்' இந்தக் கடையைத் தேடி வருகின்றன. பழைய 'கஸ்டமர்'களும் தொடர்ந்து வருகிறார்கள். அவனால் நாளொன்றுக்குக் குறைந்தபட்சம் ஏழெட்டு ரூபாய் வருமானம். ஆனாலும் அவனுக்குத் தினக் கூலி ஒரு ரூபாய்தான். இப்போது மட்டுமென்ன, இனி எத்தனை வருடங்கள் இங்கே வேலை செய்தாலும் அந்த ஒரு ரூபாய்க்கு மேல் ஒரு நயாபைசாக்கூட அவனால் அதிகம் பெற்றுவிட முடியாது. ஏனென்றால், அவன் இன்னமும் தன்னிடம் வேலை கற்றுக் கொள்வதாகவே எண்ணிக் கொண்டிருக்கிறான் ஏழுமலை. அப்படி ஓர் எண்ணம் இல்லையானால் சற்றுமுன், சொலூஷன் குப்பியை மூடி வைக்காத ஒரு சின்னஞ்சிறு தவற்றுக்காக அவனை ஸ்பானரால் அடித்திருப்பானா ?

எனினும் இதனாலெல்லாம் ஏழுமலையைக் கெட்டவன் என்றோ, இரக்கமில்லாதவன் என்றோ சொல்லிவிட முடியாது. தன்னிடம் வேலை கற்றுக் கொள்ள வரும் பையன்களுக்கு நிஜமாகவே வேலை கற்றுத் தர வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன்தான் அத்தனை கடுமையாக அவர்களிடம் நடந்து கொள்கிறான். அவர்களெல்லாம் வசதியும் வாய்ப்புமற்ற ஏழைப் பையன்கள் என்பதோடு, பள்ளிக்கூடம் போக விரும்பாமலும் படிப்பு ஏறாமலும் ஊர் சுற்றிக் கொண்டிருந்தவர்கள் என்பது அவனுக்குத் தெரியும். அப்படிப் பட்டவர்களைக் கொஞ்சம் வாயடி கையடி பண்ணினால்தான் சட்டுப்புட்டென்று உருப்படியாகித் தங்களை நம்பி யிருக்கும் ஆத்தாள் — அப்பனுக்கு நாலு காசு சம்பாதித்துத் தருவார்கள். இல்லையானால் குருவின் முதுகிலேயே சுண்ணாம்பு தடவி விடுவார்களே!

'ஏட்டுப் படிப்பை வாயாலே சொல்லித் தந்தால் வந்துடும். கைவேலை அப்படி வராது: அதைக் கையாலே கத்துக் கொடுத்தால்தான் வரும்' என்று அவன் மற்றவர்களிடம் தமாஷாகச் சொல்வதுண்டு.

மேலும், அவன் அரசாங்கத்திடமோ, வேறு எவரிடமோ மானியம் பெற்றுச் சைக்கிள் ரிப்பேர் பயிற்சிப் பள்ளி வைத்து நடத்தவில்லை ; தன் சொந்த சாமான்களை உபயோகப்படுத்திப் பிறர் சொத்துக்களான சைக்கிள்களை ரிப்பேர் செய்து கொடுக்கும் பொறுப்பான தொழிலை நடத்துகிறான். அதில் ஏதேனும் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டால் அவை முற்றிலும் அவனையே சாரும். எனவேதான் தன் சீடப் பிள்ளைகளிடம் சர்க்கஸ் ரிங் மாஸ்டர் மாதிரி நடந்து கொள்கிறான். நியாயந்தானே ?

அருணகிரி அந்த டியூப்புக்கு பங்சர் ஒட்டி அதற்குரிய சைக்கிள் சக்கரத்தில் பூட்டிக் காற்று அடித்துத் தயார் நிலையில் வைத்துவிட்டு, முதலில் கழற்றிப் போட்டுப் பாதியில் நிறுத்தியிருந்த மற்றொரு சைக்கிளைப் பழுது பார்ப்பதில் முனைந்தான். பகல் பன்னிரண்டு மணி என்பதைப் பக்கத்தில் இருந்த மாதா கோயில் மணி அடித்து அறிவிப்பதற்கும், அவன் அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி அதன் சக்கரங்களை வேகமாகச் சுழற்றிப் பரிசோதித்தான் அருணகிரி. எவ்விதப் பிடிப்பும் கரகரப்பும் இன்றிச் சக்கரங்கள் நன்றாகவே சுழன்றன. ஆனாலும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. கொஞ்ச தூரம் ஓட்டிப் பார்த்து விடலாமே என்று தோன்றியது. ''என்னப்பா ! இந்த வேலை முடிஞ்சுட்டது. எல்லாம் சரியாகவே இருக்குது. எதுக்கும் ஒரு ரவுண்ட் அடிச்சுப் பார்த்துடறேன்'' என்றான். ஏழுமலையை அவன் 'அப்பா' என்றுதான் அழைப்பது வழக்கம்.

சுவரில் சரிந்து சாய்ந்தவாறு காலை ஆட்டிக் கொண்டே பீடி புகைத்துக் கொண்டிருந்த ஏழுமலை, ''ஊம், ஊம்'' என்று ஏதோ ஞாபகத்தில் உத்தரவு கொடுத்தான். பிறகு சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து, ''டேய், சோங்கு! ஐஞ்சு நிமிஷத்திலே வந்துடணும். இந்தச் சாக்கிலே வீட்டுக்குப் போனேன், காட்டுக்குப் போனேன்னு எங்கனாச்சும் போய்ச் சுத்திப்பிட்டு நேரங் கழிச்சு வந்தே, எலும்பு முறிஞ்சுப் போயிடும், ஜாக்கிரதை !'' என்றான் கடுமையான குரலில்.

அருணகிரி இதற்குப் பதில் ஏதும் சொல்லாமல், பழுது பார்க்கப்பட்ட அந்தச் சைக்கிளில் தாவியேறி வேகமாக மிதித்து ஓட்டிக் கொண்டு சென்றான். (தொடரும்)

ராமாயணம்

ராஜாஜி

எவ்வளவு சொல்லியும் ராவணன் கேளாமலிருப்பதைக் கண்டு, 'இவன் யமன் வீட்டுக்குப் போவதற்கு அவசரப்படுகிறான். காமத்தால் தூண்டப்பட்டு மாள்வது இவன் விதியாக இருக்கிறது. இவனால் கொல்லப்பட்டு என் உயிர் போவதை விட ராமனாலேயே கொல்லப்படுவது நலம். பகைவனால் கொல்லப்பட்டால் தோஷமில்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு மாரீசன் ராவணன் சொன்னதைச் செய்ய ஒப்புக் கொண்டான்.



''ராவணா! நான் உனக்கு இதத்தைச் சொல்லிப் பார்த்தேன். நீ கேட்கவில்லை நீ சொன்னதுபோல் நான் செய்தால் என் உயிர் போவது நிச்சயம். உன் உயிரும் அதற்குப் பின் சீக்கிரத்தில் போவதும் நிச்சயம். உன் குலம் நிர்மூலமாவதும் நிச்சயம். இலங்கை அழிவதும் நிச்சயம். உன்னுடைய க்ஷேமத்தை விரும்பாத எவனோ ஒரு சத்துரு உன்னை இந்தக் காரியத்தில் பிரவேசிக்கத் தூண்டி விட்டிருக்கிறான். உன் பேரில் யாருக்கோ பொறாமை. அவன் உனக்குத் துராலோசனை சொல்லி யிருக்கிறான். நீ பிடிவாதம் செய்கிறாய். உன்னால் மாள்வதை விடப் பகையாளிக்கு என் உயி

ரைக் கொடுத்துவிடுவதே மேல். தண்டகாரண்யம் போகலாம் எழு'' என்றான் மாரீசன்.

ராவணன் மகிழ்ச்சி யடைந்து மாரீசனைத் தழுவிக் கொண்டு, ''பழைய மாரீசனைக் கண்டேன்'' என்றான்.

* * *

இருவரும் ரதம் ஏறி தண்டகாரண்யம் நோக்கிச் சென்றார்கள். பல பட்டணங்களையும் காடுகளையும் மலைகளையும் ஆறுகளையும் அநேக ராஜ்யங்களையும் பார்த்துக் கொண்டே ஆகாய மார்க்கமாகச் சென்றார்கள். சீக்கிரமாகவே தண்டகாரண்யத்தில் ஒரு வாழைத் தோட்டத்தின் மத்தியில் ராமனுடைய ஆசிரமத்தைக் கண்டார்கள்.

பூமியில் இறங்கி ராவணன் மாரீசனுடைய கையைப் பிடித்துக் கொண்டு ''அதோ ராமனுடைய ஆசிரமம் இருக்கும் இடம் காணப்படுகிறது. நாம் யோசித்த படி எல்லாம் செய்வாயாக'' என்றான்.

உடனே மாரீசன் தன் சரீரத்தை மாற்றிக் கொண்டு மான் உருவம் தரித்து விட்டான்.

மானின் அழகே அழகு. அதன் உடலில் ஒவ்வொரு அங்கமும் விசித்திர அழகு. ஆகாயத்தில் மழை நின்ற போது காணப்படும் வான வில்லின் பல வர்ணங்களோடும் கண்ணைக் கவரும் விதத்தில் அந்த மான் விளங்கிற்று. தங்கமும் வெள்ளியும் வைடூரியமும் பலவித மணி ரத்தினங்களும் புஷ்பங்களும் போல் அதன் உடலில் மாறி



மாறிக் காணப்பட்டது. தங்கப் பிரதிமையில் ரத்தின மணிகள் இழைத்து உயிருடன் ஓடினது போல் விளங்கிற்று. அதுவரையில் உலகத்தில் காணாத மானாக அந்த மாய மான் ஆசிரமத்துக்கு முன் இங்குமங்கும் நடந்தது, படுத்தது. எழுந்து துள்ளிக் குதித்தது. கொஞ்ச நேரம் புல் மேயும். சில சமயம் தலையைத் தூக்கிச் செடிகளில் உள்ள இளந் தளிரைத் தின்னும். சில சமயம் ஆசிரமத்தை நெருங்கிப் போய் மெள்ள நடக்கும். பிறகு திடீர் என்று துள்ளித் தூர ஓடும். மற்ற மான் கூட்டங்களோடு சில சமயம் சேர்ந்து நடக்கும். சில சமயம் அவற்றை விட்டு விலகும். மற்ற மான்கள் அதை மோந்து மோந்து பார்த்துச் சந்தேகப்பட்டு விலகும்.

சீதை அச்சமயம் வனத்தில் புஷ்பம் பறித்துக் கொண்டிருந்தவள், இந்த மானைப் பார்த்து, 'ஓ, என்ன அழகு!' என்று கண் கொட்டாமல் பார்த்து நின்றாள். அப்போது மானும் அவளைப் பார்த்து அவளுக்கு எதிரில் இங்குமங்கும் ஓடியதானது வனத்துக்கே புது அழகு தந்ததைப் போலிருந்தது.

* * *

"ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்" என்றாள் சீதை தான் பார்த்துக்கொண்டிருந்த மானை ராமனும் லக்ஷ்மணனும் பார்க்க வேண்டுமென்று.

"சீக்கிரம் வாருங்கள், வாருங்கள்" என்றாள் மறுபடியும்.

அவர்களும் வந்து அந்த விசித்திர மானைப் பார்த்து வியந்தார்கள்.

லக்ஷ்மணனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. 'இது மானல்ல, மாரீசன்' என்று உடனே அவனுக்குத் தோன்றி விட்டது. அதற்குமுன் மாரீசன் மானாக உருவம் தரித்துக் கொண்டு காட்டில் வேட்டையாட வந்த பலரை ஏமாற்றிக் கொன்று தின்று கொண்டிருந்தது ராம லக்ஷ்மணர்களுக்குத் தெரியும்.

லக்ஷ்மணன், "இத்தகைய மிருகம் இயற்கையில் கிடையாது. இது ராக்ஷசனுடைய மோசம்" என்றான்.

"இந்த மானைப் பிடித்து வாருங்கள், இதை ஆசிரமத்தில் கட்டி வளர்க்கலாம். நான் காட்டில் பார்த்த அத்தனை மிருகங்களினும் இது மிக அழகாக இருக்கிறது. ஐயோ! அதைப் பாருங்கள். என்ன நிறம்! என்ன விளையாட்டு! இதற்குச் சமானம் ஏதுமில்லை" என்று சீதை மானைப் பார்த்துத் தாங்க முடியாத ஆசை மேலிட்டு அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். "இதை எப்படியாவது பிடித்துத் தாருங்கள்" என்று மிக வேண்டினாள்.

"நாம் ஊருக்குப் போகும் காலம் கிட்டி வந்து விட்டது. இதை அயோத்திக்குக் கொண்டு போவோம். காட்டிலிருந்து ஏதாவது விசித்திரப் பொருள் நம்முடைய அந்தப்புரத்துக்குக் கொண்டு போக வேண்டுமல்லவா? பரதன் இதை மிகவும் அனுபவிப்பான். இதை நான் அவனுக்குத் தரவேண்டும். எப்படியாவது, நாதா, இதைப் பிடித்து வாருங்கள்" என்று ராமனை வருந்திக் கேட்டாள்.

லக்ஷ்மணனுக்கு விஷயம் பிடிக்கவில்லை என்று கண்டு, ராமனை இன்னும் அதிகமாக வருந்திக் கேட்டுக்கொள்ள ஆரம்பித்தாள். ஓர் ஆசை மனத்தைப் பலமாகப் பற்றிக் கொண்டு விட்டால் அதைத் தடுக்கும் நம்முடைய பந்து மித்திரர்கள் மேல் எவ்வளவு பிரியமானவர்களானாலும் கோபம் உண்டாகி விடுகிறது. இதைப் பகவான் கீதையில் எவ்வளவு பரிஷ்காரமாகச் சொல்லியிருக்கிறார்! அது அன்று சீதையின் உள்ளத்தில் நிகழ்ந்து விட்டது.

* * *

"அதோ தங்கமாகவே இருக்கிறது, பார்! அதோ வெள்ளி மயமாகவே இருக்கிறது, பார்! இதைப் பிடிக்க முடியாமல் போனால் அம்பு எறிந்து, தோலையாவது ஊருக்குக் கொண்டு போவோம். இதைப் போன்ற விசித்திரமான தோல் நாம் பார்க்கப் போவதில்லை. மேலே விரித்து உட்காருவதற்கு எவ்வளவு விநோதமாக இருக்கும்! போய் விடும்! போய்ப் பிடித்து வாருங்கள், அல்லது தோலையாவது எனக்குத் தரவேண்டும்" என்றாள்.

"ஐயோ! அதன் கொம்பைப் பாருங்கள்! இப்படிக் கேட்கிறேனே என்று என்மேல் ஆயாசப்பட வேண்டாம்! எனக்கு இதன் பேரில் எவ்வளவு ஆசை. தருவீர்களா, இல்லையா?" என்று விடாமல் ராமனைக் கேட்டுக் கொண்டாள். "நக்ஷத்திரங்கள் போல் பிரகாசிக்கிறது, பாருங்கள்!" என்றாள்.

இவ்வாறு சீதை ஆசைப்படுவதைப் பார்த்து ராமன் நிச்சயம் செய்து கொண்டான். "லக்ஷ்மணன் சொன்னதில் உண்மை இருந்த போதிலும் ராக்ஷசனாயிருந்தாலென்ன? கொன்றுவிடுவது நலம்தானே. இதில் பயம் என்ன? பிடிக்க முடியாமல் போனால் அம்பு செலுத்தி, மானை அடித்து, சீதைக்குத் தோலைத் தரலாம். அவள் இவ்வளவு பிரியப்படும் பொருளை நான் அவளுக்குச் சம்பாதித்துத் தர வேண்டாமா?" என்று தீர்மானித்துக் கொண்டு, லக்ஷ்மணனுக்குச் சமாதானம் சொல்லி, "வில்லும் அம்பும் கொண்டு வா" என்றான்.

(தொடரும்)



குடை ராட்டினம்

எஸ். ரங்கநாயகி

முன் கதை

தொழிலதிபர் கோசல்ராமுக்கு இரு புதல்விகள், ரமா, காந்தி என்று. தாயில்லாப் பெண்கள். அவர்கள் விருப்பப்படி படிக்க வைக்கிறார். மூத்த பெண் ரமாவும் வாசு என்னும் அவளது கல்லூரித் தோழனும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள். காந்திக்கோ ஒரு தலைக் காதல்; அவள் காதலிப்பவன் அவளைக் காதலிக்கவில்லை; ரமாவைக் காதலிக்கிறான்.. ஆம், அவன் வாசுவேதான். ரமா-வாசு காதலுக்குக் குறுக்கே வில்லனாக ரூபகுமார் வந்து முளைக்கிறான். காந்தி விரும்பியிருந்தால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். தன் மனத்தை அடக்கிச் சகோதரிக்கு உதவுகிறாள். ஆனால் ரூபகுமாரின் செல்வம் கோசல்ராமின் கண்களை மறைத்து ரமாவை அவனுக்கே மணம் முடித்து வைக்கலாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. இந்த இக்கட்டான நிலையில் வாசுவின் நண்பன் ஆனந்த் ஆபத்பாந்தவனாக உதவுகிறான். கோசல்ராமிடம் வந்து வாசு — ரமா திருமணம் நடைபெறுவதற்கு வழி வகுக்கிறான். ஆயினும் எத்தனை இடைஞ்சல்கள் வாசு — ரமா காதலில்! விதியும் விபத்து வழியாகச் சதி செய்து விளையாடுகிறது! வாசு காயமுற்று ஒரு சிறிய ஆஸ்பத்திரியில் இருக்கும் போது ரூபகுமார் வருகிறான். ரமா தன்னை மணக்கச் சம்மதிப்பாளாயின் வாசுவுக்கு ரத்ததானம் செய்து அவனை வாழ வைப்பதாகக் கூறுகிறான். பேதை ரமா கட்டுப்படுகிறாள். இப்படியாக இன்னும் எத்தனை எத்தனை புதிய திருப்பங்கள்!

அத்தியாயம் 13

அன்று மாலை தபாலில் வந்திருந்த அக்கடிதம் வாசுவை உலுக்கிக் கொண்டிருந்தது. ரூபகுமார்தான் எழுதியிருந்தான். ரமாவோடு நடக்கப்போகும் அவன் விவாகத்துக்கு வாசு அவசியம் வந்து பங்கு கொள்ள வேண்டுமாம். சுருக்கமான முறையில் நடக்கப்போகும் விவாகத்தில் தனக்கு மிக மிக நெருங்கிய ஓரிரு பேர்களுக்கு மட்டுமே அவன் அழைப்பு விடுத்திருக்கிறானாம். அந்த நெருங்கியவர்களில் வாசுவும் ஒருவனாக இருந்து பங்கு கொண்டால் அவனுக்கு மட்டுமல்லாமல் ரமாவுக்கும் அது மகிழ்ச்சியாக இருக்குமாம்.

ரூபகுமார் மிகத் துணிவுடன்தான் அந்தக் கடிதத்தை அனுப்பியிருந்தான். ரமாவின் வீட்டிலிருந்து திரும்பியதுமே அன்றைய மாலைத் தபாலிலேயே வாசுவுக்குக் கிடைக்கும்படி அந்தக் கடிதத்தை எழுதியிருந்தான். ஒருகால் வாசு இடையிலே புகுந்து ஏதேனும் செய்து விடுவானோ என்ற அச்சம் அவனுக்கு இருந்தது. ஆனால் வாசு எழுந்து நடமாடும் நிலைக்கு முழுதும் வரவில்லை. மேலும் ரமா தந்தையை ஆதாரமாகக் கொள்ளாமல், தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதிலேயே கருத்தாக இருக்கிறாள். அவன் காட்டியுள்ள அச்சம் அவள் மனத்தில் இன்னும் இருக்கும்போது வாசு மட்டும் வந்து என்ன செய்துவிட முடியும்?

வாசு கதறட்டும்! கடிதத்தைப் பார்த்துத் துடிக்கட்டும்! விபத்தின்போது துடித்தது பெரிதல்ல. இப்போது நெஞ்சு குமுறித் துடிக்கட்டும். முடிவு செய்யப்பட்டிருந்த விவாகத்தை நிறுத்த நடுவில் குறுக்கிட்டானே, அந்த ஆனந்தும் இப்போது தெரிந்து கொள்ளட்டும். ரமா அவனுக்கு என்றோ ஏற்பட்டவள். அது கடவுளின் விருப்பம்.

ரூபகுமார் போட்ட திட்டம் வீண் போகவில்லை. வாசு தவித்துக் கொண்டிருந்தான். பல்லை நறநற வென்று கடித்தான். தலைமயிரைப் பிய்த்துக் கொண்டான். தேவகி அவன் சேஷ்டைகளையெல்லாம் பார்த்துத் தவித்துப் போனாள். 'வாசுவுக்கு என்ன நேர்ந்து விட்டது?'

மெள்ள அவன் கட்டிலின் அருகில் வந்து அமர்ந்த தேவகி அவன் கையைப் பிடித்து, ''என்னப்பா வாசு, உடம்புக்கு ஏதாவது தொல்லை கொடுக்கிறதா! தலைக் காயம்கூட ஆறி வருகிறதே!'' என்றாள்.

''தலைக் காயம் ஏன் ஆறி எனக்கு மீண்டும் நினைவு திரும்பியது? நான் அப்படியே போயிருக்கணும். உயிர்ப்பித்து வதைக்கத்தானே நீங்கள் எல்லோரும் என்னைக் காப்பாற்றினீர்கள்? சொல்லும்மா, சொல்லு!'' இரைந்தான் அவன்.

''என்ன பைத்தியக்காரப் பேச்சு இது! ரமாவை நினைக்கணும், ரூபகுமாரை நினைக்கணும். என் வயிற்றில் பாலை வார்த்தவர்கள் அவர்கள்.''

''உன் வயிற்றில் பாலை வார்த்துவிட்டு என் வயிற்றில் நெருப்பைக் கொட்டியிருப்பவர்கள் அம்மா அவர்கள்! பாலாம், தேனும்! உன்னைப் போன்ற அம்மாக்களுக்கு மானம், கௌரவம் ஒன்றும் பெரிதில்லை. பிள்ளையென்று ஒருவன் பக்கத்தில் இருக்கணும். அவ்வளவுதான். வெட்கம் மானத்துக்கு அஞ்சாதவர்கள். உலகில் பங்காளிகளை நம்பலாம். உங்களைப் போன்ற பெண்களை நம்பக் கூடாது.'' வாசு கத்தினான்.

''வாசு! உனக்கு ஜன்னி பிறந்துவிட்டதா, என்ன? பிதற்றுகிறாயே, வாயில் வந்தபடியெல்லாம்! ரமா



இந்த வீட்டு மருமகளாக வரும்போது இதே வாய் எப்படி உயர்வாகப் பேசும்?''

''அம்மா! இனி ரமாவைப் பற்றிப் பேச்செடுத்தால் எனக்குக் கெட்ட கோபம் வரும்.''

''அவள் வந்து உன்னைப் பார்க்கவேயில்லை என்று உனக்குக் கோபம். ஆனால் அதற்கு ஏதோ காரணம் இருக்கும் என்பதுதான் என் எண்ணம். இன்னும் நாலு நாட்களில் நானே போய்ப் பார்க்கிறேன். இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் உங்கள் விவாகத்தைத் தள்ளிப் போட முடியும்?''

''கோட்டை கட்டிக் கொண்டிரு நீ. வாழும் கோட்டையாகக் கட்டுவதை விடுத்து நெருப்புக் கோட்டை அடுப்பாகக் கட்டு. மாற்றானுக்கு மனைவியான பிறகு அவளுக்கும் இந்த வீட்டுக்கும் என்ன சம்பந்தம்?''

''ஏன் இப்படிப் புதிர் போடுகிறாய்? விளங்கச் சொல்லேன்.''

அவள் முகத்தில் கடிதத்தை வீசி எறிந்தான் வாசு. அதைப் படித்த தேவகி அப்படியே கல்லாகச் சமைந்து விட்டாள்.

மறுநாளே ரூபகுமாருக்கும் ரமாவுக்கும் விவாகம் நடந்து விட்டது.


* * *

"ரமா! இந்த அறையைப் பார்த்தாயா? இது 'நம்' அறை. நம் இருவருக்கும் சொந்தமானது; நம் இருவருக்கு மட்டுமே சொந்தமானது. நீ உள்ளே போய்ப் பார். நான் கீழே சென்று ஒரு வேலையைப் பார்த்து விட்டு வருகிறேன்!''

ரமாவை அந்த அறையில் தனியே விட்டு விட்டு ரூபகுமார் கீழே இறங்கிச் சென்றான்.

'நம் அறை'! அந்தச் சொல்லில்தான் எவ்வளவு பொருள்கள் பொதிந்திருந்தன! 'நீ இனி என்னுடையவள், எனக்கே உரியவள்' என்பதை எடுத்துக் காட்டி விட்டான் ரூபகுமார். இனி குதூகலத்தோடு அவள் வாழ்க்கையை நடத்தினாலும் சோகத்தோடு வாழ்க்கையைப் பிடித்துத் தள்ளினாலும் அவன் சொல்லாமல் சொல்லி விட்டுச் சென்ற அச்சொற்களின் பொருள் ஒருவராலும் அவர்கள் பந்தத்தைப் பொய்யெனக் கூறிவிட முடியாது என்பதுதானே?

மனத் தவிப்பில் சில நிமிடங்கள் சென்ற பிறகு ரமா தலை நிமிர்த்தினாள். அப்போது அவள் கண்களில் பட்டது மேஜையின்மீது இருந்த ஸ்கூட்டர் பொம்மை. பொம்மை யானாலும் அதில் ஓர் ஆள் எவ்வளவு அழகாக அமர்ந்திருந்தான்!



'ஆ! வாசு!' என்று இதயம் பிளக்கும் குரலில் கூவினாள் ரமா. கண்கள் நிலைக்குத்த அந்தப் பொம்மையைப் பார்த்தாள். அந்தப் பொம்மை உண்மையில் வாசுவாக இருந்தால்...?

'வாசு... வா....சு' என்று அரற்றினாள் ரமா. காற்றுக்குப் பேசும் சக்தி இருந்தால் அவள் சங்கடத்தை அதற்கு உரியவனிடம் சேர்த்திருக்காதா? ஒலிக்கு உணர்த்தும் தன்மை இருந்தால் அது தூது சென்றிருக்காதா? காற்றையும் ஒலியையும் தூது அனுப்பும் நேரமா இது? காலம் கடந்துவிட்ட செயல் இனி அது! இருந்தாலும் ரமா கண்ணீர் மழையில் நனைந்திருந்தாள். காலடிச் சத்தம் கேட்டுத் தலைநிமிர்ந்தாள். ரூபகுமார் அறை வாசலில் நின்றிருந்தான். வேண்டாதவனைக் கண்டுவிட்டதுபோல் சட்டெனக் கண்களை மூடிக் கொண்டாள்.

''ரமா! நீ இந்தப் பொம்மையை எடுத்துக் கொண்டு விட்டாயா? இதைப் பார்த்ததுமே உனக்கு வாசுவின் நினைவு வரும் என எனக்குத் தெரியும். வாசுவின் நினைவு உனக்கு விருப்பமாக இருக்கும் என்றுதான் நான் இந்த ஸ்கூட்டர் பொம்மையை இங்கு வைத்தேன். நான் உன் விருப்பத்தை யெல்லாம் நீ கூறும் முன்பே ஈடேற்றி வைக்க எவ்வளவு ஆவலுடன் காத்திருக்கிறேன், பார்த்தாயா? உன் விருப்பமே என் விருப்பம்!'' என்றான் ரூபகுமார். எத்தனை கருணைக் குழைவுடன் குத்தாமல் குத்திப் பேசி விட்டான் அவன்!

ரமாவின் விசும்பல் மேலும் அதிகரித்தது. உடலெல்லாம் தூக்கித் தூக்கிப் போட்டது. பல பூவேலைப்பாடுகளுடன் கூடிய விரிப்புகளும் தலையணைகளும், இன்றைய தினத்துக்கென்று வாங்கி அழகுபடுத்தி யிருந்த அனைத்துமே அவள் கண்ணீரில் பங்கெடுத்து ஈரமாகிக் கொண்டிருந்தன. அவளையே நோக்கியபடி நின்றிருந்த ரூபகுமாரின் மனத்தில் 'இந்தத் துன்பச் சூழலில் உண்மையாகவே உன்னால் இன்பம் காண முடியுமா?' என்ற கேள்வி எழுந்தது.

தலையைச் சிலிர்த்துக் கொண்டு ரூபகுமார் உட்புறம் நுழைந்தான்.

ரமா தலை நிமிர்ந்தபோது அறைக் கதவு தாளிடப்பட்டிருந்தது. ரூபகுமார் அவள் அருகில் நெருங்கி வந்தபோது அவள் சிணுங்கவில்லை. அவள் பெண்! விவாக ஒப்புதல் கொடுக்கும்போதே இது அவளுக்குத் தெரியும். அவள் இனி அவனுடையவள்!

"காந்தி! நீ ரமாவைப் போய்ப் பார்க்கவில்லையா?'' என்று காந்தியிடம் கேட்டார் கோசல்ராம்.

விவாகத்தன்று ரூபகுமாருடன் ரமா அவ்வீட்டை விட்டுச் சென்றவள் தான். பிறகு அவள் பிறந்த வீட்டுக்கு வரவேயில்லை. காந்தியும் அவர்கள் வீட்டுக்குப் போகவில்லை.

''நான் போகவில்லை, அப்பா. உங்களிடம் 'மாமா!' என்று குழைவாரே ரூபகுமார்! நீங்களே போய்ப் பார்க்கலாமே!''

''மாமாவோ! மருமானோ! ஏதோ உறவு! ரமாவை எங்கேயோ தள்ளி விட்டது போல்தான் இருக்கிறது...'' தலையைத் தடவிக் கொண்டே கோசல்ராம் கூறினார். பிறகு அவர் மீண்டும் கூறினார்: ''நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?''

காந்தி ஒன்றும் பதில் கூறவில்லை. தந்தையை உற்று நோக்கினாள். அப்பா எப்படி இவ்விதம் பாசத்தின் பிடிப்பில் ஆழமாகச் சிக்கிவிட்டார்! ரமாவின் வேதனை தோய்ந்த முகம் அவர் மனத்தை வெகுவாக மாற்றி விட்டிருக்குமோ? மனிதனையே முழுதும் மாற்றிவிடக் கூடிய சக்தி வேதனையின் நிழலுக்கு உண்டு போலும்! அவர் உள்ளத்தோடு முடங்கிக் கிடந்த பாசம், அவரை வெகுவாக ஆட்டிக் கொண்டிருந்தது. அப் பாச உணர்ச்சியைக் கிளப்பிவிட்டதில் ஆனந்துக்கும் பங்கு உண்டு.

''காந்தி! நீயும் வருகிறாயா? இருவருமே போய் வரலாம்'' என்றார் கோசல்ராம். தனித்துச் சென்று தனித்து மகளின் வேதனை முகத்தைப் பார்த்துத் தனித்து மனத் தவிப்பை அனுபவிக்க அவர் விரும்பாததுதான் அதற்குக் காரணம்.

காந்தி தந்தையின் தவிப்பை உணர்ந்தாள். அவருடன் செல்ல இசைந்தாள்.

கோசல்ராம் உடனே ரமாவுக்கு போன் செய்தார். முதலில் அவர் கேட்ட கேள்வி இதுதான்: ''ரமா, நீ சந்தோஷமாகத்தானே இருக்கிறாய்?''

ரமாவுக்கு மனத்தைச் சங்கடப்படுத்தியது. தந்தையின் மாறின மன நிலையை உணர்ந்து விட்டவள், 'இனி என்னால் ஆனந்தம் காண முடியுமாப்பா?' என்று ஒரே கேள்வியில் தன் மனத்தைத் திறந்து காட்டி யிருக்கலாம். அப்படிக் காட்டினால் தந்தை எப்படித் தவித்துப் போவார்! ஆகையால் காதலனின் உயிருக்காகத் தன் காதலை அவள் தியாகம் செய்தது போலவே தந்தையின் மன அமைதிக்காக அவர் எதிரிலாவது அவள் மகிழ்ச்சியுடன் இருப்பது

போல் காட்டிக் கொள்ள வேண்டும்— அவள் இப்படி ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாக "ரமா! நான் சொல்வது கேட்கிறதாம்மா? நீ சந்தோஷமாகத் தானே இருக்கிறாய்? பதிலே கூறவில்லையே நீ?" என்று மீண்டும் கேட்டுவிட்டார் கோசல்ராம்.

"ம்... சந்தோஷமாகத்தானே அப்பா இருக்கிறேன்! உங்களுக்கு என்ன இப்படிச் சந்தேகம்?"

"நீ இங்கு வரவேயில்லையேம்மா. அதனால்தான் கேட்டேன்."

"சந்தோஷ நிலையில் எப்படியப்பா வர முடியும்? புதுக் குடித்தனம் ஆயிற்றே!" சடக்கென்று பதில் கூறினாள் அவள்.

"அவ்வளவு குதூகலமா? அப்படியானால் உன் குதூகலத்தை நானும் கண்ணால் காண இப்போதே வருகிறேன். கூடக் காந்தியும் வருகிறாள்!" என்று கூறி 'போனை' வைத்தார் கோசல்ராம்.

ரமா தவித்துப் போனாள். அப்பா ஏன் இப்படித் தலைகீழாக மாறிவிட்டார்? எப்பொழுது அவருக்கு இவ்வளவு குடும்பப் பாசம் வந்தது? அவள் விஷயத்தில் அக்கறை காட்டத் தோன்றியது? அப்பா இப்பொழுது இங்கு வந்துவிடப் போகிறாரே! அப்பாவுக்கு எதிரில் அவள் குதூகலமாக இருப்பது போல் நடிக்க வேண்டும். ரூபகுமாருக்குச் சாதகமாகச் சேர்ந்துவிடும் நிகழ்ச்சிகள் எத்தனை கூடிவிடுகின்றன! பாசத்தின் பிடிப்பில் அப்பா இருக்கக் கூடாதா என்று ஏங்கிய மனம் இப்போது அப்பா அதை உதறித் தள்ளியிருக்கக் கூடாதா என்று ஏங்குகிறது! பாசத்தைக் குழைத்துக் குழைத்து 'நான் உன் சுக துக்கத்தில் பங்கெடுப்பவன்' என்பதை இப்போது ஏன் காட்டுகிறார்?

அப்போதுதான் அந்த அறையில் நுழைந்த ரூபகுமார் "என்ன ரமா, யார் போனில் பேசியது?" எனக் கேட்டான்.

"அப்பா பேசினார். இப்போது இங்கு வருகிறாராம்" என்று பதிலளித்துவிட்டு அவள் மறுபக்கம் சென்றுவிட்டாள்.

சொன்ன சொல் தவறாமல் கோசல்ராம் காந்தியுடன் வந்துவிட்டார்.

"வாருங்கள் மாமா! வா காந்தி!"— ரூபகுமார் வரவேற்றான்.

"ரமா எங்கேயப்பா?" கோசல்ராம் கேட்ட முதல் கேள்வி இதுதான்.

அனைவரும் ஹாலில் அமர்ந்தபோது ரமா அடுத்த அறையில் நாடகத்துக்கான ஒத்திகை நடத்திக் கொண்டிருந்தாள். ஆம், அப்பாவின் எதிரில் அவள் குதூகலமாக நடிக்க வேண்டும்!

இங்கிலாந்தில் பதினேழு ஆண்டுகளாகச் சம்பள உயர்வு கிடைக்காத போதும், வேலைநிறுத்தம் செய்யாத ஒரே நபர் யார்?

(அடுத்த பக்கம் பார்க்க)

"ரமா!" என்று ரூபகுமார் குரல் கொடுத்தான்.

அங்கு வந்த ரமாவைப் பார்த்து ரூபகுமாரே ஒரு நிமிடம் திகைத்துவிட்டான். அவ்வீட்டுக்கு வந்தது முதல் இழிசல் புடவை அணிந்து பெயரளவுக்குத் தலை வாரி, ஒரு நகையும் அணியாமல் அசோக வனத்துச் சீதையெனக் காட்சியளித்தவள் இப்போது எப்படி அயோத்தியின் பட்டமகிஷி ராமப்பிரியாவாக மாறினாள்? தலைக் கொண்டை அழகாக வட்டமிட்டுச் சுற்றி மலர் கமழ நின்றது. காதில் தோடும், கழுத்தில் நெக்லெசும், கையில் வைர வளையலும், நெற்றியில் திலகமும், உடலில் ஜரிகைப் பட்டாடையும் ஆஹா, என்ன அழகு! என்ன அழகு!

இத்தனையும் கவனித்த காந்தியும் வியப்பில் ஆழ்ந்துவிட்டாள். உண்மையிலேயே ரமா ரூபகுமாரை மணந்து குதூகலத்துடன்தான் இருக்கிறாளா?

இருவரும் அவள் வெளிப்புறத் தோற்றத்தைக் கண்டு வியப்பில் இருந்த நேரத்தில் ரமா எவ்வளவு சங்கடத்துடன் தன் முக பாவத்தைக் குதூகலப் பாதையில் தள்ளுகிறாள் என்பதைக் கவனிக்கவில்லை. ரமாவுக்கோ சந்தேகம், தன் முகபாவம் உள்ளத்துத் துன்ப உணர்ச்சிகளை எங்கே தந்தையிடம் படம் பிடித்துக் காட்டிவிடுமோ என்று! இருந்தாலும் தன்னைச் சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொண்டு, "வாருங்கள் அப்பா!" என்று கூறி அவர் அருகிலேயே அமர்ந்தாள். "அப்படியானால் உன் குதூகலத்தில் பிறந்த வீட்டையே மறந்தே விடுவாயாக்கும்!" என்று டெலிபோனில் விட்ட பேச்சைக் கோசல்ராம் தொடர்ந்தார்.

"குதூகலமா? என்ன மாமா சொல்கிறீர்கள்?" ரூபகுமார் ஆரம்பித்தான். அவனுக்கு அனைத்துமே திகைப்பு.

அவனை மேலே பேச விடாமல் ரமா குறுக்கிட்டு, "என்ன கேள்வி அப்பா இது? ஆமாம், நீங்கள் ஏதோ புதிய கிளை ஒன்று ஆரம்பிக்கப் போவதாகப் பேசிக் கொண்டிருந்தீர்களே, அது என்ன ஆயிற்று?" என்று பேச்சை வேறு திசையில் மாற்றினாள்.

ரமா நினைவுபடுத்தவே, கோசல்ராம் ரூபகுமாரிடம் சில தகவல்கள் சேகரிக்க ஆரம்பித்தார். ரூபகுமார் அந்தத் தகவல்களைத் தெரிவித்ததோடு முன்பு நிறுத்தி வைத்திருந்த காகிதப் பேரத்தைப் பற்றி ஆரம்பித்தான். கோசல்ராம் ஏனோ அந்தப் பேரமே வேண்டாம் என்று கூறி விட்டார்.

''மாமா! நீங்களும் காந்தியும் இன்று இரவு இங்கேயே சாப்பிடலாமே!'' என்றான் ரூபகுமார்.

தந்தை பதில் கூறுமுன் ரமா கூறினாள்: ''இன்று எனக்கு வயிறு சரியில்லை. இன்னொரு நாள் வைத்துக் கொள்ளலாம்!'' என்றாள். தன் நடிப்பை அதிக நேரம் நீடித்து வைக்க முடியாது என்பதை அவள் அறிந்திருந்தாள். 'இது ஆரம்ப கட்டம். இனி போகப் போகத்தானே பழக வேண்டும்?'

கோசல்ராமை ஒரு வர்த்தகருக்கு அறிமுகப்படுத்த ரூபகுமார் அழைத்துச் சென்றான்.

அடுத்த கணம் ரமா நகைகளைக் கழற்றி வீசி எறிந்தாள். தலைக் கொண்டையைப் பிய்த்துக் கொண்டாள்.

''ஏன் ரமா...'' காந்தி கூவிய போது ரமா தொப்பெனச் சகோதரியின் மடியில் விழுந்து நெஞ்சு வெடிக்கக் கதறினாள்:

''ஐயோ, காந்தி! நான் என்ன பாவம் செய்தேன்? அப்பா ஏன் இப்படிப் பாசத்தின் நிழலைப் பிடிக்க வேண்டும்? இனி நான் இந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்தக் கடமைப்பட்டு விட்டேனே!''

காந்தி பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

* * *

எத்தனையோ சங்கடங்களை ஒரு தாயார் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் மகனின் வேதனையை அவளால் தாங்கமுடியாது. ஒரு பெண்ணின் மனத்தைத் துன்புறுத்த வேண்டுமென்றால் அதற்கு அவளை அடிக்கவோ, திட்டவோ வேண்டும் என்பதில்லை. அவளுக்கு எதிரில் அவள் மகவைத் துன்புறுத்தி விட்டால் போதும். அவள் நிலைகுலைந்து விடுவாள். தன் உயிரின் உயிரில் உலகத்தையே காண முற்படும் அன்னையின் பெருமையை என்னென்பது?



வேலை நிறுத்தம் செய்யாத அந்த நபர் அரசி எலிஸபெத்தான்!

நிழல் வீக — 'பாலி'

வாசுவின் ஆனந்தத்தையும் குதூகலத்தையும் ரமா — ரூபகுமாரின் விவாகம் குலைத்து விடவே, அவள் மனம் ஒடிந்து விட்டாள். ரமாவை மறந்து விடும்படி அவளால் நேரிடையாக அவனிடம் வற்புறுத்திச் சொல்ல முடியவில்லை.

உலகத்தின் விசித்திரத்தை என்னவென்று கூறுவது? வயதின் ஏற்றத்தில் ஆதாரமும் எப்படியெல்லாம் மாறுகிறது? குறிப்பிட்ட வயதுவரைதான் தாய்.ர் மகவுக்கு ஆதரவாக நிற்க முடிகிறது. பிறகு அது வேறு ஆதரவின் நிழலில் ஒதுங்க விரும்புகிறது. அது இயற்கை நியதி: ஆண் பெண் இருவருக்குமே கடவுள் காட்டிவிட்ட நியதி. வாசு அந்த நிழலை ஒரு மூலையில் கண்டுபிடித்துத் திட சித்தத்துடன் இருந்தான். அது தனக்குத்தான் சொந்தம் என்று இறுமாந்திருந்தான். அவன் நினைவைக் கனவாக்கி விதி எப்படியொரு மாறுட்டத்தை ஏற்படுத்தி விட்டது!

தேவகி இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த நேரம், வாசு ஆபீஸிலிருந்து திரும்பி விட்டான். வாசு சட்டையைக் கழற்றும்போதுதான் அவள் நோக்கினாள். அதற்குக் கீழே அவன் பனியனை போட்டுக் கொண்டிருந்தான்? வலை பின்னியது போல் அதில் எத்தனை கிழிசல்கள், எத்தனை பொத்தல்கள்!— சாதாரணமாக வாசு கிழிசல் துணிகளை அணிவதையே விரும்ப மாட்டான். பொத்தலாக இருந்தால் சகிக்க மாட்டான். அம்மா உடுத்தும் புடவையில் கிழிசல் இருந்தாலும் சண்டை பிடிப்பான். கிழிசலைப் பார்த்ததுமே வேறு புடவை வாங்கி வந்து விடுவான். இப்போது அதே மகன், எத்தனை கிழிசல்களோடு பனியன் அணிந்து கொண்டிருக்கிறான்!

காப்பியையும் டிபனையும் கொடுத்து விட்டுத் தேவகி வாசுவிடம் கூறினாள். ''வாசு! சீக்கிரம் சாப்பிட்டு விட்டு வாப்பா, கடைக்குப் போகலாம்.''

''கடைக்கா? எதற்கம்மா? எந்த மாட்டுப் பெண்ணுக்கு என்ன வாங்கப் போகிறாய்?'' என்று சுருக்கென்று கேட்டான் வாசு.

(தொடரும்)

அதோ, வால் நட்சத்திரம்!

கிழக்கு வானவெளியில் இப்போது வால் நட்சத்திரம் நமக்குத் தெரிகிறது. இதற்கு ஆராய்ச்சியாளர், பென்னெட் என்று பெயர் சூட்டியுள்ளனர். பொழுது புலர்வதற்கு அரை மணி நேரம் முன்பு அடிவானத்துக்குச் சற்று மேற்புறத்தில் தொலைநோக்கிக் கருவியின்றி எவரும் காணலாம். ஏப்ரல் பதினைந்து தேதி வரை இது தெரியும் என்று எதிர்பார்க்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அபூர்வமாகக் காணப்படுவதால்தான் வால் நட்சத்திரம் தோன்றியவுடன் அதைக் காண நம்மிடையே இவ்வளவு பரபரப்பு தோன்றுகிறது.

வால்நட்சத்திரம் மற்ற நட்சத்திரங்களைப் போல் எப்போதும் தோன்றுவது அல்ல. பல வருஷங்களுக்கு ஒரு முறையே அது வானவெளியில் மக்கள் கண்ணில்படத் தோன்றுகிறது.

பொதுவாக வால்நட்சத்திரங்களின் தோற்றம் உலகில் நிகழவிருக்கும் விபரீதத்தின் அறிகுறி என்று கருதப்படுகிறது.

வால் நட்சத்திரத்தின் தோற்றமே விசித்திரமானது. இவை மற்ற நட்சத்திரங்களைப் போல் இல்லாமல், நீளமாக அல்லது கோண வடிவில் காணப்படுகின்றன.

ஒரு வால் நட்சத்திரத்தைப் போல் மற்றொரு வால்நட்சத்திரம் இருப்பதில்லை. சிலவற்றுக்கு நீண்ட வால் இருப்பதில்லை. ஒரு வால் நட்சத்திரம் ஆகாயத்தில் தெரிவதைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயரே அதற்குச் சூட்டப்படுகிறது.


வால்நட்சத்திரம் என்பது உண்மையில் ஒரு நட்சத்திரமே அல்ல. அது சூரிய மண்டலத்தின் ஓர் அங்கம். பூமி, செவ்வாய் முதலான கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருவது போல் அதுவும் சுற்றி வருகிறது. ஆனால் கிரகங்களைக் காட்டிலும் அதிகமான நீளத்துடன்கூடிய ஒரு நீள் வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றுகிறது. பூமி, சனி போன்ற கிரகங்கள் ஒரே ஒரு கோணமாகத் திகழ்கின்றன. ஆனால் ஒரு பெரிய வால்நட்சத்திரம் பற்பல சிறிய திடப் பொருள்களின் சேர்க்கையால் ஆனது. இத்துண்டுகளைச் சுற்றி வாயு இருக்கிறது. சூரியனுடைய வெப்பத்தால் இந்த அமைப்பிலிருந்து மிகச் சிறிய 'துகள்'களும் விரிவடைந்த வாயுவும் பிரிந்து செல்கின்றன. இப்படிப் பிரிந்து செல்லும் வாயுவும் துகள்களுமே வால் போல் நமக்குக் காட்சி தருகின்றன. ஆகவேதான் வால்நட்சத்திரத்தின் வால் சூரியனிருக்கும் திசைக்கு எதிர்த் திசையில் நீளுவதைக் காண்கிறோம். சூரியனிடமிருந்து வெகுதூரம் சென்று விட்டால் ஆதவனின் வெப்பத்தால் பாதிக்கப்படாத வால்நட்சத்திரத்துக்கு வாலே இருக்காது!

விஞ்ஞானிகள் எத்தனையோ பல வால்நட்சத்திரங்களை அறிவார்கள். சூரியனைச் சுற்றி வர மூன்று வருஷங்கள் எடுத்துக் கொள்ளும் வால்நட்சத்திரம் உண்டு. வேறு சிலவற்றுக்குப் பல நூறு ஆண்டுகள் பிடிக்கும். கிரகங்களோடு ஒப்பிடும்போது வால் நட்சத்திரங்களின் ஆயுட்காலம் மிக மிகக் குறைவு. பல வால் நட்சத்திரங்கள் நாளடைவில் துகள்களாகச் சிதைந்து உருத் தெரியாமல் போகின்றன.

ஆங்கிலத்தில் 'காமெட்' என்று இதை அழைக்கிறார்கள். கிரேக்க பாஷையில் 'காமடெஸ்' என்றால் நீண்ட கேசம் என்று அர்த்தம். நீளமான முடியுடன் கூடிய பெண்ணின் ஒளி பொருந்திய முகம் போலிருப்பதால் காமெட் என்று அழைத்தார்கள் போலும்!

சீனாவிலும் ஜப்பானிலும் இதற்கு வழங்கி வரும் பெயர், 'பீசம் ஸ்டார்' — துடைப்பம் போன்ற வாலை உடைய நட்சத்திரம் என்பதே இதன் பொருள்.

வால் நட்சத்திரத்துக்கு இந்தியாவில் 'தூமகேது' என்றொரு பெயர் உண்டு.




ஹாலிஸ் காமெட் என்று அழைக்கப்படும் இந்த வால் நட்சத்திரம் மீண்டும் 1986-ல் தெரியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

சமஸ்கிருத மகாகவி காளிதாஸர் தம் குமார சம்பவத்தில் வால்நட்சத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார். "உலகத்தை நாசம் செய்வதற்காகவே வால் நட்சத்திரத்தைப் போல் தாரகாசுரன் கிளம்பியிருக்கிறான்" என்கிறார் மகாகவி.

இங்கிலாந்தில் கிரீன்விச் என்னுமிடத்தில் உள்ள வான சாஸ்திர ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஹாலி பேரறிஞர். அவர் ஒரு வால் நட்சத்திரத்தைக் கண்டறிந்து அதன் உண்மையை உலகுக்குத் தெரிவித்தார். ஆகவே, அந்த வால் நட்சத்திரத்துக்கு 'ஹாலிஸ் காமெட்' என்றே பெயர் அமைந்து விட்டது. அவர் கண்டுபிடித்த அந்த வால் நட்சத்திரத்துக்குச் சூரியனை ஒரு தடவை சுற்றிவர எழுபத்தாறு ஆண்டுகள் ஆகின்றன. மிகப் பிரகாசமான இந்த வால் நட்சத்திரம் மறுபடியும் 1986ல் தெரியும்.

—"தூமகேது."



மதுரை மீனுக்ஷி கோயில்
தென்னிந்திய கட்டிடக்
கலையின் உன்னதமான
எடுத்துக்காட்டு.

22 காரட் தங்கம் மற்றும்
வெள்ளியிலிருந்து
பிரமாதமான திறமையுடன்
உருவாக்கப்படும்
தென்னிந்திய நகைகளின்
தரத்திற்குச் சின்னம்

நட்வர்லால் கோவிந்த்ஜீ ஜவேரி

ஜுவெல்லர்கள்,
ஏற்றுமதியாளர்கள் மற்றும்
இறக்குமதியாளர்கள்
நாணயம் மாற்றுவோர்
லைசென்ஸ் ந. 36/69

ஏர்-கண்டிஷன் செய்யப்பட்ட
எமது, பின்வரும் காட்சிக்
கூடத்திற்கு விஜயம்
செய்யுங்கள் :

அம்ருத்லால் மேன்ஷன்,
264-சி, எல். நப்பூ ரோடு,
மாதுங்கா (மத்திய ரெயில்வே)
பம்பாய்-19 DD, இந்தியா
போன் : 473526
கிராம்ஸ் : JAMNADIL

வியாபார நேரம்:
காலை 11 மணி முதல்
இரவு 8 மணி வரை.
திங்கட்கிழமை விடுமுறை.



com/ngz/11 Tam

சாருலதா

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 37

யுத்தங்களில் ஜெயிப்பவர்!

"வாருங்கள்!" என்று சாருலதாவையும் பெருமாளையும் வரவேற்றார் டாக்டர் மல்லிகார்ஜுனன்.

"எப்படி இருக்கிறார் டாக்டர்? சொல்லுங்கள்!" பீதியும் துயரமும் ஒருங்கே பொங்கத் தாரை தாரையாகக் கண்களில் நீர் பெருக்கியபடியே கேட்டாள் சாருலதா.

"நான் உங்களை ஏமாற்ற விரும்பவில்லை. ஆபத்தான நிலைமைதான். என்னால் முடிந்ததையெல்லாம் செய்திருக்கிறேன்."

"எங்கே இருக்கிறார்? உடனே என்னை அவரிடம் அழைத்துப் போங்கள்."

"இப்போது வேண்டாம்; மயக்கத்திலிருக்கிறான். கண் விழிக்கட்டும். உங்களுக்கு அவனைப் பார்க்கும்போது அதிர்ச்சியாக இருக்கும். உடம்பெல்லாம் கட்டுப் போட்டு வைத்திருக்கிறேன். அவன் எதிரே அழுது புலம்பி எதுவும் செய்யக் கூடாது. தைரியமாக இருக்க வேண்டும். அவன் உடலும் மனமும் ரொம்பத் தளர்ந்து போயிருக்கின்றன. புரிகிறதா?"

சாருலதாவுக்கு இப்போதே உடம்பெல்லாம் நடுங்கியது. "ஐயோ, நான் என்ன செய்வேன்?" என்று குலுங்கக் குலுங்க அழுதாள்.

மல்லிகார்ஜுனன் ஓர் அறையைத் திறந்துவிட்டு அதில் அவளையும் பெருமாளையும் அமரச் சொன்னார். "இப்போது அழுதால் பரவாயில்லை. அவனைப் பார்க்கும்போது நான் சொன்னது நினைவிருக்கட்டும்!" என்றார். "அவன் அம்மா எங்கே? வரவில்லையா?"

"கார் அனுப்பியிருக்கிறேன். தம்பி குணா போயிருக்கிறான், அழைத்து வர. இப்போது வந்து விடுவார்கள்."


"அவளுக்கும் முன்கூட்டியே எச்சரித்து வையுங்கள்."

நர்ஸிங் ஹோம் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. தோட்டத்தில் சுவர் ஓரமாய்க் காரை விட்டு விட்டு, சாரங்கன் இறங்கி அவசரம் அவசரமாய்ப் போர்ட்டிகோவை நோக்கி நடந்தான்.

ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்துவிட்டு, "யார் வருவது?" என்று கேட்டார் டாக்டர் மல்லிகார்ஜுனன்.

"சாரங்கன் — என் செக்ரட்டரி."

"எப்படி நேர்ந்தது இது, வேணுகோபாலுக்கு? உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"



"எனக்கு ஒன்றுமே புரியவில்லையே, டாக்டர். நீங்கள் வேணுவுக்கு ஆபத்து என்று ஃபோன் பண்ணினீர்கள். ஓடி வந்தேன். அவ்வளவுதான்."

சாரங்கன் அறைக்குள் நுழைந்தான். "என்ன நடந்தது? குணா ஃபோன் செய்தானே?"

''வேணுவை யாரோ பலமாக அடித்து உதைத்துப் போட்டிருக்கிறார்கள்....'' என்றார் டாக்டர் மல்லிகார்ஜுனன். ''மார்புக் கூட்டில் இரண்டு எலும்புகள் முறிந்து விட்டன. ஒன்று நுரையீரலைப் பொத்து விட்டது. அவன் இருமியபோது ரத்தம் குபுக்கென்று வாயிலிருந்து வந்ததைப் பார்த்து ஒரு விநாடி நானே கலங்கிப் போய் விட்டேன்.''

சாருலதா ஒடுங்கிப் போனாள். கண்ணீராய்க் கரைந்து சிறுத்தாள்.

சாரங்கன் புரிந்து கொண்டான்.

டாக்டர் மேலும் சொன்னார்: ''அவனே டாக்டரானதால் நெஞ்சில் எலும்பு முறிவு என்பதை உடனே புரிந்து கொண்டு நேரடியாகத் 'தொராஸிக் ஸர்ஜ'னைத் தேடி வந்து விட்டான். 'பிளட் குரூப்' என்ன என்பதையும் அவனே சொன்னதால் கூடிய விரைவில் ரத்தம் செலுத்த முடிந்தது. ஆனாலும் கொடிய காயம் பட்டதற்குப் பிறகும் அவன் ரொம்பவும் அலைந்து கஷ்டப்பட்டுக் களைத்திருக்கிறான். அதிர்ச்சி வேறு. சிகிச்சைக்கு என்னிடம் வந்து சேர மிகவும் கால தாமதமாகியிருக்கிறது. வழியில் ஏராளமாய் ரத்தம் இழந்திருக்கிறான். ஆப்பரேஷனைத் தாங்குவானா என்பதே சந்தேகமாயிருந்தது.''

''டாக்டர், பிளீஸ்! அரை நிமிஷமாவது அவரைப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்'' என்று கெஞ்சினாள் சாருலதா.

'' அழைத்துப் போகிறேன்; சற்றுப் பொறுமையாக இருங்கள்.''

''சாரு! அவருக்குத் தெரியாதா, எப்போது நம்மை அழைத்துப் போவ



தென்று? அமைதியாக இருங்கள்!'' என்றான் சாரங்கன்.

''இது போலீஸ் கேஸ். ஆனால் நான் புகார் கொடுக்கக் கூடாதென்று கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டான் வேணு. ஏன் அப்படி? உங்களுக்கு ஏதாவது தெரியுமா? அவன் விரோதிகள் யார்? எதற்காக இவன் அவர்கள் மீது பரிவு காட்டுகிறான்?''— மல்லிகார்ஜுனன் கேட்டார்.

சாரங்கன் தலை குனிந்து கொண்டான். சாருலதா தனக்குப் புரியவில்லை என்று தலையாட்டினாள்.

''இத்தகைய கேடிப் பசங்களை லாக் அப்பில் தள்ளி நொறுக்கணும். நான் விடப் போவதில்லை'' என்றார் மல்லிகார்ஜுனன்.


''ஒரு சின்னக் கோரிக்கை டாக்டர். வேணுவின் விருப்பத்தை மீறி எதையும் இப்போது செய்யாதீர்கள்'' என்று சாரங்கன் பணிவோடு கேட்டுக் கொண்டான். ''அவர் கண் விழித்ததும் ஒரு



டின்னருக்கு பின்னி ஷர்ட் அணிந்து செல்லுங்கள்

பின்னி ஷர்ட் அணிந்து உங்களை உயர்ந்த வகுப்புக் கேற்ப பொருத்தமான தோற்றத்தில் இருப்பவராகவும் உணர்வீர்கள். பின்னி ஷர்ட்டுகள் எங்கு அணிந்தாலும் நீங்கள் [illegible] அனுபவத்தை உணர்வீர்கள். உன்னதமாகத் தைக்கப்பட்ட அழகு நிறை [illegible] போதுமே. [illegible] அருமையே அருமை. பின்னி அளிக்கும் தனிச்சிறப்பைத் தாருங்கள். எப்போதும் பின்னி ஷர்ட்டை அணியுங்கள்.

ரூ. 13.50 லிருந்து ரூ. 57-00 வரை



பின்னி ஷர்ட்டுகள்

மேலும் ஸ்லாக்ஸ்கள் பின்னி வழியிலே

டாக்பரோ ஸ்லாக்ஸ்...கவர்ச்சியானது. சிக்கனமானது...உங்கள் பின்னி ஷர்ட்டிற்கு ஏற்ற துணை.

Interpub/BO/2 TM

வார்த்தை சொல்லி விட்டுச் செய்யுங்கள்.''

''நோ! நோ! ஒரு பொறுப்புள்ள டாக்டர் அந்த மாதிரியெல்லாம் நடந்து கொள்ள முடியாது ஸார்! போலீசுக்குச் சொல்ல வேண்டாம் என்று வேணு கேட்டுக் கொண்ட போதிலும் நான் அவனெதிரே தலையாட்டியபோதிலும் ஒழிய, ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழையு முன்னர் நர்ஸிடம் ஃபோன் பண்ணிப் போலீசுக்குத் தகவல் கொடுக்குமாறு சொல்லி விட்டேன்.''

நர்ஸ் ஒருத்தி எட்டிப் பார்த்தாள். ''டாக்டர் கொஞ்சம் வருகிறீர்களா?''

''லீலா! போலீசுக்கு ஃபோன் செய்யச் சொன்னேனே; செய்துவிட்டாயல்லவா?''

அவள் கையை உதறிவிட்டு விரலைக் கடித்தாள். ''ஸோ ஸாரி, டாக்டர்! எமர்ஜென்ஸி ஆப்பரேஷன் என்பதால் அவசரம் அவசரமாகத் தியேட்டரின் எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்று கவனித்தேன் அல்லவா? அந்தப் பதற்றத்தில் இது மறந்தே விட்டது!''

''ஸில்லி கேர்ல்!'' என்று கடிந்து கொண்டார் மல்லிகார்ஜுனன். ''என்ன காரியம் செய்தாய் லீலா. என் கௌரவமே குலைந்து விடும், போ! உடனே நானே டி. ஐ. ஜி.க்கு ஃபோன் போடுகிறேன். ஹி இஸ் மை குட் ஃபிரெண்ட். சரி, நீ என்ன கேட்க வந்தாய்?''

நர்ஸைப் பின்தொடர்ந்து டாக்டர் மல்லிகார்ஜுனன் சென்றார்.

சாரங்கன் சொன்னான்: ''மதிபாலையும் சந்திரபாலையும் சந்திப்பதென வேணு திட்டம் போட்டிருந்தார். அவர்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும்!''

சாருலதா திகைத்தாள். ''சாரங்கன்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்காகவா இத்தனை வேதனையையும் அவர் அநுபவிக்கிறார்?'' படீரென்று அவள் தலையில் அடித்துக் கொண்டாள். ''மகாபாவி நான்! மகாபாவி!''

பெருமாள் சாருவை அணைத்துக் கொண்டார். அவருக்கு எதுவும் சரியாகப் புரியவில்லை. ஆனால் இந்த விபரீதம் நிகழ்ந்ததில் தம் மகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் பொறுப்பு உண்டு என்று தெரிந்தது. அவர் கூறினார்: ''சாரு! வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. வேணுகோபாலின் தாயாராகத்தான் இருக்கும். அவளுக்கு நீ தைரியம் சொல்ல வேண்டாமா? நீயே அழுது கொண்டிருந்தால் எப்படி?''

ஆனால் மீனாட்சியைப் பார்த்ததும் சாருலதாவின் துயரம் அதிகரித்து அவளை முறுக்கிப் பிழிந்தது.

பெருமாள் மகளைத் தட்டிக் கொடுத்தபடியே பேசினார்: ''யாரோ இரண்டு பேர் வேணுகோபாலுடன் சண்டை போட்டு அவரை இந்தக் கதிக்கு ஆளாக்கியிருக்கிறார்கள். அதனால் அந்த இரண்டு பேரும் வெற்றி அடைந்து விட்டதாக நினைக்காதே. எல்லா யுத்தங்களிலும் ஜெயிப்பவர் பகவான் ஒருவரே! 'ஸமிதிஞ்ஜயாய நம:' தைரியமாக இரு அம்மா.''

அத்தியாயம் 38

வெற்றித் திலகம்

மயக்கம் தெளிந்து ஆனால் அசதியால் கண்மூடிப் படுத்திருந்தான் வேணுகோபால்.

''உங்களுக்கெல்லாம் பத்து நிமிஷம் தான் தரப் போகிறேன். அதை அழுது புலம்பி வீணடிக்காதீர்கள். அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து தைரியம் சொல்லி விட்டுச் சீக்கிரம் வந்து சேருங்கள்.''

இப்படி எச்சரித்தபிறகு வேணுகோபால் இருந்த அறையின் கதவைத் திறந்து விட்டார் டாக்டர் மல்லிகார்ஜுனன்.

வேணுகோபாலின் இமைகள் மெல்லத் திறந்து கொண்டன. கால்மாட்டில் அமர்ந்திருந்த தாயாரை முதலில் பார்த்தான். புன்னகையில் அவன் அதரங்கள் இலேசாக நீண்டன. விழிகள் சுழன்றன. அறையின் ஒரு பக்கத்தில் குணாவும் கமலாவும்; சாரங்கனும் லில்லியும் ஜோடி ஜோடியாக நின்றுகொண்டிருந்தது இயல்பாகவும் அழகாகவும் இருந்தது கண்டு அவன் வேதனைக்கிடையிலும் மகிழ்ச்சி அடைவது தெரிந்தது. இன்னொரு பக்கத்தில் பெருமாளும் கமலாவின் அப்பாவும் கிசுகிசுத்த குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

'எல்லாரையும் பார்த்தாகி விட்டது; ஆனால் பக்கத்திலேயே அவர் நெஞ்சுக்கு நேராக நான் இருப்பதை அவர் உணராமலே போய் விடுவாரோ?' என்று சாருலதாவை ஏக்கம் கவ்வியது. தொலைவில் இருந்தவர்கள் பார்வைக்

ருள் கல்பமாய் அகப்பட்டார்கள். ஆனால் பக்கத்தில் இருந்தவளை நோக்கத் தலையைத் திருப்ப அவனால் முடியவில்லை. மெல்லிய விசும்பலொலி சாருலதாவிடமிருந்து எழுந்தது. அவன் விழிகள் மறுவிநாடி கடைக்கண்ணுக்குத் தாவின. கரம் உயர்ந்து அவள் தலையை வருடியது.

''அம்மா !'' என்று அழைத்தான்.

''இதோ, இருக்கேண்டா! உன்கிட்டத்திலேயேதான் இருக்கேன்! நீ அதிகமாப் பேசக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார்டா'' என்றாள் மீனாட்சி.

''கவலைப்படாதே அம்மா! உன்னை விட்டு விட்டு எங்கேயும் போய் விடமாட்டேன்'' என்றான் ஈனஸ்வரத்தில்.

''அது எனக்குத் தெரியாதா வேணு? உனக்காகத்தானே நான் வாழ்ந்துண்டிருக்கேன்? என்னை விட்டுப் பிரிவியா நீ? மனசை அலட்டிக்காதே. நீதான் கெட்டிக்கார டாக்டராகப் பார்த்து உன்னை ஒப்படைச்சுண்டுட்டியே. எல்லாம் சரியாப் போயிடும்ப்பா!''

''பார்த்தாயா, சாரு! நான் அவளுக்கு ஆறுதல் சொன்னால், அவள் எனக்கு ஆறுதல் சொல்கிறாள்! டாக்டர் மல்லிகார்ஜுனன் எனக்கு உற்சாகமளிக்கும் விதமாகப் பேசச் சொன்னார், இல்லையா?''

சாருலதா தைரியமாக இருக்க முயன்று தோற்றாள். விசும்பி விசும்பி அழுது கொண்டே, ''ஏன் இப்படிச் செய்தீர்கள்? அவர்கள் எவ்வளவு பொல்லாதவர்கள் என்று தெரியாதா உங்களுக்கு? எதற்காக அவர்கள் வழிக்கு நீங்கள் போனீர்கள்? என்மீது உங்களுக்குள்ள காதலை நிரூபிக்க இவ்வளவு பெரிய ஆபத்தில் நீங்கள் சிக்கிக் கொள்ள வேண்டுமா?'' என்று கேட்டாள்.

அவன் புன்னகையில் இப்போது இலேசான ஏளனம் கலந்திருந்தது. சிரிக்க அவனால் முடிந்திருந்தால் அந்த நர்ஸிங்ஹோம் முழுவதும் அந்த ஒலியால் நிறைந்திருக்கும். ''கிட்டத்தில் வா, சாரு! உரக்கப் பேச என்னால் முடியவில்லை'' என்றான்.

அவன் மேல் பட்டும் படாமலும் தன் பட்டுக் கன்னத்தை வைத்துக் கொண்டு தலையணையைக் கண்ணீரால் நனைத்தாள் சாருலதா.

''என் காதலை நிரூபிக்க வேண்டிய அவசியம் இருப்பதாய் நான் நினைக்கவில்லை சாரு. அதை நிரூபிக்கவும் முடியாது. அது என்ன ஒரு விஞ்ஞான தத்துவமா நிரூபிக்க? காதல் என்பது ஓர் உணர்ச்சி. ஐம்புலன்களும் ஒன்றாய் இணைந்த ஆனால் ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு தூய உணர்ச்சி. அது நிரூபிக்க முடியாத சத்தியம். உருவமற்ற முழுமை. அதன் எதிரொலி உன் உள்ளத்திலும் ஏற்பட்டால் நான் அதிர்ஷ்டக்காரன்; இல்லையேல் அது என் துரதிர்ஷ்டம்; அவ்வளவுதான்!''

''அந்தக் காரணமும் இல்லை என்றால் பிறகு நீங்கள் ஏன் அந்த முரடர்களிடம் வலியச் சென்று மாட்டிக் கொள்ள வேண்டும்?'' வேணுவிடமிருந்து சற்று அகன்று சென்று கேட்டாள் அவள். அவன் செய்கை இப்போது அர்த்தமில்லாததாக, மன்னிக்க முடியாத அசட்டுத்தனமாகத் தோன்றியது அவளுக்கு.

வேணுவின் முகத்தில் சஞ்சலமும் வருத்தமும் பரவின. உடல் உபாதையால் ஏற்பட்டதல்ல அவை; அதற்கும் மேலாகக் கிளர்ந்தவை.

மீண்டும் அந்த வினாவை எழுப்பாமல் இருக்கச் சாருலதாவால் முடியவில்லை. விம்மியபடியே கேட்டாள்: '' இது என்ன பைத்தியக்காரத்தனம்? ஒன்றுமில்லாததற்கு இப்படி ஓர் அபத்தமான காரியத்தில் யாராவது இறங்குவார்களா? எனக்குப் புரியவில்லை. ஏன் இப்படிச் செய்தீர்கள்?''

''உன் கேள்விக்குப் பதில் நாங்கள் சொல்கிறோம்'' என்று ஒரு குரல் கதவருகே கேட்டது.

மேச்சேரி ஆலயத் திருப்பணி

வடார்க்காடு மாவட்டத்தில் கலவைக்கு அருகில் உள்ள மேச்சேரி கிராமத்தில் புராதனமானதும், ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்த்ரர் முதலான மகான்களால் ஆராதிக்கப்பட்டதுமான ஸ்ரீ காமாக்ஷி ஸமேத ஸ்ரீ கைலேச்வரர் ஆலயம் இருக்கிறது. கால வசத்தால் இவ்வாலயம் ஜீரணமடைந்துவிட்டது. இதனைப் புதுப்பிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீ காமகோடி பரமாசாரியாளின் பூரண அநுக்கிரகத்துடன் நடைபெறும் இக் கைங்கரியம் சிறப்பாகவும் சீக்கிரமாகவும் நிறைவு பெற ஆஸ்திக மக்களின் உதவி கோரப்படுகிறது.

நன்கொடைகளைக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்: ஸ்ரீ. ஏ. காமகோடி ஐயர், மேச்சேரி கிராமம், அரும்பாக்கம் தபால், வட ஆர்க்காடு ஜில்லா.



ரெக்ஸ் பற்றிய மிகவும் திருப்தியளிக்கும் இரண்டு அம்சங்கள்.

ஒன்று,
இதன் உன்னத தரம் — இப்போது,
இதன் விலைநயம்.

ஒவ்வொருவர் சுவைக்கும் ஏற்ற
ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்களின் வகைகள்.

ரெக்ஸ் ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்கள்— அதாவது, இனிமையான, இன்சுவையுள்ள, சாறு செறிந்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உன்னத பானங்கள் இவை. கவனமுடன் தேர்ந்தெடுத்த நேர்த்தியான பழங்களுடன் தூய கருப்பஞ் சாற்றுப் பாகும், விசேஷமான இதர சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கப்படுகின்றன. சுவைத் தறியாத புத்துணர்ச்சி தரும் பானங்கள் இவை. இப்போது ரெக்ஸ் பானங்கள் சகாய விலையில் கிடைக்கின்றன. ரெக்ஸ் பானங்களை விட அதிக திருப்தியளிக்கும் பானங்கள் வேறென்ன இருக்க முடியும்?

- ஆரஞ்சு ஸ்க்வாஷ்
- ஆரஞ்சு கிரஷ்
- லெமன் ஸ்க்வாஷ்
- லெமன் பார்லி
- லைம் ஜூஸ் கார்டியல்
- மாங்கோ ஸ்க்வாஷ்
- கோலா கான்ஸன்ட்ரேட் ஃப்ரூட் ஸிரப்
- ராஸ்பெர்ரி ஸிரப்
- ஸ்ட்ராபெர்ரி ஸிரப்
- பைனாப்பிள் ஸிரப்
- ரோஸ் ஸிரப்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி
(இந்தியா) பிரை. லிட். பம்பாய்-1.

பாதுகாப்பிற்கு
ஒரு பூட்டு உள்ள
தெனில் அது
நவ-தால் ஒன்றே
ஒன்றுதான் !



நவ-தால்

நம்பிக்கையானது. அதனால் தான் பாங்குகளும் தொழிற்சாலைகளும், கிடங்குகளும் நவ-தால் பூட்டையே உபயோகிக்கின்றனர். அதிநுட்பமான தயாரிப்பு! ஒவ்வொரு பூட்டுக்கும் மாறுபட்ட இணைப்புமுறையில் வெட்டப் பட்ட சாவிகள். உடைத்து திறக்க இயலாதபடி அதிக பாதுகாப்பு அளிப்பதற் கேற்ற முறையில் செய்யப் பட்டது நவ-தால். பித்தளை, எஃகினாலான இரட்டைக்கூடு அதை மிகமிக உறுதியாக்கு கிறது. தயாரிப்பவர்கள் : கோத்ரெஜ்-பாதுகாப்பு உபகரணங்களைத் தயாரிப்ப தில் 70 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவமுடைய வர்கள்.

4 சைஸ்கள் :
40 mm (5 லீவர்கள்)
50 mm (6 லீவர்கள்)
67 mm (7 லீவர்கள்)
85 mm (8 லீவர்கள்)

Godrej கோத்ரெஜ் ✓ எப்போதும் நங்கூரம் மார்க் பூட்டுகளையே கேட்டு வாங்குங்கள்

மஹிபாலின் அந்தக் குரலைச் செவி மடுத்ததுமே வேணுவின் முகம் சட்டென்று சஞ்சலம் நீங்கப் பெற்றுத் தெளிவும் பிரகாசமும் அடைவதைப் பார்த்தாள் சாருலதா.

''டாக்டர் உத்தரவில்லாமல் இவர்கள் இங்கே வரக் கூடாது; சொன்னால் கேட்க மாட்டேனென்கிறார்கள்'' என்றாள் பின்னோடு வந்த ஒரு நர்ஸ், கலவரத்தை முகத்தில் தேக்கியபடி.

''அனுமதிக்கச் சொல்லு!'' என்று ஒரு தீவிரத்துடன் கூறினான் வேணு கோபால்.

சாருலதா கதவருகே போய்ப் பேசி விட்டு வந்தாள்.

மஹிபாலும் சந்திரபாலும் சாஷ்டாங்கமாக வேணுகோபால் எதிரே தரையில் விழுந்தார்கள். ''உன்னால் முடியுமானால் எங்களை மன்னித்து விடு'' என்றார்கள். பிறகு எழுந்து நின்று சாருலதா பக்கம் திரும்பினார்கள். ''உன்னை பிளாக்மெய்ல் செய்து வாங்கிய பணத்தில் நாங்கள் செலவழித்தது போகப் பாக்கி இந்தப் பைகளில் இருக்கிறது'' என்றான் மஹிபால். இரு தோல் பைகளைக் கட்டில் மீது வைத்தான்.

''டேப் ரிகார்டரும் உன் திருமண ஃபோட்டோ நெகடிவ்களும் இதோ'' என்று சந்திரபால் தோல் பைகளுக்கு அருகே அவற்றையும் வைத்தான்.

''நாங்கள் இப்போது போலீஸில் எங்களை ஒப்படைத்துக் கொள்ளப் போகிறோம்'' என்றான் மஹிபால்.

''அதற்கு அவசியமில்லை'' என்றார் அப்போது உள்ளே நுழைந்த டாக்டர் மல்லிகார்ஜுனன். ''போலீசாரே சற்று நேரத்தில் இங்கு வந்து விடுவார்கள். நர்ஸ் சொன்னதைக் கேளாமல் நீங்கள் இருவரும் இங்கு வந்து ஏன் கலாட்டா செய்கிறீர்கள்?''

''டாக்டர்! அவர்களைப் பேச அனுமதிக்குமாறு வேணுகோபால்தான் கேட்டுக் கொண்டார்'' என்றாள் சாருலதா.

''போலீஸ் வரட்டும். உன்னை பிளாக்மெய்ல் செய்தோம்; வேணுகோபாலை அடித்து உதைத்துப் போட்டோம் என்று அவர்களிடம் சொல்கிறோம்.'' — சந்திரபால்.

வேணுகோபாலின் முகத்தில் பெருமிதம் தாண்டவமாடுவதைக் கவனித்தாள் சாருலதா. வேதனையின் சுவடு கூட அங்கு தெரியவில்லை.

''சாரு! உனக்கு நடந்த கதை ஒன்றும் தெரியாது'' என்று ஆரம்பித்தான் மஹிபால். ''வேணுகோபாலை



பாட்னா சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற டாக்டர்கள் சிலர் மருத்துவத்துறை பற்றிய அடிப்படை விஷயங்களைக் கூடச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்பது கண்டு பிரிட்டிஷ் மருத்துவ நிபுணர்கள் வியப்படைந்தார்கள்.

— செய்தி — ஹிந்து நாளிதழ் 19-3-70

இந்தியாவின் போக்கே இடது பக்கம் போகையிலே
இரண்டு பக்கம் ஏதுக்கடி — குதம்பாய்
இரண்டு பக்கம் ஏதுக்கடி

அசெம்பிளியில் இடம் மாறும் ஆத்மாக்கள் நினைவாக
அவயவங்கள் இடம் மாறுதடி — குதம்பாய்
அவயவங்கள் இடம் மாறுதடி

இங்கிலாந்து போயும் இடப்பக்க ஆர்வத்தை
இழந்து விடுவாரோடி — குதம்பாய்
இழந்து விடுவாரோடி

வலப்பக்க "லிவரை'* வசதியாய் இடப்பக்கம்
வக்கணையாய்த் தேடுறாரடி — குதம்பாய்
வக்கணையாய்த் தேடுறாரடி

அனுடமி டாக்டரவர் ஆராய்ச்சி டாக்டரில்லை
ஆனாலும் விழித்தாரடி — குதம்பாய்
ஆனாலும் விழித்தாரடி

பாட்னாவில் படித்துப் பட்டங்கள் பெற்ற பின்
ஏட்டு ஞானம் ஏதுக்கடி — குதம்பாய்
ஏட்டு ஞானம் ஏதுக்கடி


முழங்கால் மூட்டுப்பக்கம் மூளையையே தேடினாலும்
மோசம் ஒன்றும் ஆகாதடி — குதம்பாய்
மோசம் ஒன்றும் ஆகாதடி

நாட்டின் புகழ் பெற்ற நாலந்தா இருக்குமிடம்
நாலு பேர் சிரிப்புக்காக்கடி — குதம்பாய்
நாலு பேர் சிரிப்புக்காக்கடி

(குதம்பைச் சித்தர் மன்னிப்பாராக) - பட்டினத்தார்

---

* கல்லீரல்



நாங்கள் அடித்துப் போட்டுவிட்டு வந்தோம். அப்போது சந்திரபாலைப் பாம்பு கடித்து விட்டது. தன்னுடைய ஆபத்தான நிலையைப் பொருட்படுத்தாமல் வேணுகோபால் வந்து முதலுதவி அளித்தான். ஆயினும் வேணுவைக் குற்றுயிராகக் கிடக்குமாறு அங்கேயே விட்டு விட்டு நாங்கள் அவன் காரை எடுத்துக் கொண்டு வந்து விட்டோம். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போய் விஷ முறிவுக்கு இவனுக்கு ஊசி போட்டானதும் ஒரு டாக்ஸியில் எங்கள் அறைக்கு வந்து சேர்ந்தோம்.''

சந்திரபால் தொடர்ந்தான்: ''எங்கள் விலாசம் உங்களில் யாருக்கும் தெரியாது. ஆனாலும் அங்கே இருக்க எங்களுக்குப் பயமாயிருந்தது. போலீசுக்கு வேணுகோபால் தகவல் கொடுத்துவிட்டால் அவர்கள் எப்படியும் எங்களைத் தேடி வந்து விடுவார்கள் என்று நினைந்து அங்கிருந்து கிளம்பி விட்டோம். டவுனிலிருந்தவர்கள் மாம்பலம் வந்து ஹோட்டல் ஒன்றில் அறை எடுத்துக் கொண்டோம்.''

''படுத்தோம்; தூக்கம் வரவில்லை'' என்றான் மஹிபால். ''ஆளுக்குப் பத்து சிகரெட் பிடித்துத் தீர்த்தோம். நடந்தவை கண் முன்னே நிழலாடியபடி இருந்தன.''

''அடிப்பதிலும் உதைப்பதிலும்தான் வீரம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்த எங்களுக்குப் பிறருக்கு உதவுவதிலும் வீரம் காட்ட முடியும் என்று வேணுகோபால் கற்றுக் கொடுத்தான்.''

''துன்பமளிப்பதல்ல வீரம்; துன்பத்தைப் போக்குவதுதான் வீரம் என்று புரிந்து கொண்டிருக்கிறோம் இப்போது.''

''அதுவும் எதிரிக்கு உதவ எவ்வளவு நெஞ்சத் துணிவு வேண்டும்!''

''எங்களை எவ்வளவு தூரம் அவன் நம்பியிருந்தான். அவனை எப்படியெல்லாம் நாங்கள் ஏமாற்றி விட்டோம்!''

''இதையெல்லாம் நினைக்க நினைக்க எங்களுக்கு வெட்கமாயிருந்தது. வேணு என்ன ஆனானோ என்று கவலையாக இருந்தது.''

''வேணுவின் வீட்டுக்கு ஃபோன் போட்டோம். யாரும் எடுக்கவில்லை. சாருவின் வீட்டுக்கு ஃபோன் செய்தோம். சமையல்காரன் சொன்னான், நீங்களெல்லாரும் இங்கே இருப்பதாக.''

''மனசு கேட்கலே. நள்ளிரவில் டாக்சி கூடக் கிடைக்கவில்லை. ஓட்டமும் நடையுமாக வந்து சேர்ந்தோம்.''

நடந்ததை அவர்கள் மாறி மாறிக் கூறி வந்த போது அனைவர் கண்களும் அவர்களையே நோக்கியபடி இருந்தன. வேணுகோபாலை யாரும் கவனிக்கவில்லை.

சாருலதா இப்போது இன்பக் கிளுகிளுப்புடன் வேணுகோபால் பக்கம் திரும்பினாள். அவன் எதை நிரூபிக்க முயன்று இவர்களிடம் வலியச் சென்று பேசிப் பழகியிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. 'என்னிடம் உள்ள காதலை நிரூபிக்கத்தான் வேணு இவர்களுடன் தொடர்பு கொண்டதாய்ச் சுயநலத்துடன் நான் எண்ணியது எவ்வளவு தவறு! இந்தக் கயவர்களைத் திருத்தி விட்டோம் என்பதில் வேணுவின் மனம் எவ்வளவு குதூகலப்படும்!'

அமைதியாகக் கண்களை மூடியபடி படுத்திருந்த வேணுகோபால் அருகில் மண்டியிட்டு அமர்ந்தாள் அவள். ''வேணு! உங்கள் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் சக்தி இப்போது என்னிடம் இருக்கிறது வேணு! நாலு நாள் அவகாசம் கேட்டேனல்லவா? இன்று மாலை ஒரு நல்ல முடிவுக்கு வந்து விட்டேன். அப்பாவிடமும் குணவிட்டும்கூடச் சொல்லி விட்டேன்!''

அவன் அசையவில்லை. முகத்தில் நிலவிய பெருமிதப் புன்னகை மாறவில்லை.

''வேணு!'' என்று அலறினாள் சாருலதா. ''வேணு! நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்; வேணு! என்னைப் பாருங்கள். கண் திறந்து என்னை ஒரே ஒரு தடவையாவது பாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். கேட்கமாட்டீர்களா, வேணு? உங்களைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று நான் சொல்வதைக் கேட்கவே மாட்டீர்களா?''



அலறித் துடித்து அவன் மார்பில் முகம் பதித்துக் கதறி அழுதாள் அவள்.

நீண்ட நேரம் கழித்துச் சோகமே உருவாக அவள் நிமிர்ந்தபோது அவள் நெற்றித் திலகம் அவன் நெஞ்சிலே வெற்றித் திலகமாக மாறி விட்டிருந்தது.


CINTHOL
அதிக மணம், அதிக மென்மை
மென்மை, அன்றலர்ந்த மலரின் புதுமை, நறுமணம்
ஒப்பற்ற கிருமிநாசினியாகிய ஜி-11 (ஹெக்சாகுளோரோஃபின்) கொண்ட சிந்தால் டாய்லெட் பவுடரின் நீடித்து நிற்கும் நறுமணமும், பட்டுமென்மையும் உங்கள் உடலைத் தழுவி, சருமத்திற்கு நாள்முழுவதும் பாதுகாப்பளிக்கட்டும்.
ஜி-11 கொண்ட சிந்தாலைப்போல வேறெந்தப் பவுடரும் உங்களைப் பாது காப்பதில்லை
INTERPUB/CP 17A TAM



விஞ்ஞானக் கதை

யுரேக்கா!

மீனட்சி கிருஷ்ண

வெளியே போய்விட்டு வந்த அம்மா ஹாலின் நடுவே கிடந்த கம்பிச் சுருளில் இடறி விழ இருந்தவள், சோபாவைப் பிடித்த வண்ணம் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டாள்.

''இப்படி ஒரு பின்னே உண்டோமா? வீடு முழுதும் செப்புக் கம்பியும், கண்ணாடிச் சில்லும், கரிக் கட்டையுமா?'' — அம்மா அலுத்துக்கொண்டாள்.

''அம்மா! இதை நான் ஆட்சேபிக்கிறேன். நீ ஒரு அட்வகேட்டின் மனைவி, ஒரு விஞ்ஞானியின் தாயார்! இனி இம்மாதிரி தவறான வார்த்தைகளை உபயோகப்படுத்தக் கூடாது. 'காயில்', 'ப்ரிஸம்', 'ஸெமிகண்டக்டர்' என்றெல்லாம்தான் சொல்ல வேண்டும்!'' என்றான் சுந்தரம் மிகுந்த கண்டிப்புடன். விஞ்ஞானி என்று தன்னைத் தானே விளம்பரம் செய்து கொண்ட அவன் இக்கதையின் நாயகன்... என்ன, நாயகன் என்று சொன்னேன்? இல்லை. சூத்ரதாரி — அதாவது ஆட்டுவிப்பவன்; நடத்துனர் என்றுகூடச் சொல்லலாம்.

''போறும்டா உன்னோட ஜொக்ஜியாலஜியும் டிராம்கண்டக்டரும்! இழே விழுந்து பல் உடையத் தெரிஞ்சது!''

''அதுதான் நீ செய்த தப்பின் விளைவு.... எப்போதும் போல் கயிற்று விரிப்பிலேயே நடந்திருக்கணும்... மீறி நடப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்... ஹ... ஹ்... ஹா!''

சுந்தரம் 'கடகட'வென்று சிரித்துக்கொண்டிருந்தான்.

''இதென்னடா கலாட்டா? உனக்கு வேறே வேலை வெட்டி கிடையாதா?'' — கடிந்து கொண்டே உள்ளே வந்த அப்பாவும் அம்மாவைப் பின்தொடர்ந்து கம்பிச் சுருளில்— இல்லை 'காயி'லில் — இடறிக்கொண்டும், அம்மா செய்தது போலவே சோபாவின் உதவியால் நிலை நிமிர்ந்தும் நின்றார். அவர் முகத்தில் வாதங்களும் குறுக்கு விசாரணையும் வெடித்துத் தீர்ப்பு உருவாகவிருந்தது.

''இதுவா?... இது வந்து 'ரெக்டிலினியர் ப்ராபகேஷன் ஆப் ஸௌண்ட்! — அதாவது சப்த இயக்க விரிவுரை!'' தனக்குத் தெரிந்த விஞ்ஞானத்தைத்தான் முற்றிலும் கற்காத தமிழில் விளக்க முயன்றான். சுந்தரம்.

''பேத்தல்!... எப்படியடா 'ஸௌண்ட்' ரெக்டிலினியராக ப்ராபகேட் ஆக முடியும்? அது ஒளியைப்பற்றிய பௌதிகம் ஆயிற்றே!''

''அதுதான் அப்பா ஒரு தலைமுறைக்குப் பின்னால் வளர்ந்துள்ள விஞ்ஞானத்துக்கும் அதற்கு முந்தியதற்கும் இடையேயுள்ள வித்தியாசம்! நீங்கள் படித்த காலத்தில் சந்திர மண்டலம் என்றால் ஸ்ரீராமன் கண்ணாடியில் பார்த்துத் தனக்கே வேண்டும் என்று கேட்ட கதைதான் உண்டு! இப்போவெல்லாம் கருநாகப்பள்ளியிலேருந்து கலிபோர்னியா போகிற நேரத்தில் நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திர மண்டலத்துக்கே போய் வந்தாச்சு, தெரியுமா?''

அப்பா வழக்கை ஒத்திப் போடச் சம்மதம் வாங்கிக் கொண்டார். சுந்தரம் 'மைக்'கை ஜன்னலில் பொருத்திவிட்டுப் பரிசோதனையைத் தொடர்ந்தான்.

''சப்போட்டாப் பழம்... ஐயா...சப்போடா...ப்...ப...ழே!'' — நீட்டி முழக்கிக் குரல் கொடுத்துக் கொண்டே தெரு. வழியாகப் போய்க் கொண்டிருந்த கூடைக்காரியை எதிர் வீட்டுச் சிந்தி அம்மாள் கூப்பிட்டாள்.

''ஸப்போட்டா என்ன விலை?'' — என்று சிந்தி அம்மாள் கேட்டாள்.

ருசி மிகுந்த உரையாடல் பிறக்க இது மிகவும் தகுதியான தருணம் என்பதை உணர்ந்த சுந்தரம் தன் கண்டுபிடிப்பைப் பயன்படுத்தலானான். விசையை முடுக்கியதும் மைக் — காயில் — ஸெமி கண்டக்டர் ஸர்க்யூட் இயங்க ஆரம்பித்தது. கன்னுபின்னுவென்ற ஏற்பாடு — இடையிடையே மூன்று ப்ரிஸம்கள் — முடிவில் டேப் ரிகார்டர்.

மைக், தெருச் சம்பாஷணையைப் பதிவு செய்தது.

''டஜன் ஒரு ரூபா அம்மா!''

''அடேயப்பா! என்ன தான்டி விலை, டஜன் நாற்பது பைசா தரியா?''



''அட போம்மா, அது நீ ராயவரத்திலே சின்னதா வியாபாரம் பண்ணின காலம்... இப்போ கேட்டா நீ விக்கிற துணியை மீட்டர் ஒரு ரூபாய்க்குத் தருவியா? போம்மா, சப்போட்டா வாங்கற மூஞ்சியைப் பாரு!'' கூடைக்காரி – பாக்கியம் அந்த அம்மாள் பொறுக்கி எடுத்த பழங்களைக் கூடையில் பிடுங்கிப் போட்டுக் கொண்டாள். புறப்பட்டு விட்டாள்.

சுந்தரத்துக்கு உரையாடல் விரைவில் முடிந்ததில் சற்றே ஏமாற்றம்தான். இருந்தாலும் பரிசோதனையின் முதல் கட்டம் எப்படிப் பதிவாகியுள்ளது என்று பார்க்க விழைந்தான்.

'டேப்' பின்புறமாகச் சுழன்றது. மற்றொரு பொத்தானை அழுத்தினான். நிதானமாக மறு திசையில் சுழன்றது.

உரையாடல் ஒலிபரப்பாகியது. சுந்தரத்துக்கு ஒரே ஆச்சரியம்! பாக்கியத்தின் வசைமொழிகள் வடிகட்டப்பட்டுச் சுத்தமாகப் பதிவாகியிருந்தன.

சுந்தரம் ப்ரிஸம்களைப் பரிசோதித்தான். ஒவ்வொரு ப்ரிஸமும் சிறிது உருமாறியிருந்தது. ஒவ்வொன்றிலும் சிறிய வெள்ளைப் புள்ளிகள் தோன்றியிருந்தன.

அவை என்னவாக இருக்கக் கூடும்?

மூன்று ப்ரிஸம்களையும் ஸர்க்யூட்டிலிருந்து கழற்றி ஜன்னல் வழியாக உதறினான். பகல் கனவு கண்டு கொண்டிருக்கையில், கண் முன்பு தோன்றி மறையுமே காற்றுக் கொப்புளங்கள் அவற்றைப் போல் சில 'வார்த்தைக் கொப்புளங்கள்' சரமாகத் தோன்றிப் பறந்தன.

ஜன்னலுக்கு வெளியே சென்ற இளைஞர்களில் ஒருவன் அரசியல் விமர்சனம் செய்தவன், திடீரென்று தன் வார்த்தைப் பிரவாகத்தை நிறுத்தினான்.

''என்ன அதிசயம்! நான் சொல்ல நினைக்கிற ஒவ்வோர் அபிப்பிராயமும் உருமாறி வருகிறதே!''

அவனுடைய நண்பனும் அதை ஆமோதித்தான்: ''அதுதானே பார்த்தேன் திடீ

றென்று உன் ஆவேசம், புதுமையான கருத்துக்கள், எல்லாமே......''

சுந்தரம் வேறொரு 'ப்ரிஸ'த்தை ஜன்னலில் தட்டினன். நண்பனின் சம்பாஷணை பாதியிலேயே நின்று விட்டது.

வர்ணனைக்குட்படாத, நிற, குண, பரிமாண வரையறைகளுக்குட்படாத சொற்கோப்புகள் காற்றோடு கலந்தன.

''இந்த இடத்தில் ஏதோ கோளாறு !'' இளைஞர்கள் சுற்றுமுற்றும் நோக்கினர்.

சுந்தரம் சுதாரித்துக் கொண்டான். பதுங்கி ஜன்னல் அருகிலிருந்தும் மறைந்து கொண்டான். புறவெளி ரசாயனம் என்றால் என்னவென்று அறியாத இளைஞர்கள் இருவரும் தம் வழியே சென்றனர். சுந்தரம் மட்டுமே அறிவான் — இது பௌதிக மாறுபாடு என்பதை!

சோதனையின் இரண்டாவது வெற்றி — ப்ரிஸம் உறிஞ்சி வெளியில் விட்ட சொற்கள் காற்றோடு கலக்கு முன்பு, பிறரின் உரையாடலையும் உறிஞ்சி விட்டன.

பெருமை பிடிபடவில்லை சுந்தரத்துக்கு. ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துச் சில படங்கள் வரைந்தான். ஆல்ஃபா, பீட்டா, காமாக்களைச். சிதறி 'ஃபார்முலா'க்களை எழுதினன்.

அப்பா உள்ளே வந்தார்.

''யூரேக்கா !'' என்றான்.

''முதலில் உன்னைத் தண்ணீர்த் தொட்டியில் எறிந்து கொள். அப்புறம் நீ கண்டுபிடித்ததாகச் சொல்வதை உரக்கக் கத்தி அறிவித்தால், 'உனக்கு அபிநவ ஆர்க்பிமீடீஸ் என்று பட்டம் வழங்குகிறேன். அதுவரையில் வீட்டுக்குள் 'காச் மூச்' என்று கத்தக் கூடாது. இந்த வீட்டுக்குள் பிற....''

சுந்தரம் மூன்றாவது ப்ரிஸத்தை ஒரு தட்டுத் தட்டினன்.

''.... பிற ஜந்துக்களும் வாழ்கின்றன. அவற்றை நிம்மதியாக வாழ விடு!''

அப்பா தலையை இரண்டு தரம் உதறிக் கொண்டார்.

''என்ன இது, வேடிக்கை ?''

''ஒன்றுமில்லையே ?''

''பின்னே என்னடா இது? நான் 'பிற மனிதர்களும்' என்று சொன்னேன்... ஆனால் 'பிற ஜந்துக்களும்' என்ற சொற்கள் வெளிவந்தன. என்னுடைய நாக்கு இப்படிக் குழற முடியாது!''

''அதிலே என்னப்பா தவறு ! நாகரீக மடைந்த ஜந்துதானே மனிதன் ?''

''போடா, அதிகப் பிரசங்கி!''

''யூ...ரே...க்...கா !''

காகலி நிஷாதம்..... 67வது மேளத்தில் ஸ்வரப்படுத்தி ஆரோகணத்திலேயே இசைத்தான் சுந்தரம்.

''இப்ப எதுக்குடா யூரேக்கா?''

''ரெக்டிஃபியர் ப்ராபகேஷன் ஆஃப் ஸௌண்ட் !''

''டட்...டட்... நான்ஸென்ஸ் விஞ்ஞானத்துக்கே ஒரு இழுக்கு.''

''எது?''

''உன் முட்டாள்தனமான (புத்திசாலித்தனமான என்ற வார்த்தை வெளிப்பட்டது) தியரி!''

''இதோ பாருங்க, அப்பா! மூன்றுக்கும் பின் முரணான உங்கள் பேச்சு உங்களையே காட்டிக் கொடுத்து விட்டது!''

''இல்லை... இல்லவே இல்லை.... இந்த இடத்தில் ஏதோ தகராறு !''

''இல்லை... மெடமார்ஃபஸிஸ் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள் !''

''அது எப்படி இருக்க முடியும்?''

''அதுதான் யூரேக்கா ! எல்லாம் எனது மூன்று பிரிஸம்களின் வேலை ! என்னுடைய ஸர்க்யூட்கள் இயங்கும் போது ஸெமி கண்டக்டர்கள் வழியாக வந்த சொற்கள் ஒரு கட்டத்தில் ப்ரிஸம் ஒன்றில் வடிகட்டப் படுகின்றன. அதே சொற்களை, 'ஸ்டேடிக் சார்ஜ்' உள்ள இடங்களில் ப்ரிஸத்தைத் தட்டுவதன் மூலம் வெளிப்படுத்தலாம். அயனொஸ்ஃபரிக் தடைப்படுத்தலை நாம் நினைத்த இடத்தில் நினைக்காத அலைவரிசையில் உண்டாக்கலாம்.''

''நிஜமாகவா ?''

''நிஜமாகத்தான்.''

''டேய், ஜாக்கிரதையா இருடா! உன் விஞ்ஞானத்தால் அக்கம் பக்கத்துச் சண்டையை விலைக்கு வாங்காதே! இப்ப 'கோர்ட்'டிலே ஏகமான வழக்குகள். உனக்கு வேறு வக்காலத்து வாங்கி வர நேரம் கிடையாது !''

''அதற்கெல்லாம் அவசியம் இராது, அப்பா. என் விஞ்ஞானம் சமூக சீர்திருத்தத்துக்குப் பயன்படும்! இனிமேல் யாரும் யாரையும் வசை பாட முடியாது! கடைக்காரி பாக்கியம் மூல்சந்தானியின் மனைவியிடம் மரியாதையா நடந்துப்பா ! நீங்ககூட அம்மாவிடம் தைரியமாய்ப் பதில் சொல்லலாம்!''

''போரும்டா... ஞானசிகாமணி!'' (அவர் சொல்ல நினைத்தது 'அதிகப் பிரசங்கி'!)

அடுத்த ஒரு வாரத்துக்கு வீடு அமைதியாக இருந்தது. புதிய பல ப்ரிஸம்களை இலக்கமிட்டு வெவ்வேறு ஸர்க்யூட்களில் இணைத்து அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து எடுத்து வைத்திருந்தான் சுந்தரம். இரவு உணவுக்குப் பின்னர் அவன் தந்த விளக்கங்கள், அப்பா கேட்டுக்குத் தம் மகனின் விஞ்ஞான அறிவில் நம்பிக்கையை உண்டாக்கின.

ஒரு நாள் மூன்றாவது வீட்டில் புராணப் பிரவசனம் நடைபெற்றது. மிகுந்த பக்தி சிரத்தையுடன் அதில் கலந்து கொண்ட சுந்தரம் ஒலிபெருக்கி ஏற்பாட்டுடன் தன் டேப் ரிகார்டரையும் ஸர்க்யூட்டையும் இணைத்தான். விமரிசையாக நடந்த பிரவசனத்தின் அதிமுக்கியமான சிறப்பு என்னவென்றால் கேட்க வந்தவர்களில் யாரும் நடுவே எழுந்து போகவில்லை. காரணம், தம் வியாக்கியானத்தில் வழக்கமாக மிகையாகக் கலக்கும் விரசமான கதைகள் அன்று அடியோடு காணப்படவில்லை என்பதில் பௌராணிகருக்கே ஆச்சரியம்! இதெல்லாமே சுந்தரத்தின் கைவேலை என்பது அவனது தந்தைக்கும் (பின்னர் ரகசியமாக)



RATAN BATRA/CW/TAM

மூன்றாவது வீட்டுக்காரருக்கும் மட்டுமே தெரியும்.

ஆனால், அப்போதே வேறு நான்கு எக்ஸ்ட்சேப் ஏற்பாடுகள் மணமனை வென்று கிடைத்தது. பௌராணிகரின் நிகர லாபம்!

வேறொரு ஞாயிற்றுக்கிழமை.

ரூம்சந்தானி நிதானமாக எழுந்து காலைக் கடன்கள் எதையும் முடிக்காமல் அன்றையப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். இம்மாபெரும் சாதனை ஞாயிறன்று மட்டும்தானே முடிகிறது?

''ஆப்பிள்.... ஆப்பிள்....!''

பாக்கியம் கூவிக் கொண்டே வீதி வழியாக வரவும் சுந்தரம் தயாரானான்.

''ஹேய்.... ஆப்பிள்....!'' மிஸஸ் ரூம்சந்தானி விளித்தாள்.

'' ஒரு டஜன் பத்து ரூபாய் அம்மா, வேணும்னு மேலே ஏறி வர்றேன்!'' (அவன் சொல்ல வாயெடுத்தது — இதோ பாரும்மா, ஒரு டஜன் பத்து ரூபாக்கு கம்மி கிடையாது. வேணும்னு சொல்லு.... கூடையைத் தூக்கிக்கிட்டு யாரு மேலே ஏறி வர்றது?'')

''சர்தாம்மா, நீ இன்னு எப்போ பார்த்தாலும் கஷர் பேசறே? இதுதான் வியாபாரம் பண்ணற லட்சணமா?''

பாக்கியம், மிஸ்டர் அண்ட் மிஸஸ் ரூம்சந்தானி மூவருமே திடுக்கிட்டனர். அந்த அம்மாளே இப்படி ஒரு தொனியில் பேச நினைக்கவில்லை.

பாக்கியம் மாடிப் படியேறி வந்தாள்.

''இந்தாம்மா... ரொம்ப ஒஸ்தியானதா நானே தர்றேன்.... நீ எடுத்தது கொஞ்சம் கெட்டுப் போயிருக்கு..... சாப்பிட்டுப் பார்த்துட்டு விலை பார்த்துக் கொடு!''

திரும்பவும் மூவருக்கும் ஆச்சரியம்! பாக்கியமா இவ்வளவு மரியாதையாகவும் நைச்சியமாகவும் பேசுகிறாள்?

''இந்தா, நீ ஒண்ணும் உன் அசிங்கம் பிடிச்ச கையாலே பொறுக்க வேண்டாம்.... நானே எனக்கு வேண்டியதை எடுத்துக்கறேன்.... டர்ட்டி ஸ்கங்ஸ்!''.

''கும்மா புரியாத பாஷேலே திட்டாதேம்மா இன்னிக்கு என்னு. எல்லாமே 'ராங்' ஆயிடுச்சி! எனக்கு மரியாதை வந்துடுச்சு, நீயானு தவறுப் பேசறே! இன்னைக்கி நல்லபடியா போது போகணுமே, சாமீ!''

மிஸஸ் ரூம்சந்தானி தனக்குத் தேவையான பழங்களைக் கூடையிலிருந்து எடுத்துக் கொண்டு, குறைவாகவே விலையும் தந்தாள்.

''அம்மா! ஒரே தாகமா இருக்கு. கொஞ்சம் தண்ணி கொடேன்!'' — பாக்கியம் கெஞ்சினாள்.

''இது என்ன தண்ணீர்ப் பந்தலா? தெருவோட போற ஜன்மங்களுக்கெல்லாம் தண்ணி கொடுக்க? வேறே எங்கேயாவது போய்க் கேளு!''

அம்மாள் உள்பட மூவருக்கும் மீண்டும் அதிர்ச்சி! பாக்கியம் பதிலே பேசாமல் இறங்கிப் போய் விட்டாள்.

ரூம்சந்தானி தமது மனைவியின் பேச்சிலிருந்து இனிமை அடியோடு மறைவதைக் காதுற்று, அதன் பயனும் அநாவசியமாகக் கவலைப்பட்டார். ஆனால் அவள் எப்போதுமே அம்மாதிரியாகப் பேசுவதில்லை என்பதையும் அவர் உணராமல் இல்லை.

சற்று நேரத்துக்கு அவர் டெலிபோன் டைரக்டரியைப் புரட்டி நல்ல மனோதத்துவ நிபுணர் ஒருவரின் போன்நம்பரைத் தேடினார்.

அன்று மாலை தமது வழக்கு ஒன்று சம்பந்தமாக அட்வகேட்டைக் காண வந்தார் மிஸ்டர் ரூம்சந்தானி. அந்த வீட்டின் அறைகளுள் காணப்பட்ட சோதனைப் பொருள்களைக் கண்டு வியந்தார்.

அட்வகேட்டும், தமது முக்கியமான கட்சிக்காரரும் எதிர்வீட்டுப் பிரமுகருமான ரூம்சந்தானியிடம் தமது புத்திரசிகாமணியின் விஞ்ஞான அறிவை விளக்கிக் கூறினார். அதனால் விளைந்த சில பயன்களையும் அவர் கூறத் தவறவில்லை.

அப்போதுதான் ரூம்சந்தானி உணர்ந்தார் — பாக்கியம், மிஸஸ் ரூம்சந்தானி இருவரின் பேச்சிலும் கண்ட மாறுபாடு, சுந்தரத்தின் கைவேலை என்பதை!

சுந்தரம் உள்ளே வந்தான்.

''அட்வகேட் ஸார்! உங்க பையனோட பரிசோதனைகள் நல்லா வளரட்டும், அவனாலே பாக்கியம் போன்ற பொம்பளைங்க வசை பேசாமலிருக்கட்டும். ஆனால்......''

ரூம்சந்தானி பேச்சை நிறுத்தினார்.

''ஆனால்...?'' சுந்தரம் கேட்டான்.

''இதையே எங்க வீட்டுப் பெண்மணிகள் கிட்ட பிரயோகம் பண்ணாமலிருங்க! இன்னிக்கி என் மனைவியை ஒரு மனோதத்துவ நிபுணரிடம் அழைத்துப் போறதா இருந்தேன். இப்போதான் புரியுது அது அவசியமில்லேன்னு! ஆனால் இதே ஆபத்து மறுபடியும் ஏற்படாமல் பார்த்துக்கிட்டீங்கன்னு அந்த மனோதத்துவ நிபுணருக்குத் தர வேண்டிய பணத்தைச் சுந்தரத்துக்கே தந்துடறேன்!''

சுந்தரம் தலையை ஆட்டினான், சம்மதம் என்பதன் அறிகுறியாக. 'செக்' கை மாறியது.

ரூம்சந்தானி போய் விட்டார்.

அட்வகேட் தம் மகனிடம் சொல்லலானார்:

''அடேய், இது என்னடா, வெறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையா இருக்கு? உன் மடத்தனமான கொள்கைக்கு அந்த ரூம்சந்தானி ஒரு வழக்குக்குக் கொடுக்கற தொகையை வாரி வழங்கிட்டுப் போறானே, எனக்குக்கூட ஒரு வழக்குக்கு இந்த அளவுக்குப் பணம் வரதில்லேயேடா?''

''அதாம்பா, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு!''

''சரி, சரி, இனிமேல் இதன் பெயரை நீ மாத்திடு. ரெக்டிஃபியர் ப்ராபகேஷனுக்கும் உன்னோட குருட்டு அதிர்ஷ்டத்துக்கும் சம்பந்தமே இல்லே. மேலும் சொற்களை உறிஞ்சி, உருமாற்றுவதால் 'அப்ஸ்டார்ஷன் தியரி'ன்னு மாத்திடு!''

''ஆகட்டும், அப்பா! அப்படியே செஞ்சுடறேன்!''

''யூரேகா!'' என்று கூவினார் அட்வகேட்.

''யூ....'' என்று சுந்தரம் பதிலுக்குக் கூவ நினைத்து வாயைத் திறக்கவும், அட்வகேட் ப்ரிஸத்தைத் தட்டவும் சரியாக இருந்தது.

அவனது ''யூரேகா'' காற்றோடு கலந்து விட்டது!

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

24

ஆண்டவனைத் தியானித்துக் கொஞ்ச நேரமாவது பிரார்த்தனையில் செலுத்துவது மிக அவசியம். நம்முடைய வாழ்நாளை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டுமானால் உள்ளத்தில் குழப்பமில்லாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால்தான் நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு நாம் பயன்படுவோம். பிறருக்குப் பயன்படுவதற்காகவே அல்லவா நாம் பிறந்திருப்பது. மனிதன் உள்ளத்தில் எப்போதும் ஒரு போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. அறிவும் அறியாமையும் இவற்றுக்கிடையில் எப்போதும் மனத்தில் போர் நடந்து கொண்டே வருகிறது. அந்தப் போரில் அறியாமையானது தோற்று அறிவு வெற்றி பெற வேண்டுமானால் தியானமும் பிரார்த்தனையும் அவசியம். ஆண்டவனைத் தியானித்துப் பிரார்த்தனை செய்வோருடைய உள்ளம் குழப்பம் இல்லாமல், வெறுப்பும் துவேஷமும் இல்லாமல் சாந்தி நிலையில் இருக்கும். உள்ளத்தில் ஆண்டவன் நினைவு இல்லாமல், உலக வியாபாரத்தில் கலந்து கொண்டு வேலை செய்கிறவனுக்குச் சாந்தம் இராது. துயரப்படுவான். மற்றவர்களுக்கும் துயரம் தருவான். உடலை நீத்த பின் நம்முடைய கதி என்ன என்பது ஒருபுறம் இருக்க, உலக வாழ்க்கைக்கே பிரார்த்தனை வழக்கம் மிகப் பயன்படும். தினசரி வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களும் துயரங்களும் அடங்கி, உள்ளத்தில் அமைதி உண்டாவதற்குப் பிரார்த்தனையை விட வேறு வழியில்லை. இந்த உண்மையை உணர்ந்து கவனித்துப் பார்த்தோமானால் மற்றச் சிக்கல்கள் தாமாக விடுபடும். வாழ்க்கைச் சிக்கல்கள் அநேகம் இருந்தாலும் முக்கியமான இந்த ஒரு முறையைக் கடைப்பிடித்தால் போதும். ஒன்றன் பின் ஒன்றாகச் சிக்கல்கள் தீரும்.

ஆனபடியால் தினசரி எந்தக் காரியம் செய்வதற்கு முன்னும் பிரார்த்தனை செலுத்த வேண்டும். பிரார்த்தனையில் முழு உள்ளத்தைச் செலுத்த வேண்டும். உள்ளம் உருகி ஆண்டவனைத் தியானிக்க வேண்டும். அப்படிச் செய்தாலேதான் காலையில் செய்த பிரார்த்தனை இரவு வரையில் உள்ளத்தில் நிற்கும். பகலில் செய்யும் வேலை முடிந்து தூங்கப் போகும் சமயம் மறுபடியும் ஆண்டவனைத் தியானித்து அமைதி அடைய வேண்டும். அப்படிச் செய்தால் இரவில் கெட்ட கனவுகள் இல்லாமல் தூங்குவோம்.

எந்தச் சொற்களை வைத்து எந்த முறையில் பிரார்த்தனை செய்வது என்பதைப் பற்றிக் கலவரப்பட வேண்டியதில்லை. ஆண்டவனை எந்த வடிவத்திலாவது அமைத்துக் கொண்டு அவனோடு கலந்து சம்பாஷிக்கலாம். பிரார்த்தனைக்கு வேண்டிய சொற்களையும் முறையையும் அவனவன் தேடிக் கொள்ள வேண்டும். ஒன்றே ஒன்று கவனிக்க வேண்டும். பிரார்த்தனை மொழிகள் வாயினின்று வெளிப்படும்போது, உள்ளம் வேறு இடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்படி விடலாகாது.

மக்களுக்குப் பயன்படும் வழியில் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் வைத்துக் கொள்ளாவிட்டால் பயன்படாமல் சிதறித்தான் போவார்கள். உலகம் சந்திர சூரிய நக்ஷத்திரங்கள் உள்பட, ஒழுங்குமுறைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறது. ஒழுங்கில்லையேல், பிரபஞ்சம் ஒரு விநாடி நிற்காது. கலைந்து போகும்.

நல்ல மனிதன் தன்னைத் தானே பிரார்த்தனையின் மூலம் கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்க்கை நடத்தினால் பிறருக்குப் பயன்படுவான். நமக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. தியானமும் பிரார்த்தனையும் வேண்டாம் என்று சொன்னால், நாலு கால் பிராணியே ஆகி விடுவோம். மனித சொரூபத்தை நிறுத்திக்கொள்ள வேண்டுமானால் அடக்கமும் தியானமும் பிரார்த்தனையும் யாருடைய நிர்ப்பந்தமும் இன்றி நாமே மேற்கொள்ள வேண்டும்.

(யங் இந்தியா 23-1-30)

வரவர நம் நாட்டில் கள்ள நோட்டு அடிப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இரண்டு ரூபாயிலிருந்து நூறு ரூபாய் வரை கள்ள நோட்டு அடிக்கிறார்கள்.

அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கும்வரை இதைப் போன்ற நல்ல தொழில் வேறு கிடையாது. இதில் செலவு குறைவு, லாபம் மிக மிக அதிகம். ஆனால், ''இதில் நாம் போடும் மூலதனத்துக்கு எத்தனை சதவிகிதம் லாபம் கிட்டும்?'' என்று நீங்கள் கேட்டால் என்னால் புள்ளி விவரங்கள் கொடுக்க முடியாது. ஏனெனில், பிழைப்புக்காக, என்னென்னவோ தொழில்களைச் செய்து பார்த்துள்ள நான் இன்னும் இதைச் செய்து பார்த்ததில்லை. அதோடு இத்தொழில்களை நடத்துகிறவர்கள் ஆடிட்டர்களைக் கொண்டு கணக்குப் பார்க்கச் சொல்லி, தங்கள் இலாபம் இன்னது என்று சர்க்காருக்குத் தெரிவித்து, அதன் மீது வருமான வரி கட்டியதாகவும் இது வரையில் தகவல் இல்லை.

ஆனால் ஒன்று நிச்சயம். என்னைப் போன்ற எழுத்தாளர்கள் காகிதம் வாங்கி, அவற்றைப் புத்தகங்களாகப் பண்ணி விற்க முயற்சி செய்வதற்குப் பதில், அந்தக் காகிதத்தைக் கொண்டு கள்ள நோட்டுக்கள் தயாரித்தால் எவ்வளவோ சௌகரியமாக வாழலாம். ''உங்களைப் போய்க் கல்யாணம் பண்ணிக் கொண்டேனே!'' என்று சதா இன்றும் என்னை இடித்துக் காண்பித்துக் கொண்டிருக்கிறாள், பாருங்கள், அந்த இடி இல்லாமல் வாழலாம்.

ஆனால் புத்தகங்கள் அச்சடித்துக் கொடுக்கத் தயாராக உள்ள அச்சகங்கள் நோட்டு அச்சடித்துக் கொடுக்கும் விஷயத்தில் ஒத்துழைக்க மறுக்கின்றன. இதற்காகத்தான் எழுத்தாளர்களுக்கென்று சுயமாக ஓர் அச்ச-

நகைச்சுவைக் கதை

கம் இருக்க வேண்டும் என்பது. ஆனால் அச்சகம் வைக்கும் அளவுக்கு எழுத்தாளன் பணம் வைத்திருந்தால், அவன் ஏன் எழுத்துத் தொழிலைக் கட்டிக் கொண்டு அழுகிறான்? அச்சகமே ஒன்று நடத்தி விட்டுப் போவானே?

எழுத்தாளர்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுறவு முறையில் அச்சகம் நடத்தி, இக்காரியத்தைச் செய்யலாம். ஆனால் அதற்கு வேண்டிய ஒற்றுமை இன்னும் தமிழ் எழுத்தாளர்களிடையே ஏற்படவில்லையாகையால், அதைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை.

ஆனால் நான் எழுத்தாளர்கள் கள்ள நோட்டு அடிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்களே என்று கவலைப்படவில்லை. என் கவலையெல்லாம் பொதுமக்களைப் பற்றியதுதான். லாட்டரியில் லட்சம் லட்சமாகப் பணம் பண்ணிக் குவித்து விடலாம் என்று அவர்கள் கண்டு கொண்டிருந்த கனவுகள் தவிடுபொடியாகிக் கொண்டிருக்கின்றன. லாட்டரி மோகம் குறைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சீக்கிரம் பணம் பண்ண விரும்புகிறவர்களுக்கு, தற்சமயம் இந்த வழியைத் தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, இரண்டு பேர் கள்ள நோட்டு அடித்த உண்மைக் கதைகளை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அதைக் கொண்டு நீங்கள் இது சம்பந்தமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொண்டு பிழைத்துப் போங்கள்!

முதல் கதை ஓர் அரசாங்கமே கள்ள நோட்டு அடித்த கதை. ஒரு நாடு அளவுக்கு மீறி நோட்டுக்கள் அடித்தாலோ, அல்லது தன் கையில் உள்ள தங்கத்துக்கு அதிகமாக நோட்டுக்கள் அடித்தாலோ, அதுவே கள்ள நோட்டுக்கள்தாம் என்று வாதிக்கும் பொருளாதார நிபுணர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்த நாடு தன் நாட்டு நோட்டுக்களை அச்சடிக்கவில்லை. இன்னொரு நாட்டின் நோட்டுக்களைத்தான் கள்ளத்தனமாக அச்சடித்து, அந்த இன்னொரு நாட்டில் பரப்ப முயன்றது.

இப்படிச் செய்த நாடு வேறு எந்த நாடும் இல்லை, ஜெர்மனி! மேற்கு ஜெர்மனியா கிழக்கு ஜெர்மனியா என்கிறீர்களா! ஜெர்மனி இரண்டாகப் பிரியாமல் ஒன்றாக,





கள்ள நோட்டு அடிப்பது எப்படி?

— நாடோடி —



ஹிட்லர் ஆட்சியின்கீழ் இருந்த காலத்தின் கதை இது. ஜெர்மனி ஏன் இப்படிச் செய்தது! எப்பொழுது செய்தது ?

சென்ற உலக மகாயுத்தத்தின்போது, பிரிட்டனைப் பணிய வைக்க, ஜெர்மானியர் செய்த யுக்திகளில் இதுவும் ஒன்று. பிரிட்டனின் நோட்டுக்களைப் போல் கோடிக்கணக்கான நோட்டுக்களை அச்சடித்து, அவற்றை அந்த நாட்டில் புழங்கும்படி செய்து விட்டால் பிரிட்டனில் பண வீக்கம் ஏற்பட்டு நாட்டின் அரசாங்கம் குலைந்துவிடும். அப்பொழுது பிரிட்டனில் உள்ள சதிகாரர்கள் அரசைக் கைப்பற்றிக் கொள்வார்கள் என்று நாஜித் தலைவர்களில் ஒருவரான ஹிம்லர் கண்டு பிடித்த யுக்தி இது.

இதற்காக, ஹிம்லர், தாம் சிறைப்படுத்தி வைத்திருந்த யூதர்களிடமிருந்து அச்சு வேலைகளில் மிகச் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்தார். கள்ள நோட்டுக்களை அச்சடிக்கப் போகும் அச்சகம் வெகு இரகசியமாக இருக்க



"எங்கே அவ்வளவு வேகமா போகிறதே?"

"ரொம்ப நாளா ஒரு நேக்காம் மூடி பாக்கி. அதை வசூல் பண்ணிண்டு வரப் போறேன்."

வேண்டும் என்பதற்காக, அது ஒரு பெரிய சிறைக்கு நடுவில் அமைக்கப்பட்டது. ஜெர்மனியிலேயே கள்ள நோட்டுக்கள் அடித்துப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த ஒருவரிடம் இந்தக் கள்ள நோட்டு வேலை ஒப்படைக்கப் பட்டது.

வெகு நல்ல முறையில் பிளாக்குகள் செய்யவும், அச்சடிக்கவும் வெகு நல்ல இயந்திரங்கள் ஏற்பட்டுவிட்ட இந்தக் காலத்தில், நிஜ நோட்டுக்களைப் போலவே தோற்றமளிக்கும் கள்ள நோட்டுக்கள் அச்சடிப்பது அத்தனை கஷ்டமான காரியம் அல்ல. ஆனால் அந்தக் காலத்தில் அது ரொம்பக் கஷ்டம். ஹிம்லரின் காரியத்துக்கு முதல் தடையாக இருந்தது நோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டிருந்த காகிதம். இந்தக் காகிதத்தைப் பிரிட்டனிலிருந்து திருடிக் கொண்டு வர முடிந்திருந்தால் அவர் அப்படியே செய்திருப்பார். ஆனால் அப்படித் திருடிக் கொண்டு வர முடியவில்லை. ஆகையால், ஹிம்லர் பிரிட்டிஷ் நோட்டுக்களைச் சோதனைக்கு உட்படுத்தி, அதில் என்னென்ன ரசாயனப் பொருட்கள் என்ன அளவில் உள்ளன என்று கண்டு பிடித்து அதன்படியே காகிதம் தயாரித்தார். ஆனால் பிரிட்டிஷ் காகிதத்தில் காணப்பட்ட ஒரு குறுகுறுப்பு இவர் காகிதத்தில் காணப்படவில்லை. கடைசியில் அதையும் ஒரு வகையாகச் சமாளித்துக் காகிதம் தயாரித்தார்.

இதற்குப் பிறகு இன்னொரு சங்கடம் ஏற்பட்டது. கள்ள நோட்டு அச்சடிப்பவர்கள் நிஜ நோட்டுக்களைப் போலவே நோட்டுக்களைத் தயாரிப்பதைத் தவிர்ப்பதற்கு, நிஜ நோட்டுக்களைத் தயாரிப்பவர்கள் சில உத்திகளைக் கையாளுவார்கள். இதை நோட்டு அச்சாகும்போது செய்வார்கள். சில இடங்களில் மை அதிகமாக விழுவதற்கும், சில இடங்களில் மை குறைவாக விழுவதற்கும் இன்னும் சில இடங்களில் இரண்டு, மூன்று மைகள் கலப்பதற்கும் ஏற்பாடு செய்வார்கள். கள்ள நோட்டுக்கள் தயாரிப்பவர்கள் இந்த உத்திகளின் காரணமாகத்தான் அகப்பட்டுக் கொள்வது வழக்கம். ஆனால் ஹிம்லர் இந்தக் காரியத்தையும் வெகு சாமர்த்தியமாகச் சமாளித்து, அசல் பிரிட்டிஷ் நோட்டுக்களைப் போலவே கோடிக்கணக்கில் தயாரித்தார்.

ஆனால் கடைசியாக அவர் ஒரு தவறு செய்து விட்டார். பத்து ஒரு பவுன் நோட்டுக்கள் செய்யும் அதே காரியத்தை ஒரே பத்து பவுன் நோட்டு, குறைந்த செலவிலும் சீக்கிரமாகவும் செய்யும் என்று தவறாக நினைத்து வந்த அவர் ஐந்து பவுன் நோட்டுக்களும், பத்து பவுன் நோட்டுக்களும், இருபது பவுன் நோட்டுக்களும் அச்சடித்தார். நோட்டுக்களை யுத்த விமானங்களிலிருந்து மிக்க ஆபத்துக்களுக்கிடையில் கீழே வீச வேண்டுமாதலால், மதிப்புக் குறைந்த நோட்டுக்களைவிட, மதிப்பு மிகுந்த நோட்டுக்களை வீசுவதுதான் செலவு குறைந்தது என்று அவர் கருதினார்.

ஆனால் ஹிம்லர் இங்குதான் தப்புக் கணக்கு போட்டு விட்டார். ஐந்து பவுன் நோட்டுக்களைப் பார்ப்பதே அரிதாக இருந்த பிரிட்டனில் யாராவது பத்து பவுன் நோட்டுக்குச் சில்லறை கேட்டாலே சந்தேகப்படுவார்கள். அப்படியிருந்தபோது, பத்து பவுன் நோட்டுக்களையும், இருபது பவுன் நோட்டுக்களையும் எப்படிச் சில்லறை மாற்ற முடியும்?

ஆனால் இதையெல்லாம் எண்ணிப் பார்க்காத ஹிம்லர், ஐந்து பவுன் நோட்டுக்களையும், பத்து பவுன் நோட்டுக்களையும் இருபது பவுன் நோட்டுக்களையும் கோடிக்கணக்கில் தயார் செய்தார். புத்தம் புதிய நோட்டுக்களாக இருந்தால் சந்தேகம் ஏற்படும் என்று அவற்றைப் பழக பண்ணினார்.

எல்லாம் தயாரானதும் ஜெர்மன் யுத்த விமானங்களிலிருந்து, இந்த நோட்டுக்கள், கற்றை கற்றையாகப் பிரிட்டனில் வீசப்பட்டன. ஆனால் இது விஷயம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஒற்றர்கள் மூலம் எட்டி விட்டதால், அவர்கள், நோட்டுக் கற்றைகள் கண்டெடுக்கப்பட்டால், அவை உடனே பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். பொதுவாகவே பிரிட்டிஷ் மக்கள் நேர்மை உடையவர்களாதலால் இந்த நோட்டுக்களை அப்படியே போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய்க் கொடுத்து விட்டார்கள். நோட்டுக்களை வைத்துக் கொள்வது எதிரியுடன் ஒத்துழைப்பதற்குச் சமம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே, ஹிம்லரின் கள்ள நோட்டுக்கள் பயனின்றிப் போயின.

மிகச் சாமர்த்தியமாக அசல் நோட்டுக்களைப் போலவே கள்ள நோட்டுக்கள் அச்சடித்த ஜெர்மனியின் கதி இப்படி ஆயிற்று. ஆனால் இதையே குடிசைத் தொழிலாகப் பல வருடங்கள் நடத்திய ஓர் அமெரிக்கரின் கதையைப் பார்ப்போம்.

சென்ற யுத்தம் நடந்த சமயம் அமெரிக்காவில், நியூயார்க் நகரில் முல்லர் என்று ஓர் அமெரிக்கர் வாழ்ந்தார், அவர் போட்டோ பிடிப்பதில் கெட்டிக்காரர். அவர் பழைய காலத்து 'ஸ்டாண்ட் காமிரா' ஒன்று வைத்திருந்தார். 1937ல் இவர் தம் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார். சிறிது நாளைக்கெல்லாம் அவருடைய மனைவி இறந்து விட்டாள். அவருக்கு இருந்த ஒரே பெண்ணோ



சென்னையில் இண்டியனாயில் உருய்வு தடுப்பு எண்ணெய் கலவைத் தொழிற்சாலை

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1970 ஏப்ரல் 4ல
துவக்கி வைத்தார்.


பெட்ரோலியம், ரசாயனத்துறை, உலோகங்கள்,
கனிவளத்துறைகளுக்கான மத்திய அமைச்சர்
மாண்புமிகு டாக்டர் **திரிகுண சென்** தலைமை வகித்தார்

இந்தியாவின் மிகப் பெரிய நவீன உருய்வு தடுப்பு எண்ணெய் கலவை தொழிற்சாலை இது. சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு சுமார் ஒரு மைல் தூரத்தில் தண்டையார்பேட்டையில், இந்திய தொழில் நுட்பத்துணையுடன் இந்தியப் பொறியியல் வல்லுனர்களாலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது ■ மோட்டார் வாகனங்களுக்கும், தொழில்துறையில் உள்ள உருளைகளும், சக்கரங்களும் உருயாமல் இயங்குவதற்கும் தேவையான பலவகை உருய்வு தடுப்பு எண்ணெய் வகைகளை இத்தொழிற்சாலை தயாரிக்கும் ■ ஆண்டுக்கு 1,40,000 டன்கள் தயாரிக்கும் இத்தொழிற்சாலை சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பக்கத்திலுள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் கிடைக்கும் எண்ணெய் கசண்டுகளை பக்குவமாகக் கலந்து உருய்வு தடுப்பு எண்ணெய் தயாரிக்கப்படும். இத்தொழிற்சாலையில் உபயோகிக்கப்பட்டுள்ள பெரிய சாதனங்களில் 85% இந்தியாவில் உருவாக்கப்பட்டவை ■ இண்டியனாயிலுக்குச் சொந்தமானதும், அதனாலேயே நடத்தப்படுவதுமான இத்தொழிற்சாலையின் வேலை துவக்கமானது பெட்ரோலியம் பொருட்களில் தன்னிறைவு காணும் முன்னேற்றப் பாதையில் மற்றொரு மைல் கல் ஆகும்.

INDIANOIL

—பொருளாதார செழிப்புக்கு பணியாற்றும் தேசிய நிறுவனம்.


இண்டியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்



உட்புறங்களுக்கும், வெளிப்புறங்களுக்கும் ஈடிணையற்ற அழகிற்கும், நிரந்தரத்தன்மைக்கும்...

ஸில்விக்ரீட்

ஏஸிஸி வெள்ளை சிமெண்ட்





ஸில்விக்ரீட் ஏஸிஸி வெள்ளை சிமெண்டை கண்கவர் பாணிகளிலும், வண்ணங்களிலும் அமைத்துக் கொள்ளலாம்; அதைக் கொண்டு டெகோரேடிவ் பேனல்களையும், டைல் அல்லது டெர்ராஸோ தரைகளையும், ஜாலிகளையும், கொடிவிடுகளையும் சுலபமாக அமைத்துக் கொள்ளலாம்.

அசல் போர்ட்லாந்து சிமெண்டின் உறுதியும், நீடித்து நிற்கும் தன்மையும் உடையதாக இருப்பதனால், அது நிரந்தரமானதாக விளங்குகிறது.

ஸில்விக்ரீட் எவ்வளவு வேண்டுமானாலும், அருகிலுள்ள சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட் கிளையிலோ, அவர்களுடைய விநியோகஸ்தர்களிடமோ கிடைக்கிறது.

ஸ்னோக்ரெம் மற்றும் கலர்க்ரீட்டின் தயாரிப்பில் மூலப் பொருளாக இருப்பது ஸில்விக்ரீட்.

ஏஸிஸி தரத்தில் உயர்ந்த தயாரிப்புகளுக்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்

தி அஸோஸியேட்டட் சிமெண்ட் கம்பெனிஸ் லிமிடெட்.

தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.

கல்யாணம் பண்ணிக் கொண்டு புருஷன் வீட்டுக்குச் சென்று விட்டாள். ஆகவே தமது அறுபத்திமூன்றாவது வயதில் அவர் தனியாக விடப்பட்டார்.

மூல்லர் சற்றுச் சுயேச்சை மனப்பான்மை உள்ளவர். யாரிடமிருந்தும் எதையும் கோர அவருக்குப் பிடிக்காது. அரசாங்கத்திலிருந்து அவருக்கு உபகாரச் சம்பளமாக வருடம் ஆயிரம் டாலர் கிடைக்கும். இருந்தும் அதைப் பெற மறுத்து விட்டார். ஆகவே கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்து விடவே அவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆகவே ஒரு சிறு அச்சு இயந்திரம் வாங்கினார். தம் காமிராவைக் கொண்டு, ஒரு டாலர் நோட்டைப் படம் எடுத்து, பிளாக் செய்து பிறகு ஒரு டாலர் கள்ள நோட்டு அடிக்க ஆரம்பித்தார்.

இந்தக் கள்ள நோட்டு பூரண வெற்றி என்று சொல்ல முடியாது. இருந்தாலும் கசங்கின நோட்டாக இருந்ததால் யாரும் கூர்ந்து கவனிக்கவில்லை.

வெகு மோசமாக அச்சடிக்கப்பட்ட ஒரு டாலர் கள்ள நோட்டுக்கள் பரவி வருகின்றன என்று போலீசுக்குத் தெரிய வந்தது. ஆனால் மிகச் சிறிய அளவில் பரவிய இந்த நோட்டுக்களை யார் தயாரித்தார்கள் என்று போலீசாரால் பத்து வருடங்களாகியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரு நாள் இவருடைய சிறு வீடு தீப்பற்றிக் கொண்டு விட்டது. தீயை அணைப்பதற்காக, தீயணைக்கும் படையினர் உள்ளே இருந்த சாமான்களை வெளியே தூக்கி எறிந்தனர். கள்ள நோட்டுக்களில் ஒரு கற்றையும் மற்றச் சாமான்களுடன்கூட வெளியே தூக்கி எறியப் பட்டது. ஆனால் அதைக் கள்ள நோட்டுக்கள் என்று தீயணைக்கும் படையினர் கருதவில்லை. வழியில் சென்று கொண்டிருந்த யாரோ ஒரு பையன் அதைப் பொறுக்கி எடுத்துத் தன் தகப்பனாரிடம் கொடுக்க, போலீசார் மூல்லரைக் கைது செய்தனர்.

ஆனால் மூல்லர் தாம் செய்த குற்றத்தை மறுக்கவில்லை. தாம் கள்ள நோட்டுக்கள் தயாரித்ததாக ஒப்புக் கொண்டார். ஆனால் தம்மால் யாரும் கஷ்டப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, தாம் யாருக்கும் ஒரு தடவைக்கு மேல் தம் நோட்டைக் கொடுத்த தில்லை என்று சொன்னார்.

மூல்லர் ஒரு கிறுக்கு என்று தீர்மானிக்கப் பட்டு, அவருக்கு ஒன்பது மாதத் தண்டனை கொடுக்கப்பட்டது. பிறகு அவருடைய பெண் தோன்றி, தான் தன் தகப்பனாரைப் பாதுகாப்பதாகச் சொன்னதன் பேரில் அது நான்கு மாதமாகக் குறைக்கப்பட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தப் பத்து வருடங்களில் மூல்லர் 6000 டாலர் பெறுமானமுள்ள கள்ள நோட்டுக்கள் தாம் உபயோகித்திருப்பார். ஆனால் இவர் தம் உப காரச் சம்பளத்தை ஏற்றுக் கொண்டிருந் தாலோ 10,000 டாலர் பெற்றிருப்பார்!


ஆக, கள்ள நோட்டுக்கள் தயாரிப்பதற்கு உங்களுக்கு இரண்டு வழிகள் சொல்லிக் கொடுத்து விட்டேன். ஆனால் அகப்பட்டுக் கொண்டால் என்னைக் குற்றம் சொல்லாதீர்கள்!

பம்பாய் துணுக்குகள்

பத்து!

ஜெயந்தி

● பம்பாய்க்குத் தெற்கே சென்னை இருப்பது என்னவோ உண்மைதான். ஆனாலும் இங்கேயிருந்து சென்னை நோக்கிக் கிளம்பும் ரயில் வண்டிகள் முதலில் வடக்கே 30 மைல்கள் சென்றுவிட்டுத் தான் சென்னையை நோக்கி வளைந்து திரும்புகின்றன!



● பாரதியார் கண்ணனைத் தானே சேவகனாகக் கற்பனை செய்து பாக்களை இயற்றி னார்? மாதுங்கா பகுதிகளில் வீட்டு வேலைகளைச் செய்வதற் காகத் தினமும் வரும் சேவ கர்களை "ராமன்" என்று அழைக்கிறார்கள்!

● செம்பூரில் "சென்ட்ரல் அவென்யூ ரோடில்" உள்ள ஒரு ஹோட்டலில் விசேஷம் என்ன, தெரியுமா?

இன்றைய ஸ்பெஷல் மட்டுமல்லாது நாளைய ஸ்பெஷலையும் போர்டில் போட்டு விடுகின்றனர்!




● தாதர் பகுதியில் "ஏ - டு - இஜட்" என்றும் பெய ரில் ஒரு பெரிய கடை இருக்கிறது. இங்கே கிடைக் காத சாமான்களே இல்லை என்பது அந்தப் பெயரின் பொருள்.

● பிரபல இந்திப் படஇசை அமைப்பாளர் ஓ.பி. நய்யார் இசை அமைத்த பல படங் களில் ஒரு பாட்டைக்கூட லதா மங்கேஷ்கர் பாடியதில்லை.

● "வெசேவ்" கொழுந்து விட்டெரியும் இந்நாளில் ஒரு தமிழரின் பெயரில் பம்பாயில் தெரு ஒன்று இருப்பது அதிசயம்தானே?

மாதுங்கா பகுதியில் சேர் சுப்பிரமணியன் தெரு என்று ஒரு பிரபலமான சாலை உள்ளது.



● பெண்கள் டைரக்ட் செய்யும் நாடகங்கள் பல இங்கே சக்கைப் போடு போடுகின்றன.

● சென்னையில் இருப் பது போலவே நடராஜ், அசோக், எல்பின்ஸ்டன், ஸ்ரீ கிருஷ்ணா, ராக்ஸி, சரஸ், லக்ஷ்மி, என்றும் பெயர்களில் தியேட்டர்கள் பம்பாயிலும் உள்ளன!

● கிருஷ்ணசாமி, வேலாயுதம், கோபால் சாமி, வேலாயுதம் ராஜாராம் ஆகிய பெயர்களைக் கொண்டு பல பம்பாய்க்காரர்கள் இருக்கிறார்கள்!

(ஆசிரியர் குறிப்பு: பத்துத் துணுக்குகளில் ஒன்றை 'சென்ஸார்' செய்துவிட்டோம்.)

ராஜதந்திரம்

கோவி. மணிசேகரன்

பிடரியைச் சிலிர்த்தெழும் சிங்கம்: அதன் தொண்டையைக் கிழித்தெழும் கர்ஜனை! அம்மம்மா! சாளுக்கிய விக்கிரமாதித்த சிங்கக் கர்ஜனைதான் இது!

ஒருக்களித்த தலையுடன் நெருப்புக் கண் களை உருட்டிக் கவனித்தான். வாயிலிருந்து அலட்சியக் கேள்விகள் வருகை தந்தன:

''இந்த நாட்டு மொழியான தமிழ் பற்றி உங்கள் கருத்தென்ன?''

கேட்டது பிராகிருதம். உடன் எழுந்தது மொழிபெயர்ப்பு. கேட்க வேண்டிய கேள்விகள் எத்தனையோ! ஆயினும் அப்படி ஒரு மொழி வெறி....

புரட்சித் தலைவர்கள் மூவர் ஒருவரை ஒருவர் உற்று நோக்கிக் கொள்ளும் ரத்த வெறி பிடித்த மெய்ப்பாடுகள்! அவற்றில் பலவிதமான கலந்துரையாடல்கள்! முடிவில்—

ஒருவன் மறுமொழி சொன்னான்:

''சிந்திக்கத் தோன்றாத பேரழகு!''

'உம்'காரம் முழக்கினான் சாளுக்கிய விக்கிரமாதித்தன். வெறி கொண்ட அறிவிலி போல்!

இரண்டாமவன் சொன்னான்:

''வந்திக்க வைக்கும் பாரம்பரியம்!''

''ஓ....''



மூன்றாமவன் —

''சிந்திக்க வைக்கும் இலக்கியச் சோலை!''

''ஓகோ....''—விக்கிரமாதித்தனின் கடகடத்த பயங்கரச் சிரிப்பு! என்னே அலட்சியம்!

காஞ்சியைக் கைப் பற்றி அதன் அரியாசனத்தில் சரியாசனமிட்டு அமர்ந்து விட்ட செருக்குச் சிரிப்போ? எவர் கையும் படாத தமிழகம், பின்னுமிம் களப்பிரர் கைப்பட்டு விட்டது: இதோ, சாளுக்கியர்....

தலைமை நனவாக்கிக் கொண்டனர்.

இந்தத் தமிழ்க் கன்னி பவனி வரும் அழகு ரதத்தை நிறுத்தி, அவள் ஆட்சிக்கு உட்பட்ட தங்கப் பூமியை அபகரிக்க முயன்ற சிங்கங்கள் எத்தனை? சிறுத்தைகள் எத்தனை? சீ, சீ! நாய் நரிகள்கூட முடிவில் நுழைய நடுங்கின! ஆனால் இன்று—

பல்லவர் நுழைந்தனர். ஆயினும் அவர்கள் நல்லவர்கள்தாம்! கலையில் வல்லவர்கள்தாம்!

இந்தக் காடு வெட்டிப் பல்லவர் நாடு கட்டி — நந்திக்கொடி கட்டி — ஈடு கட்ட முடி

சரித்திரக் கதை

யாத அளவுக்குப் பாடுபட்டு ஆளத்தான் செய்தனர்! ஆயினும் சாளுக்கியரிடம் சூடு பட்டு விட்டனரே!

அதோ —

பன்றிக் கொடி பறக்கிறது! பாவியான சாளுக்கியன் அரியணையில் அமர்ந்துவிட் டான்! காஞ்சிக் கன்னி கண்ணீர் மல்குகிறாள்!

இதனால் —

கேவி அழும் மக்கள்; தாவிக் கதறும் மழலைகள்; ஆவி பிரிந்த பலப் பல ஜீவன்கள்! இதயம் இருந்தால் அது பிழிபட்டு ரத்தம் சொட்டும்!

நடந்த நிலை இது.

நடக்கும் நிலை -

தமிழைப் பற்றித் தங்கள் கருத்தை தெரிந்து சொன்ன புரட்சியாளர்களைச் சிறையில் அடைக்க உத்தரவு பணித்தான் சாளுக்கிய விக்கிரமாதித்தன். நாளைய அரசப் பவனிக்குப் பிறகு தண்டனை தரலாம் என்பது அவனுடைய எண்ணம் போலும்!

பொல்லென விடியப் போகும் நாளைப் பொழுதைக் கண்டு கொல்லெனச் சிரிக்கப் போகிறது தமிழக வரலாறு!

பரிதாபத்துக்குரிய பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன், தலைமறைவாகி ஓடி மறைந்தான். இது வேதனைக்குரிய காலம். 25—4—674!

தமிழ் தலை கவிழ்ந்தது!

தமிழகம் நிலை தடுமாறியது!

தமிழ் மக்கள் குலைப் பதற்றம் கண்டனர்!

அந்நியனுக்கு இடம் கொடுத்துவிட்ட பிறகு அழுதென்ன? புலம்பி என்ன? புரண்டு

தான் என்ன? இதோ, சாளுக்கிய முதலாம் விக்கிரமாதித்தன் பொற்றேர் பவனி வந்து மாணிக்க மகுடத்தைத் தரிக்கப் போகிறான்! பண்டு தமிழ் கண்டு, பார் முழுதும் புகழ் கொண்டு, விண்டுரைக்க முடியாத அளவுக்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வேலி கட்டி வாழ்ந்த வீர மண்ணா இது?

எங்கெங்கெல்லாமோ இப்படியான கேள்விக் குறிகள்! ஐயகோ....

விக்கிரமாதித்தன் வீராபிடேகம் செய்து கொண்டு மகுடம் தரித்துக் கொண்டான்! வெளியே, மக்களின் வேதனை நிரம்பிய புரட்சித் தீ! விட்டுக்கொண்டே போனால் தீ பரவிச் சாளுக்கியர் வருகையைப் பூண்டோடு எரித்து விட்டாலும் வியப்பதற்கில்லை!

பயங்கரமான சிரிப்பு: அதிர்ச்சியான கட்டளை; ஆவேசமான வெறி!

அருமை நிறைந்த வீர மகன் விநயாதித்தனை நோக்கினான் விக்கிரமாதித்தன்!

"விநயாதித்தா! சம்பந்தப்பட்டவர்களைச் சிறைப் பிடிக்கப் படை திரட்டு!"

வீர வாள் வெளிப்பட்டது.

அன்றையக் கதிரவன் மலைவாசலுக்குள் நுழைவதற்குள் பலர் சிறைப் பிடிக்கப்பட்டனர். மெச்சத் தகுந்தவன் தான் விநயாதித்தன்! வாதாபி புலிகேசியின் வாரிசில் வந்த பேரனல்லவா?

சிறைப் பிடிக்கப்பட்டவர்களுள் – திரண்டெழுந்த திண்தோள் வீரர்கள்; தித்திக்கும் அழகு வாய்ந்த வீர மங்கையர்கள்; கண் பட்டால் பட்ட கண் கரைந்துவிடும். கற்கண்டு அழகுக் கன்னியர்கள் இருக்கத் தான்-செய்தனர். அவர்களுள் ஒருத்தி!

அஞ்சுகம்!

அழகே உருவான பச்சைக் கிளி!

அவளிடம் இருப்பது அஞ்சும்படியான சுகமோ? அல்லது ஐந்து விதமான சுகங்கள் தாமோ?

சாளுக்கிய இளவரசன் விநயாதித்தனுக்கே புரிபடவில்லை; புலப்படவில்லை!

தனிமையில் அவள்; இனிமைக் கிளர்ச்சி இதயத்தில் – விநயாதித்தனுக்கு! உடன் ஒரு மொழி பெயர்ப்பாளன் அமைக்கப்பட்டான். நாக்கள் அசைந்தன; சொற்கள் உதிர்ந்தன!

"பெண்ணே! நான் இளவரசன்!"

விநயாதித்தன் விநயமாகச் சொன்னாலும் நாக்குழறியது.

நாத் தடித்தே அஞ்சுகம் சொன்னாள்:

"பன்றியின் பிள்ளையா?"

கண்களில் மருட்சி; உள்ளத்தில் அரட்சி; உணர்வில் வெறி ஆட்சி – விநயாதித்தனுக்கு!

"பெண்ணே! நாவையடக்கினால் உனக்கு மட்டும் விடுதலை உண்டு. ஏன்? என் இதய ராணியாக்கி முத்துப் பல்லக்கில் அமர்த்தி, வாதாபிக்கே கொண்டு செல்வேன்!"

அஞ்சுகம் அவனைக் கூர்ந்து கவனித்தாள். பிறகு சிரித்தாள். அதன் பொருள்?

விநயாதித்தன் கனவுலகில் சுழலத் தொடங்கி விட்டான். ஆனால் பக்கத்துச் சிறைக் கூடத்தில் இருந்தவர்கள்...?

தமிழே! ஓ... மெல்ல இனிச் செத்து விடுவாய்! இந்த நாட்டுப் பெண்கள் கற்பைக் காக்கும் வரை தமிழின் புனிதத் தன்மை என்றும் அழியாமல் இருந்துவிடும். அது அழியத் தலைப்படும் போது – அதுவும் அந்நியனுக்கு மானத்தை விற்கும் போது....

மெல்லத் தமிழ் இனிச் சாகும்!

புரட்சி நெஞ்சங்கள் புலம்பின!

மணிமுடி புனையும் வெங்கொடுமை முடிந்த பின்னர், சாளுக்கியர் வருகைக்காகப் புரட்சி செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கும் கட்டம் வந்தது.

பொன்னாலான குவளையில் மதுவை நிரப்பிக் குடித்த வண்ணம் ஒவ்வொருவரையும் அழைத்துத் தண்டனை விதித்துக் கொண்டிருந்தான் சாளுக்கிய விக்கிரமாதித்தன்.



பலருக்கு மரண தண்டனை; சிலருக்குச் சித்திரவதை; மிகச் சிலருக்குச் சிறைவாசம்!

நூபுரத்தின் ஓசை கலீர் கலிக்க, கோபுரத்துக் கொண்டை முடித்த கொவ்வைக் கனி இதழாள் அஞ்சுகம் வந்து நின்றாள். விக்கிரமாதித்தனே — வயதானதையும் மறந்து — வியந்து விதிர்விதிர்த்துப் போனான்!

அடடா! இது அழகுதானா?

முன்னம் மூவர் முழக்கினரே....

நிந்திக்கத் தெரியாத பேரழகுதான்!

வந்திக்க வைக்கும் பாரம்பரியத்தில் வந்த பசுங்கொடியா?

சிந்திக்க வைக்கும் இலக்கிய இளமை இது தானா?

கிழவனான தந்தையே மயங்கிவிட்டான் என்றால் இளைஞனான விநயாதித்தன் தேன் குடித்த நரிதானே?

அருகிலிருந்த படைத் தலைவனை அழைத்து ஏதோ காதுகளில் கிசுகிசுத்தான் மன்னன் விக்கிரமாதித்தன். பிறகு இருவரும் சமிக்ஞை மூலம் பேசித் தீர்த்தனர். யாருக்குப் புரியப் போகிறது?

தொலைவிலிருந்து கவனித்த விநயாதித்தன் வெலவெலத்துப் போனான். அவன் எண்ணியது வேறு; நடப்பது வேறாக இருந்து விட்டால்.....

மூர்க்கனான தந்தை எதையும் செய்யத் துணிந்தவன். என்ன செய்வது? துண்டு பட்ட அரணை வால் போல் துடித்தது இதயம்.

மன்னன் விக்கிரமாதித்தன் மார்பை நிமிர்த்தி விசாரணையைத் தொடர்ந்தான்:

''பெண்ணே, உன் பெயர் என்ன?''

''..................''

''உன்னைத்தான் பெண்ணே, உன் பெயர் என்ன?''

அஞ்சுகம் பேசவில்லை. அவளுக்குத் தோதாக விநயாதித்தன் பேசினான்:

''அஞ்சுகம்!''

கொள்ளிக் கண்கள் குறுகுறுவென்று நோக்கின குமரனை! கருடன் நிழல் பட்ட நாகம் போல் நடுங்கி விட்டான் இளவரசன்!

''வயதென்ன?'' — மன்னனின் கேள்வி மறுபடியும் எழுந்தது.

அஞ்சுகம் வாய் திறக்கவில்லை.

பக்கத்தில் அடுத்த தண்டனைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் வயதான பெண்ணொருத்தி மறுமொழி சொன்னாள்:

''பதினாறு!''

''நல்ல இளவயது மங்கை! உனக்கு ஏன் இந்தப் புரட்சி?''

''.................''

''நீ ஊமையல்லவே?''

''.................''

''உன் மௌனமே உனக்கு மரண தண்டனை பெற்றுத் தந்து விடும். ஏனென்றால் என் கேள்விகளை அலட்சியம் செய்கிறாய்! மன்னிப்பு கேட்டுவிடு! விடுதலை வழங்குகிறேன்!''

''.................''

''மீண்டும் அலட்சியம்! இவளுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்!''

மரண தண்டனை —

அஞ்சுகம் சிரித்தாள்! சிறையில் சிரித்தாளே அதே சிரிப்பு — எதிர்பார்த்த சிரிப்பு! தூய்மையான மானத்துக்கு மரணம் கால் தூக!

ஆனால் இளவரசன் விநயாதித்தன்?

அண்ட சராசரமே அலறிப் புடைப்பது போல் ''அப்பா!'' வெனப் புலியாகி அலறினான்!

மகனைக் கூர்ந்து கவனித்தான் மன்னன்.

அஞ்சுகம் நடந்து கொண்டிருந்தாள் காவலாளிகளுடன்.

''நில் பெண்ணே!''

மன்னனின் குரல், அஞ்சுகத்தின் நடையைத் தடுத்தது.

சற்றே அலட்சிய நோக்கு அஞ்சுகத்துக்கு.

சில கணங்கள் வரை தருமாசனத்தில் அமைதி நிலவியது.

விக்கிரமாதித்தன் மீண்டும் பேசினான்:

''பெண்ணே! உன் அழகையும் வயதையும் உத்தேசித்து மீண்டும் ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். வாய் திறந்து மன்னிப்புக் கேட்டுவிடு. தண்டனை குறையலாம். ஒருவேளை விடுதலையும் கிடைக்கலாம்!''

இப்படிக் கூறி நிறுத்தி, அடுத்து மகனைக் கூர்ந்து கவனித்தான் வாதாபி மன்னன் விக்கிரமாதித்தன்.

மீண்டும் மௌனம் — அதே மௌனம்!

விநயாதித்தன் துடித்தான் — அவனுக்கு எங்கிருந்து வந்தது இந்தத் துணிச்சல்? களங்கம் அறியாப் பெண்ணின் கண் முன் கோழையும் வீரனாகி விடுவான் என்பது இதுதானோ? விநயாதித்தன் கோழையல்லவே! வீரனாயிற்றே! ஒருவேளை வீரன் வேங்கையாய்விடுவான் போலும். அவன் சொன்னான்: ''அஞ்சுகம் அடம் பிடிக்காமல் மன்னிப்புக் கேட்டுவிடு! விடுதலை நிச்சயம் கிடைக்கும்!''

நிச்சயம்!

இது என்ன உறுதி?

மன்னனின் போக்கு மீண்டும் மகன் பக்கம்!

அனைவரையும் கூர்ந்து கவனித்தாள் அஞ்சுகம். அடுத்து —

காறி உமிழ்ந்தாள்!

''தூ....! இந்த மண்ணில் பிறந்த சிட்டுக் குருவிக்குக்கூட மரணம் உண்டு! நான் மன்னிப்புக் கேட்பதாவது? அதுவும் அந்நியனிடம்! புரட்சி என்பது மக்கள் உரிமை!''

''ஓ....'' பயங்கரக் கர்ஜனை எழுந்தது விக்கிரமாதித்தனிடமிருந்து.

''ஆ....!'' — உள்ளுக்குள் பொருமல் விநயாதித்தனுக்கு!

நச்சரவு படம் விரித்த சாளுக்கிய விக்கிரமாதித்தனிடமிருந்து மறு தண்டனை பிறந்தது: ''இவளை மரண தண்டனையிலிருந்து விடுவிக்கிறேன். ஆனால், இன்றிரவு முதல் இவள் என் படுக்கையறைப் பாவையாக இருக்கட்டும்!''

என்னே அவமான தண்டனை இது! விலங்கிடப்பெற்ற தமிழர்கள் வீறுகொண்டு கதறினர். என்ன பயன்?

விக்கிரமாதித்தன் கடகடவென்று நகைப்பொலி எழுப்பினான்: ''மானம் இன்றிரவு உனக்குப் புதிய போதனை கற்பிக்கும் பெண்ணே!''

சிந்தை கெட்டாள் — நொந்து பட்டாள் அஞ்சுகம். கையில் விலங்கு பூட்டியிராவிட்டால் அக்கணமே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு

உயிர் விட்டிருப்பாள். அவள் உடல் ஆயிரம் கோணலாக அசைந்தது. அப்போது —

மின்னல் தெறித்தோடும் அந்த நேரத்தில்—

விநயாதித்தன் உடைவாள் வெளியில் புறப்பட்டது. சலசலத்தனர் சாளுக்கியர். அடுத்து —

அஞ்சுகத்தின் மார்பிலே ஆழப் பதிந்து விட்டது அந்த வாள் !

நோக்கம் ?

இளைஞன் அநுபவிக்க வேண்டிய திருமேனியைக் கிழவன் மருவுவதா?

''விநயாதித்தா!'' — மன்னன் எழுப்பிய குரல், மண்டபமே ஒரு கணம் அதிர்ந்தது !

விநயாதித்தன் இதழ்களில் பொருளார்ந்த அலட்சிய நகை! கொஞ்சமும் தாமதியாமல் அவன் சொன்ன மறுமொழி இதுதான் :

''தந்தையே! நீங்கள் தமிழ் வரலாற்றைக் களங்கப்படுத்திப் பட்டயங்களை வெளியிடலாம்! ஆனால் சாளுக்கிய வரலாற்றைக் காக்கும் பொறுப்பு மகனுக்காவது இருக்க வேண்டுமல்லவா ? நான் உங்கள் மகன் என்பதை இன்றைய இந்த நிலையில் மறந்து விட்டேன். என்னுடைய நினைவெல்லாம் மாவீரர் —என் தாத்தா — புலிகேசியின் பேரன் என்பதிலேயே லயித்து விட்டது !''

சுயநலத்துக்கு இப்படி ஒரு சாமர்த்தியம் பிறந்தது விநயாதித்தனிடமிருந்து !

மன்னன் விக்கிரமாதித்தன் அலட்சிய நோக்கோடு — ஆனால் அமைதியான நிலையை வரவழைத்துக் கொண்டு மறுமொழி கூறினான்: ''மகனே! இது ஒரு விதமான ராஜதந்திரம்!''

''எனக்குப் புரியாமலில்லை. அந்தத் தந்திரம் எனக்கும் கைவந்த ஒன்றுதான்.''

''நான் உன்னை அசல் சாளுக்கிய மகனாகப் பார்க்க ஆசைப்பட்டு, இவனுக்கு இப்படியான தண்டனை வழங்கினேன் !''

''நானும் உங்களை அசல் புலிகேசியின் மகனாகப் பார்க்க இவனையே கொன்று விட்டேன்...!''

வாய் அடைத்துப் போனான் விக்கிரமாதித்தன். நெஞ்சடைத்து அஞ்சுகத்தை நோக்கினான் விநயாதித்தன்.

மரணத்தையே அலட்சியம் செய்யும் பாவனையுடன் எழாத துயில் கொண்டு வீழ்ந்து கிடந்தாள் தமிழின் எழிலையே எழில் கொண்ட புரட்சி மகள் அஞ்சுகம் !

சித்திரைப் பெண்

வசந்த காலச் சித்திரைப் பெண்
வாசல் நோக்கி வந்தாள் - நம்
கசந்த வாழ்வில் கனிவையூட்டும்
காட்சிகளைத் தந்தாள்.

புதிய எண்ணம் !புதிய செய்கை
பூத்திடவே செய்தாள் - ஆம்
எதிலும் எங்கும் இன்பமெனும்
எழிசையைப் பெய்தாள்.

பொதிகையதன் தென்றலுடன்
பூவையவள் புகுந்தாள் - நற்
புதுமைக் கோலக் குரல் எழுப்பிப்
புவனமதைக் கவர்ந்தாள்.

வருக வருக என்றவளை
வாழ்த்தி வரவேற்போம் - நலம்
தருக தருக என்று வையத்
தலைமையினைக் கேட்போம்.

இளங்கம்பன்



வழித்துணை

ராஜ்



செய்கிறான்! அவனுக்குள் எழுந்தது ஒரு பிரமை! அவன் கிட்ட நெருங்கும் போது எல்லாம் அவள் தூர விலகும் பாவம் தெரிகிறதே, ஏன்? திருமணமான அன்றே அவர்கள் தனித்தும் விடப்

சிறப்புச் சிறுகதை

"சென்னையிலிருந்து டில்லி வரை மூன்று நாட்கள் நம் கூடப் பிரயாணம் செய்தவர்களைக்கூட, ரயிலடியிலிருந்து வெளியே வரும் போது நாம் மறந்து விடுகிறோம். அவர்களை மீண்டும் சந்திக்க வேண்டும் என்ற ஆசை நமக்குள் அநேகமாக எழுவதேயில்லை. அவர்களோடு மீண்டும் அளவளாவ வேண்டும் என்ற எண்ணம்கூடப் பெரும்பாலும் நமக்குத் தோன்றுவது கிடையாது."

ஆனால் வாழ்க்கையில் ஒருசில நிமிடங்கள் மட்டுமே கவனித்த ஒரு நங்கையைத் துணையாகக் கொண்டு — 'பெண் பார்க்கும் படலம்' என்ற சாக்கில் சில கணங்களே உற்றுக் கவனித்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு — தன் வாழ்நாள் முழுதும் கழித்துவிட ஒருவன் தயங்குவதில்லை. "பெண் பிடித்திருக்கிறது" என்ற அவனுடைய தலை அசைவுக்குப் பின்னும், அந்த ஒரே ஒரு "எஸ்"ஸைத் தொடர்ந்து வரப் போவது சுவையுள்ள இல்லறமா அல்லது கசப்பு மிக்கக் குடித்தனப் பாங்கா என்பது விடை காண இயலாத ஒரு ரகசியமாகத்தான் தொக்கி நிற்கிறது!"

— யாரோ ஒருவர் ஏதோ ஒரு பத்திரிகையில் எழுதியதைப் படித்துக் கொண்டிருந்த கண்ணனின் மனத்தில் அந்த வாக்கியங்களில் கண்ட உண்மை நன்கு உறைத்தது. தன் வலது கையில் மஞ்சள் நிறம் மாறாமல் நின்ற கங்கணத்தையும், தன் அறையில் புதிதாகச் சேர்ந்திருந்த பெட்டிகளையும் அவன் பார்த்தான். ஆமாம்...! அவனுக்குத் திருமணம் ஆகிவிட்டது. இனி அவன் 'பிரம்மச்சாரிக் கட்டை' இல்லை. குடும்பம் என்னும் ஏர்க்காலில் இன்னுமொரு ஜீவனுடன் அவனைப் பிணைத்து விட்டார்கள். இனி ஆண்டவன், எப்படியெல்லாம் அவன் வாழ்க்கைச் சேற்றில் உழல வேண்டும் என்று நினைத்திருக்கிறாரோ, அப்படியெல்லாம் நடந்தே தீரும்.

கடந்த ஒரு வார காலமாக அவன் ராதாவுடன் பழகுகிறான் — இல்லை, பழக முயற்சி பட்டணம். அவள் கனவு கண்டிருந்தபடியெல்லாம் அந்தச் சந்திப்பு அமையவில்லை. அவள் அது வரை பார்த்துள்ள திரைப்படங்களில் காண்பிப்பது போலவும் நிகழவில்லை. ஏதோ யந்திரம் போல் அவள் உணர்ச்சியற்று இயங்குகிறாள். கண்ணன் மனத்தில் ஓர் அச்சம். அவள் அவனை விரும்பவில்லையோ?... யாருடைய நிர்ப்பந்தத்தின் பேரில்தானோ அவள் இந்தத் திருமணத்துக்கு உடன்பட்டு விட்டாள்? இனி அவன் வாழ்க்கையே அவளால் நரகமாகி விடுமோ?

தனிமையில் அவன் அமரும்போது எல்லாம் அவன் எண்ணங்கள் இதே சுருதியில் தான் சேர்ந்தன. அவன் மனச் சஞ்சலத்துக்குக் காரணங்கள் இல்லாமல் போகவில்லை.

இன்று தபால் ஆபீஸில் அவன் ஒரு சாதாரண குமாஸ்தாவாக இருக்கலாம். பள்ளிப் படிப்பில் அவன் சோடை இல்லையே. எஸ். எஸ். எல். ஸி.யிலேயே முதலாவதாக வந்தவன்கூடத்தான். பள்ளி இறுதி ஆண்டில் தான் பரிசாகப் பெற்ற புஸ்தகங்களையெல்லாம் ராதாவிடம் அவன் காட்டினான். அவள் அவற்றை ஆவலுடன் எடுத்துப் பார்ப்பாள் என்று எதிர்பார்த்தான். அந்தப் புஸ்தகங்களை அவள் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. உடுத்தி அவிழ்த்து வைத்திருந்த பட்டுப் புடவையின் ஜரிகைக் கரையில் விழுந்திருந்த சுருக்கங்களையெல்லாம் பிரித்து விடுவதில் தீவிரமாக இருந்தாள்.

திருமணத்தை முன்னிட்டு வந்திருந்த உறவினர்களில் சிலர் இன்னும் ஊர் திரும்பவில்லை. தனியாக ராதாவிடம் மனம் விட்டுப் பேசவும் அவனுக்குச் சற்றுத் தயக்கமாக இருந்தது. யாரேனும் பரிகசித்தால் என்ன செய்வது என்று நாணினான். அவளைச் சுற்றிச் சுற்றி வந்து சம்பந்தமில்லாமல் பேசினான். பட்டும் படாததுமாகப் பதில் வந்தது.

தன்னுடைய பெட்டியின் அடியிலிருந்து போட்டோ ஆல்பத்தை எடுத்து ராதாவிடம் காட்டினான் கண்ணன். தன் கரம்

பிடித்தவன் இளம் பிராயத்தில் எப்படியெல்லாம் இருந்திருக்கிறான் என்பதைத் தெரிந்துகொள்ள அவளுக்கு ஆவல் இருக்கும் என்பதும் அவன் இயற்கையாக எதிர்பார்த்ததுதான்! அதில் தவறும் இல்லை. அந்த ஆல்பத்தில் ஒரு குழந்தையின் படம் இருந்தது. அது கண்ணனின் நண்பன் ஒருவனுடைய குழந்தை. அந்தக் குழந்தையின் படத்தில்தான் ராதாவின் கவனம் சில கணங்கள் நிலைத்தனவே தவிர, மற்றப் பக்கங்களை யெல்லாம், அவள் அசுவாரசியமாகத் தள்ளினாள்.

அவள் ஏதேனும் மனக் கோட்டைகள் கட்டி இருப்பாளோ? அவள் மனத்தில் வரித்த கணவன் ஒரு டாக்டராகவோ, அல்லது இன்ஜினீயராகவோ இருக்கலாம். எல்லோரையும் விட்டுத் டிபார்ட்மென்ட் குமாஸ்தா ஒருவருக்குக் கழுத்தை நீட்ட நேர்ந்த அவலத்தை எண்ணிப் புழுங்குகிறாளோ?

ராதையை அழைத்துக் கொண்டு ஒரு திரைப்படத்துக்குப் போக விரும்பினான் கண்ணன். அந்தப் படத்தை அவன் முன்பே பார்த்திருந்தான். சினிமா பார்ப்பதற்காகவா அவன் அவளைக் கூப்பிட்டான்? தன்னைப் பற்றி அவளிடம் சொல்லி, அவளைப் பற்றித் தான் அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பமாக இருக்கட்டும் என்பதல்லவா அவன் நினைவு?

அவள் வர மறுத்துவிட்டாள்.

"அந்தப் படம் நான் ஏற்கனவே பார்த்தது தான்... நன்றாக இருக்காது!" என்றாள் அவள்.

"எவ்வளவுக்கெவ்வளவு படம் நன்றாக இல்லையோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்குச் சௌகரியம்தான்!" என்று தன் கண்களைச் சிமிட்டினான், அவள் புரிந்துகொள்வாள் என்று எண்ணியபடியே.

சமூகக் கதை



அவள் கண்களில் நாணத்தின் வனப்பு குங்கும வண்ணத்தில் மலரும் என்று எதிர்பார்த்தவனுக்குக் கிடைத்தது சூன்யமான ஒரு பார்வைதான். அவனுக்குப் பெருத்த ஏமாற்றமே!

இருபத்திரண்டு வருடங்கள் பழகிய குற்றியலோ விருந்து — தன் பெற்றோர்களை விட்டு வந்த ஏக்கமாக இருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

"என் ராதா? நீ வேண்டுமானால் பத்து நாட்கள் ஊருக்குப் போய் விட்டு வருகிறாயா?" என்று கேட்டான் அவன்.

அவள் கண்களில் ஒரு புத்தொளி. "இன்றைக்கே புறப்படலாமா?" என்று கேட்டாள் அவள்.

அவன் சோர்ந்து போனான். 'அவனை விட்டு ஓடுவதில் தான் அவளுக்கு எத்தனை இன்பம்!' எப்போது இப்படிச் சொல்வான் என்று காத்திருந்ததுபோல் அல்லவா புறப்படத் துடிக்கிறாள்?

"உம்.... உனக்கென்ன? நீ புறப்பட்டுப் போய் விடுவாய்..... தனிப்பெல்லாம் எனக்குத்தானே?...." என்றான் அவன்.

அவள் வெட்கப்படுவாள் என்று வழக்கம் போல் எதிர்பார்க்கவுமில்லை. "நீங்களும் தான் வாருங்களேன்!" என்று மேலுக்காவது அழைப்பாள் என நினைத்தான். அந்தப் பிரிவு அவளை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை என்று அவள் முகமே அவனுக்குச் சொல்லியது.

"பத்து நாட்கள் தான்!... நான் எண்ணிக்கொண்டு இருப்பேனுக்கும்!" என்றான் அவன் — அவள் கைகளைத் தன் கரங்களில் தாங்கியபடியே.

"பத்து நாட்களுக்குள் கட்டாயம் வர வேண்டுமா? முன்னே பின்னே ஆனால் கோபித்துக் கொள்வீர்களா?" என்று அவள் கேட்டாள்—அப்போதே அந்தப் பத்து நாட்களும் முடிந்துவிட்டாற்போல்.

''உனக்கு எப்போது வரத் தோன்றுகிறதோ, அப்போது வா, போதும்!'' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான் கண்ணன்.

ரயில் அவளைத் தாங்கிக் கொண்டு திருச்சியை நோக்கி விரைந்தது.

தனியாக வீடு திரும்பிய கண்ணன் மனம் தன் அமைதியைப் பூரணமாக இழந்திருந்தது. தன் வாழ்க்கையே வீணாகி விட்டது — வீணாக்கப்பட்டுவிட்டது என்று அவன் துடித்தான். இரண்டொரு நாட்களில் அவன் தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்தான்.

போன மாதம் இதே தேதியில் ராதா யார்? அவர்களுக்குள் இருந்த பிணைப்பு என்ன? பாசம் ஏது? பந்தம் ஏது? எப்பொழுது அவள் அவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ளத் தயாராக இல்லையோ— அவன் பேச்சில் சற்றேனும் அக்கறை காட்டி அவனை மகிழ்விக்க எண்ணம் உடையவளாகத் தெரியவில்லையோ — அவனும் அப்படித்தான் இருக்கப் போகிறான். திருமணம் என்றொரு சம்பவம் அவன் வாழ்க்கையில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் எத்தனை நிம்மதியாகக் கவலையற்று இருப்பானோ, அப்படியே வாழ்ந்து காட்டுவது என்ற திடமான சங்கல்பம் ஒன்று செய்து கொண்டான்.

பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. ராதாவிடமிருந்து திரும்பி வருவதற்கான கடிதம் ஏதும் கிடைக்கவில்லை. கண்ணனும் அவளை வரச் சொல்லிக் கடிதம் எழுதவில்லை.

இருபது நாட்களுக்குப் பின்னர், அவளிடமிருந்து தானாகக் கடிதம் வந்தது. இரண்டு நாட்களுக்குப்பின், தான் மட்டும் தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் புறப்பட்டு வருவதாக அவள் எழுதியிருந்தாள். தன் தந்தைக்கு லீவு கிடைக்கவில்லை என்றும், தான் மட்டும் வருவதாகத் தெரிவித்திருந்தாள். அவன் ரயிலடிக்கு வந்து அவளை அழைத்துச் செல்ல வேண்டும் என்று அதில் குறிப்பிடவில்லை.

''எனக்கு அன்று காலை 'டூட்டி' அம்மா! தம்பி போய் அவளை அழைத்து வரட்டும்!'' என்று கூறி விட்டான் கண்ணன்.

அவன் வேலை முடிந்து சாப்பாட்டுக்கு வீடு திரும்பும் போது, மணி பன்னிரண்டு அடித்து விட்டது. எல்லோரும் மதிய உணவு சாப்பிட்டாயிற்று. அவன் தந்தை வாயிற்திண்ணையிலும், தாய் கூடத்து ஊஞ்சலிலும் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தனர். தம்பி கல்லூரிக்குப் போயிருந்தான். தங்கையையும் காணோம்! எங்கேயாவது அரட்டை அடிக்கப் போயிருப்பாள்.

அடுக்களையினுள் மெட்டியின் ஒலி கேட்டது. அது ராதாவாகத்தான் இருக்க வேண்டும். அவனையும் அறியாமல் அவன் கால்கள் அவனை அங்கே அழைத்துப் போக யத்தனித்தன. தன் விருப்பத்துக்குப் பெரு முயற்சியுடன் அணை போட்டான். அந்த அறையிலிருந்து அவன் நகரவில்லை. ''ரயில் சரியான நேரத்துக்கு வந்ததா? கூட்டம் இல்லையா? பிரயாணம் சௌகரியமாக இருந்ததா?'' என்ற சம்பிரதாயமான விசாரணைகளுக்குக் கூட அவன் தன் மனத்தை அனுமதிக்கவில்லை.

அறையின் வாசலில் ராதா வந்து நின்றாள். ''சாப்பிட வருகிறீர்களா?'' என்று அழைத்தாள் ராதா. அவன் திரும்பி நிமிர்ந்து பார்த்தான். அவள் தன் தலையைக் குனிந்து கொண்டாள். இதுவரை அவன் பார்த்தறியாத நாணத்தின் செவ்வரிக் கோடுகள் அவள் முகத்தில் பரவுவதைக் கண்டு அவன் வியந்து போனான்.

அவனைத் தாண்டிக் கொண்டு போகையில் அவள் கரம் அவன் மேல் இலேசாக மோதியது. அவள் உடல் சிலிர்த்தது அவனுக்குப் புரிந்தது. அவன் பார்வையைத் தாங்க முடியாமல், கன்னங்களில் சுழலிட், தன் விழிகளைப் பொத்தியபடி, அவள் உள்ளே வேகமாக ஓடிவிட்டாள்.

மௌனமாகச் சாப்பிட அமர்ந்தான் கண்ணன். ''போதும், இன்னும் கொஞ்சம்'' என்ற சொற்களைத் தவிர அவன் வேறு ஏதும் பேசவில்லை. ஆனால், அவளாகச் சொன்னாள்: ''நீங்கள் ஸ்டேஷனுக்கு வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்!''

''எனக்கு 'டூட்டி' இருந்ததே! என்ன செய்யட்டும்?'' என்றான் கண்ணன் பதிலுக்கு.

''அரை நாள் லீவாவது போட்டு விட்டு வந்திருக்கலாம், இல்லையா?'' என்று கேட்டாள் அவள். அவன் பதில் சொல்லவில்லை.

மீண்டும் அவன் அலுவலகம் செல்ல வேண்டும். உடையணிந்து கொண்டு புறப்படும் சமயம் ராதா உள்ளேயிருந்து வந்தாள். அவள் கையிலிருந்த சிறு பிளாஸ்டிக் தட்டில் மடித்து வைத்திருந்த வெற்றிலையும் பாக்கும் இருந்தன.

''அப்படி வைத்து விட்டுப் போயேன்!.... நிற்கிறாயே!...'' என்றான் கண்ணன்.

அவள் அங்கிருந்து நகரவில்லை. கொடியில் மாட்டியிருந்த அவன் 'டெரிலின்' சட்டையை எடுத்து நீட்டினாள் அவள்.

''நீங்கள் ஒரு கடிதமாவது போடுவீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இப்படிப் போடாமல் இருந்து விட்டீர்களே!'' என்று கேட்டாள் அவள்.

''எனக்கு நேரம் கிடைக்கவில்லை. வேலை அதிகம். ஆமாம்... அம்மா உனக்கு எழுதியதாகச் சொன்னாளே! கிடைக்கவில்லையா?''

''கிடைத்தது. அம்மா எழுதியிருந்தார்கள். இருந்தாலும் உங்கள் கைப்பட....'' அவள் முடிக்கவில்லை. கண்ணனுக்கு ஒரே ஆச்சரியம். முன்பு ஜடம் போல் இருந்த ராதாவா இப்படிக் குழைகிறாள்? வளைகிறாள்?

வாசலில் தன் சைக்கிளை நிறுத்தி அதை உதைத்து ஏற யத்தனித்தான் கண்ணன்.

''சாயந்திரம் கொஞ்சம் சீக்கிரமாக வந்தால் அந்தப் படத்துக்குப் போகலாம்!'' என்றாள் ராதா. எதிர்ச்சுவரில் ஒட்டப்பட்டிருந்த பெரிய போஸ்டரை அவள் விரல்கள் சுட்டிக் காட்டின.

கன்னத்தோடு கன்னம் நெருக்கமாக இணைந்து கொண்டிருக்கும் காதலனும் காதலியும் அந்தப் போஸ்டரில் பெரிதாகத் தெரிந்தனர். முன்பு பிரபலமாக இருந்து பல வாரங்கள் ஓடிய ஒரு படத்தின் புதிய பிரதி அது.

''அந்தப் படமா?... நான் பார்த்துவிட்டேனே!'' என்றான் கண்ணன்.




Sunsilk cares – with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease...gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair...revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk - more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140



C. A. SWAMI

"மண்ணிலின்றும் மறைந்தாலும்
மனத்திலிருந்து மறையாத"
'என் அன்புக் கணவர்'

நினைவு அஞ்சலி

(முதல் ஆண்டு)

சென்ற ஆண்டு ஒன்பதாம் நாள் (9-4-69) தன் பூத உடலைத் துறந்து இறைவனடி சேர்ந்த என் கணவரின் ஆன்மா இறைவன் அருளால் சாந்தி யடைய ஆத்மார்த்தமாக பிரார்த்திக் கின்றேன்.

Mrs. J. SWAMI

''நானும்தான்!..... இருந்தாலும் உங்களுடன் சேர்ந்து....'' என்றான் அவன். அவன் அந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்யவில்லை. வாக்கியத்தை முடித்திருந்தாலும், அவன் வேட்கையை இப்படி அரைகுறையாக நிறுத்தியதைப் போல் சிறப்பாகக் காட்டியிருக்க முடியாது.

''ஸாரி! ராதா! இன்றைக்கு என்னால் வர முடியாது.... நாளைக்கு வேண்டுமானால் பார்க்கலாம்!'' என்றான்.

இரவு வீடு திரும்பும்போது மணி ஒன்பது அடித்து விட்டது. பெரிய பொறுப்பு ஒன்று நீங்கிவிட்டது போல், அவன் அம்மாவும் அப்பாவும் காலட்சேபம் கேட்கப் போய் விட்டு வந்தார்கள். தங்கை சோபாவில் மயங்கியபடி உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் மார்பின் மேல் பாதி படித்திருந்த நாவல் ஒன்று பிரித்தபடி கிடந்தது. மாடியில் தம்பி சாகுந்தலம் படித்துக் கொண்டிருந்தான். சகுந்தலையும் துஷ்யந்தனும் முதன் முதலாகச் சந்திக்கும் அந்த அருமையான கட்டத்தை ஜீவனில்லாமல், ஒவ்வொரு வார்த்தையையும் கொன்று கொன்று படித்துக் கொண்டிருந்தான். அமர காவியம் பள்ளிப் பாடமாகித் தன் உயிர்த் துடிப்பை எல்லாம் பூரணமாக இழந்துவிட்டு நின்றது.

சமையலறையில் ராதா தனியாக இருந்தாள். அவள் கைகளில் அவன் முன்பு பரிசு வாங்கிய புத்தகங்களில் ஒன்று. அவள் அருகே அவன் அன்று சரியாகப் பார்க்காத போட்டோ ஆல்பம் — தானாகத் தேடி எடுத்துப் பார்த்திருக்கிறாள். அவனைக் கண்டதும் அவள் வெட்கத்துடன் எழுந்து நின்றாள்.

நீண்டு தொங்கிய அந்தப் பின்னலும் அதன் மேல் மகுடம் போல் நின்ற அந்த மல்லிகைப் பந்தும் முகத்தில் தெரிந்த இளமையின் அன்னதும் அவனைக் கிறங்க வைத்தன.

மௌனமாகச் சாப்பிட்டு முடித்தான். பாலைக் கையில் ஏந்தியபடி உள்ளே நுழைந்த ராதா அவன் கைகளில் டம்ளரைத் தந்து விட்டு அவன் அருந்துவதைத் தன் விழிகளால் ஆர்வம் பொங்க விழுங்கிக் கொண்டிருந்தாள். 'கண்ணனுடைய ஒத்துழையாமை இயக்கம்' அதற்குமேல் தாக்குப் பிடிக்கவில்லை.

ராதாவை அவன் அப்படியே வாரி அணைத்துக் கொண்டான். அந்த அன்புப் பிடியிலிருந்து விடுபட அவள் முயலவில்லை.

அருகிலே ராதாவின் இதமான மூச்சுக் காற்று தன் கன்னத்தை வருடக் கண்ணன் கேட்டான். ''ஊரிலிருந்து திரும்பும் போது நீ புதிய ராதாவாக வந்திருக்கிறாய்....!'' என்றான்.

''நீங்கள் மட்டும் என்ன? ஆளே மாறி இருக்கிறீர்கள்!'' என்றாள் அவள்.

''நானா? மாறி விட்டேனா? இல்லையே.... ஒரு சென்டி மீட்டர் பருக்கவுமில்லை; இளைக்கவுமில்லை'' என்றான் கண்ணன் விளையாட்டாக.

''நான் மனத்தளவில் மாறியிருப்பதைச் சொல்கிறேன்'' என்றாள்.

''அப்படி என்னம்மா திடீர் மாற்றத்தை நீ கண்டுபிடித்தாய்?'' என்று கேட்டான் கண்ணன்.

''சொல்கிறேன்.... என்னுடைய மாமாவைத்தான் தெரியுமே.... கல்யாணத்தின் போது நீங்களே கவனித்திருப்பீர்கள். எப்போதும் மாமியைச் சுற்றிக் கொண்டு திரிவார். மாமி, 'குளியலறை'க்குப் போனால், பின்னாடியே புடவையையும் ரவிக்கையையும் கொண்டு போய்க் கொடுப்பார். அவள் தூங்கிக் கொண்டிருந்தால் தட்டி எழுப்ப மாட்டார். அழும் குழந்தைக்குத் தானே பால் கரைத்துக் கொடுப்பார். தலையை இலேசாக வலிக்கிறாற்போல் இருக்கிறது என்று மாமி சொல்லி விட்டால் போதும், படுக்கையைத் தாமே எடுத்துப் போட்டு, அவளைப் படுத்துக் கொள்ளும்படி கெஞ்சி, டாக்டரைக் கூப்பிட்டு வந்து ஏக அமர்க்களம் செய்வார்!...''

''அத்தனை அன்னியோன்னியம்! எத்தனை நெருக்கம்!'' என்று வியந்தான் கண்ணன்.

''ஐயே! இது என்ன வழக்கம் என்கிறேன்! பார்ப்பதற்குச் சங்கடமாக இருக்கும்..... விஷமக்காரர்கள் கேலிகூடச் செய்வார்கள். ஏன், என் மாமிக்கே இது பிடிப்பது இல்லை. சிங்கத்தைப் போல் நிமிர்ந்து நிற்க வேண்டிய ஓர் ஆண், நாயைப் போல் குழைவதா?.... முதலில் உங்களைப் பார்த்த போது நிச்சயம் நீங்கள் மாமாவைப் போல் இருக்க மாட்டீர்கள் என்று நினைத்தேன். உயர்ந்த பார்வையுடன் நீங்கள் கம்பீரமாக நிற்க, நான் உங்களுக்கு அடிபணிந்து போக ஆசைப்பட்டேன். உங்கள் ஆண்மையின் அடைக்கலப் பொருளாகத்தான் நான் இருக்க நினைத்தேன்..... ஆனால்.... நீங்கள்....''

''சொல்!'' என்றான் கண்ணன்.

''என்னைத் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது.... இந்த வீட்டுக்கு நான் வந்தது முதல் நீங்கள் என்னையே சுற்றிச் சுற்றி வந்தீர்கள். தாயைச் சுற்றும் கைக் குழந்தை போல், நான் போகும் இடமெல்லாம் வளைய வளைய வந்தீர்கள். என் பிரியத்தைச் சம்பாதிப்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வீர்கள் என்று பட்டது எனக்கு! பெண்டாட்டி பித்தாக — தம் சுய கௌரவத்தையும் பொருட்படுத்தாத ஓர் ஏமாளியாக நீங்கள் இருந்து விடுவீர்களோ என்று பயந்து போனேன். எனக்கு வழித் துணையாக வேண்டிய நீங்கள் என் பின்னால் ஒண்டிக் கொள்வீர்களோ என்று குமைந்தே போனேன்....''

கண்ணன் மௌனமாக இருந்தான்.

''மனசில் பட்டதை நான் சொன்னேன்! நீங்கள் அப்படியெல்லாம் இல்லை என்பதை இப்போது புரிந்து கொண்டு விட்டேன். இதைப் பெரிது பண்ணிக் கொண்டு இருக்காதீர்கள்!'' என்று கெஞ்சினாள் அவள்.

''இதில் தப்பென்ன? நான் வேறு எதையோ எண்ணிக் கொண்டிருந்தேன்....'' என்ற அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''உம்.... யோசனை செய்ய நல்ல சமயம் பார்த்தீர்கள்!'' என்று சிணுங்கினாள் அவள்.

''இல்லை.... ஏதோ... பெண், ஒரு புதிர் என்று கூறுகிறார்களே! அதில் எத்தனை பெரிய உண்மை இருக்கிறது என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்!'' என்றான் கண்ணன்.

கவர்ச்சியின் மையம் • கடாவ் வாயில்களில் •



கடாவ்

வாயில்கள்

தி கடாவ் மாகன்ஜீ ஸ்பின்னிங் & வீவிங் கோ. லிட்.,
தலைமை காரியாலயம்: லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் எஸ்டேட், பம்பாய்-1, மில்கள்: ஹெய்ன்ஸ் ரோடு, பைகுல்லா, பம்பாய்-27

SISTA'S-KMS-421A Tam

சில்லறை விற்பனை நிலையங்கள் :

216, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1

கடாவ் வாயில்ஸ்: 2/133, மவுண்ட் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை-6



கடல்துறை

மகரிஷி

★ எத்தனை இடர்கள் வந்தாலும் எதிர்கொள்ளும் வைர மனம் அவளுடையது.

★ பறித்தவுடன் மணம் பரப்பி விநாடியில் வாடிவிடும் மலராக என்றுமே அவள் இருந்ததில்லை.

★ அவள்தான் தர்மு — தர்மாம்பாள்! கடல் அலையில் பூத்தவள்.

★ முரண்பாடுகள் நிறைந்த அவளுடைய வாழ்க்கைக் கதைதான் இது.

1

வேலியில் படர்ந்து தொங்கிக் கொண்டிருந்த மல்லிகைக் கொடியின் இரண்டு இளம் நுனிகளை வேலி இடுக்கில் சொருகிக் கொண்டிருந்த தேசிகரின் பார்வை வெகு தூரத்துக்கு அப்பால் தெரியும் பிரதான ரஸ்தாவையும் அதிலிருந்து பிரிந்து வரும் மண் ரஸ்தாவையும் ஈர்த்துக் கொண்டபோது, அந்தப் பார்வையில் இலேசான வியப்பு மின்னியது.

ஒரு மார்கழி மாதத்தின் பிற்பகல் பொழுது வெய்யிலில் கடுமை இல்லாவிட்டாலும் இலேசான உஷ்ணம் உடம்புக்கு இதமாக இருந்தது. வெற்றுடம்புடன் நின்று கொண்டிருந்தவர் தூரத்தில் மண் ரஸ்தாவில் நடந்து வரும் இரண்டு உருவங்களைக் கண்டு தலையில் கட்டிக் கொண்டிருந்த சிவப்புக் கரைவிட்ட துண்டை அவிழ்த்துத் திறந்திருந்த உடம்பைப் போர்த்திக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தார்.

வருகிறவர்கள் யாராக இருக்கும்? யாரோ பெண்கள் போலத் தோன்றுகிறார்கள்! கிட்டத்தட்ட சகோதரிகள் போல் மதிக்கத்தக்க உருவ அமைப்பு. இவர்களை எங்கும் பார்த்த ஞாபகம் கூட இல்லையே! புதிய உருவங்கள், அருகில் நெருங்க நெருங்கச் சிந்தனையின் வீச்சும் நீண்டது.

இந்த மண் ரஸ்தா வழியே போகிற வழிப் போக்கர்களாக இருக்குமோ? இந்த ஒதுக்குப் புறத்தில் இதுதானே கடைசி இடம். இதற்குப் பின் அதோ அந்தப் பிரும்மாண்ட ஏரிதான். ஒருவேளை வழி தெரியாமல்....

தேசிகரின் கேள்விகள் மூடிக்கொண்டு விட்டன. காரணம் அதிதிகள் முள்வேலிக்கு அப்பால் வந்து விட்டார்கள். வந்தவர்கள் மௌனமாக நின்று விட்டார்கள்.

நாற்பதுக்குள் மதிக்கத்தக்க வயதுடைய ஒரு மாதும், அவள் தங்கை அல்லது மகள் என்று அனுமானிக்கக்கூடிய அளவுக்குப் பெண் ஒருத்தியும் நின்றனர். இருவர் முகத்திலும் அளவுக்கு மீறிய களைப்பு.

''யாரைப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தார் தேசிகர்.

இருவரிடமிருந்தும் பதில் ஒன்றும் வரவில்லை.

அவர்கள் நின்ற நிலை, பார்வையிலே இருந்த அலுப்பு, நிற்கக்கூட சேணற்ற தோற்றம்; இவைகளையெல்லாம் பார்த்து அனுமானித்துக் கொண்டே தேசிகர் அதற்கு மேல் அவர்களை அங்கேயே நிற்க வைப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்தவராக, ''வாங்கோ உள்ளே போகலாம். அந்த இரண்டு மூட்டைகளையும் இப்படிக் கொடுங்கள்'' என்று கூறிக் கொண்டே அவர்களிடமிருந்த பெரிய இரண்டு துணி மூட்டைகளையும் இரண்டு கைகளில் வாங்கிக்கொண்டு முன்னே நடந்தார்.

மிகவும் சிறிய கோயிலும், ஒன்றரை ஏக்கர் சுற்றளவுக்கு அந்தக் கோயிலின் நிலம் என்று சொல்லுமளவுக்கு நிலப் பரப்பில் பல வகை மரங்கள். சின்னச் சின்ன மஞ்சள், சிவப்பு அரளிச் செடிகள். அதன் எல்லை என்பதை சுவீகரிக்கப்படுத்துமளவுக்குத் தன் விஸ்தீரணத்தை மட்டும் பாதுகாத்துக் கொண்டிருந்தன, முள் வேலிகளும் ஆங்காங்கு வளர்ந்து நின்ற பூவரசு மரங்களும்.

பனை ஓலைகளால் வேயப்பட்டதும், தென்னங் கீற்றுகளால் வேயப்பட்டதுமான இரண்டு குடிசைகள் சின்னதும் பெரியதுமாக அந்தக் கோயிலுக்கு எதிரே சற்றே தள்ளி இருந்தன.

கோயிலுக்குப் பின்னால் கொஞ்ச தூரத்தில் ஓர் ஏரி தெரிந்தது. சிறிதும் பெரிதுமாகக் கற்கள் அங்கங்கே புதைந்தும் உருண்டும் ஒரு வெறுமை நிலைக்கு உருவம் அமைத்துக் கொண்டிருந்தன.

துணி மூட்டைகளைச் சுமந்து சென்ற தேசிகர் பனை ஓலைக் குடில் அருகில் வந்து நின்று திண்ணையில் அந்த மூட்டைகளை வைத்து விட்டுத் தயங்கித் தயங்கி வரும் புதியவர்களை எந்தவித தயக்கமுமின்றி, உறவினர்களையும், தெரிந்தவர்களையும் எதிர் பார்த்து வரவேற்பது போல் வரவேற்றார்.

''ஏன் இவ்வளவு தயக்கம்? தாராளமாக வரலாம். வந்து இளைப்பாறுங்கள். பிறகு பேசலாம். அதோ பாருங்கள், கிணறு! வாளி கயிறு இங்கே இருக்கு. தண்ணீர் திவ்வியமாக இனிக்கும். நீங்கள் தேவையானதைச் செய்து கொள்ளுங்கள். நான் இரண்டு வாழை இலை அறுத்துக் கொண்டு வருகிறேன். ஆலயத்துக்குப் பின்னால் நிறைய வாழை மரங்கள் போட்டிருக்கிறேன்'' என்று சொல்லி விட்டு அவர்களைத் தாண்டிப் போக இருந்தவர், பெரியவள் கண்கள் கண்ணீருடன் பரபரக்

மறைந்தும், சின்னவள் தலை குனிந்து மௌனமாக நிற்பதையும் கண்டு திருப்திப்பட்டார்.

"எங்களை யார் என்று கூடத் தெரியாமல் இவ்வளவு உபசாரம் செய்து வரவேற்க இந்த உலகில் மனிதர்கள் இருக்கிறார்களே என்று நினைக்கும்போது ஆச்சரியமாகவே இருக்கிறது. எத்தனையோ எதிர்பாராதவைகளைப் போல் என்னுடைய இந்த வருகையும் இங்கே ஓர் எதிர்பாராததுதான். உங்களுக்கு நாங்கள் ஒரு தொல்லையாகக்கூட இருக்கலாம். ஆனால் என் பொருட்டோ அல்லது இவள் பொருட்டோ கொஞ்சம் தயவு செய்ய வேணும்."

அர்ச்சகர் புன்னகை செய்து கோயிலின் பக்கம் விரலைக் காட்டினார். "ஏற்றுக் கொள்ளவும் இறக்கி விடவும் உரிமை படைத்தவள் அவள். நீங்கள் நிற்பது, நான் நிற்பது, அதோ அந்தச் சின்னப் பெண் நிற்பது அந்த மரம், செடி, கொடியெல்லாம் நிற்பது இந்தப் பூமியில் தானேயன்றி யார் மீதும் அல்ல. உங்களை நானோ, என்னை நீங்களோ, நம்மை வேறு யாருமோ நிச்சயமாகத் தாங்க முடியாது. ஆகவே உங்கள் வருகையை ஒரு தொல்லையாகப் பாவிக்கச் சந்தர்ப்பமேயில்லை. மற்றதைப் பிறகு பேசிக் கொள்ளலாம் போங்கள். போம்மா! இது உன் தமக்கைதானே" என்று அந்தப் பெண்ணிடம் கேட்ட போது இல்லை என்பது போல் தலையை மட்டும் ஆட்டினாள். இருவரையும் அருகருகில் பார்த்த போது அவருக்கு அவர்களுடைய தோற்றம் அப்படித்தான் உணர்த்தியது. முகத்தில்தான் இலேசான வாட்டம் பதிவாகியிருந்ததேயன்றி உடம்பு ஒரு நல்ல வளர்ச்சியுடனேயே இருந்தது. அந்த வாடிய முகத்திலேகூட இளமையின் வசீகரம் ஒளிந்து கொண்டிருந்தது. கைகளும் கழுத்தும் உடம்பும் அந்த உணர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டின. வயது இருந்தால் நாற்பது இருக்கலாம். அந்தப் பெண்ணுக்கு இருபதுக்குள் இருக்கும்.

அவள் இல்லை என்பது போல் தலையை மட்டும் ஆட்டியவுடன் கொஞ்சம் அதிசயித்த தேசிகர், "இல்லே?" என்ற கேள்வியை விழியின் வழியே காட்டியபோது "சின்னம்மா!" என்றாள் அவள்.

சந்தேகத்தில் பாதி வெற்றி பெற்றுவிட்ட திருப்தி அவருக்கு.

"அழைத்துக் கொண்டு போ. கொஞ்சம் இளைப்பாறுங்கள்...." என்றவர், "பரமேசுவரி...." என்று பெருமூச்சினிடையே கூறி விட்டு அங்கிருந்து நகர்ந்தார். கோயில் சந்நிதி முன்னால் வந்து நின்று மூலஸ்தானத்தில் இருக்கும் துர்க்கையைச் சில விநாடிகள் கண் கொட்டாமல் பார்த்தார். பிறகு போய்விட்டார்.

பிற்பகலின் உக்கிரம் மெதுவாகத் தணிந்து கொண்டிருந்தது. ஒரு பாதுகாப்பான இடத்துக்கு நிரந்தரமாக வந்து விட்டோம் என்று பூரணமான அமைதி ஏற்பட்டுவிட இந்தக் குறுகிய கால நிர்ணயம் நிச்சயமாகப் போதாதுதான். ஆனால் சில இருப்பங்களின் ஆரம்ப நிலைகள் நிரந்தர அமைதிக்கான ஒரு நம்பிக்கையை ஒரு கோடியிட்டுக் காட்டுவதை அதன் தொடக்கத்திலேயே உணர முடியும் என்றும் தர்மு அடைந்த சிறு நிம்மதியும் இவ்வகைப்பட்டதே!

சென்னையிலிருந்து பகல் நேர ரயில் ஒன்றில் அந்தத் திருவாலங்காடு என்ற சின்ன ஊரில் வயது வந்த பெண் நாயகியுடன் இறங்கிய போது உள்ளத்தில் எந்தவித எதிர்கால எண்ணங்களும் இல்லாமல் ஒரு பயங்கரமான, பாபமான, அநுசிதமான மனிதனின் அரக்கப் பிடியிலிருந்து தானும் நாயகியும் தப்பித்தால் போதும் என்றுதான் ஓடி வந்தாள். அப்பகல் நேரப் பாஸஞ்சரில் கௌரவப் பிரயாணியாக அவள் ஏறி அமரும்போதும் இந்த ரயில் எங்கே சென்று கடைசியாக நிற்கிறதோ, அங்கேதான் தன்னுடைய அடுத்த கட்ட வாழ்க்கை தொடங்க வேண்டியிருக்கும் என்று எண்ணித்தான் குறிக்கோளற்றவளாக, எதிர்கால நிர்ணயம் இல்லாதவளாக புறப்பட்டாள். இருள் சூழ்ந்த அவள் பிரயாணத்தில் சின்னத் தடங்கலான இது அவளை அதிகம் பாதிக்கவில்லை. இந்தத் தடையைப் பற்றி முடிவுக்கு வர அவளுள் எந்தவிதத் தீர்மானமும் இல்லை. எனவேதான் பாதி வழியில் அவள் இறக்கி விடப்பட்டபின் தான் ஒரு பெரிய பாலைவனத்தில் விடப்பட்டதாக அவள் கருதவில்லை. இத்தனை நாட்கள் தான் இருந்ததே ஒரு பாலைவனம்தானே என்ற எண்ணம் பின்னதின் வித்தியாசத்தை அதிகப் படுத்தவில்லை.

அவளை இறக்கிவிட்ட ரயில் புறப்படும் வரையில் அங்கே நின்றவள் பிறகு வடக்குப் பக்கம் செல்லும் மண் ரஸ்தாவில் இறங்கி நடந்தாள். அந்த நேரத்தில் அந்தத் தனிமைப் போதில் இப்படியே நடப்பதுகூட வாழ்க்கைப் பிரச்னைகளைப் போக்கிவிடும் போல் ஓர் 'இதம்' அத்தனிமை நடையிலே இருந்தது.

எப்பொழுதேனும் அவர்களைத் தாண்டிச் செல்லும் ஒன்றிரண்டு லாரி, புழுதியைக் கிளப்பிவிட்டு மறையும்.

உடன் வருகிற நாயகி சொப்பனத்தில் நடப்பவள் போல் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

தொடங்கிய பயணம் ஒருசேருமிடத்தைத் தேடியிருந்தால்தானே முடியுமிடமும் அதாக இருக்கும். அதுதான் இல்லையென்றாகி விட்டதே! எனவேதான் அவர்களிடையே கேள்வி பதில்களோ, வார்த்தைப் பரிவர்த்தனைகளோ, ஒருவரை யொருவர் ஆறுதல் படுத்திக் கொள்வதோ நடக்கவில்லை.

சின்ன ஊராக இருந்தால் அந்த ஊரை நெருங்கும் புதியவர்களுக்கு முதலில் தெரிவது ஆலய கோபுரமாகத்தான் இருக்கும். அதே போலத்தான் தர்முவின் கண்களிலே பட்டது இந்த ஆலய விதானம்!

அஸ்தமனம்!

தேசிகர் சந்தியாகால பூஜைக்குச் சென்று விட்டார்.

பிற்பகலிலும், மாலையிலும் அவர் அவர்களிடம் வேறு ஒன்றுமே கேட்கவில்லை—சாயங்காலம் கோயிலுக்குள் சென்றவர் பூஜையை முடித்துக் கொண்டு இரவு நேரம் கழித்துத் தான் திரும்பினார்.

"சாப்பிடுங்கள்" என்று நிவேதனத்தை இலையில் வைத்துத் தர்முவிடம் நீட்டினார்.



தர்மூவும், நாயகியும் அதில் இருந்த தயிர் சாதத்தை உண்டனர்.

''என்னுடன் வாருங்கள்'' என்று புகை யேறிய அரிக்கனுடன் அவர் முன்னே செல்ல அருகிலிருந்த மற்றொரு குடிசைக்குள் அவர் களை அழைத்துச் சென்றார். ''இங்கே உங்கள் சௌகரியம் போல் இருக்கலாம். நிம்மதி யுடன் தூங்குங்கள்'' என்றவர், அங்கே பளிச்சென்த் துடைத்து வைத்திருந்த மற்றோர் அரிக்கனை ஏற்றிக் குடிசை மூங்கிலில் தொங்கிய கம்பியில் மாட்டி விட்டார். பிறகு வெளி யேறி விட்டார். விளக்கொளியில் அக்குடிசை யைப் பார்த்தாள் தர்மூ. நான்கைந்து பழைய டயர்கள், பெட்ரோல் டின்கள், கார் டியூப்கள் இரண்டு மூன்று மூலையில் ஒன்றன் மேல் ஒன்றாகக் கிடந்தன. சுவரில் அடிக்கப் பட்டிருந்த 'டாணு' ஆணியில் இரண்டு மூன்று இரும்பு வளையங்கள் தொங்கின. இவை தவிர ஒரு மர பீரோ, மூங்கில் கட்டில் ஆகியவையும் இருந்தன.

சிமிண்டுத் தரை. சுப்புரவாக இருந்தது. அங்கிருந்த கோரைப் பாயை எடுத்து விரித்துப் படல் போன்ற குடிசைக் கதவைச் சாத்திவிட்டு விளக்கைச் சின்னதாக்கி, தர்மூ படுக்க வரும் வரை நாயகி குத்துக்காலிட்டு ஒரு மூலையில் அமர்ந்திருந்தாள்.

வெளியே காற்றின் ஓசை இடையறாது கேட்டுக் கொண்டே இருந்தது. பனை ஓலை களின் இடுக்கு வழியே அதை உரசிக் கொண்டு உள்ளே வரும்போது சில நூதன ஒலிச் சேர்க்கையாகக் கேட்டது.

''நாம் இங்கேயே தங்கிவிட முடியுமா சித்தி?'' என்று நாயகி சிந்தனையுடன் தர்மூ வைக் கேட்டாள்.

''அந்தத் தூர்க்கையம்மனைப் பார்த்தவுடன் அதான் வேண்டிண்டேன். 'உன் நிழலிலே எனக்கொரு இடம் கொடம்மா, காலமெல் லாம் இங்கேயே கிடக்கேன். உன் தயவிலே எனக்கொரு வழியைக் காட்டு' என்று.''

வெளியே அமைதி குடிகொண்டிருந்தது. நாயகியும், தர்மூவும் இரவு வெகு நேரம் வரையில் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பின் விரைவில் கண் அயர்ந்தனர்.

2

குடத்து நீரைக் கர்ப்பக்கிருகத்துக்கு அரு கில் வைத்துவிட்டு வெளியே நின்றாள் தர்மூ.

''என்பெயர் தர்மூ. அவள்பெயர் நாயகி!''

''ஓ... தோ !....''

''பட்டணத்திலிருந்து வர்றோம்.''

''அப்படியா ?''

குடத்து நீரை உள்ளே இழுத்துக் கொண்ட வர் அதைத் தூர்க்கையின் மேல் ஊற்றினார். கையினால் விக்கிரகத்தை நன்றாகத் தேய்த்து விட்டு மீதமிருந்த குடத்து நீரை அதன்மேல் கொட்டிவிட்டுக் குடத்தை இடத் தோளில் வைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

'' சொல்லுங்கள் ! உங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற சிரத்தை யுடன்தான் இருக்கிறேன்.'' தேசிகர் முன்னே செல்லத் தர்மூ பின்னே நடந்தாள்.

''பட்டணம். பள்ளிக்கூடமொன்றில் நான் டீச்சரா இருந்தவ.''

''அப்படியா ?''

''ஆமாம். சில மோசமான சூழ்நிலைக்கு நடுவிலே தடுமாறிக் கொண்டிருந்தேன்! அதி லிருந்து மீளவே முடியாத இக்கட்டு.''

''நல்ல உத்தியோகத்தில் இருந்திருக்கி றீர்கள். அதை விட்டு விட்டு......?''

''உத்தியோகம் நல்ல உத்தியோகம்தான். பின்னணி வாழ்க்கையை ரொம்ப மோச மானதாக அமைத்துக் கொண்டு விட் டேன், தெரியாத்தனமாக'' என்ற தர்மூ, ''குடத்தை வையுங்கள். நான் தண்ணீர் இறைத்துத் தருகிறேன்'' என்று தண்ணீர் இறைக்கப் போன தேசிகரைத் தடுத்து விட்டுத் தான் இழுத்தாள்.

''சின்னக் கோயில்தானே நானே தினம் தண்ணீரைக் கொட்டிக் கழுவி விடுவேன் '' என்றார் தேசிகர்.

''அதை நான் செய்கிறேனே.''

மீண்டும் குடம் மாறியது !

தேசிகர் முன்னே சென்றார்.

''பக்கத்தில் கொஞ்ச தூரத்தில் சில கிராமங்கள் இருக்கின்றன. எப்பொழுதேனும் திடீர் திடீர் என்று இந்தத் தூர்க்கை மேல் பக்தி கொண்டு கிராம மக்கள் வருவார்கள். தாரை தப்பட்டையோடு வந்து அமர்க்களப் படுத்தி விட்டுப் போவார்கள்.''

தேசிகர் தான் சொல்லிக் கொண்டு வந்ததைச் சற்றே நிறுத்திவிட்டுக் கோயிலின் முன் தளத்தைச் சுத்தம் செய்வதில் ஈடுபட் டார். ஆங்காங்கு இறைந்து கிடக்கும் தேங் காய் நார், தேங்காய் ஓடு, வாழை இலைச் சருகு, காய்ந்த பூக்கள், சூடம் சாம்பிராணி கட்டிக் கொண்டு வரும் சிறு காகிதங்கள் ஆகியவைகளைக் கூட்டி எறிந்து விட்டுத் தர்மூ விடமிருந்த குடத்து நீரை வாங்கிக் கொட் டிக் கழுவினார்.

''நீங்கள் சொல்லுங்கள். நீங்கள் பார்த்து வந்த உத்தியோகத்தை விடும்படியாக நேர்ந்த சூழ்நிலை எப்படி வந்தது?'' என்று கேட்டார் தேசிகர்.

தேசிகர் இப்படிக் கேட்டதும் தூரத்தில் எங்கோ பார்த்துக் கொண்டு தன் புடவையை உலர்த்துகிற சாக்கில் நிற்கும் நாயகியைப் பார்த்தான் தர்மு.

வாழ்க்கையில் சில விஷயங்கள், பிறரிடம் சொல்லிப் பெருமைப்படக் கூடியதாக இருக்கும், ஆனால் சில விவரங்கள் மௌனப் பேழையில் பரம ரகசியமாகப் பாதுகாக்க வேண்டியவைகளாகி விடுகின்றன. அந்தப் பேழையின் மூடியைத் திறக்க வேண்டிய சந்தர்ப்பம் நேரும் போது உண்டாகிற தன்மானத் தயக்கம் அவனைச் சிறிது நேரம் தயங்க வைத்தது. அதிலே நாயகியின் மானப்பிரச்னையும் அடங்கியிருக்கிறதே.

தேசிகர் ஆலய சந்நிதியைச் சுத்தம் செய்து விட்டு மீண்டும் திண்ணைக்கு வந்தார். கோயிலுக்குப் பின்புறமுள்ள வாழைக் கன்றுகளுக்குத் தண்ணீர் கொட்டும் வேலையில் ஈடுபட்டார்.

தர்முவுக்குத் திடீரென்று ஒரு பெரிய தயக்கம் வந்து விட்டது. நம்முடைய வாழ்க்கைப் பின்னணியை இவரிடம் அவசியம் சொல்லத்தான் வேண்டுமா? அப்படியொரு நிர்ப்பந்தம் எங்கே வந்தது? தேசிகர் அவன் பேச்சுக்காகக் காத்திருக்கவில்லை. தம் வேலையில் ஈடுபட்டவர் துர்க்கையம்மனுக்குப் பூஜையை முடித்துவிட்டுத் தம் இருப்பிடத்துக்குப் போய்விட்டார்.

பிற்பகல்!

துர்க்கையம்மனுக்கு யாரோ எப்பொழுதோ கொடுத்த சிவப்பு நிறப் பட்டுப் பாவாடையில் இருந்த கிழிசல் ஒன்றைத் தம் குடிசைக்கு வெளியே உட்கார்ந்து தைத்துக் கொண்டிருந்தார் தேசிகர். தயங்கித் தயங்கி அங்கே வந்த தர்முவைப் பார்த்து இலேசாகச் சிரித்தார்.

'' ஏதோ பலத்த யோசனையில் இருக்கிறீர்களோ?'' என்றார் புன்னகையுடன்.

''ஆமாம்'' என்றான் தர்மு.

முகத்தை மட்டும் உயர்த்தித் தர்முவைப் பார்த்தார் அவர்.

''உங்களிடம் என்னுடைய விண்ணப்பமொன்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நீங்கள் அதற்கு உத்தரவுகொடுத்தால்..''

தைத்துக் கொண்டிருந்த பட்டுப் பாவாடையைக் கீழே வைத்தார். ''தாராளமாகச் சொல்லலாம்'' என்றார்.

''இந்த விண்ணப்பம் எனக்காக மட்டுமல்ல; நாயகிக்காகவும் தான். நீங்கள் உதவி செய்ய வேணும்.''

''என்னால் முடிகிறதாக இருந்தால் அவசியம் செய்கிறேன்.''

'' உங்களால் முடியும் என்றே நான் நினைக்கிறேன்.''

''அதை தான்தானே சொல்லணும் !''

''இந்த இடத்தில் நாயகியுடன் நான் கொஞ்சநாட்கள் தங்கலாமா? அதற்கு நீங்கள் சம்மதம் தருவீர்களா? உங்களுக்கு எந்தவித தொல்லைகளையும் நான் தர மாட்டேன். பயன் தரும் ஆக்க வேலையில் ஈடுபடுவதன் மூலம், உங்கள் சிரமத்தைக் குறைத்து நானும் பயன் தேடிக் கொள்வேன். கொஞ்சம் தாராள மனத்துடன் ஓர் ஏழைக்கு உதவும் எண்ணத்துடன் சிந்தித்துப் பதில் சொல்லுங்கள். நீங்கள் எனது விண்ணப்பத்துக்குக் கொடுக்கிற பதிலைப் பார்த்துக் கொண்டு தான் நான் எனது வாழ்க்கைப் பின்னணியையும், எந்த ஒரு தீய சக்தி என்னை இப்படி விரட்டி விட்டிருக்கிறது என்ற விவரத்தையும் சொல்லுவேன்.''

தேசிகர் சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்.

''உங்களைப் போலத்தான் நானும் என் தம்பியும் ஒரு நாள்,—அது எத்தனை வருஷங்களுக்கு முன்னால் என்று நினைவில்லை — இங்கே வந்தோம். இங்கே ஒரு வயதான தாடிப் பண்டாரம்தான் இருந்தார். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நான் வந்த அன்று, அவர் கடுமையான ஜுரத்துடன் அதோ அந்தக் கோயில் முன் மண்டபத்தில், பழைய ஓலைப் பாய், கிற்று, சாக்கு இவைகளைப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். பரஸ்பரம் விவரம் கூடத் தெரியாமல், தெரிந்து கொள்ளாமல் முதல் வேலையாக அவருக்குக் கஞ்சி வைத்துக் கொடுத்தேன். நான் வந்த இரண்டு நாட்கள் வரைதான் அவர் உயிருடன் இருந்தார். என்னையும் இந்தத் துர்க்கை அம்மனையும் மாறி மாறிப் பார்த்தார். எனது கைகளைப் பிடித்து உள்ளத்து உணர்ச்சிகளால் ஏதோ சொல்ல முற்பட்டார். அவரால் முடியவில்லை. ஆனால் அந்த இறுதி நேரத்துச் சங்கேத சமிக்ஞையை, ஏதோ கட்டளையாக நான் பாவித்துக் கொண்டு ஆகட்டும் என்பது போல் தலையை மட்டும் ஆட்டினேன். மெதுவாகக் கையை மட்டும் உயர்த்தித் துர்க்கையைச் சுட்டிக் காட்டி என்னையும் அந்த விரலால் தொட்டார். என் உடல் அப்பொழுது சிலிர்த்தது போல் அதைச் சொல்லும் இந்நேரத்தில்கூடச் சிலிர்க்



உங்கள் எல்லோருக்கும் எங்களுடைய

புது வருட வாழ்த்துக்கள்!

எங்களிடம்
உங்களுக்குத்
தேவையான
உயர்ந்த ரக

வைரங்கள்
மாணிக்கங்கள்
மரகதங்கள்
நீலங்கள்
வைடூர்யம்
கோமேதகம்
வேலைப்பாடுள்ள
தங்க நகைகள்
வெள்ளிப் பாத்திரங்கள்
இன்னும்
அருமையான
பரிசு வகைகள்
(CUPS-TROPHIES-CASKETS & REPLICAS)
நிறைய கைவசம் உள்ளன

எங்கள் ஷோ-ரூமுக்கு விஜயம் செய்யுமாறு உங்களை அழைக்கிறோம்

பாபாலால் & கம்பெனி

வைரம், பொன் நகை வியாபாரிகள்

ராட்டன் பஜார், மதருஸ் - 3

இறந்த. நான் அவர் சமிக்ஞையைப் புரிந்து கொண்டவனாக ஆகட்டும் என்பதுபோல் தலையை ஆட்டினேன். அதோடு அவர் உயிர் பிரிந்தது.''

நெகிழ்ச்சியுடன் மீண்டும் பேசினார்.

''எனக்கும் இந்த இடத்துக்கும் உள்ள ஒப்பந்தம் வெறும் சமிக்ஞையினால் மட்டும் நிர்ணயிக்கப்பட்டதுதான் அம்மா! இந்த இடத்துக்கு எத்தனை காலத்துக்கு நான் சொந்தக்காரன் என்பதெல்லாம் அந்தத் தூர்க்கையின் சங்கேதத்தில் இருக்கிறது. முடிவாக நான் இங்கே தங்கிவிட முடிவு செய்து விட்டேன். ஆனால் என் தம்பி ரங்கனுக்கு இந்த வனாந்தரம் கொஞ்ச நாட்களில் அலுத்துவிட்டது. அவன் ஒரு நாளைக்குச் சொல்லாமல் கொள்ளாமல் எங்கோ போய் விட்டான். அவன் எங்கே போனான் என்று தேடும் முயற்சியில் நான் இறங்கவில்லை. அவனுக்கு இந்தச் சூனியவெளி பிடிக்காததால்தான் போய்விட்டான் என்ற அளவுக்குப் புரிந்து கொண்டேன். பிறகு ரொம்ப வருஷங்களுக்குப் பின் ஒரு நாள் ஒரு பெரிய லாரியைப் புழுதி பறக்க ஓட்டிக் கொண்டு வந்து இங்கே நிறுத்தினான்.

''தன் வாழ்க்கையை அவன் அந்தவகையில் ஏற்பாடு செய்து கொண்டு போய்விட்டான். மாதத்தில் ஒரு தடவை கடிதம் போட்டால் வருவான். இப்பொழுதைக்கு இங்கே நான் ஒருவன்தான். நீங்கள் இங்கே தாராளமாகத் தங்கலாம். ஆனால் நான் இதை எனது அம்பிகையின் வாக்கு வராமல் சொல்ல மாட்டேன். 'அவள்' சம்மதம் கொடுத்தால் தான் நீங்கள் இங்கே தங்கலாம். அவள் சம்மதம் கிடைக்கவில்லையென்றால் அது தூர்க்கைக்குச் சம்மதமில்லை என்று எடுத்துக் கொள்ளவேணும்'' என்று கூறிவிட்டு இரண்டு காகிதங்களில் ஒன்றில் பூவிதழையும் மற்றொன்றில் விபூதியையும் மடித்துக்கொண்டு தூர்க்கையின் சந்நிதானம் நோக்கி நடந்தார்.

'''.... உங்கள் மகளைக் கூப்பிடுங்கள். பாரபட்சமில்லாமல் தூர்க்கையின் வாக்கை இந்தத் திருவுளச் சீட்டிலிருந்து அவள் எடுக்கட்டும். இதற்கு நீங்கள் சம்மதித்தே ஆகவேணும்'' என்று கூறிக் கொண்டே சன்னதிக்குள் நுழைந்தார்.

நாயகியை அங்கிருந்தே அழைத்தாள் தர்மு. அவள் குடிசைக்குள்ளிருந்து ஓடி வந்தாள்.

''வாம்மா, இந்த அம்பிகையை மனசில் நினைத்துக் கொண்டு குலுக்கிப் போடுகிற திருவுளச் சீட்டில் ஒன்றை எடுத்துக் கொடு'' என்று நாயகியிடம் சொல்லிக் கொண்டே திருவுளச் சீட்டைக் கரத்தினுள் வைத்துக் கொண்டு சில விநாடிகள் கண்மூடித் தியானத்தில் இருந்தார் தேசிகர்.

வாழ்வின் நல்ல சமிக்ஞைக்காக அங்கே சிறிது நேரம் தவம் இருந்தாள் தர்மு. பெரிய மாறுதலை அவ்வளவு சீக்கிரத்தில் அவள் எதிர் பார்க்கவில்லைதான் என்றாலும் அந்த மாறுதலுக்கான அறிகுறிகள் தென்படுகிறதா என்பதைக் காணத்தான் அந்தத் தவம்!

குலுக்கிய சீட்டைக் கீழே போட்டார் தேசிகர். நாயகி குனிந்து எடுப்பதை மிகுந்த நம்பிக்கையுடன் பார்த்துக் கொண்டு நின்றாள் தர்மு.

தேசிகர் நாயகி எடுத்துக் கொடுத்த சீட்டைப் பிரித்தார்.

பூவிதழ்!

தூர்க்கையின் சம்மதம்.

தர்மு கண்களில் பொலபொலவென்று கண்ணீர் வரத் தூர்க்கையைப் பார்த்து நமஸ்காரம் செய்தாள். தலையை நிமிர்த்தியபோது தேசிகர் அங்கே இல்லை.

பரவசத்துடன் தேசிகரின் முன் மீண்டும் வந்து நின்றபோது அவர் அம்மனின் பட்டுப் பாவாடையின் நாடாவைச் சரி செய்து கொண்டே ''நீங்கள் இங்கே தங்க தூர்க்கையிடம் திருவுளச் சீட்டுப் போட்டு ஏன் சம்மதம் கேட்டேன், தெரியுமா? என்னை முன்பிருந்த பண்டாரம் எந்த வித யோசனையுமின்றி இங்கே இருக்கும்படி சொல்லிச் சமிக்ஞை மூலம் உத்தரவு போட்டுவிட்டுப் போய்விட்டார். அதைப் போல் நான் செய்யாததற்குக் காரணம் நீங்கள் பெண்களாக இருப்பதுதான். ஆயிரம்தான் முன்னேற்ற உலக மாறுதலை நாம் ஏற்றுக் கொண்டாலும் கூட வாழ்வின் சங்கேதம் என்பதை நாம் ஒரு கண்ணுக்குத் தெரியாத சக்தியின் மூலம் தான் ஏற்கிறோம் இல்லையா?

''என் தம்பி ரங்கன் எப்பொழுதேனும் இந்த வழியே லாரியில் 'லோட்' ஏற்றிக் கொண்டு போகும்போது இப்படியே வருவான். தங்கிவிட்டுப் பிறகு உடனே போய் விடுவான். என்னுடன் சின்னவனாக இருந்து பிரிந்தவன். சென்னை போன்ற பெரிய பட்டணத்தில் அவன் தன்னை உருவாக்கிக் கொண்ட விதம், இன்று அவன் நடத்துகிற வாழ்க்கை, சில சிநேகிதம், இவையொன்றுமே எனக்குப் பிடிப்பதில்லை என்பதற்காக அவன் மாறவும் தயாரில்லை. அதோ அந்தக் குடிசையில் குடித்துவிட்டுக்கூட சில நாட்கள் படுத்திருக்கிறான். நான் பார்த்தும் பார்க்காமலும் போய்விடுவேன் என்றாலும் என்மேல் ரொம்பப் பிரியமுள்ளவன். எப்படியோ சம்பாதித்துச் சொந்தத்தில் 'செகண்ட் ஹேண்ட்' லாரி ஒன்று வாங்கி ஓட்டுகிறான். இப்பொழுதெல்லாம் அவன்கூட அடிக்கடி வருவது நின்று விட்டது. எனவே அதற்காகவும் நாம் பயப்பட வேண்டாம்.''

தேசிகருக்கும் தனக்கும் ஏற்பட்ட இந்த இரண்டு நாள் பழக்கத்தில் அவள் மனத்தில் நியாயமான நம்பிக்கை யொன்று எழுந்து விட்டது. ஒரு மனிதாபிமானியின் நிழலில் ஒதுங்கியிருப்பதாக ஒரு நம்பிக்கை பிறக்கவே, சிறிது நிம்மதியும் பிறந்தது தர்முவுக்கு. உள் மனத்தில் ஏற்பட்ட நிம்மதியின் பிடிப்பு ஓரளவு வெளி நடுக்கத்தைப் போக்கியது.

3

''நான் சென்னைப்பள்ளிக்கூடமொன்றில் ஆசிரியையாக இருந்தேன். பிறகு வேறொன்றின் தோட்ட வேலைப் பகுதிக்குப் போதக

ராகவும் இருந்திருக்கிறேன்'' என்றான் தர்மு தேசிகரிடம். அப்பொழுது அவர் கோவிலின் பின்புறத்து வாழைத் தோட்டத்தைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்.

''ஓ... ஹோ...'' என்றார் தேசிகர்.

''எனக்குச் சில யோசனைகள் தோன்றுகின்றன. இந்தக் குறுகிய கால அளவில் என் மேல் உங்களுக்கு நம்பிக்கையும், நல்லெண்ணமும் உண்டாயிருந்தால் அந்த நம்பிக்கையின் பலத்தோடுதான் இந்த யோசனையை நான் வெளியிடுகிறேன்'' என்றான் மிகுந்த தயக்கத்துடன்.

தேசிகர் தம் வேலையை முடித்துக் கொண்டு அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் வேலிக்குச் சற்றே தள்ளியிருந்த ஒரு மரத்தின் வேரில் வந்து அமர்ந்தார். தர்முவும் அப்பூவரசு மரத்தடியில் தேசிகருக்கு எதிரே வந்து அமர்ந்தான்.

''சொல்லுங்கள். என்னவெல்லாம்சொல்ல நினைக்கிறீர்களோ எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றிச் சொல்லுங்கள். உங்கள் வாழ்க்கை மிகவும் சிக்கல் நிறைந்தது என்று எனக்குப் பட்டால் அதைச் சரி செய்ய என்னால் இயன்ற முயற்சிகளைச் செய்கிறேன். நானோ, நீங்கள் இருந்துவிட்டு வந்திருக்கிற நவீன யுகத்துடன் ஒட்டாதவனே. ஓரளவு அதன் சாயலை மட்டும் அவ்வப் பொழுது என் தம்பி இங்கே வருகிறபோது பார்க்கிறேன். அவ்வளவுதான். ஆகையால் உங்களுடைய அல்லது உங்களைப் போன்றவர்களுடைய சிந்தனை வலிமையோடு செயல்படஅருகதையற்றவனாகக் கூட இருக்கலாம் இல்லையா?''

தர்மு மௌனமாக அமர்ந்திருந்தான்.

தேசிகரிடம் எதையும் மறைத்துக் கூற வேண்டும் என்ற எண்ணம் அவனிடம் இல்லையாகையால் எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கூறி, அதன் பின்பு நிவாரணம் பெறவே அவன் விரும்பினான்.

''என்னுடன் நான் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேனே நாயகி அவள் என் கண



வரின் முதல் மனைவிக்கும் பிறந்தவள்'' என்றான்.

சரியான இடத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறோமா என்ற இலேசான தயக்கம் இருந்தாலும் அதிலிருந்தே தொடர்ந்து கூற முடிவு செய்து ஆரம்பித்தான்.

''நாயகியை அவர் என்னிடம் எட்டு வயதில் ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டார்.''

''காலமாகி விட்டாரா?''

''ஆமாம்.''

''பாவம்.''

''நான் அப்பொழுது பட்டணத்துக்கு அருகில் வண்டலூரில் இருந்தேன். விதியையும் வாழ்க்கையையும் ஒன்று சேர்த்து ஆராயும் ஓர் அறிவுபூர்வமான நிலைகளை யெல்லாம் எட்டாத நாட்கள் அவை. என்னுடைய ஏழ்மையான வாழ்க்கையின் காரணமாக அவசியத்தின் பொருட்டுச் சம்பாதிக்கத் தொடங்கியதால் உண்டான ஒரு கடமை உணர்வின் பிடிப்பிலிருந்து நழுவாமலே இருந்தேன். எந்தவித உற்சாகமான சூழ்நிலையையும் நான் தேடிக் கொள்ளாததற்கு இப்பிடிப்பும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்.''

''பெற்றோர்கள்?''

''பெற்றோர்கள் இல்லை. உறவு முறை என்பதற்கு யாரோ சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களால் எனக்கோ என்னால் அவர்களுக்கோ எந்த விதப் பிரயோசனமுமில்லை.''

''ஏதாவது சச்சரவா?''

''சச்சரவு நானே ஏற்படுத்திக் கொண்டது தான். காரணம் நான் சீரான வாழ்க்கையிலிருந்து நிலைதடுமாறி வீழ்ந்து விட்டேன்.''

''நிலைதடுமாறும்படி என்ன ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலை எப்படி வந்தது?''

''இரண்டாந் தாரமாக நான் நாயகியின் தந்தைக்கு வாழ்க்கைப்பட்டேன். இவளை என்னிடம் விட்டுவிட்டு அவர் போய்விட்டார். அதன் பின்....'' தர்மு தயங்கினான்.

''அதன் பின்?''

''நான் ஒரு கயவனை நம்பி மோசம் போய் விட்டேன். என்னை அவர் விரும்புவதாக முதன் முதலில் கூறியபோது நாயகியால் எனக்கு ஏற்பட்டிருக்கிற பொறுப்பை அவரிடம் கூறினேன். அதற்கு அவர் தடை ஏதும் கூறவில்லை. அதையொரு பெரிய விஷயமாகப் பாவிக்காமல் என் உற்சாகத்தை இன்னும் பல விதங்களில் கிளப்பி விட்டு விட்டு ரொம்ப நல்லவர் போல நடிக்கத் தொடங்கினார். நாயகிமேல் தமக்கொரு தனி அக்கறை



தலை கவிழ்ந்தார்!

அமெரிக்காவில் கென்டகி என்ற நகரத்திலிருந்து வெளிவரும் ஒரு செய்திப் பத்திரிகையின் விளம்பரப் பகுதியில் ஒரு நாள் பின்வரும் விளம்பரம் காணப்பட்டது: ''நான் இப்போது கர்ப்பிணி. தினமும் ஆபீஸ் நேரம் தவிர மற்ற நேரங்களில் நாளிதழிலேயே தலையைக் கவிழ்ந்துக் கொண்டிருக்கா விட்டால் இதை எப்போதோ தெரிந்து கொண்டிருப்பீர்கள்.——உங்கள் மனைவி.......''

ஆதாரம்: ''டிட்பிட்ஸ்''
தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

இருப்பது போலக் காட்டிக் கொண்டார். நான் விதவையானாலும் கூட அவர் என்னை மணமுவந்து 'ரிஜிஸ்டர் மேரேஜ்' செய்து கொண்டது என் பெற்றோர், தம்பிகள் ஆகியோரிடையே பிளவை உண்டாக்கி விட்டது. என்னுடைய இந்தப் புதுப் பிணைப்பை என் குடும்பத்தில் யாரும் வரவேற்கவில்லை. எனவே நான் தனியாக என் குடும்பத்தினின்று பிரிந்து போக வேண்டியதாகி விட்டது. சச்சரவுக்குக் காரணம் விளங்கியதா?'' என்று கேட்டுவிட்டுத் தர்மு நகைத்தாள்.

''பிறகு?'' என்றார் தேசிகர்.

''பிறகுதான் அசம்பாவிதங்களெல்லாம் நடக்கத் தொடங்கின. ஆரம்ப நாட்களில் ரொம்பக் கண்ணியத்துடன் இருப்பதுபோல் இருந்து பிறகு விபரீதமான முறையில் அவர் மனம் திரும்புவதைக் கண்டேன். இந்த விபரீதமான திருப்பத்துக்கு நாயகியின் வளர்ச்சி முதல் காரணம். அவருக்கு என் மேல் இருந்த அன்பும் ஆசையும் மாறி விட்டன.''

தர்மு தூரத்தில் பார்வையை அலைய விட்டு விட்டுச் சிறிது நேரம் மௌனித்திருந்தாள். காற்றில் பூவரச மரம் சப்தித்தது. காற்றின் திசையில் ஒரு பெரிய மணல் கும்பல் வேகமாக இடம் மாறிக் கொண்டிருந்தது. தேசிகர் அசைவற்று அமர்ந்திருந்தார். அவரது யூகங்கள் கூடச் சிறிது செயலற்றுக் கிடந்தன.

''நாயகியின் மேல் அவருடைய ஆசை விபரீதமாகத் திரும்புவதைப் பல சந்தர்ப்பங்களில் நான் பார்த்தபோது மனம் பதறினேன். அவளைப் பாதுகாக்கிற கடமையை நான் என் முதல் கணவருக்குக் கை அடித்துத் தந்திருக்கிறேன். எப்பாடு பட்டேனும் நாயகியை ஒரு நல்ல இடத்தில் விவாகம் செய்து கொடுப்பதை என்னுடைய லட்சியமாக ஏற்று மரணத் தறுவாயில் என் முதல் கணவருக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். நான் எப்படி வாழ்ந்தாலும், எப்படித் திசை தடுமாறி வீழ்ந்தாலும் நாயகியைக் காக்க வேண்டியது என்னுடைய கடமை.

''எனது கணவர் ராஜாராமை நான் பல முறை ஜாடையாகக் கண்டித்தேன். மறைமுகமாகக் கூறி வந்த நிலை மாறி நேரிடையாகவே கத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் விரைவிலேயே வந்து விட்டன.

தேசிகர் காதுகளைப் பொத்திக்கொண்டார்.

''போதும் அம்மா. ஓரளவு என்னால் மற்றவற்றை யூகிக்க முடிகிறது. மேற்கொண்டு வேறு ஏதேனும் சொல்'' என்று கெஞ்சும் தோரணையில் கேட்டுக் கொண்டு எழுந்து நடந்தார்.

''அந்த விபரீதத்தில் அவர் வெற்றி தேடிக் கொள்ளு முன் நான் அதைத் தகர்த்து விட்டேன்.''

''அப்படியா?''

''ஆமாம்.''

''எப்படி?''

''எப்படி என்று விவரிப்பதை விட அதைத் தாண்டி வந்த பின் நடந்தவைதான் ரஸமானவை. ஒரு வக்கீலைக் கலந்தாலோசித்து விவாக ரத்து வழக்குத் தொடர்ந்தேன். விவாக ரத்து வழக்கில் நீதிபதிக்கு உள்ள விசேஷ அதிகாரத்தின் பலமோடு ராஜாராமை அழைத்து நீதிபதி சமரசம் பேச ஆரம்பித்து விட்டார். அவரோ நீதிபதியின் முன்னால் ரொம்ப ஒழுங்கானவர்போல் இனி தாம்பத்தியத்தில் எந்த விதமான மனஸ்தாபங்களும் வராதவாறு பார்த்துக்கொள்வதாக உத்தரவாதம் அளித்து விட்டார். அதன் பின்னால் நீதிபதியின் சினம் என் பக்கம் திரும்பி விட்டது.

'''நீங்கள் படித்தவர். அதோடு ஆசிரியராகவும் இருக்கிறீர்கள். உங்கள் கணவர் இறந்த பின் அவர் உங்களிடம் விட்டுச் சென்ற பெண்ணுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்பதோடு உங்கள் பாதுகாப்புக்குமாகச் சேர்த்துத்தானே இவரை முறைப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இவரிடமிருந்து விவாக ரத்துக் கேட்பது உங்களை நம்பி ஒப்படைக்கப் பட்டிருக்கிற பெண்ணுக்கு நீங்களாக ஒரு ஸ்திரமற்ற நிலையை உண்டாக்கி வைக்கிறீர்கள் என்றுதான் அர்த்தமாகிறது. குடும்பத்தில் ஏற்படுகிற மனக் கசப்புக்களுக்கெல்லாம் கோர்ட்டுதான் பரிகாரம் என்ற முடிவுக்கு உங்களைப் போன்ற படித்த பெண்கள் வர ஆரம்பித்து விட்டால் பிறகு குடும்பம் என்ற கட்டுக்கோப்புக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். கணவன் கொஞ்ச நாட்களாகச் சம்பாதிக்காமல் தொல்லை கொடுக்கிறார் என்ற உங்கள் வாதத்தை நான் ஏற்கவில்லை. அந்தக் காரணம் நிரந்தரமானதல்ல. நாயகி என்ற பெண்ணுக்குக் கார்டியனாக நீங்கள் இருப்பதில் எந்த வித ஆட்சேபணையும் யாருக்கும் இல்லை. இப்பொழுது உங்கள் கணவரான ராஜாராம் உங்களை மீண்டும் தம் மனைவியாக ஏற்பதில் தமக்கொன்றும் ஆட்சேபணை இல்லையென்றும் இதுவரை நடந்த சிறு மனஸ்தாபங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருப்பதாகவும் சொல்கிறார். எனவே இதற்குமேல் உங்களுடைய விவாகரத்து வழக்கை நடத்த அவசியமில்லை' என்று கூறி எனது விவாகரத்து மனுவைத் தள்ளுபடி செய்து மீண்டும் என்னை ராஜாராமுடன் போய்விடும்படி கூறி விட்டார்.''

''நீங்கள் கோர்ட்டிலே உங்களுக்கு ஏற்பட்டிருந்த தர்மசங்கடமான சூழ்நிலையைச் சரியாக எடுத்து வாதிடவில்லையோ?''

மனமகிழும்
காலைப் புத்துணர்வு
மணிக்கணக்கில்
நிலைத்திருக்க...

குளித்த பிறகு பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்!
பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர்
டால்க்கின் நீங்காத
நறுமணம்...ஈரத்தை இழுக்கும்
தன்மை...நாள் முழுவதும்
காலைப் புத்துணர்வின் சுகம்.
இவை யாவரையும் உங்களிடம்
ஈர்க்கும்.

கோடையானாலும் இறுக்க
மானாலும் நறுமணத்துடன்
புதுமைப் பொலிவில், குளுமை
உணர்வில் உங்களை திகழ
வைக்கும் எக்காலத்துக்கும்
ஏற்ற பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்
இந்தியாவிலேயே அதிக
விற்பனையாகும் டால்க்.

மூன்று அளவுகளில்
கிடைக்கிறது.
ஃபாமிலி, பெரியது,
மத்திமம்.




பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர் டால்க்

சொகுசான சுகமளிக்கும் மிருதுவான டால்க்
சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏயில்
இணைக்கப்பட்டது)

S/5482



ஸிக்னல் 24 மணி நேரமும் உங்கள் பற்களைப் பாதுகாக்கிறது



சிதைவுக்குக் காரணமான கிருமிகளை ஒழிக்கும் ஹெக்ஸாக்ளோரபீன் இருக்கிறது ஸிக்னலின் செவ்வரிகளிலே.

பிரஷ்ஷுக்கு எட்டாத இடம் எங்கும் எட்டி, சிதைவுக் கிருமிகளை வேட்டையாடுகிறது ஸிக்னல். அதன் நுரையின் செயல்வேகம்...வாய்மலரும் தூய்மை. அதோடல்ல. துலக்கி நெடுநேரம் ஆனபின்னரும் உங்கள் வாய்நலனைக் காத்துநிற்கும். இவ்வளவு செய்ய இயலுமோ சாமானியப் பற்பசைகளால்?



லின்டாஸ் -SG. 22-140 TM

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

"உண்மைக் காரணத்தைக் காட்டாமல் பொதுப்படையாகக் குடும்பத் தகராறு என்றும், சம்பாத்தியமின்றித் தொந்தரவு கொடுப்பதாயும் (இல்டிரீட்மென்ட்) மோசமாக நடத்துகிறார் என்றும் மட்டுமே வாதிட்டேன். நாயகி மேல் அவர் ஆசை விபரீதமாக வளர்கிறது என்பதைக் கூறாமல் விட்டதற்குக் காரணம், நாயகியின் பிற்காலம் இதனால் பாதிக்கப்படுமோ என்ற பயம்தான்.

"இதற்கு மேல் ஏதேனும் செய்ய முடியுமா என்று எனது வக்கீலைக் கலந்து பேசினேன். 'ஒரு வழக்காக இதை ஜோடனை செய்து வெற்றி பெற வேண்டுமானால் நாயகியை இதில் சம்பந்தப்படுத்தியே ஆக வேண்டும். இல்லாமல் வழக்கை ஒரு வலுவான பின்னணியில் இனி கோர்ட்டுக்குக் கொண்டுபோக வழியில்லை' என்று கூறிவிட்டார். அதன்பின் ஒன்றும் புரியாமல் சில நாட்கள் தவித்துக் கொண்டிருந்தேன். அவருடைய நகைப்பும், மிரட்டலும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே சென்றன. நாயகியின் மருண்ட விழிகள், 'இந்த மிருகத்திடமிருந்து எனக்கு விடுதலை வாங்கித் தரமாட்டாயா?' என்று கெஞ்சுவது போல் இருந்தன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாக நகர்ந்தது. கூடுமானவரையில் அவர் வீட்டில் இருக்கின்ற போது நான் வீட்டில் இல்லாத சமயங்களில் நாயகியை அங்கே இருக்க விடுவதில்லை. அவள் சிநேகிதி வீடு, டைப் இன்ஸ்டிடியூட், விவசாயப் பண்ணை என்று எங்கேயாவது அவளுடைய சிநேகிதிகள் இருக்கும் இடமாகப் பார்த்து அனுப்பி விடுவேன்."

"இந்த வழக்குக்குப் பிறகும் அவர் மாறவில்லையா?" என்று தேசிகர் கேட்டார்.

"மாறவில்லை. இன்னும் அதிக ஆத்திரத்துடன் காணப்பட்டார்."

தேசிகர் தர்முவின் தர்மசங்கடமான நிலைமையை நன்றாகவே யூகித்துக் கொண்டார். விசித்திரமான, விகாரமான மனோபாவங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கோணத்திலிருந்து அவர் ஆராய்ந்தபோது எந்த இடத்திலும் ஒரு நியாயத்தையோ, தர்மத்தையோ அவரால் காண முடியவில்லை. என்றாலும் நாயகியின் பொருட்டுத் தர்மு மேற்கொண்டிருக்கிற மனிதாபிமான முடிவு ஒன்றுதான் அவரைக் கவர்ந்தது.

"நாயகிக்காக நீங்கள் மேற்கொண்டிருக்கிற கடமையுணர்ச்சியை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேனம்மா!" என்றார் தேசிகர், குடிசையை நோக்கி நடந்துகொண்டே.

"என்னுடைய வாழ்க்கைப் பின்னணி ரொம்பச் சிதிலம் நிறைந்தது என்று எனக்குத் தெரியும். இவ்வளவையும் ஒருவரிடம் கூறி ஆறுதல் மட்டும் பெற நான் விரும்பவில்லை. அதோ அந்தக் கால தேவியிடம் சொன்னதாகவே நினைக்கிறேன். அவளே எனக்கு ஆறுதல் அளிக்கட்டும். இனி நான் ஒரு நிரந்தரமற்ற வாழ்க்கையை நம்ப முடியாது. விரும்பவும் முடியாது. நாயகிக்காக நான் ஒரு நிரந்தரத்தைத் தேடிக் கொண்டாக வேண்டும். அந்த நிரந்தரத்தை இங்கேயே தேடிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு வந்து விட்டது. எனது வாழ்க்கை பல சந்தர்ப்பங்களில் பல மூலைகளில் ஆசாபங்கப்பட்டாலும் நான் அதற்காக வருந்தப் போவதுமில்லை. அந்தப் பாவங்களை யெல்லாம் நாயகிக்கு ஒரு நல்ல வாழ்வைத் தேடித் தருவதன் மூலம் கழுவிக் கொள்வேன். அந்த ஒரு நன்மையில் நான் செய்யத் தவறிய நன்மைகளை யெல்லாம் ஈடு செய்துகொள்வேன். அதற்கு மட்டும் நீங்கள் எனக்கு உதவினால் போதும்" என்று கெஞ்சலுடன் கேட்டாள் தர்மு.

"கட்டாயம் என்னால் முடிந்ததை நான் செய்வேன்" என்று கூறிவிட்டுத் தம் குடிசைக்குள் போய்விட்டார் தேசிகர்.

4

அந்த இடத்து மண்ணின் தன்மை, அம் மண்ணில் கலந்திருக்கும் கலவையின் தன்மை இவைகளைப் பார்த்தபோது தர்முவின் உள்ளத்தில் மாபெரும் திட்டம் உருவாகிவிட்டது. கொஞ்சம் தாழ்வான நிலப்பரப்பாக அமைந்திருந்ததால் மழைக்காலத்தில் மேட்டு நிலத்திலிருந்து வண்டல் அரித்துக் கொண்டு வந்து சேர்த்ததால் மண்ணில் கலப்புச் சத்து அதிகமாக இருந்ததை மண் தன்மைகளில் ஓரளவு தேர்ச்சி பெற்ற தர்மு உணர்ந்து கொண்டாள். அதிக உஷ்ணமும் அதிகக் குளிரும் இல்லாத அந்த இடத்தில் தக்காளிப் பயிர் செய்தால் லாபகரமாக இருக்கும் என்பதைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து ஒரு தீர்மானத்துக்கு வந்தபோது, நாயகி தன் சித்தியின் எண்ணத்துக்கு ஊக்கம் அளித்தாள். நாயகிக்குத் தெரியும், தன் சித்தியின் மனோபாவங்கள். அவளால் சோம்பேறியாகக் கொஞ்ச நேரம் கூட இருக்க முடியாது. அவள் ஓர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் இருந்தபோது விவசாயம், காய்கறிப் பண்ணை முதலிய பிரிவுகளில் விரும்பிப் பணியாற்றியிருக்கிறாள். கொஞ்சம் கூட ஓய்வே கொள்ளாமல் இடையறாது உழைப்பதைக் கண்டு பிரமித்துப் போயிருக்கிறாள்.


"இந்த மண்ணின் வாகுக்கு இங்கே இருக்கிற பிரும்மாண்டமான கிணற்றையும் வைத்துக்கொண்டு தக்காளி பயிரிட்டால் இப் பூமியைப் பொன் விளையும் பூமியாக மாற்ற முடியும். எனது சாரமற்ற நினைவுகளைப் புதைத்துவிட்டு இங்கே ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்குவேன். அந்த வெற்றி நடையின் எல்லை என் நாயகியின் நல்வாழ்வோடு நிறைவுறும்" என்று அன்புடன் கூறி, தன் உயரத்துக்கு நிற்கும் நாயகியின் அழகிய கன்னத்தை இரண்டு கைகளாலும் வருடினாள்.

"நிஜமாகவா சித்தி! இங்கே தக்காளிப் பண்ணை வைக்கப் போறியா?"

"ஆமாம்! தேசிகரிடம் சொல்லி அவர் சம்மதமும் வாங்கி விட்டேன். இதோ இந்த வேலி, அதற்கு அடுத்துள்ள அந்தப் பள்ளம் வாழைத் தோப்பு வரை துர்க்கையம்மனின் நிலமாம். அதில் நாம் ஒன்றும் செய்ய முடியாது. அதற்கு அப்பால் அதோ தெரிகிறதே ஒரு மேடு, கிட்டத்தட்ட ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணம், அது புறம்போக்காம். தேசிகருக்குக் கொடுக்கப்பட்ட இனாம் தரிசாம்.

அதில் நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாமாம். சென்னை விதைப் பண்ணைக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவருக்குத் தெரிந்த ரயில்வே கார்டு ஒருவர் திருவாலங்காட்டிலே இருக்கிறாராம். அவர் சென்னை போகும் போது விதை வாங்கி வர ஏற்பாடு செய்து விட்டார். இன்னும் ஒரு வாரத்தில் தக்காளி விதைகள் வந்து விடும். அதற்குள் நமக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. இனி நாம் சோம்பேறிகளாகச் சும்மா உட்கார்ந்திருக்கக் கூடாது. கடுமையாக உழைத்தாக வேண்டும். துர்க்கையின் மகா சந்நிதானத்தின் முன் கிடைத்திருக்கும் இந்த நிவேதன பூமியை நாம் செப்பனிட்டாக வேண்டும். அதற்கு நான் தயாராகி விட்டேன். என் அளவு உன்னால் உழைக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். உன்னுடைய பிஞ்சு உடம்புக்கும், விரல்களுக்கும் இக்கரடுமுரடான வேலை பழக்கமாகக் கொஞ்ச நாட்கள் பிடிக்கலாம். அதுவரையில் என் அருகில் நீ வளைய வந்து கொண்டிருந்தால் போதும். என்ன!''

''இருக்கேன் சித்தி! நீ எந்த வேலை சொன்னாலும் செய்வேன். உன்னுடைய உழைப்பு, உன்னுடைய சிரமம், உன்னுடைய ஆவல் எல்லாவற்றிலும் என்னால் நிச்சயமாகப் பங்கு கொள்ள முடியும். உன்னுடைய உணர்ச்சிகளும், வியாகூலங்களும் எனக்குத் தெரியாதவையா? எவ்வளவு வருத்தப்படுகிறேன் தெரியுமா? அப்பா என்னை உன்கிட்டே விட்டு விட்டுப் போன பிறகு எனக்காக நீ பட்டுக் கொண்டு வருகிற சிரமத்தையும், அடைந்து வருகிற அவமதிப்புக்களையும் உன்னுடனிருந்து கவனித்துக் கொண்டுதானே வருகிறேன். அதோடு உன் மனத்தில் என்னை முன்னிட்டு நீ ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிற லட்சிய வெறியும் எனக்குத் தெரியாததல்ல. என்னால் உனக்கு என்ன செய்ய முடியுமென்று நீ எதிர்பார்க்கிறாயோ, அதைத் தைரியமாக, ஓர் உரிமைக் குரலாகச் சொல். நானும் அப்பணியில் என்னை ஈடுபடுத்திக் கொள்கிறேன். நீ படும் கஷ்டம் வேறு,



நான் படும் கஷ்டம் வேறு அல்ல. உன் துயரம்தான் என் துயரம்'' என்று கூறி விட்டுத் தர்முவுக்குப் பின்னால் தெரியும் வெறுமை வெளியில் பார்வையைச் செலுத்திக் கண் கலங்க நின்றாள் நாயகி.

ஒரு நாள் அந்திப் பொழுதில் திருவாலங்காடு ரயில்வே நிலையம் சென்று திரும்பி வந்த தேசிகர் பிரிக்கப்படாத பெரிய காகிதப் பொட்டலமொன்றைத் தர்முவிடம் நீட்டினார். சந்நிதானத்தில் பெறும் பிரசாதம் போல் அதைப் பெற்றுக் கொண்டாள் அவள்.

சென்னை சர்க்கார் விதைப் பண்ணையிலிருந்து அவளுக்குத் தேவையான தக்காளி விதைகள் வந்து விட்டன.

நீண்டு பரவிக் கிடக்கும் நிலப்பரப்பை ஆர்வத்துடன் கண்ணோட்டம் விட்டாள். அவளது பார்வையில் இருந்த மிகப் பெரிய நம்பிக்கையின் மலர்வோடு அருகில் நின்ற நாயகியின் கரத்தை இறுக்கத்துடன் பற்றினாள்.

தக்காளித் தோட்டத்துக்கான ஆரம்ப வேலைகள் மும்முரமாக நடந்தன. நாயகியை உதவிக்கு வைத்துக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தும் வேலையில் தர்மு தைரியத்துடன் இறங்கியபோது தேசிகருக்கு வியப்பாகவே இருந்தது. ஓர் ஏக்கர் நிலத்தை இவர்கள் இருவராகப் பண்படுத்தி விடுவார்களா? மண் என்னவோ கடினமானதாக இல்லைதான். மேடு பள்ளமில்லாத சமதளமான நிலம். மொற மொறப்பு இருந்ததால் மண்வெட்டி பிடித்து வெட்ட இலகுவாகவே இருந்தது. தர்மு இதை ரொம்பப் பழக்கப்பட்டவள் போல் செய்தாள். தர்மு சொல்லிக் கொடுத்தபடி நாயகி பாத்திகள் கட்டி மண் அணைத்துச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்தாள். ஒரு வேளைக்கு ஐந்து பாத்திகள் வீதம்

கணக்கு வைத்துக் கொண்டு நேரம் தவறாமல் வேலை செய்தான்.

நிலாக் காலங்களில் பகல் நேரத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டு இரவு நேரத்தில் வேலை களைச் செய்தான். கிணற்றில் தண்ணீர் மிக அருகில் இருந்ததால் இறைப்பதற்குச் சுலப மாக இருந்தது. தேசிகருக்கு இப்படியெல் லாம் வேலை செய்து பழக்கமில்லையாதலால் தர்மூவின் வேலைகளைத் தாம் எந்த அளவுக்குப் பகிர்ந்து கொள்வது என்று தெரியாமல் தவித் தார். தர்மூ தேசிகரை வேலைக்கு அழைக்க வில்லை.

தலையில் ஒரு புடவையின் கிழிந்த பகுதியை 'வேடு' போலக் கட்டிப் பின்புறம் முடிந்து கொண்டு, மண்வெட்டி பிடித்து அவன் கொத்துவதையும், அவள் கொத்திப் போட்ட இடத்தை நாயகி பாத்திகளாகப் பிரித்து மண் கரை கட்டிக் கொண்டிருப்பதையும் காணும்போது அவர் மனம் வேதனைக்குள் ளாகும். அவனுடைய நம்பிக்கை வெற்றி பெற மானசீகமாக வேண்டுவார். பிறகு அவராகவே நாயகியுடன் பாத்திகள் அமைக் கும் வேலையில் பங்கு கொள்வார். தர்மூ ரொம்பவும் களைத்துப் போய் உட்கார்ந்திருக் கும் வேளையில் மனம் கேட்காமல் தவிக்கும் தேசிகர் மண்வெட்டியை எடுத்துத் தாமும் வெட்டப் போகும் போது அவரது கையைப் பிடித்து மண்வெட்டியைப் பிடுங்கிவிடுவான் தர்மூ.

''இது நான் மேற்கொண்டிருக்கிற வேலை. இதில் உங்களை இந்த வயதில் ஈடுபடுத்தித் தொல்லை தர நான் விரும்பவில்லை. புன்னகை பூத்த முகத்துடன் நாங்கள் செய்வதற்கு அவ்வப்பொழுது அங்கீகாரம் அளித்து உற் சாகப்படுத்துங்கள். எங்களுக்கொரு 'கார்டிய னாக' நில்லுங்கள். அதுவே போதும். முன் தான் வேலியாக இருக்க வேண்டும் என்ப தில்லை. சில சமயம் மனிதர்கள்கூட முள்வேலி யாக இருக்கலாம்; இருக்க முடியும். எங் களைக் காபந்து செய்யும் ஒரு வேலியாக மட்டும் தாங்கள் இருந்தால் அதுவே ஒரு பெரிய உபகாரம்'' என்பான் தர்மூ. இப்படி நாள் முழுதும் இவர்கள் இருவருமே கஷ்டப் படுவதைப் பார்த்துவிட்டு அருகிலுள்ள கிராமத்திலிருந்து ஒரு சிறுவனை வாரக் கூலிக்கென அமர்த்திக் கொடுத்தார் தேசிகர். கிணற்றுக்குத் தஞ்சாவூர் ஏற்றம் போட்டுத் தண்ணீர் இறைக்கவென்று அவனை அமர்த்தி னார். வேலைக்கு இன்னொரு நபர் வந்ததும் அவனுக்கு அந்த வேலையின் பகிர்வு அள வற்ற சிரமத்தைக் குறைத்து விட்டது போல் உணர்ந்தான்.

பாத்திகள் வெட்டி, வேலியோரத்து இலை தழைகளை உரமாக மண்ணில் மக்க வைத்து நீர் பாய்ச்சி, வெறும் நிலமாகக் கிடந்ததை விளைநிலமாக்கி ஒரு நாள் நாள்கணக்கை வேண்டிக் கொண்டு விதைகளைப் பாத்தி களில் விதைத்து மண்ணை மூடினான் தர்மூ. திட்டமிட்டபடி ஆரம்ப வேலைகள் மிக நூதக் கிரமத்துடன் நடந்தன. இரவு வேளைகளில் தர்மூவின் கைகளுக்கு எண்ணெய் தடவி விடும் போது நாயகிக்கு அழுகை வந்து விடும். இவ்வளவு கடினமான வேலைகளுக்கெல்லாம் பழக்கப்பட்ட கைகளா இவை?

தேசிகரிடம் தன்னிடமிருந்த இரண்டு ஜோதை தங்க வளையல்களையும், தடிமனான இரட்டை வடம் சங்கிலியையும் கொடுத் தான் தர்மூ.

''எனக்கு இப்பொழுது ஐந்நூறு ரூபாய் வேண்டும். இதை உங்களுக்குத் தெரிந்த வர்கள் திருவாலங்காட்டில் இருப்பதாகச் சொல்லுவீர்களே, அவர்களிடம் வைத்து வாங்கிக் கொடுங்கள். ஒரே ஆண்டில் திருப் பிக் கொடுத்து விடுவேன். பொருள் ரூபத்தில் என்னுடையது என்று என்னிடம் இருக்கும் மூலதனம் இவை மட்டும்தான். இந்தத் தொகைக்குச் செலவு நிறைய உண்டு'' என்று கூறிவிட்டுச் சிறு பட்டியலையும் அவ ரிடம் நீட்டினான். தக்காளிப் பண்ணைக்கான ஆரம்பக் கட்டத் தேவைகள் அதில் இருந் தன. அதோடு உணவு தானிய வகைகள் ஒரு வீட்டுக்குத் தேவையான குறைந்தபட்சப் பொருட்கள் அதிலே இருந்தன. அதில் எதுவுமே அநாவசியமானதாகத் தோன்ற வில்லை. சுமார் இருநூறு ரூபாய்க்கு அதில் செலவு இருந்தது.

தேசிகர் ஆலயத்தை ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டுத் தர்மூ கொடுத்த தங்க நகைகளுடன் திருவாலங்காடு ரயில்வே நிலை யம் நோக்கி நடந்தார்.

விதை விதைத்து ஒரு வாரத்துக்கெல்லாம் தக்காளி முளைவிடத் தொடங்கி விட்டது. தக்காளியைப் பற்றியும், அதன் பல்வேறு வகைகள் பற்றியும் தர்மூவுக்கு நன்றாகவே தெரியும். குறுகிய கால அளவில் பயிராகும் சாதாரண வகைகளை விட்டு விட்டு, சென்னை போன்ற நகரச் சந்தைகளில் விரைவில் விலை போகும் நீண்ட காலத் தக்காளி இனங்களை வளர்க்கும் நோக்கத்துடன் நிதானமாகப் பயிர் செய்யத் திட்டமிட்டான்.

பயிர்கள் பதினைந்து இருபது நாட்களில் சுமார் ஓரடி உயரம் வளர்ந்து விட்டன. அந்தச் சமயத்தில்தான் அவைகளைப் பிடுங்கி வேறு இடத்தில் நட வேண்டும். அதற்காகச் செப்பனிட்டு, எரு தழைகள் போட்டு நீண்ட சால்கள் அமைத்துத் தக்காளி நாற்றுக்களை அச்சால்களில் நடுவதற்கு ஏற் பாடு செய்யும்போதுதான் அவனுக்குச் சற்றுச் சிரமம் ஏற்பட்டது. மண்ணின் வாகுக்குச் செடிகள் கும்பல் கும்பலாக முளைத்து விட்டன. அவற்றை ஒரே நாளில் நடுவது இரண்டு பேர் துணையின்றி முடியாதென் பதை உணர்ந்தவன் அடுத்த கிராமத்தி லிருந்து இரண்டு குடியானவர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டான்.

தக்காளி நாற்றுக்களெல்லாம் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருக்கும் ஒரு நாள் மாலைப் போதில் தொடங்கி, நிலவொளியில் நடு ஜாமம் வரை நடப்பட்டு முடிந்தது. இரண்டடி இடைவெளிவிட்டு நடப்பட்ட நாற்றுகளை மறு நாள் விடிந்தவுடன் பார்த்த தேசிகர் பிரமித்துப் போய் நின்று விட்டார். இவ்வளவு நாற்றுகளும் ஒரே இரவில் நடப் பட்டவையா என்று எண்ணிய போது ஏதோ மந்திரஜாலம்போலிருந்தது அவருக்கு.

அருகில் உள்ள சின்னச் சின்ன கிராமங் களுக்குச் செய்தி எட்டியபோது, அந்த

இடத்துக்குத் திடீரென்று ஒரு முக்கியத்துவம் பிறந்து விட்டது. தக்காளிப் பண்ணையையும் அதில் இடைவிடாது வேலை செய்யும் தர்முவையும், நாயகியையும் வேடிக்கை பார்க்க யாரேனும் வந்து கொண்டேயிருந்தனர்.

தக்காளிப் பண்ணையில் தர்மு செய்கிற ஒவ்வொரு காரியமும் தேசிகரின் வியப்பை அதிகரிக்கச் செய்தது.

5

மாலை நேரம்!

காற்று வீசிக்கொண்டிருந்தது.

தக்காளிச் செடிகள் இரண்டு மூன்றடி உயரத்துக்கு அடர்த்தியாக வளர்ந்து சுமார் ஓர் ஏக்கர் நிலத்தை வளமாக்கிச் செழுமையுடன் ஆடிக் கொண்டிருந்தன.

தோட்டத்தின் நடுவில் நடைபாதை. இரண்டு பேர் தாராளமாக நடந்து பார்வையிடவும், களை பிடுங்கவும் வசதியாக இருந்தது.

அதில் தர்மு நடந்து கொண்டிருந்தாள்! தோட்டத்தின் கோடியில் நாயகி செடியின் அடியில் வளர்ந்து கிடக்கும் 'களை'களை எடுத்துக் கொண்டிருந்தாள்.

அபூர்வமான மாலை நேரத்து அமைதி!

வெறுமை வெளியில் பார்வையை அலைய விட்டாள் தர்மு. கண்களின் ரப்பையில் காற்று மோதிச் சில்லென்ற உணர்வைத் தந்தபோது அவள் உள் நெஞ்சத்து அறையிலிருந்து ஒரு பெரிய விம்மல் வெளிப்பட்டது. தாங்கவொண்ணாத சோகத்தின் குமைவு. வெளியேற இடமில்லாத சின்ன அறைக்குள் சூழ்ந்து கொள்ளும் புகைபோல் உள்ளுக்குள் அலைந்து பின் வெளியேறிக் கொண்டிருந்தது. தவிர்க்க முடியாத, தடுக்க முடியாத மறக்க இயலாத சில மோசமான சிந்தனை நாற்றங்கள் வெளியே வர அவள் மனத்தைக் குடைந்து கொண்டிருந்தன.

வசதியற்ற குடும்பத்தில் பிறந்துவிட்ட தர்முவின் மனோகரமான இளமை மெதுவாக வாடிக் கொண்டு வந்த காலம் அது. வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்ற தாங்க முடியாத தாபத்தில்தான் அவள் எட்டு வயது நாயகிக்குத் தந்தையான சம்பத்தை மணந்தாள். சம்பத்துடன் அவள் நடத்திய தாம்பத்தியம் மிகக் குறைந்த கால அளவு தான். அக்குறைந்த காலத்தில் அவள் இது நாள் வரை காணாத, இது நாள் வரை ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்த கனவை அனுபவித்தாள். அக்கனவு நடுவில் பறிக்கப்பட்ட மாதிரி சம்பத் அகால மரணமடைந்தபின் ஏதோ ஓர் ஆத்திரம், வெறி. அதுதான் வேலை வெட்டி ஏதுமின்றி அலைந்து கொண்டிருந்த ராஜாராமைப் பதிவுத் திருமணம் செய்து கொள்ளத் தூண்டி விட்டது.

ராஜாராம் ஏதோ 'ஆட்டோமோபைல்' கம்பெனியில் வேலை செய்வதாகக் கூறி அவளை நம்ப வைத்து, நடித்து, அவளைக் கொன்னே கொண்டு விட்டான். தார்மீக எழுச்சியினாலோ ஆத்மாவின் அந்தரங்கத் தடைகளாலோ அவள் இவ்விஷயத்தில் அதிகம் பொருட்படுத்தவில்லை.

ராஜாராமனுடன் அவள் நடத்திய உணர்ச்சி மயமான தாம்பத்தியத்தில்தான் வாழ்க்கையைப் பற்றிய புனிதமான எண்ணங்களே உருவாகாமல் போய்விட்டன. தன்னைப் பொறுத்த மட்டில் 'புனிதம்' என்பது என்றோ கருகிவிட்டதாகவே அவள் முடிவு செய்து கொண்டாள்.

கற்பனைக் காதலர்களை நினைத்து உருகிய இளமைத் துடிப்பு, சம்பத்துக்கு இரண்டாந் தாரமாகக் காலம் தாழ்த்தி வாழ்க்கைப் பட்ட அகவாரவியம், ராஜாராமைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டபோது உண்டாகியிருந்த வேகம் இவைகளை மட்டுமே தான் அவ்வப்பொழுது புரிந்து கொண்டாள். மற்றவர்கள் கூறும் வேறெந்தவித உணர்வின் மாதுர்யத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் ருசிக்கவில்லை அவள்.

ராஜாராமோடு நடத்திய தாம்பத்திய வேகத்திலேதான் சில உண்மைகளை மெதுவாக உணரத் தொடங்கினாள். எப்பொழுது அந்த உண்மையைப் புரிந்து கொண்டாளோ, அப்பொழுதே நாயகிக்கு ஓர் இரும்புக் கவசமாக அவள் மாறி விட்டாள்.

"என்ன சித்தி செய்துண்டு இருக்கே?"

தர்மு சிலிர்த்துக் கொண்டு நினைவுகளைத் திருப்பினாள். நாயகி தன் முன்னால் மண் கையுடன் நின்று கொண்டிருந்ததைக் கண்டாள். பலவகைப்பட்ட எண்ணங்களின் அதிர்வுகளோடு கண்கள் இலேசாகச் சுருங்கிக் கொண்டிருக்க, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற மிகப் பெரிய பொறுப்பு தன் முன்னால் வந்து நிற்பதை அன்போடு, பாசத்தோடு நோக்கினாள்.

இருபது வயதை எட்டிக் கொண்டிருக்கிற நிதானித்த உணர்ச்சி, முகத்திலும், உடம்பிலும் நிலைகொள்ளாத ஓர் அபூர்வ லாவண்யம். அடர்த்தியான கேசம் கலைந்து கிடக்க மேலாடை நெகிழ்ந்து தொங்க, அழுக்கடைந்த புடவையை மேலே இழுத்துச் செருகிக் கொண்டிருந்ததால் முழங்கால்வரை அது மேலே ஏறியிருந்தது. முகத்தில் களைப்பின் வாடல் தெரிய நிற்கும் நாயகியை அழைத்துக் கொண்டு கிணற்றடிக்கு நடந்தாள்.

வேலைக்காரப் பையன் அங்கிருந்த மண் சாலில் நிறையத் தண்ணீர் நிரப்பி விட்டுப் போயிருந்தான். அதிலிருந்து தண்ணீரை எடுத்து, நாயகியின் கை, கால், முகம் இவைகளைக் கழுவி விட்டாள் தர்மு.

"ரொம்பக் களைப்பா இருக்கா நாயகி?"

"இல்லே சித்தி."

"பரவாயில்லே. நீ ஓய்வு எடுத்துக்கோ. இன்னிக்கு நான் சப்பாத்தி செய்யறேன்" என்று சொல்லிக் கொண்டே குடிசைக்குள் நுழைந்தாள்.

இளவேனிற்காலத் தொடக்கத்தில் ஒரு நாள் காலைப் போதில் தேசிகர் பின்தொடரத் தர்மு தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தாள். செம்பழமாகப் பழுத்துத் தொங்கும் தக்காளிப் பழச் செடிகள் நிறைய இருந்தன.

ஆர்வத்துடன் தேசிகரைத் திரும்பிப் பார்த்தான் தர்மு.

''அநேகமாகச் செங்கல்பட்டிலிருந்து அந்த வியாபாரி லாரியுடன் இன்று வரலாம். வந்தவுடன் வியாபார விஷயத்தைப் பேசி முடித்துக்கொண்டு விடலாம். பழங்களைப் பறிப்பதற்குத் தேவையான கூலிப் பெண்களையும் அவர் அழைத்துக் கொண்டு வருவதாகக் கூறியிருக்கிறார். பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், மற்றும் பெரிய ஹோட்டல்களுக்கும் காய்கறி, தக்காளி, முட்டைக்கோஸ் என்று அவை பயிர் செய்யப்படும் பண்ணைக்கே சென்று மொத்தமாக விலை பேசி லாரியில் 'லோட்' செய்துகொண்டு விடுவாராம். திருவாலங்காடு ஸ்டேஷன்மாஸ்டர் மூலமாக அவர் நண்பர் உதவியுடன் இந்த ஏற்பாடு நடக்கிறது'' என்றார்.

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது புழுதியை வாரி இறைத்துக் கொண்டு லாரியொன்று வந்து நின்றது. அதிலிருந்து நான்கைந்து கூலிப் பெண்கள் பின்புறக் கதவைத் தள்ளிக் கொண்டு குதித்தனர்.

பேரம் நடந்து முடிந்தது. கூடைக்கு இவ்வளவு எடை நிற்கும் என்பதை வைத்துக் கொண்டு ஒரு கூடைக்குத் தொகை நிர்ணயிக்கப்பட்டது.

பழங்களை அறுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அடுத்தடுத்து விதைப்பதற்கான விதைப் பழங்கள் பற்றியும், அதை எப்படிப் பறிக்க வேண்டும் என்பதையும் நாயகியிடம் ஏற்கெனவே சொல்லி விட்டானாகையால் அவள் காலையிலேயே விதைப் பழங்களைப் பறிக்கத் தொடங்கி யிருந்தாள்.

லாரியில் வந்த பெண்கள் இந்த வேலைகளில் பழக்கப்பட்டவர்களாக இருந்ததால் அவர்களிடம் செங்காய்களையும் பழங்களையும் எப்படி எப்படிப் பறிக்க வேண்டும் என்று விளக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

எத்தனை கூடைகள் லாரியில் கொட்டப்படுகின்றன என்பதைத் தேசிகர் கணக்கு வைத்துக் கொண்டிருந்தார். லாரியில் ஏற்கெனவே வேறு ஒரு பண்ணையில் வாங்கப்பட்ட முட்டைக்கோஸ் அரை லாரி இடத்தை அடைத்துக் கொண்டிருந்தது.

லாரி புறப்படு முன் அந்த வியாபாரி அடுத்த பறிப்புக்கான காலத்தை உத்தேசமாகக் கேட்டறிந்து அதற்கான முன் பணத்தையும் கொடுத்து விட்டுப் போனார்.

இளவேனிற்கால மத்தியில் ஒரு நாள் துர்க்கை யம்மனுக்கு விழா நடத்த ஏற்பாடு செய்தார் தேசிகர். அரக்குச் சிவப்பு நிறத்தில் பட்டுப் பாவாடை ஒன்று துர்க்கைக்கு வாங்கிச் சாத்தத் தர்மு வசதி செய்து கொடுத்திருந்தான். சின்னதான ஆலயத்துக்குச் சுண்ணாம்பும் கோபியும் அடித்துக் கோபுரக் கலசத்தையும், பாசி படிந்த கோபுரத்தையும் சுத்தம் செய்தார் தேசிகர்.

பண்ணையில் அடுத்தடுத்துப் பயிர் செய்வதற்கான முன்னேற்பாடுகளை நாயகியின் உதவியுடன் தர்மு மேற்கொண்டான். செடியில் பழுத்த நல்ல நிறமுள்ள பழங்களை நாயகி ஏற்கனவே பறித்து வைத்திருந்ததால் அவைகளைத் தண்ணீரில் போட்டுக் கசக்கிப் பிழிந்து விதைகளை மட்டும் வெண்மையான துணியில் உலர்த்திக் காய்ந்தபின் விதையில் சாம்பல் கலந்து சிறு சிறு துணி மூட்டைகளில் கட்டிச் சேகரம் செய்து கொண்டான்.

அவனது நீண்ட காலத் திட்டங்கள் ஒவ்வொன்றும் நாயகியை மட்டுமே முகாந்திரமாகக் கொண்டு திட்டமிட்ட நிலையில் நிதானமாகச் செயல்படுத்தப்பட்டன.

அடகு வைத்த நகைகள் இரண்டாவது அறுப்பிலே மீட்கப்பட்டு விட்டன.

இப்பொழுது ஒவ்வொரு காரியத்திலும் நாயகியின் வெறுப்பு விருப்புகளையும் தெரிந்து கொண்டு செயல்படுவதை ஒரு முக்கிய கடமையெனக் கருதினான்.

தமது நண்பர், திருவாலங்காடு ஸ்டேஷன்மாஸ்டர் உதவியுடன் நாயகிக்குச் சுமாரான வரனென்று பார்ப்பதில் தீவிர சிரத்தை எடுத்து கொண்டதில் ஒரு பெரிய வெற்றியைக் கண்டார் தேசிகர்.

திருவாலங்காடு திருச்சபையான சிவபெருமான் ஆலயத்துக்கு ஒரு தடவை தர்முவுடன் நாயகியை வரச் சொல்லி விட்டுப் பையனை அழைத்து வந்து காட்டியபோது பையனும் சம்மதம் கூறிவிட்டுப் போய் விட்டான்.

உண்மையைச் சொல்லி ஒரு பெரிய சிக்கலுக்கு நிவாரணம் பெறுவது எவ்வளவு கஷ்டம் என்பதைத் தர்முவின் பழைய வரலாற்றைக் கூறி, தற்பொழுது அவன் மேற்கொண்டிருக்கிற லட்சிய வேகத்தையும் ஒன்று விடாமல் பையனிடம் கூறி அவன் சம்மதம் பெற முயன்றபோது அவன் எல்லாவற்றையும் தர்க்க ரீதியிலே பேசி உணர்ந்து தடை ஏதுமின்றி நாயகியை மணக்க ஒப்புதல் தந்துவிட்டது தேசிகரைப் பொறுத்தவரை மிகப் பெரிய வெற்றி என்றே சொல்லலாம்.

நாயகிக்காகத் தர்முவிடம் அவன் அதிகமாக எதையும் எதிர்பார்க்கவில்லை. அந்த அளவுக்கு நாயகியின் அழகு அவனை அன்புக் கிறுக்கனாக்கி விட்டிருந்தது.

செங்கற்பட்டில் வாசம், அதிக உறவு முறைகள் இல்லாதவன். தேசிகரின் நண்பரால் சிபாரிசு செய்யப்பட்டு முன்னுக்கு வந்தவன். ரயில்வேயில்தான் அவன் உத்தியோகமும் பார்த்தான்.

அவன் எதிர்பார்த்ததற்கு மேலாகவே தக்காளிப் பண்ணையில் உழைப்பின் பலனை எடுத்தான் தர்மு. அடுத்தடுத்துப் பருவ காலங்களில் பண்ணைக்கு வேண்டிய வசதிகளைப் பெருக்கிக் கொண்டதோடு நீண்ட காலத் திட்டங்களை உத்தேசித்துச் சிறுகச் சிறுகச் சேகரிக்கத் தொடங்கினான்.

ஆரம்ப காலத்திலும் சுமார் ஓர் ஏக்கர் நிலத்தில் இப்படி ஒரு சமரச முயற்சியைப் பரபரப்பான மனநிலையோடு தொடங்கிய போதும், இலேசான அவநம்பிக்கை, பயம், இவைகளோடுதான் தொடங்கினான். இவ்வுணர்ச்சிகளை அதிகம் வெளிக்காட்டிக் கொள்ளா விட்டாலும் மனத்தின் ஒரு மூலையில் அது சிறு பலவீனத்தைத் தந்து கொண்டு தான் இருந்தது. ஆனால் மண்ணின் வளத்தாலும் ஆரம்பத்தில் அவன் வருத்த

இட்டங்கள் சுறுசுறுப்புடன் நடந்ததாலும் கொஞ்சம் கொஞ்சமாக அவநம்பிக்கை மறைய்த் தொடங்கியது.

போட்ட விதைகள் பழுதின்றி முளைத்தன. நெஞ்சு இடம் பெறத் தொடங்கி விட்டது. அதன் பின் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் உற்சாகமிழக்கவே யில்லை.

ஒவ்வொரு நாள் இரவு வரும்போதும் விடிவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். மாதம் முழுதும் நிலாக் காலமாக இருக்கக் கூடாதா என்று ஏங்குவாள்.

பௌர்ணமி சென்ற ஒரு வாரத்துக்குப் பின் நிலா உதயமானவுடன், உறங்கிக் கொண்டிருப்பவன் திடீரென்று எழுந்து பண்ணைக்கு வந்துவிடுவான். பல சந்தர்ப்பங்களில் நாயகி இதைக் கவனித்துவிட்டுத் தர்முவிடம் கோபித்துக் கொண்டிருக்கிறாள். ''தூக்கம் கூட இல்லாமல் இப்படி நடு ஜாமத்தில் எழுந்து பண்ணைக்குப் போகணுமா சித்தி? விடியற்காலம் எழுந்து அந்த வேலையைச் செய்யக் கூடாதா?'' என்பாள்.

''எனக்கு இருக்கின்ற இரண்டு கண்களில் ஒன்று நீ, மற்றொன்று இப்பண்ணை. எனவே தான் நான் எப்போதும் உன்னையும் பண்ணையையும் பார்த்துக் கொண்டே யிருக்க ஆசைப் படுகிறேன். என்னை உறங்கச் சொல்லுகிறாய். நான் உறங்கிவிட்டதால்தான் வாழ்க்கையில் இவ்வளவு வேதனைப்படுகிறேன். நான் எனது முன் வாழ்க்கையில் விழிப்புப் பெற்றிருந்தே னேயானால் இன்று நிம்மதியுடன் உறங்கக் கொடுத்து வைத்திருப்பேனே. முன்பு தூங்கி விட்டேன். இப்போது சதா விழித்துக்கொண் டிருக்கிறேன்'' என்பாள்.

6

அன்று மாலை பண்ணைக்கு நீர் பாய்ச்சி விட்டு முகம் கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்த தர்முவைத் தாழ்ந்த குரலில் அழைத்தாள் நாயகி.

''சித்தி! அதோ பாரேன். வேலிக்கு வெளியே!'' என்றாள் படபடப்புடன்.

வேலிக்கு வெளியே புழுதியை வாரி இறைத்துக் கொண்டு வந்து லாரி ஒன்று நின்றது. டிரைவர் ஆசனத்திலிருந்து தேசிக ரின் தம்பி ரங்கன் இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தான்.

''தேசி... தேசி....!''

''யாரது. ரங்குவா? வாடா...'' தேசிகர் குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தார்.

''தேசிகர் தம் தம்பியைப் பற்றிச் சொன் னுரே ஞாபகமில்லையா உனக்கு?'' என்று பார்வையை அவன்மேல் பதித்துக் கொண்டு நாயகிக்குப் பதில் சொன்னாள்.

ரங்கனின் தோற்றம் தர்முவுக்கு இலே சான அருவருப்பையே தந்தது. உருண்டு திரண்ட முகம். கையும் காலும் கட்டை கட்டையாக இருந்தன. காக்கிச் சட்டைக்கு மேல் கழுத்தைச் சுற்றிச் சிவப்பு நிறப் பின்னி யார் துண்டும் அணிந்திருந்தான். குடிமகனை அரை டிக்கர் மேல் வேஷ்டி.

அவனைத் தூரத்துப் பார்வையில் பார்த்து விட்டபோதே தர்மு அதிர்ச்சியுடன்தான் நின்றாள். இவனை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று சிறிது நேரம் பலவிதக் குழப்பங்களோடு நின்றவளுக்குச் சற்றைக் கெல்லாம் குழப்பம் தெளிந்து விட்டது.

ராஜாராமின் சூதாட்ட விடுதி நண்பன்.

ராஜாராமும் இவனும் ஒரு பெண்ணை மகாபலிபுரம் அழைத்துச் சென்று பிறகு போலீஸ் கேஸில் அகப்பட இருந்து லஞ்சம் கொடுத்து எப்படியோ தப்பித்துக் கொண்ட தைத் தர்மு கேள்விப்பட்டிருந்தாள்.

அந்த ரங்கன்தான் இவன்!

தர்முவின் முகம் திடீரென்று மாறிவிட் டதை நாயகியும் புரிந்து கொண்டுவிட்டாள்;

''சித்தி! இவனை நாம் ஏற்கெனவே பார்த் திருக்கிறோமென நினைக்கிறேன். இல்லையா?''

மௌனமாகத் தலையை மட்டும் ஆட்டி விட்டு மீண்டும் பண்ணைக்குள் புகுந்து விட்டாள் தர்மு.

பலத்த சிந்தனையுடன் நடை பாதையில் நடந்து கொண்டிருந்தபோதுதான் ரங்க னுடன் தேசிகர் அங்கே வந்தார். அரைத்தை யோடு சம்பிரதாயத்துக்காக நாயகியையும் தர்முவையும் அறிமுகப்படுத்தி விட்டு ரங்கனை உடனே அழைத்துக் கொண்டு போய்விட் டார் தேசிகர். அவர் அந்த அறிமுகத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளாதது போலவே தக்காளிப் பண்ணை எப்படி இங்கே உருவானது என்பதைப் பற்றியும் அவர் ஒரு சிரத்தையுடன் ரங்கனிடம் விவ ரிக்கவில்லை.

ரங்கனைத் தேசிகர் அழைத்துக் கொண்டு போன பின்பு தர்மு மிகுந்த வேதனையுடன் முகத்தை எங்கோ திருப்பிக் கொண்டு உதடு மட்டும் விரிய மேல் வெடிப்பாக ஒரு விரக்தி யைச் சிரிப்பாக உதிர்த்தாள்.

இரவு குடிசையில் நாயகியும் தர்முவும் அமைதியற்று உட்கார்ந்திருந்தனர். ரங்கனின் வருகை அவர்கள் நிம்மதியை அடியோடு போக்கடித்து விட்டது.


வேலை வெட்டி ஏதுமின்றிச் சுற்றிக் கொண்டிருக்கிற ராஜாராமனுடன் ரங்கன் கொண்டிருக்கிற நட்பு எவ்வளவு கேந்திர மான விஷயங்களுக்கு என்பது அவளுக்குத் தெரியும்.

''ரங்கனைப் பார்த்தது முதல் எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது. சித்தி!'' என்றாள் நாயகி. அவள் கண்கள் குடிசைக்குள் எரிந்து கொண்டிருக்கிற சின்னதான விளக் கொளியில் மிகுந்த பீதியுடன் தெரிந்தது.

அவளை அருகில் இழுத்து மௌனமாக அணைத்தவண்ணம் தர்மு அழுதாள்.

''நம்மை இங்கே பார்த்துவிட்ட ரங்கன் எப்படியும் அங்கே போய்ச் சொல்லிவிடுவான். நாமோ அங்கிருந்து ரொம்ப இக்கட்டான சூழ்நிலையிலே கோர்ட்டிலே வழக்கு தள்ளு படி செய்யப்பட்ட பின் ஓடி வந்திருக்கிறோம். இவன் போய்ச் சொன்னவுடனேயே ஆத்திரம் கொண்டு....''

நாயகியின் வாயைப் பொத்தி, ''தைரிய மாக இரு'' என்றாள் தர்மு தழுதழுத்த குரலுடன்;



வாழ்வில் இன்பம்

பன்மடங்காகும்

உமக்கென ஒரு ஜெம் இருந்தால்

வாங்கிக்கொள்ளுங்கள் ஒரு ஜெம்...பேரானந்தமான ஒரு புத்துலகம் உங்களை வரவேற்கும்...கடை கண்ணிக்குப் பல நடைகள் போக வேண்டியிராது...உணவுகள் அதிக நேரம் புதுமையோடு இருக்கும்... திடீர் விருந்தாளிகளைக் கண்டு திடுக்கிட வேண்டியதில்லை...அக்கம் பக்கத்தோரின் மெச்சும் விழிகள் உங்கள் மீது படரும் (பொறாமைக் கண்களும் கூட!) ஆம், உமது இல்லத்திற்கென ஒரு ஜெம் இருந்தால் இன்பம் பன்மடங்காகும். இழைவான எழிலும் இடவசதியும் மிகுந்தது ஜெம். சேவைத்திறனும் சிக்கனமும் மிக்கது. சுருங்கக் கூறின், நல்ல ரெப்ரிஜிரேட்டருக்கு உள்ள எல்லாப் பண்புகளும் அதற்கு உண்டு. மேலும் உண்டு!

எடுப்பான இதர ஜெம் சிறப்புகள்:

▼ ரெப்ரிஜிரேட்டர்-டீப் ஃப்ரீஸர் இரண்டும் இணைந்தது ▼ தானாக இறுக மூடிக்கொள்ளும் புதிய ஆட்டோமேட்டிக் காந்தக் கதவு ▼ குறைந்த மின் செலவு. ▼ சேமிப்புக்கென அதிக அதிக இடப் பரப்பு ▼ ஐஸ், ஐஸ் க்ரீம் இரண்டையும் அதிவிரைவில் உருவாக்கும். ▼ ஓசையற்ற இயக்கம் ▼ உத்தரவாதமாகக் கட்டிறுக்கமாக மூடிய யூனிட்.

286 லிட்டர் மற்றும் 175 லிட்டர் கொள்ளளவுகளிலே கிடைக்கிறது. விலைவிகித ஒப்பந்தப்படி D.G.S. & D.யிடமும் கிடைக்கிறது.



GEM
REFRIGERATOR

விற்பனைக்கு விடுப்போர்:
ஜெனரல் எக்விப்மெண்ட் மர்சென்ட்ஸ் லிட்.
பம்பாய் • கல்கத்தா • சென்னை • அகமதாபாத்
• பெங்களூர் • சண்டிகார் • எர்ணாகுளம்-கொச்சின்
• ஜெய்ப்பூர் • லக்னௌ • செகந்தராபாத்
ரிஜி. ஆபீஸ் N-75 கன்னாட் சர்க்கஸ், புது டெல்லி

AIYARS GEM 35 TM

"நாம் இங்கிருந்து இந்த இரவே வேறு எங்காவது போய்விடுவோம் சித்தி. இந்தத் தடவை அவர் கையிலே நான் சிக்கிக் கொண்டால் நீ என்னை உயிருடன் பார்க்க முடியாது."

"இங்கிருந்து போய்விடுவதா? அது மட்டும் நடக்காது. ரங்கன் போய்ச் சொல்லி அவர் இங்கே வரட்டும். பிறகு பார்த்துக் கொள்வோம். ரொம்ப நிதானத்தோடு நடக்கிறேன். ஒரு சிறு தடை எதிர்ப்பட்டுத் தடுக்க வருகிறது அவ்வளவுதானே? தைரியமாக இரு; சமாளிப்போம். வா... துர்க்கையம்மனைப் போய் வேண்டிக் கொண்டு வரலாம். மனசெல்லாம் என்னமோ வேதனையாக இருக்கிறது" என்றவள் நாயகியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சந்நிதியில் வந்து கண்ணீருடன் மௌனமாக நின்றாள்.

"நாயகி! துர்க்கையின் அவதார உண்மை உனக்குத் தெரியுமா? நான் சொல்லுகிறேன், கேள். அசுரனின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் நல்லவர்கள் ஆண்டவனிடம் மகிஷாசுரனின் கொடுமைகளை ஒடுக்க வேண்டுமென வேண்டியபோது மகாவிஷ்ணுவின் முகத்திலிருந்தும், மற்ற தேவர்களின் முகத்திலிருந்தும்வெளிப் பட்ட ஒளிப் பிழம்பால் உருவானவளே துர்க்கை.

ராமபிரான் ராவணனை வெல்லத் துர்க்கைக்குப் பிரியமான இளவேனிற்காலத்தை விட்டு விட்டு மழைக் காலத்தில் வழிபட்டுப் போரில் வெற்றி பெற்றாராம்" என்று கூறி விட்டு உக்கிரத்துடன் நகைத்தாள். அந்த நகைப்பு நாயகிக்கு நடுக்கத்தைத் தந்தது. "சித்தி! நீ இப்படி இந்த இரவு வேளையில் இங்கே சிரிக்காதே. எனக்குப் பயமாக இருக்கிறது."

"பயப்படாமல் இரு. எந்த விதமான விபரீதங்கள் நடந்தாலும் நாம் இனி அதற்காகக் கலங்கவே கூடாது. நான் வாழ்க்கையிலே சபல புத்தியால் தவறிழைத்துவிட்டவள்தான். அதை இந்தச் சந்நிதியிலே சொல்லுகிறேன். அதற்கு உண்டான தண்டனையை நான் மனப்பூர்வமாக ஏற்கத் தயார். ஆனால் அதற்கு முன்னால் உன்னைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. என் பொறுப்பு. அப் பொறுப்பைச் சத்தியமாக நான் நிறைவேற்றத்தான் போகிறேன். எந்தவிதமான, எத்தனை விதமான தீய சக்திகள் எதிர்ப்பட்டாலும் அதை மாய்ப்பேன். நான் இவளை வணங்குகிறேன். எனவே பகைமையை அழித்து ஒழிக்கும் சக்தியை இவள் எனக்குத் தந்து விட்டதாக உணர்கிறேன். இவளை நம்பித்தான் இங்கே மண்ணைக் கொண்டேன்,



பொருள் கிடைத்தது. இவளை நம்பித்தான் உன் விஷயமாகத் தேசிகரிடம் கூறினேன், நல்ல வரனைக் கொண்டு வந்தும் சேர்த்தார். இந்நிலையில் உனக்கும் எனக்கு இருக்கும் ஒரே ஒரு எதிரியை வென்றாக வேண்டும் இல்லையா? அதற்கும் இவளைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன். என் நம்பிக்கை வீண் போகாது..." என்று கூறிவிட்டு மீண்டும் சந்நிதியைப் பார்த்து நகைத்தாள்.

தேசிகரின் குடிசைக்குள் ரங்கனுக்கும் அவருக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

"வேண்டாம், ரங்கா. அவர்கள் விஷயத்தில் நீ தலையிடாதே. அவள் என்னிடம் எதையும் மறைத்து விட்டு நீ சொல்வது போல் இங்கே நல்லவளாக நடிக்கவில்லை. அவளுடைய வாழ்க்கையைப் பற்றி

எல்லா விவகாரங்களையும் ஒன்று விடாமல் கூறிவிட்டாள். நாயகியுடன் இங்கே தலை மறைவாக ஓடிவந்ததற்கான காரணத்தையும் சொல்லி, என் அனுமதி பெற்றுத்தான் இங்கே அமைதியுடன் வாழ்கிறான். அவனுடைய அமைதியைத் தயவுசெய்து நீ கலைத்து விடாதே.''

''நீ சும்மா இரு தேசி. உனக்கு எதுவுமே தெரியறதில்லே. இதைப் போல இருக்கிறவங்க மேலே எல்லாம் அனுதாபப்பட்டால் பின்னால் நாம்தான் தொல்லைப்பட வேண்டும். யார் எப்படி இருந்தால் நமக்கென்ன? இதுகளுக்கெல்லாம் போய் நீ பாதுகாப்பா நிக்கறதிலே அர்த்தமே இல்லே. அதோடு அவன் கோர்ட்டிலே 'டைவர்ஸ் கேஸ்' போட்டுத் தோற்றும் போனவன். இந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடி வந்திருக்கிறான். அவர் அங்கே ஊர் உலகமெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறார்.''

''தேடட்டும்.''

''தேடட்டுமா? அப்போ நீ இவர்களை இங்கிருந்து விரட்டப் போறதில்லையா?''

''விரட்டறதா? முடியாது... அது மட்டும் இனிமே நடக்காது. அந்தப் பொண்ணுக்கு கல்யாண ஏற்பாடெல்லாம் நடந்துகொண்டிருக்கிறது. ரங்கா.... அதை நான்தான் ஏற்பாடு செய்திண்டு இருக்கிறேன்.... கல்யாணம் எங்கே தெரியுமாடா? திருவாலங்காடு திருச்சபை மண்டபத்திலே.''

ரங்கன் கோரமாக நகைத்தான்.

''திருச்சபையிலே . கல்யாணமா, நான் நினைச்சென்னு அதை நிறுத்திவிட முடியும்''

''போடா...போ... உனக்குச் சக்தி இருந்தால் அதைச் செய். ஆனால் ஒன்று மட்டும் சொல்லி வைக்கிறேன். இப்போ நாம் பேசிக் கொண்டிருக்கிற விஷயம் நம் இரண்டு



பெருக்குமே சம்பந்தமில்லாதது. நான் ஒரு நல்லதைச் செய்ய நினைக்கிறேன். அதைக் கெடுக்க நீ பிரயத்தனப்படறே. செய்...உன்னால் முடிந்ததைச் செய். செய்துவிட்டு உனக்கோர் அண்ணன் இருக்கிறான் என்பதையும் மறந்துவிடு. எது நடந்தாலும் நடக்காவிட்டாலும் இது மட்டும் நிச்சயமாக நடக்கும். நீ குறுக்கிட்டு இந்த நல்ல காரியத்துக்கு ஏதேனும் குந்தகம் விளைவித்தால் உன் முகத்தை நான் பார்ப்பது இதுதான் கடைசி முறையாக இருக்கும்... போ... இவ்வளவு அழுக்கு மனத்தோட இங்கே நிற்காதே...உன்னால் ஆனதைப் பார்...'' என்றார்.

''தேசி...'' என்று கத்தினான் ரங்கன்.

''போடா... நீ என் தம்பியில்லே.'' தேசிகர் நகர்ந்து விட்டார்.



செகரட்டரி: இடம் சரியா இருக்கா?

அவர்: பேஷா இருக்கு நாங்க!

செகரட்டரி: காத்து வர்றதா?

அவர்: ஜோரா வரது நாங்க!

செகரட்டரி: அப்ப இந்தச் சீட்டைக் காலி பண்ணுங்க, ஒரு பிரமுகர் வரார், அவருக்குக் கொடுக்கணும்!

ரங்கன் வேகமாக வெளியே வந்து, இருளில் வேலிக்கு வெளியே நிறுத்தி வைத்திருந்த லாரியை ஸ்டார்ட் செய்து கொண்டு போய்விட்டான். இருள் கவிழ்ந்த நிலையில் லாரி போகிற சத்தம் மட்டும் வெகு நேரம் வரை கேட்டுக் கொண்டேயிருந்தது.

ரங்கன் போனதும் நாயகி பின்தொடர தர்மு உள்ளே நுழைந்தான்.

தேசிகரின் முகம் கலங்கிப் போயிருந்தது.

''இவன் ஓர் அயோக்கியன் அம்மா! நீங்கள் இங்கே வந்தது முதல் இவனை இங்கே வரவிடாமல் செய்திருந்தேன். சென்னை, செங்கல்பட்டு எங்காவது வழியில் லாரியைப் பார்ப்பதுண்டு. பண்ணை விஷயமாகச் செங்கல்பட்டுக்குப் போனபோதுகூடப் பார்த்தேன். நான் இப்போது திருவாலங்காட்டில் இல்லை என்று கூறி அவன் என்னைத் தேடிக் கொண்டு இங்கே வருவதைத் தவிர்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு ஆரம்பத்திலேயே இன்னொரு விஷயமும் தெரியும். ராஜாராமனைப் பற்றியும், உங்களுக்கும் அவருக்கும் வழக்கு நடந்தது பற்றியும் கூறினவுடனேயே புரிந்து கொண்டு விட்டேன். உங்கள் வழக்கு கோர்ட்டுக்கு வரும்போதே ரங்கன் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.'' குடிசையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே தேசிகர் பேசினார்.

''எல்லாம் கூடி வரும் நேரத்தில் இப்படி ஒரு சோதனை ஏற்பட வேண்டாம். ஸ்டேஷன் மாஸ்டர் கல்யாணத்துக்கான தேதியை முடிவு செய்வதில் தீவிரமாக இருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில்...''

தர்மு குடிசைக்கு வெளியே பார்வையைச் செலுத்திக் கொண்டு பெருமூச்சுகளாக விட்ட வண்ணம் பேசினான்:

''பிரயத்தனங்கள் என்பது மனிதனால் செய்யப்படுகின்றன என்பது உண்மைதான், ஆனால் அதன் வெற்றி தோல்விகளுக்கு அவனே முழுக் காரணமாக முடியாது என்பதை நாம் உணர வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டதென நினைக்கிறேன்'' என்றவன் குடிசையை விட்டு வெளியே வந்தான். எங்கிலும் இருள் வெளி. பிரபஞ்சமே இருளாகி விட்ட மாதிரி இருந்தது அவனுக்கு. எதிரே தெரியும் ஆலயத்தை மட்டும் பார்த்தான்.

''அவன் என்னைக் காக்கட்டும். எனது அநுசிதமான காரியங்களுக்கு அவன் என்னை மன்னிக்கட்டும். தீமையை அழிக்கத் தோன்றியவன் அவன். நானும் ஒரு தீமையை அழிக்கப் போகிறேன். நான் அவனாக முடியாது. ஆனால் அவன் பாதங்களிலே விழுந்து வாடிக் கிடக்கும் அரளிப் பூவாகவேனும் நான் இருப்பேன்'' என்றவன் தேசிகர் பக்கம் திரும்பி ''எனக்கொரு வாக்குத் தருவீர்களா? உங்களால் முடியும் என நம்பிக் கேட்கிறேன்'' என்றாள் கெஞ்சும் குரலில்.

''என்ன வேண்டும் கேளுங்கள்.''

''இப்படிச் சொன்னால் போதாது. என் கைமேல் அடித்துத் தர வேண்டும். இந்தத் துர்க்கை மேல் ஆணையிட்டுச் சொல்ல வேண்டும். ஒருவேளை நான் நினைப்பது போல நடந்து நாயகி மீண்டும் அநாதையாகி விட்டால் அவளுடைய விவாகத்துக்காக நடக்கிற ஏற்பாடுகளில் எந்தவிதத் தடங்கலும் ஏற்படாதவாறு அதை நீங்கள் முன்நின்று நடத்தி வைக்க வேண்டும். இடையறாத இந்தச் சில கால உழைப்பில் அவளுக்குத் தேவையானதைச் சரியானபடி சேகரித்து வைத்து விட்டேன் என நினைக்கிறேன்.''

''இப்படியெல்லாம் பேசாதீர்கள். ராஜாராமனால் உங்களுக்கு எந்தவித ஆபத்தும் வராது. எது வந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''உங்களுக்கு அவரைப்பற்றித் தெரியாது. அவர் இன்று ஓர் அடிபட்ட நாகம் மாதிரி. அவரிடமிருக்கிற கயமை அவ்வளவு எளிதில் அவரை விட்டுப் போகக்கூடியதல்ல. அவருடன் வாழ்ந்ததில் இதை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்'' என்றவள் சற்று நேரம் மௌனமாகக் கண்ணீர் விட்டுக் கொண்டு நின்றாள்.

''நீங்கள் சொல்லுங்கள். எனக்கு இருக்கிற நடுநிலையான சாட்சி நீங்கள். எனது செய்கைக்குச் சமுதாயம் என்ன தண்டனை தருமோ அதை நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன். என் வாழ்க்கையில் நடந்ததெல்லாவற்றையும் மறைக்காமல் சொல்லி விட்டேன். ரகசியங்கள் என்று நான் எதையும் மூடி மறைத்

ராபின் ப்ளூவின் பிரத்யேக திறமை



சொற்ப செலவில் உங்கள் துணிகளை அற்புதமாக வெண்மையாக்குவதே!

ராபின் ப்ளூ தூய வெண்மை அளிக்கவல்லது. அது உங்கள் துணிகளுக்கு மற்ற ப்ளூ வகைகளால் முடியாத கண்கவரும் தூய வெண்மையை ஒரே சீரியான முறையில் கொடுக்கிறது. சிறிதளவு ராபின் ப்ளூ ஏராளமான துணிகளை வெண்மையாக்குகிறது. மற்றும் விசேஷம் என்னவெனில் அது எந்த விதத்திலும் துணிகளை பாதிக்காது. அது மட்டுமல்ல, உங்கள் துணிகளை எப்பொழுதும் வெள்ளை வெளேரென்று இருக்கச் செய்கிறது.



இயற்கையான கண்கவரும் தூய வெண்மைக்கு ராபின் ப்ளூ

துக்கொள்ளவில்லை. என் நிலையில் ஒருத்தி இருந்தால் அவள் இந்தச் சூழ்நிலையில் என்ன செய்திருப்பாள், என்ன செய்திருந்தால் நியாயம் என்று சொல்லி மிருப்பார்கள்? நான் இவ்வாறு அந்த வெறி கொண்ட மனிதரிடமிருந்து என்னையும் இவனையும் தற்காத்துக் கொண்ட விதம் தவறானதா? இதற்கு மேல் நான் என்ன செய்திருக்க முடியும்? இந்நிலையிலும் அத்தொல்லை என்னைத் தொடருமானால் அதை நான் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? எனவேதான் இந்த உறுதிமொழியை உங்களிடம் கடைசியாகக் கேட்டு வாங்கிக் கொள்கிறேன். எனக்கு மனிதர்களுடைய குணம், வாக்கு, சத்தியம், பார்வை எதிலுமே நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. உங்களை மட்டும் நியாயம் மிக்கதொரு சமுதாயத்தின் பிரதிநிதியாகப் பார்க்கிறேன். உங்களைப் பூரணமாக நம்புகிறேன். என் நாயகிக்கு நீங்கள் ஓர் அரணாக இருப்பீர்களா? இந்த வாக்கைத் தருவீர்களா?''

தேசிகர் கண் கலங்க, தழுதழுத்த குரலில் ''சத்தியமாக இருப்பேன்'' என்றார்.

வாக்கைப் பெற்றுக் கொண்டு தர்மு போய் விட்டாள். நாயகி மருண்ட மனத்துடன் தர்முவைப் பின்தொடர்ந்தாள்.

7

விடிந்தது.

பிற்பகல் நேரம்.

விவரிக்க முடியாத மனத் துயரங்களோடு பண்ணையில் சுற்றிக் கொண்டிருந்தாள் தர்மு. வயோதிக மாதொருத்தியின் சோர்வுற்ற நெஞ்சம் போல் அசதியின் பிடிப்புக்குள் தடுமாறிக் கொண்டிருந்தது அவள் நெஞ்சம். மிகப் பெரிய சோதனையின் முன் அதைச் சமாளிக்கத் திராணியற்றவளாகப் பலவீனப் பட்டு நின்று கொண்டிருந்தாள்.

தேசிகர் திருவாலங்காடு போயிருந்தார். காலையிலேயே சென்றவர் திரும்பி வரும் போது நண்பருடன் வருவதாகச் சொல்லிச் சென்றிருந்தார். திரும்பும் நேரம்தான்.

பண்ணையில் நின்று கொண்டிருந்த தர்முவின் பார்வை குடிசையின் பக்கம் திரும்பிய போது அவள் நெஞ்சம் படபடத்தது. உடம்பெங்கிலும் உஷ்ணத்தின் ஜ்வாலை பரவி எரியத் தொடங்கியது. செயலும் நினைவும் மெதுவாக நிதானத்தை இழந்து கொண்டு வந்தன.

ராஜாராம்!

தேசிகரின் குடிசைக்குள் அமர்ந்து வெளியே வந்த ராஜாராம் அடுத்த குடிசைக்குள் நுழைந்தான்.

அங்கேதான் நாயகி படுத்துக் கொண்டிருக்கிறாள்.

தர்முவின் நெஞ்சம் அகங்காரத்துடன் சிலிர்த்துக் கொண்டு குடெடுந்தது. சற்று முன்பிருந்த பலவீனங்கள், சோர்வுகள், சிந்தனைத் தடுமாற்றங்கள், கோழைத்தனங்கள் எல்லாம் நழுவிப் போய்ப் புதிய தெம்பும், புதிய வேகமும் கொண்டவளாக ராஜாராம் நுழைந்த குடிசையை நோக்கி ஓடினாள். லாரியின் பழுதுபட்ட சாமான்கள் போடப் பட்டிருந்த இடத்தில் கிடந்த பழைய இரும்புப் பட்டையொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு ராஜாராமின் பின்னால் போய் நின்றாள். அவள் எதிர்பார்த்ததுதான் அங்கே நடந்து கொண்டிருந்தது.

நாயகியை அவன் பலவந்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

''நீ எங்கே போனாலும் விட மாட்டேன். அவளைத் தேடிக் கொண்டு இங்கே வந்ததாக நினைக்காதே. அந்தக் கழுதையைப் பற்றி எனக்கென்ன கவலை? என் குறிக்கோளெல்லாம் நீதான். நீங்கள் எங்கே போனாலும் கண்டுபிடித்துச் சொல்ல ஆள் இருக்கும்.'' நாயகி ராஜாராமின் அசுரப் பிடியில் சிக்கி அலறிக் கொண்டிருந்தாள்.

''சித்தி! சித்தி!'' என்று அலறும்போதே தர்மு உள்ளே நுழைந்துவிட்டாள்.

முரண்பாடுகள் நிறைந்த தன் வாழ்வைச் சில கணங்கள் நினைத்தாள். அவலமாகிவிட்டதன் வாழ்வின் சிறுவலங்களை நினைத்தாள்.

நியாய வாதத்தால் சமூக சட்டத்தினால் நிர்த்து வைக்க முடியாத மிகப் பெரிய முடிச்சு விழுந்து விட்ட பிரச்னைகளைப் பற்றி நினைத்தாள்.

இதுநாள்வரையில் தான் பட்ட ஆசாபங்கங்களைப் பற்றி நினைத்தாள்.

நேர்வழிப்படுத்த முடியாத ராஜாராமின் அரக்க மனத்தையும் நினைத்தாள்.

இத்தனை முரண்பாடுகளையும் ஒரேயொரு அழிவினால் சரிக்கட்டிவிட முடியுமென்பதையும் தீர்மானித்துக் கொண்டாள்.

தீர்மானத்தின் சீறல் மனத்தளவில் பதிவாகிவிட்ட அடுத்த கணமே அவள் கையிலிருந்த இரும்புப் பட்டை ராஜாராமின் பின் தலையைப் பலமாகத் தாக்க அவன் அலறிக்

தண்ணீர் வேண்டாம்!



இந்திய தேசிய விடுதலைப் போரில் ராணி லக்ஷ்மிபாய் ஈடுபட்டுச் செய்த தியாகங்கள் அளாதம். அவள் ஒரு சமயம் நன்கு அடிபட்டுக் குருதி ஒழுகத் தாகத்தினால் தவித்துக் கொண்டிருந்தாள்! கிராண்ட் வைத்தியக் கல்லூரி பட்டதாரியும் வைத்திய அதிகாரியுமான இந்தியர் ஒருவர் தண்ணீர் கொண்டு வந்து அவளுக்குக் கொடுத்தார்.

''தாங்கள் யார்?'' என்று வினவினாள் ராணி லக்ஷ்மிபாய்.

''நான் உயர்தர ஜாதி. பிரிட்டிஷ் ராணுவத்தில் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றுகிறேன்!'' என்று அந்த அதிகாரி பெருமையாகச் சொன்னார்.

''ஐயா! தாழ்ந்த ஜாதியினனாயினும் தேச பக்தியுள்ளவன் கொண்டு வந்து கொடுத்திருந்தால் இந்தத் தண்ணீரை ஏற்றுக் கொண்டிருப்பேன்! தாங்கள் உயர்ந்த ஜாதியினர், விரோதியிடம் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்தத் தண்ணீர் வேண்டவே வேண்டாம்! உயிர் போவதே மேலானது'' என்று ஆவேசமாகக் கூறினாள் லக்ஷ்மிபாய்.

கொண்டு கீழே சாய்ந்து தலையைப் பிடித்துக் கொண்டான்.

தர்முவின் ஆவேசம் அவன் முகத்தைப் பார்த்தவுடன் மீண்டும் கிளர்ந்தபோது தான் என்ன செய்கிறோம் என்பதை மறந்தவனாக இரும்புப் பட்டையை மீண்டும் உயரே தூக்கினான்.

ராஜாராமின் தலையிலிருந்தும் முகத்திலிருந்தும் ரத்தம் ஆறாகப் பெருக விழிகள் பிதுங்க அப்படியே கிடந்தான்.

பற்களை நறநறவென்று கடித்துக் கொண்ட தர்மு அவன் விழிகளைப் பார்த்துச் சிரித்தான்.

இரும்புச் சட்டத்தைக் கையிலே பிடித்துக் கொண்டு குடிசையை விட்டு வெளியே ஓடி வந்தான் தர்மு.

தர்மு போலீஸில் சரணடைந்தான்.

நீதிபதி தீர்ப்பைப் படித்தார்!

"நான் இந்த வழக்கின் போக்கை, இரண்டு விதங்களில் அதனுள் இருக்கும் சிக்கலைப் பார்க்கிறேன். தர்மு இந்தக் கொலையைச் செய்யாமல் அவனுக்கும் அவனுடைய முதற் கணவனை சம்பத் என்பவரால் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நாயகி என்ற பெண்ணுக்கும் ஏற்பட்டிருந்த ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டிருக்க முடியுமா? என எண்ணிப் பார்த்தேன்.

"நாயகியின் சாட்சியத்திலிருந்து கொலையுண்ட ராஜாராமின் குணத்தையும் தர்மு–ராஜாராம் இருவரிடையே சில ஆண்டுகளாக வளர்ந்து வந்த பகைமையின் முகாந்திரத்தையும் நம்மால் அறிய முடிகிறது.

"நாயகியைக் கற்பழிக்க வந்த ராஜாராமின் பின் மண்டையில் இரும்புச் சட்டத்தால் தாக்கியும் பிறகு ராஜாராம் கீழே விழுந்த பின் முகத்திலுமாக அடித்தேன்' என்று போலீஸ் வாக்குமூலத்தில் இருப்பதைத் தர்மு மறுக்காததிலிருந்து மரணம் எப்படி ஏற்பட்டது என்பதை நம்மால் முடிவு செய்து கொள்ள முடிகிறது.

"இரண்டாவது தர்மு ராஜாராமைக் கொலை செய்ய நேர்ந்த சூழ்நிலை. தர்முவின் வாழ்க்கையில் அவனுக்கேற்பட்ட மிகப்பெரிய பொறுப்பு, அதை நல்ல முறையில் நிறைவேற்றிக்கொள்ள அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள், அவற்றுக்கு ஏற்பட்ட குந்தகம், வேலையற்ற ராஜாராமனால் ஏற்பட்டிருப்பதாக அவன் கூறுகிற நிரந்தரமான ஆபத்து இவற்றையும் மனத்திற் கொள்ள வேண்டும்.

"ராஜாராமன் நாயகியைக் கெடுக்கும் எண்ணமின்றி அங்கே வந்திருந்தால் இக் கொலை தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணப்போதிய யூகத்துக்கு இடமிருக்கிறது. இந்த யூகம் பலமானதும் கூட என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

"தர்மு செய்த குற்றம் மரண தண்டனைக் குற்றம். குற்றத்தின் கோரத் தன்மையை உணராமல் இதைச் செய்துவிட்டார் என்ற வாதத்தை நான் ஏற்கவில்லை. தான் செய்கின்ற குற்றத்தின் கோரத் தன்மை பற்றிப் பூரண பிரக்ஞை இருந்திருக்கிறது என்பதில் எனக்குச் சந்தேகம் எழவேயில்லை.

"கொலை செய்தான் என்பதற்காகக் கொடுக்கிற தண்டனை ஒருபுறமிருக்க, அக் கொலையை ஏன் செய்தான் என்ற கேள்வியை எழுப்பினால், இவ் வழக்கு சம்பந்தப்பட்ட வரையில் இக்கேள்வி குற்றவாளிக்குச் சாதகமான நிலையை உண்டாக்குவதாக இருக்கிறது. இச் சாதகத்தால் ஏற்படுகிற நன்மையையும், பலனையும் நான் குற்றவாளிக்கே அளிக்கிறேன். இருப்பினும் குற்றத்தின் கடுமையை உத்தேசித்துத் தர்முவுக்கு ஐந்து வருடச் சிறைத் தண்டனை அளிக்கிறேன்."

ஐந்தாண்டு காவல் சிறை வாசத்தில் தர்மு அடைந்த ஆசாபங்கங்கள் எத்தனையோ உண்டு. உக்கிரமான இந்தச் சமுதாய வீதியிலே இறைந்து கிடக்கிற சில அனாதை மலர்களைப் போல அவனும் அங்கே விழுந்து கிடந்தான்.

இந்த ஐந்தாண்டுகளுக்குள் வெளியில் நடந்த சிற்சில விஷயங்கள் அவனது வேதனையான சிறை நாட்களை அமைதியடையச் செய்தன.

நாயகியின் திருமணம் சிறை வாழ்க்கையின் எல்லாச் சோகத்தையும் போக்கிக் கொண்டிருந்தது.

தேசிகரின் உதவியுடன் நாயகியின் திருமணம் அவர் ஏற்கனவே தீர்மானித்து முடித்து வைத்திருந்த பையனுக்கும் அவளுக்கும் சிறப்பாக நடந்தேறிய விஷயத்தைச் சிறையில் கேள்விப்பட்டு மகிழ்ந்தான்.

தக்காளிப் பண்ணையில் இப்பொழுது தக்காளியோடு பல வகைகளும் பயிரிடப்பட்டுச் செழித்து வளர்ந்து பண்ணை கொஞ்சம் கொஞ்சமாக விரிவடைவதைத் தேசிகர் எழுதும் கடிதம் மூலம் அறிந்தான் தர்மு.

'நான் இப்பொழுது அர்ச்சகன் மட்டுமல்ல; ஒரு சிறந்த விவசாயியாகவும் மாறிவிட்டேன். துர்க்கையின் சன்னிதியைப் போலவே தக்காளிப் பண்ணையையும் புனித ஆலயமாக நினைத்து வேலை செய்கிறேன்' என்று தேசிகர் எழுதிய கடிதத்தைப் படித்தபோது அவன் நெஞ்சம் குளிர்ந்தது.

தான் ஒரு குற்றவாளியல்ல. ஒரு பெரிய மோசடியைத் தகர்த்துக் கொண்டுவிட்ட லட்சியவாதி என்ற பெருமை உணர்வுதான் தர்முவுக்கு அடிக்கடி உண்டாயிற்று.


ஐந்தாண்டுகளைக் கடந்து அவன் வெளியே வரும்போது பல நல்ல இதயங்களோடு அவன் உழைப்பில் உருவாகிச் செழித்துப் பலன் தந்து கொண்டிருக்கும் தக்காளிப் பண்ணையும் அவனை எதிர்நோக்கியிருக்கும்.

எத்தனை இடர்கள் வந்தாலும் எதிர்கொள்ளும் வைர மனம் அவனுடையது. அவன் வெளியே வரும்போது அவனுக்கு வாழ்க்கையைப் பற்றிப் பிரச்னையே இருக்காது.

பறித்தவுடன் மணம் பரப்பி வினாடியில் வாடிவிடும் மலராக இருக்க அவன் என்றுமே விரும்பியதில்லை. உக்கிரமான துர்க்கையின் சன்னிதியிலே லட்சியங்களோடு இறைந்து கிடக்கின்ற சில அசாதாரண மலர்களைப் போல் இருக்கவே அவன் விரும்பினான்.

தர்மு ஒரு ரோஜா மலரல்ல!

கடல் அலையில் பூத்தவன்!



பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூபாய் 15 பரிசு பெறுகிறது.

மார்ச்சு மாதம் பதினைந்தாம் தேதி 'கல்கி' இதழில் ஃபாக்ட் ஸ்தாபனம் (FACT) 'மானேஜ்மெண்ட் ட்ரெய்னி' என்னும் பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூபாய் ஐம்பது வசூல் செய்வதை ஆதரித்து திரு ஆர். பார்த்தசாரதி (பொது ஜனத் தொடர்பு ஆலோசகர்) யின் கடிதம் பிரசுரமாகி இருந்தது.

இந்தப் பதவிக்கு மனுப் போடுபவர்கள் மூன்று பரீட்சைகள் எழுத வேண்டும்: பரிசோதகர்களுக்காகவும், பரீட்சைகளுக்காகவும் ஆகும் செலவுகள் மட்டுமின்றிப் பரீட்சை எழுத வருகிறவர்களின் போக்குவரத்துச் செலவும் சாப்பாட்டுச் செலவும்கூட இதில் அடக்கம் என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். மேற்படி பதவிக்கு இந்த ஆண்டு நானும் மனுப் போட்டிருந்தேன். என்னை மார்ச்சு மாதம் 20, 21 தேதிகளில் சென்னை ஆபட்ஸ்பரிக்கு வந்து தேர்வு எழுதுமாறு கேட்டுக் கொண்டு அதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பி வைத்தனர். அதில் போக்குவரவுச் செலவு, தங்கி இருப்பதற்கான செலவு, சாப்பாட்டுச் செலவு போன்று எல்லாச் செலவுகளையும், பரீட்சை எழுத வருகிறவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேர்வின் இடையில் இலவசமாக, குடி நீர் வழங்கியது தவிர வேறு எதுவும் எங்களுக்குத் தரப்படவில்லை.

மேலும் இருபதாம் தேதியன்று பொது அறிவுப் பரீட்சை மதியம் இரண்டு மணிக்கு நடக்க இருந்தது. சுமார் ஆயிரம் பேர் இந்தியா முழுவதிலிருந்தும் இப்பரீட்சை எழுத வந்திருந்தார்கள். ஆனால் தேர்வு நடக்கவில்லை.

''தவிர்க்க முடியாத காரணங்களால் இரு பரீட்சைகளை ஒத்திப் போட வேண்டியுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்றனர். ஒத்திப் போடப்பட்ட தேர்வுகள் எப்போது நடைபெறும் என்று தபால் மூலம் பின்னர் அறிவிப்பதாய்க் கூறினர். மேலும் அத்தேர்வுகளை எழுத வரும் ஒவ்வொருவருக்கும் போக வர இரண்டாம் வகுப்புக் கட்டணச் செலவு மட்டுமே ஃபாக்ட் ஸ்தாபனம் கொடுக்கும் என்று அறிவித்தனர். இது எங்கள் எல்லோருக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. எங்களுக்கு ஏற்பட்ட கால விரயத்தையும் பொருள் நஷ்டத்தையும் ஈடு செய்வோர் யார்? சென்ற ஆண்டு ரூ. 35 ஆக இருந்த தேர்வுக்கட்டணம் ஏன் இந்த வருடம் திடீரென்று இருமடங்காக — ரூ. 50 ஆக உயர்ந்தது? கட்டணத்தை அதிகப்படுத்தினால் ஒரு வேளை மனுப் போடுபவர்களின் எண்ணிக்கை குறையலாம். ஆனால் ரூ. 50 செலுத்தி மனுப் போட்டவர்கள் தாங்கள் சரியானபடி நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

கோயமுத்தூர் 12
27—3—70

ர். ரவிசங்கர்

அன்று நானும் எனது நண்பர் கோபாலும் சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். அப்போது ஏதோ ஓர் ஊர்வலம் சென்று கொண்டு இருந்தது. தமிழக அரசு பஸ் ஒன்று, அந்த ஊர்வலத்தால் நின்று கொண்டிருந்தது. நானும் எனது நண்பனும் அந்த வண்டிக்குப் பின்னே இருந்தோம்; ஊர்வலம் முடிந்ததும், பஸ்ஸை டிரைவர் எடுக்கும் போது, வண்டி பின்புறமாக வந்தது. ஐந்து அடி தூரம் இருபோல் வந்தது. நான் எனது சைக்கிளை 'வெடுக்'கெனப் பின்னால் இழுத்துக் கொண்டேன். ஆனால் எனது நண்பன், இது எதிர்பாராமல் நடந்ததால் ஒரு சில வினாடிகள் பொறுத்து சைக்கிளை இழுக்க முயன்றான். ஆனால் அதற்குள் பஸ்ஸின் பின்புறத்தில் நண்பனின் சைக்கிள் மாட்டி, முன் சக்கரம் அப்பளமாய் நொறுங்கி விட்டது. உடனே கூட்டத்தினர் கூச்சல் போட்டனர். ஆனால் டிரைவரோ வண்டியை நிறுத்தாமல் ஓட்டிச் சென்றுவிட்டார்! பிறகு நாங்கள் சைக்கிளைப் பழுது பார்க்கத் தந்துவிட்டு, தமிழக அரசின் போக்குவரத்து நிலையத்துக்குச் சென்று இது பற்றிக் கூறினோம். அங்கிருந்த ஓர் அதிகாரி, ''போவ்.... இது பத்தி இங்கே ஏன்யா சொல்றீங்க? கோர்ட்டுக்கு வாங்கய்யா... பார்த்துக்குவோம்'' என்று முகத்தில் அடித்தாற் போல் கூறிவிட்டார். இது மாதிரி விபத்துக்கள் இனியாவது நடக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் நாங்கள் சென்று சொன்னால், இப்படி முகத்தில் அடித்தாற்போல் கூறி விட்டாரே ஓர் அரசு ஊழியர்? இது மாதிரி சொன்னால், மக்கள் அரசினைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்? அரசு அதிகாரிகள், மக்களை மதித்து, அவர்களுடைய நன்மதிப்பைப்பெற முயற்சி செய்வார்களாக!

சேலம் — 9
2—3—70


சேர. சச்சிதானந்தன்

மழைக் காலத்தில் ரயில் வண்டியில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள் படும் அவதி சொல்லத்தரமன்று. சாரல் மூலமாக வரும் நீரோடு மேலேயிருந்து சொட்டும் (கொட்டும்) அருவியும் சேர்ந்து காலடியில் குளம் போல் தேங்கியிருக்கும் நிலை. அதோடு பீடி, சிகரெட் துண்டுகள், புகையிலைச் சக்கை இத்தியாதியும் சேர்ந்து அருவருப்பூட்டும் சூழ்நிலை. இந்நிலையில் வருங்காலத் தலைவன் ஒருவன் தன் தாயிடம், ''நாம் காசு கொடுத்தது குந்திக்கிட்டுப் போகவா, குளிச்சுக்கிட்டுப் போகவா?'' என்று கேட்டான். இதற்கு ஸ்ரீ நந்தா என்ன சொல்கிறார்?

இருச்சி

எஸ். பிச்சை

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


பெண்கள் என்றாலே
குறிப்பிட்ட சில
நாட்களில் அசௌ
கரியமும் வேதனையும்
இருக்கக்கூடும்.
ஸாரிடான் அவற்றி
லிருந்து விடுதலை
அளித்து அவர்களைப்
புத்துணர்வோடும்
மகிழ்வோடும்
இருக்கச் செய்கிறது.
ஸாரிடான்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

